LB
N04
118497

உ

மீனாம்பாள் துணை.

# A HAND BOOK OF BEST HINDU MEDICINES.

# ஆயுள்வேத சுருக்கம்.

சித்தபுருடர்களாகிய பதினெண்மர்கூறிய
நூற்களில் சிலவற்றை எளிதில் முடித்துக் கொடிய பிணிகளை
நீக்கும்பொருட்டு கைவல்லியமான ஔஷதங்களை

இராய வேலூர் வைத்தியர்
அ. அருணசல முதலியாரால்
இயற்றப்பட்டு.

திருப்போரூர்
துளசிங்கநாயகர் குமாரர்
டி. கோபால் நாயகரது
சென்னை குளோ,
கோள்டன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1904.

price annas·12 ] [ விலை அணா 12.

(Registered Copyright.)

OFFICE OF ... 12 JUL ... MADRAS

LB N94
118497

# அறி ரிஜிஸ்டர் விப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில், இந்த ஆயுள்வேத சுருக்கமென்னும் நூலுக் குடையவராகிய அ. அருணாசல முதலியாரிடத்தி னின்று காபிரைட் சுதந்திரத்தைப் பெற்றவரும், மருக ரும் ஆகிய வெ. தியாகராய முதலியாரிடத்தி னின்று இந்நூலிற்குள்ள எடிட்டர் பாத்தியதை என்னும் ரிஜிஸ்டர் காபிரைட் சுதந்திரத்தை அடி யேன் கையொப்ப மிட்டிருக்கும் என்றால் 1903௵ நவம்பர்௴ 25௳ வில் கிரயத்திற்கு வாங்கப்பட்டு அச்சிற்பதித்து இங்கிலீஷ் இலாகாவாகிய மத[illegible]சு இலாகாவாகிய புதுச்சேரியிலும் காரைக்காலிலும் காப் பிரைட் ரிஜிஸ்டர் செய்திருப்பதால் இந்நூலை என்னுடைய அநுமதியின்றி இதை வேறுபாஷையில் மொழி பெயர்த்தாலாவது அல்லது இதிற் கண்டி ருக்கும் பாகங்களையாவது யாரேனும் அச்சிடுவாராகில் 1367-வது வருஷத் திய 25-வது ஆக்ட்டு 20-வது பிரிவின் 6-வது உட்பிரிவின்படி யான் கோ ரும் நஷ்டத்திற்கும் இந்தியன் பினல்கோட்டென்னும் ஆக்ட்டின்படி குற் றத்திற்கும் உத்தரவாதியாக வேண்டுமென்பதைக் கவனிக்கக் கோருகின் றனன்.

இப்படிக்கு,

டி. கோபால் நாயகர்,

கோர்டன் பிரஸ், குளே போஸ்டு, மதராஸ்.

உ

சிவமயம்.

# முகவுரை.

அறிவு பொருந்தி ஞானத்தையடைவது மானிடதேகமாதலால் இம்மானிடத்தோற்றத்திலும் புண்ணியத்திற்குத் தக்கமானிடத்தில் மானிடமும், மிருகம், பறவை, நீர்வாழ்வன கிருமியாதி குணங்களாக எழுவகை பேதங்களாய்த் தோன்றுவதால் அவைகளை மானிடங்களின் நடைகொடியியற்கை சேட்டை ஆகாரநித்திரை குரோத மனவிர்த்திகளாலும் இவை. மானிடத்திற்குரிய லக்ஷணவலக்ஷணமென்றுமே அறியக்கூடுமானதாக விருக்கிறது. இந்த ருபிசரித்த மானிடங்களனைத்தும் மானிடமாதலால்மானிடத்திற்குரிய ஆண்டவர்பக்தி அடியார்கள்மீது அன்பு, சாந்தம், ஜீவகாருண்ணியம் குரோதாதிலோபத்துவ முதலிய பேர்குண நிக்கிரகமும் பெற்று மேலோர் கூறிய மணிமந்திர ஔஷதாதிகளை விளக்கும் ஆயுள்வேதத்தையும் அதிலடங்கிய பஞ்சபூதபட்சி சாமாசிமத்த சோதிடாதி கெர்ப்பக்கோள் பாலவாகட ரிஷவாகட கர்ம்மகாண்ட அகராதி நிகண்டேர்க்குறிசிகிட்சாகிர்ம முதலிய விலைகளைக் கற்றுணர்ந்தோர்முன்பயின்றும் பூமியின் பிரிவாகிய குறிஞ்சி பாலை முல்லை நெய்தல் மருதம், இவ்வைந்து பூமியின் பேதங்களையும் அதில் தங்கும் பதினெண்குலித முக்கிய சலபேதங்களையும் பூமியின்மீது சுமடு மயில் வரையில் சஞ்சரிக்கும் காற்றாகிய வாயுவின்பேதமும் ஆண்டிற்குள் இலை பனி மழை காற்று இவைகள் பேதமும் ஐந்து நிலங்களில் வசிப்பவர்களின் தேகபிரமாணமும் சுபாவ இயற்கையும் ஆசாரம் நடக்கை முதலிய பேதங்களையும் தெரிந்து உபரசபாஷாண உப்பு மூலிகாதி பஞ்சபூத சரக்கின் குணமும் சத்துரு மித்துரு முறிவு ஔஷதம் முடிக்கும் காலபேதமும் மையாக செய்யாக தீட்சையாக அறைப்பு புட முதலிய பிரமாணங்களும் பால்ய எவ்வன கௌமாரக பருவங்களுக்குத் தக்க ஔஷதங்களை நோயினளவைத்தெரிந்தும்ராக்ஷலமானிடதேகமென்னும் முக்கண மானிடர்க்குள் எக்கண மானிடர்க்குமதைதரவேண்டுமோ அதை அளித்து ஜீவர்கள்படுந்துயரத்தை நீக்கல்வேண்டும். கர்மத்தால் வியாதி சேருவதால் பண்டிதர்கள் அவசியம் கர்மம் நிவர்த்தி செய்விக்காமல் ஔஷதம் கொடுக்கில் நோயாளர்கர்மம் பண்டிதனடையதடையிர தென்று மேலோர் கூறியிருக்கின்றனர்.

பிணியாளரை அவர்கள் சரீரத்தை அஷ்டவித பரீக்ஷையோடு பார்ப்பதோடும் தேகத்தினுள் இரத்தாசயம் ஈரல் நுரை ஈரலாகிய சுவாசபை குண்டிக்காய் மண்ணீரல் ஆகாரப்பை சிறுகுடல் பெருங்குடல் மூளை மாம்ஸம் உதிரம் நரம்பு அஸ்தி மற்ற பிரதேசங்களிலும் யாது பேதமாய் இந்நோய் அணுகியிருக்கிறதென்றுணர்ந்து ஆகாரபதார்த்தங்களாலும் ஆகார ஔஷதபதார்த்தங்களாலும் சுத்த ஔஷத பதார்த்தங்களாலும் பிரயோகஞ் செய்வதுதான் மதிசிறந்த ஆயுள்வேதியர் தன்மை.



தற்கால அரசினராகிய ஐரோப்பியர் ஜீவகாருண்ணியமாய் அனேக பாடசாலைகளை வைத்து ஆயுள் வேதத்தை கற்க ஆவல் கொண்டவர்களுக்கு அங்க சோதனை முதலிய ஔஷதாதி பேதா பேதங்களையும் அளிக்கவேண்டிய பிரயத்தனங்களையும் கற்பனை செய்வித்து நகரங்களிலும் மற்ற வெளி கிராமங்களிலும் வைத்திய சாலைகளை அமைத்து நோயாளர்க்குப் பரிகாரம் நடத்தி வருகின்றனர்.

இத்தமத மேலோர்களாகிய திரிகால ஞானிகளோ ஜீவகாருண்ணியமாய் முதன்மை வேதமாகிய ஆயுள் வேதமென்றும் அதிலடங்கிய அறுபத்துநாலு கலைக்கியானங்களையும் அணிமாதி சித்திகளும் அனேக அற்புதங்களையும் அனேகமாக பிரதிகைமாற்றுக் கெதிர்பாராமல்கூறியிருக்கின்றனர். தற்காலம் இந்த வைத்தியர்களோ வீதிக்கு ஐ நபர்க்கு குறைவில்லாமல் பண்டித தொழிலாளிகளிருந்தும் இவர்கள் கற்றுணர்ந்த பாடசாலைகள் எவ்விடமிருக்கிறதென்றும் எந்த ஆசான்முன்னிலையில் கற்றுணர்ந்தவர்களென்றும் பலருக்கும் பகிரங்கப்படவில்லை. கற்றது கையளவு கல்லாதது உலகளவு ஆனதால்பண்டிதர்கள் ஒருமையாய் ஒருவர்க்கொருவர்சம்பாஷிப்பதுடன் நூற்களை ஆராய்ச்சிசெய்து அற்புதமான ஔஷதங்களை கிரமமாக முடித்துப் பிணிகளை நீக்குவதே பெரும்பயனுரும். நன்குணர்ந்த சாத்துக்களாகிய மேலோர்கள் இதலடங்கிய உண்மைகளை கவனிக்காமற் [illegible]ரயனுடவிரதும் மாச்சிரிய முதிர்ந்து நிந்தையிலிறங்கி [illegible] தன்குற்றத்தின்மீது நோக்குறா நிழ்களுக்குநாம் திருப்தி [illegible]றுவது கூடாத காரியந்தான்.

நண்பர்களுக்கு அனேகவந்தனம்.

## விளம்பரம்.

இப்புத்தகமாவது இன்னும் இதரமான புத்தகங்களாவது ஔஷதங்களாவது ரப்பர் ஸ்டாம்புகளாவது தேவையானவர்கள் அடியில் கண்டிருக்கும் கம்பெனியா ரவர்களுக்கெழுதிப்பெற்றுக் கொள்ளலாம். பெரிய கேட்லாக் தேவையானவர்களுக்கு அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

எமது மேல்விலாசம்

டி. கோபால் அண்டு கோ.,

தோண்டன் பிரஸ், தபால் போஸ்டு, மதராஸ்.

### பஞ்சபூத சரக்குகள் விவரம்.

பூதநீரம் மஞ்சள் பளிங்கு சிவப்பு கருப்பு புகை, லோகத்தில் பொன் அகாரியம் தேதாம்பரம் வர அயம் ஆகாசசூதம் பூமியில் மன் அசலம தெநீருப்பு வராகற்று ஆ ஆகாயம் கருவில் பிம லம் அப்ருநீர் தேகடிரம் வாளாய்நீர் ஆவிந்து பாஷாணத்தில் தாளகம் அவீரம் தெலிங்கம் வாவெள்ளை ஆகெந்தி லவணங்க ளில் கல்லுப்பு இந்துப்பு வளையலுப்பு அமுரன்றுவிதசாரம் தேச ரட்டுப்பு வெடியுப்பு சூடன் வாவெண்காரம் துரிசி சீனகாரம் அபூரம்வழலை, பாஷாணபிரிவில் பிதொட்டி சிங்கிகார் முகிபவழ புற்று நீமுருகல் அகௌரிசங்கு பாஷாணம் குதிரை பல் கோழி தலை கெந்தி. தேசிலை கெந்திவீரமதாரம் வாபஞ்சபட்சி நந்த பா ஷாணம் லிங்கம் ஆசூதம். உபரசத்தில் சிலாசத்து அயகாந்தம் பூநாகம், இரசவர்த்தம், அசங்கு கோழியண்டம் கிளிஞ்சி நண்டு, தோளாம்பு, இந்திரகோபம், மயிலிறகு, சிமனை, வெண்காரம், வா சாத்திரபேதி கல்நார் கல்மதம் அன்னபேதி ரோமம். அநுத்தம் வைகிருந்தம் மலை குரு சுக்கான் மிருதி பாஷாணம்.

பிரிதிவுகாரவகை மிட அப்பு சாரவகை மிஉ தேயு வகைப்பட வகை நுமிஉ வாயு விளைவு வகை நுமிஉ ஆகாய உபரசவகை நஉமி ஆகமொத்தம் உாகா இந்த பஞ்சபூத சரக்குகளை தெரிந்துசத்துரு மித்துருகண்டு ஒன்றுக்கொன்றைக்கட்டி நீற்றிவைம்செய்ய உத்தமம்.

பாரப்பா பிரிதிவுதான் அப்பைக்கொள்ளும்
பாங்கான அப்பதுதான் தேய்வைக்கொள்ளும்
நேரப்பா தேய்வதுதான் வாய்வைக்கொள்ளும்
நிலையான வாயுவது ஆகாசத்தைக்கொள்ளும்
வீரப்பா கொண்டதிலே மடிந்துபோச்சு
வேதாந்த பஞ்சாக்ஷரத்தாள் கூத்திதாச்சு
சாரப்பா தன்னறிவால் சார்ந்துகொண்டு
சகலகுரு வேதைமுகம் சார்ந்துபாரே.

அஷ்டலோக மாரண திறுசுகள். சூதம் கெந்திசாரம் சாரம் வீரம்பூரம்வெள்ளைவெடி சமனெடைகளாகக்கூட்டிபழரசத்திலரை த்துலோக தகட்டுகளின்மீது சமனாகப்பூசி கெசபுடமிட்டாலும் சா ரம் சீனம் பாஷாணம் பூரம் வீரம் வெடிகாரம் சூதம் பூநீர்கெந்தி புவைசமமாகபழரசத்திலரைத்துமுன்மாதிரிபாகப்பூசிப்புடமிட்டு



பிறகு பஸ்பச் செந்தூரங்கள் செய்து நோயாளர்க்கு உபயோகப்ப டுத்த மேலோர் கூறி யிருக்கின்றனர்.

வெள்ளீயம் தாளகத்தில் காரீயம் சிலையில் உருக்கு லிங்கத் தில் தாம்பரம் கெந்தியில் வெள்ளி மாட்சிகத்தில் பொன் சிமிளை யில் மாரகம்,ஔஷதம்முடிக்கும் காலம், பங்குனி சித்திரைமுப்பு, வைகாசி ஆனி சாரணை, ஆடி ஆவணி திராவகம், ஐப்பசி கார்த்தி கை உருக்கினம், புரட்டாசி மார்கழி செந்தூரம், தை மாசிசெயநீர் இந்தமாதங்களில் செய்துகொள்ள நன்மையாகும்.

### இதை முடிக்க இதுவேண்டுமென்பது.

வங்கநீரு சவுக்காரத்தால் துரிசிநீரும், கெந்தி சூதத்தால் செந்தூரம். வெடியுப்பு சீனத்தால் திராவகம். அமுரி தெரிந்தால் செயநீர். உருக்கினங்கள் காரம் குடோரிகளால். வீரத்தால் நீற்றி னம். புடத்தால் சாரணை. இனத்தப்பில் வர்ணமிராது தங்கத்தால் களை. சூதம் நீங்கில் பயனிராது. சுண்ணம் சேராவிடில் செயநீர் கெ டும். சாரம் நீங்கில் கட்டுப்படாது சிங்கியில்லாதாகில் சூதம் கெட்டது.

### கட்டு திறுசுகளின் பரீட்சை.

கல்லுப்பு கரியிலுருகவும். வெடியுப்பு தந்தம்போல் நிறுகவும், வெண்காரம் பொங்கி உருகியாடவும். சீனம் மணிபோலுருகவும், சூடன் எரியாமலும், இந்துப்புவெடிக்காமலும், சாரம் மயிற்போல் புகைந்தும், கட்டு துரிசி யிளகாமலும், நீரின துரிசி மஞ்சளில் சி வக்கவும் இருப்பது நலம்.

பாஷாணம் கெந்தி சவுக்காரம் இந்துப்பு காந்தம் இவை சே ராவிடில் கர்மநோய் தீராதெனப் புகன்றனர் பஞ்சபூத சரக்கு கவ லன்னளவா-க-நீ-அளை இந்தஎடைகளாகச்சேர்க்காமல்பிறதிக மா னால் கடித்துக்கொள்ளும். அசரக்கு அதிகமாகில் தளுக்காக ஓர மேலும்தே சரக்கு அதிகமாகில் புடத்தில் நிற்காது வாசரக்கு அதிகமாகில் புத்துபோல் நிற்கும் ஆசரக்கு அதிகமாகில் வர்ண மிராது யேமத்தின் குற்றம் திரைசவுடு களிம்புலூரல்சவளைநமுகலா கிய ஆறு குற்றமு நீங்கியவை யூட்டம்காய்ப்புபுடநயப்பு காகர்ப்பு பொருந்திய தங்கம்ஔஷதத்திற்குப் பயன்படும்.

### பஞ்சபூத உப்பின் விவரம்.

திருமுனிவர். — பிகம்பியுப்பு அபாலாயுப்பு தேகல்லுப்பு வாயின் தப்பு ஆவளையலுப்பு.

போகர். — பிகல்லுப்பு அசுத்திசாரம் தேவெடிசெயநீர் வாசினம்
அழுது நீர்.

சுகபோகரிஷி. — பிரூமியுப்பு அசினமென்ற வெள்ளை தோ
விராத பூரம், வாவீரமெனும் கௌரி ஆகாரமெனும்
சாரம்.

பிரமமுனி. — தன்னுள் நாதம் விந்து பாரை கல்லுப்பு அண்டம்
பிண்டம்.

கருபஞ்சபூதம். — வாய்நீர் முலைப்பால் அமுரி விந்து கபோ
தீதம்.

அறுசரக்கு. — கல்லுப்பு சாரம் வெடி படிகாரம் துரிசி வெண்
காரம்.

அறுவகை நீர். — வெடிசீனம் வெண்காரம் சாரம் பூரம் துரிசி.
பஞ்சபூதம். — சூதம் வீரம் பூரம் வாண்டரிசி உரம்.

நாத விந்து சரக்கு.

கெந்திசூதம், பூநீர்குடன், நிமிளைவெள்ளை, பூநாகம் வீரம் தி
ரிகுணசல்கடல்நுரை, லிங்கம் கல்லுப்பு, இரும்பு எவாசாரம், நாக
வங்கம் பூரம், செம்பு சிலாசத்து, காந்தம் கல்மதம்.

உப்புபுளி சரக்கு.

சிறுதிருப்புமலம், வெடி படிகி, கல்லுப்பு பழம்புளி, சூடன்
துரிசி, கடல்நுரை, கற்சுன்னம், சூதம், கெந்தி, காந்தம்காடி,
இரும்பு, எரியாமணக்செண்ணெய், தொட்டிபுளியாணை, பேதி அம்
பர், மாங்கிஷபேதி, கல்மதம், வீரம்புளியாரை, அபரேகம், காய
சரக்கு, கௌரி புளிமாங்காய், வெள்ளைகள்ளு, வைகிராந்தம்நிமளை,
தங்கச்சிலை, நாகம்வீரம், விக்கிராந்தம், சாரம வெண்காரம், வெள்
கருமஞ்சள், கரு, கிளிஞ்சிவோடு, சதை, பச்சைகற்பூரம், இந்துப்பு
இவைபொன் திவொன்றடக்கமாகும்.

சத்துரு மித்துரு விவரம்.

(தங்கத்திற்கு சத்துரு-நாகம் நிமிளை வெடி கௌரி வெள்ளை
சவுட்டுப்பு தாளகம் சிங்கி அபிரேகம் சிலை அண்ட ஓடு குதிரைபல்
சூதம் கெந்தி கோமுகம் காந்தம் வீரம் பொன்னம்பர். மற்ற திர
வகள் மித்துருவாகும்.) (கருவங்கத்திற்கு சத்துரு-அயம் காந்தம்
நிமிளை கிளிஞ்சி அண்டம் நண்டு நத்தை கௌரிகெந்தி அபி



ரேகம்வெடிகல்லுப்பு கல்நார் சாத்திரபேதி. மித்துரு-பூநாகம் மயூ
ரசெம்பு நாகம்செம்பு வெள்ளி வெள்வங்கம் சூதம்.) (அயத்திற்கு
சத்துரு-வெண்கலம் காரம் அண்டம் அபரேகம் நிமிளைவங்கம் தி
ருகெந்தி-சிலைசாரம் வீரம் சிங்கி கெவுரி சிலாசத்து வெள்ளை பூநீர்.
மித்துரு-வெள்ளி செம்பு காந்தம் நாகம் நாகம் பூரம் தங்கம் கெந்
திமயூரசெம்பு சூடன்.) (நாகத்திற்கு சத்துரு-கிளிஞ்சி அண்டம்
கல்லுப்பு வெடி தங்கம் திருவெள்ளி வீரம் நண்டோடு வெண்க
லம் சிங்கி அபினி மிளகு வெள்ளைவலையலுப்பு அன்ன பேதி.மித்
துரு-கெவுரி செம்பு சூதம் நாகம் கெந்தி அபிரேகம் இரும்பு கா
ந்தம் சாரம் காரீயம் மயூர செம்பு சிலாசத்து.) (சூதத்திற்கு சத்
துரு-சிங்கி கெவுரி, வெள்ளைகுதிரைப்பல்சத்திசாரம் வெடியுப்பு இ
ரும்பு காந்தம் சூடன் பூரம் பொன்னம்பர் கற்சவடு நிமிளை பூநீர்.
மித்துரு-அபரேகம் காரீயம் சிலை கெந்தி வீரம் தாளகம் தொட்டி
வெள்ளி செம்பு துரிசி சாரம் காரம் துத்தம் நீமுருகல் பவளப்
புத்து அஞ்சனக்கல்.) (துரிசிக்கு சத்துரு-வெள்ளை காந்தம் அபி
ரேகம் வெடி சூடன் சீனம் கல்லுப்பு சிங்கி இந்துப்பு வங்கம் நா
கம் சவுக்காரம். மித்துரு நிமிளை காரம் சாரம் தாரம் வீரம் கெந்தி
சிலை பூரம் சூதம் லிங்கம் கெவுரி.)(வெடியுப்பிற்கு சத்துரு-சூடன்
சவுடு காரீயம் வெள்ளீயம் துரிசி காந்தம் வெள்ளி செம்பு இரும்பு
சிலை தொட்டி நீமுருகல் அண்டம் கெந்தி சிங்கி. மித்துரு-தங்கம்
[illegible]ந்தம் நாகம் லிங்கம் வீரம் காரம் படிகி கல்லுப்பு இந்து
ப்பு [illegible] நுரை நிமிளை வெள்ளைகம்பளி.) (நவாசாரத்திற்கு சத்து
ரு-காரீயம் கல் சுன்னம் எரண்டம் மஞ்சள் சுக்கான் வெள்வங்
கம் இருகாந்தம் கடல்நுரை இந்துப்பு படிகி அபிரேகம். மித்துரு
கல்நார் வீரம் லிங்கம் வெடிகாரம் கெந்தி சிலை தாரம் நிமிளை கெ
வுரி காரம்.) (கல்லுப்பு சத்துரு-வீரம் சகடு சிங்கி சிலை பழம்புளி
பவளப்புத்து சவுட்டுப்பு ரசவர்த்தம் மித்துருசெம்பு லிங்கம் வங்
கம் காரம் கெவுரி பூரம் அபிரேகம் வெள்ளை நாகம் தாரம்இரும்பு)
(சீனத்திற்கு சத்துரு-சிலாசத்து துத்தம். மித்துரு-உபரச பாஷா
ண லோகங்கள்.

கற்றறு ஞானக் கருத்தறிந்தோர்கள் கமலபதம்
பெற்றலஞ்சித்திப் பேரின்பக்கல்வி பிறவாதமுத்தி
வைத்தாலும்வெற்றி மருவியவர்பதம் வணங்குவம்யான்
சித்தாதிசித்தர் பதினெண்மர்தந்த திரவியமே.

அட்டவணை.


| விவரம். | பக்கம் | அவுடதத்தின் பெயர். | பக்கம் |
|---|---|---|---|
| | 76 | | |
| ஆகாரப்பிரிவின் விவரம் | 77 | அகஸ்தியர் கோடாசுழி | 9 |
| கருவிகள் செய்கை | 76 | மகா கோடாசுழி | 31 |
| ரோக உற்பவம் | 79 | கோடா சுழி | 32 |
| இன்ன கர்மத்தால் ரோக உற் | | குங்குமப்பூ குளிகை | 72 |
| பத்தி | 86 | கோரோசனை குளிகை | 91 |
| | 79 | லிங்கக்கட்டு | 35 |
| பஞ்சபூத ஒக்கம் | 30 | கஸ்தூரி மெழுகு | 14 |
| நாடி இன்னது என்பது | 1 | குங்குமப்பூ மெழுகு | [illegible] |
| நாயனார் கருத்து | 2 | நெல்லிவற்றல் தயிலம் | 8 |
| கோயினளவு நாடிகள் குணம் | 115 | நெல்லிக்காய் தயிலம் | 13 |
| சரீரத்தில் பஞ்ச பூதம் | 120 | சாம்பிராணி தயிலம் | 28 |
| பித்தமதிக்கரிக்கும் காலம் | 119 | விளான்பட்டை தயிலம் | |
| வாய்வுகள் செய்கை | 118 | அண்ட தயிலம் | 27 |
| திலுசுகள் சத்தி விவரம் | 37 | வாயு சீதளலேக்கியம் | 10 |
| முறிவு திலுசுகள் | 42 | வறட்சி நிவாரண லேக்கியம் | 12 |
| பிம்ரம சிருஷ்டி | 60 | நெல்லிக்காய் லேக்கியம் | 14 |
| ரோகங்களால் வியாதிவருபவை | 64 | நெல்லிக்காய் லேக்கியம் | 16 |
| சமீப மரணக் குறிகள் | 69 | தூரிஞ்சி லேக்கியம் | |
| சத்திரம் செய்யா திதிகள் | 86 | இரத்தாதி லேக்கியம் | 20 |
| அவபத்தியம் | 117 | தங்கமுத்து சடாதார லேக்கி | |
| எண்டகள் விவரம் | 51 | யம் | 21 |
| தமிழுக்கு இங்கிலீஷ்மொழி | 99 | திரிதோஷ நிவாரணம் | |
| பாஷாணங்கள் குணம் | 105 | சீரக லேக்கியம் | 36 |
| எவ்விகடியால் சேரும் வியாதி | 106 | சுக்கா லேக்கியம் | 53 |
| திலுசுகள் பரிகாரம் பதில் | 108 | நெல்லிக்காய் லேக்கியம் | 53 |
| பதார்த்த திலுசுகள் முறிவு | 112 | தாளிக்கா லேக்கியம் | |
| லோக நீற்றின் குணம் | 104 | சுக்கு லேக்கியம் | |
| நவரத்தின நீற்றின் குணம் | | மிளகு லேக்கியம் | 54 |
| மலக்குறிப்பு | 78 | திப்பிலி லேக்கியம் | |
| சிறு நீர் குறிப்பு | 78 | கூழ்ப்பாண்ட லேக்கியம் | 102 |
| சலபேதம் | 75 | யாகுத்திலேக்கியம் தேகபுஷ்டி | 18 |
| மாணிடன் அபேத நடை | | மூபமேர பாரீத்திருதம் இந்திரிய | |
| நவரத்தின பூணல் பலன் | 74 | வலி | 19 |
| விதியை மதியால் நீக்க | 30 | சுகமாது திராவகவலிவு உற்சா | |
| சுர லக்கணம் | 117 | கம் | |
| பஞ்சபூத மூலி | 120 | மகாதிராவகம் விஷபேதி காக் | |
| சுவ பித்த விவரம் | 119 | கி | 21 |
| | | பிரிதிவு திராவகம் குதகமலபந் | |
| பூபதி குளிகை | 3 | தம் | |
| சஞ்சீவி மாத்திரை | 7 | அப்புதிராவகம் சுரசீதளம் | |


அட்டவணை.


| அவுடதத்தின் பெயர். | பக்கம் | அவுடதத்தின் பெயர். | பக்கம் |
|---|---|---|---|
| | | | 100 |
| பஞ்சதீபாக்கினி திராவகம் அசீ | | அபரேக்கு சுன்னம் | 6 |
| ரணத்துக்கு | | குருபற்பம் மகாசன்னிக்கு | |
| சோம்பு திராவகம் | 22 | மால்தேவி பற்பம் | 5 |
| ஓம திராவகம் சீதளங்களுக்கு | | நெல்லிக்காய்கெந்திபற்பம் | 6 |
| கரந்தை திராவகம் மேகவியாதி | 23 | படிகார பற்பம் இருமலுக்கு | 7 |
| தாமரைப்பூ திராவகம் கொதி | | சிங்கி சிலாசத்துபற்பம் | 20 |
| ப்பு | | தங்கபற்பம் | 37 |
| சுரை திராவகம் உதிரசுண்ட | | லக்ஷ்மிவாச உப்பு | 58 |
| லுக்கு | 54 | கல்கார் பற்பம் | 62 |
| கரி திராவகம் மாவுல்லாம் பல | 63 | தாம்பரபற்பம் | 94 |
| சர்பத்தேநீனார் நீர்பைக்கு | 63 | சத்திஉப்பு பதங்கம் | 101 |
| சர்பத்சேபு குரி காமாலைவகை | | புலசுரை சுன்னம் | |
| துரிஞ்சிபழ சர்பத்பித்த ஒக்காள | 15 | அமுரிசிலை கெந்திபற்பம் | |
| அங்கூர் சர்பத் வாந்திபித்த | 23 | முத்துசிப்பி சுன்னம் | |
| பாதாம் சர்பத்கொதிப்பு | | சித்தண்ட பற்பம் | 102 |
| ஜரீஷ் சர்பத்பித்தம் | | திரிலோகசெந்தூரம் | 63 |
| உன்னாப் சர்பத்மயக்க இறுதி | | லக்கு செந்தூரம் | 82 |
| தாமரைபூ சர்பத் பித்தகாச்சல் | 24 | சண்டமாருத செந்தூரம் | 91 |
| வெற்றிலை சர்பத் தாதுபுஷ்டி | | குதசெந்தூரம் | 101 |
| சர்பத் சுரல்குலைவலி | | அன்னபேதி செந்தூரம் | |
| குலாப்பூ சர்பத் பேதிமலம் | | அண்ட வாத பூரமாத்திரை | 9 |
| காசினி சர்பத் நீர்கட்டுக்கு | 25 | பெருஅண்டத்திற்குபுள்ளி | 29 |
| தாழம்வேர் சர்பத்கொதிப்பு | 26 | விஷமோசக்கு கிழாமும் | 93 |
| அங்கூர் சர்பத்துக்கு | | லேகி- | 96 |
| நன்னாரி சர்பத் மேகம் | | நீசவீக்கத்திற்கு | 96 |
| தூரிஞ்சி சர்பத் நீர்மோசிகம் | | அண்டவாதத்திற்கு | 29 |
| சகருபா சர்பத்ரத்தவிர் | | கப இருமலுக்கு | 5 |
| இஞ்சிநீர் கூட்டுவாந்திபேதி | 17 | இருமல் நீருக்கு | 16 |
| புதினாநீர் கூட்டு | 17 | குழந்தை இருமல் | 57 |
| நெல்லிக்காய் முரப்பா | 27 | இருமலுக்கு | 95 |
| இஞ்சி முரப்பா | | உலர்ந்த கபத்திற்கு | 97 |
| கடுக்காய் முரப்பா | | இசைப்பிற்கு | |
| வைகுரி அம்மை | 70 | சன்னிகளுக்கு நசியம் | 8 |
| மேல்படி விவரம் | 115 | சன்னிக்குப் புகை | |
| அம்மைவடிவு நீங்க | 34 | சுரகொயிற யாத்திரை | 55 |
| வைதியமுப்பு | 87 | சுரங்களுக்கு வியாதிவகை | 56 |
| புலத்தியர் உப்பு மூப்புசுன்னம் | 89 | சன்னிக்கு அனுபானம் | 93 |
| விஷ்ணுகாந்தி கொடி சுன்னம் | 81 | சுரகியசிவரா மூர்த்தம் | 103 |
| பேரண்ட சுன்னம் | 101 | சன்னிக்கு உருக்கு மாத்திரை | |
| வெள்ளங்கபற்பம் | 101 | சுரகியாழுக்கள் | 59 |

# அட்டவணை.


| அவுடதத்தின் பெயர். | பக்கம். | அவுடதத்தின் பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| உதிர வெள்ளைக்கு | 5 | வாந்திபேதி வரும் விவரம் | 121 |
| வெள்ளைக்கு | 95 | வாந்திபேதிக்கு லேகியம் | 89 |
| கொருக்கிற்கு | | வாந்தி பேதிக்கு இங்கிலீஷ் அவுடதம் | 94 |
| மூலரோகத்திற்கு நாகபற்பம் | 35 | சீதபேதிக்கு | 96 |
| மூலத்திற்கு எண்ணெய் | 83 | அதிசார பேதிக்கு | 96 |
| உள்மூலத்திற்கு | 96 | பேதிக்கோர் கிருதம் | 98 |
| உதிரக்கட்டிப்பிற்கு | 4 | வாந்திபேதி உற்பத்தி | 70 |
| வயிற்றுக்கட்டிப்பிற்கு | 5 | குதகவாயுவிற்கு | 95 |
| மேகச்சுடைச்சல் | 4 | குதகத்திற்கு லேகியம் | 11 |
| மேல்படி தயிலம் | | கெர்ப்ப எண்ணெய் | |
| மெழுகு தயிலம் | 28 | ஸ்திரீகள் தாதுபொடி | 61 |
| வாயுவிற்கு | 31 | ஸ்திரீகள் ரகசியஸ்தான சுத்த நீர் | |
| முடக்கு பிடிப்பிற்கு | 98 | செணத் தெண்ணெய் | 29 |
| கீல் வாயுவிற்கு | 97 | சகலமாந்த எண்ணெய் | 84 |
| குடைச்சலுக்கு | 96 | குளுவைஎண்ணெய்பாகம் உ | 57 |
| பிடிப்பிற்கு மாத்திரை | 62 | பசவாப்பு எண்ணெய் | 57 |
| முடக்குமருந்துகள் | 48 | இளம் பிள்ளை வாத எண்ணெய் | |
| வாதமாருத மெழுகு | 102 | குழந்தை அன்னஎண்ணெய் | |
| பக்கசூலைக்கு | 103 | குழந்தைகளுக்கு காரபொடி | 57 |
| பக்க இழுப்பிற்கு | 96 | மலசலக்கட்டுக்கு மாத்திரை | 84 |
| காக்கைவலிவிற்கு | 97 | நீர்சுருக்கிற்கு லேகியம் | 4 |
| வலிஇழுப்பிற்கு முசாம்பரம் | 14 | நீர்ரோகத்திற்கு லேகியம் | 16 |
| குட்டம்வரும் விவரம் | 82 | நீரடைப்பிற்கு வால்மிளகு சலம் | 96 |
| சமிர்குட்ட எண்ணெய் | 8 | நீர்சுருக்குக்கும் ஒழுக்கிற்கும் | 94 |
| மேக சூரணங்கள் யொழம் | 34 | பேதிக்கு சந்திரவதன குளிகை | 25 |
| கெந்தக சூரணம் | 10 | சுகபேதி மாத்திரை | |
| வாலுழுவை தயிலம் | 28 | சுகபேதி சர்பத் | |
| சிவனார் வேம்பு தயிலம் | | சுகபேதி எண்ணெய் | 20 |
| காங்கேய எண்ணெய் | 29 | பேதியாகும் திறுசுகள் | 48 |
| வெண்குட்டம் | 35 | பேதிக்கு மதுரகியாழம் | 96 |
| கெந்தி மெழுகு | 36 | பேதிக்கு கியாழம்உப்பு | 97 |
| சித்திரமூல எண்ணெய் | 58 | நாக்குபூச்சி மருந்து | 49 |
| மேக நரசிம்ம எண்ணெய் | 100 | குழந்தை கிருமிகளுக்கு | 4 |
| சிவசத்திலேகியம் | | கிருமிகளுக்கு மாத்திரை | 24 |
| கெந்தி மெழுகு | 36 | கிருமிகளுக்கு தயிலம் | 52 |
| மேக கட்டைப்படைகள் | 95 | கிருமி வெளியாகக்கட்டி | 63 |
| வல்லாரை சூரணம் | 11 | கிருமி மாரணதிறுசுகள் | |
| வாய்வுகளுக்கு | 95 | | |
| சுகவாந்திக்கு யொழம் | 102 | | |
| பேதியைக்கட்டும் மருந்துகள் | 49 | | |


# அட்டவணை.


| அவுடதத்தின்பெயர் | பக்கம். | அவுடதத்தின்பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| கிருமிகளுக்கு பவுடர் | 95 | சூரலுக்கு சூர்ணம் தேன் | 4 |
| கிருமிகளுக்கு | 95 | சாரீரம் நன்றாக | 4 |
| மலபந்த நீங்கத்துவயல் | 4 | சாரீரத்திற்கு | 61 |
| மலபந்தம்நீங்க | 3 | திரிலடைந்தவர்களுக்கு | 3 |
| மலபந்த லேகியம் | 17 | சூட்டிற்கு கியாழம் | 10 |
| மலபந்தத்திற்கு | 18 | சுரமுசவிய | |
| நேத்திரபேதி | 12 | பிரத டொழவகைகள் | 58 |
| நேத்திர சுத்திகம்பி | 12 | குல்கந்து கூட்டு | 15 |
| அமரத்திற்கு | 13 | சீதளவிஷாரண குழம்பு | |
| அக்கிமாலைக்கு | | உடம்புநோய்பசிமந்தலேகியம் | 17 |
| துர்மாமிசத்திற்கு | | கொதிப்பிற்கு | 17 |
| நேத்திர மை | | கொதிப்பிற்கு கியாழம் | 54 |
| சாளேசரமாத்திரை | | மூளை கெடுதிக்கு | 18 |
| பித்தசாளேசரத்திற்கு | | வாத பித்த சூரணம் | |
| கண்நோய்க்கு | 95 | குதிகால் வெடிப்பு | 34 |
| சிரசிற்கு தைலம் | 12 | தலைவலி நோய் | 36 |
| அடிபட்ட காயத்திற்கு | 34 | யோகிகள் தயிலம் | 37 |
| அடிபட்ட காயம்பிற்கு | 35 | யோகிகள் மேனிசூரணம் | |
| அழுகு ரணத்திற்கு | | பஞ்சசர்ப்பேஸ்தாமை | |
| மலைக்காய்ச்சற்கு | 4 | தொண்டை கம்மலுக்கு | 61 |
| கரப்பான் எண்ணெய் | 29 | நீர்கோர்வைக்கு | 84 |
| தேமல் படைக்கு | 33 | ரோமங்களுக்கு கரிசலை | |
| சிரங்கு வகைகளுக்கு | 34 | பரேசுஆள்செலுத்தசெந்தூரம் | 87 |
| கட்டி கனுடைய | | தசான்குவத்தி | 93 |
| சந்தாஸ் பிளாஸ்திரி | | நசிய பொடிபாகம் | |
| பச்சை பிளாஸ்திரி | 35 | அசீரண டெப்பர் மெண்டாயில் | 94 |
| பிளாஸ்திரிகள் | 99 | தலைநோய்க்கு காசிபுட் | 95 |
| அக்கினி பிளாஸ்திரி | 99 | வீக்கங்களுக்கு | 96 |
| ராஜபிளவைக்கு | 97 | ஆரோசிகத்திற்கு | 95 |
| உதிரம் கட்டியதற்கு | 53 | சொக்கொக்கு பிளாஸ்திரி | 97 |
| புரைகளுக்கு தயிலம் | 52 | வாதமந்தத்திற்குபூண்டுயிலம் | |
| இரணங்களுக்கு தயிலம் | | ஈரல்வீக்கத்திற்கு | |
| கருப்பானுக்கு எண்ணெய் சீலை | 52 | பஞ்சமூல அஷ்ட மூலம் | 49 |
| புண்களுக்கு எண்ணெய் | | பலம் உண்டாக்கும் திறுசு | 48 |
| பசிதீபனத்திற்கு லேகியம் | 103 | மூர்ச்சையாகும் திறுசு | |
| பசிதீபனத்திற்கு புதினாரசம் | 4 | இருதயவலிவு தரும் திறுசு | |
| வாய் வேக்காட்டிற்கு | | நீர் இறக்கும் திறுசுகள் | |
| விக்கலுக்கு கியாழம் | | துரையைநீக்கும் திறுசு | |
| சாராயவெறி நீங்க | | வேர்வை யுண்டாக்கும் திறுசு | |
| பல்கூச்சக்கு | | இந்திரிய கட்டு சூரணம் | 12 |

# அட்டவணை.


| இங்கிலீஷ் அவுடதம். | பக்கம். | விபரம். | பக்கம். |
|---|---|---|---|
| மகாபோக குளிகை தங்கம் | 20 | சீதபேதிக்கு | 96 |
| அயதங்க செந்தூரம் | 33 | அதிசாரபேதிக்கு | |
| லிங்க வலிவிற்குஇழுக்குபாலில் | 50 | நீரடைப்பிற்கு | |
| போகஇரசமணிகுளிகை | | இரைப்பைப்பலத்திற்கு | |
| புஷ்டிக்கு கூட்டு | 50 | கபம் உலர்த்ததற்கு | 97 |
| லிங்கசோர்வைநீக்கதயிலம் | | காக்கைவலி விக்கலுக்கு | |
| லேபதயிலம் பாகம் ரு | 51 | சில்வாயுவிற்கு. | |
| மதனகாமேஸ்வர லேக்கியம் | 54 | அன்னம் ஏற்றுக்கொள்ள | |
| மாணி லேக்கியம் | 62 | பேதிக்கு | |
| போக லேக்கியம் | 84 | பேதிக்கு | |
| சாம்பராணிபூ குளிகை | 92 | இரைப்பு வியாதிக்கு | |
| வலிவிற்கு | 63 | ராஜ பிளவிற்கு | |
| வல்லாரை சூரணம் மூல சூடு | | சொக்கு தலையில் அதிகரி | |
| அயம் | 11 | காது மந்தத்திற்கு | 98 |
| சேனசம்பந்த நிவாரணதேன்பா | | மண்ணீரல் வீக்கத்திற்கு | |
| கு | 15 | பேதிக்கு | |
| சம்பங்கி எண்ணெய் | 84 | பீஜவீக்கத்திற்கு | |
| | | முடக்கு பிடிப்பு | |
| இங்கிலீஷ் அவுடதம். | | மூளைமூலம் கரைய | |
| இரேசகவலிவிற்கு | 94 | சகலபேதியும் நிறுத்த | |
| சிரணத்திற்கு | | மேகத்திற்கு சீந்தில் உப்பு | 4 |
| வாந்திபேதிக்கு | | விக்கல் கியாழம் | |
| நீர்சுருக்கிற்கு | | சுர கியாழ கஞ்சி | 123 |
| நீரொழுக்கிற்கு | | காண்டாவுடதம் | |
| கிருமிகளுக்கு | 95 | மரணகுறி | |
| ஒருதலைநோய்க்கு | | சன்னிகியாழம் | |
| வாய்வு களுக்கு | | நடுக்க சுரமாத்திரை | 124 |
| சட்டைகளுக்கு | | விஷகாலிகளுக்கு | 125 |
| வெள்ளைக்கு | | தயிலவகைகள் | 126 |
| சூதகவாய்விற்கு | | எண்ணெய் வகை | 127 |
| கொறுக்கிற்கு | | ஆகாசகிரண காழிகை | 128 |
| கண்ணோய்க்கு | | பத்திய பதார்த்தங்கள் | 129 |
| சுரங்களுக்கு | | இருதயவலிவு நிறுக | 130 |
| முறை காய்ச்சலுக்கு | | சுரல்வலிவு நிறுக | |
| இருமல் வியாதிக்கு | | ஸ்நான பாகம் | |
| வயிற்றுவலிக்கு | | | |
| பக்க இழுப்பிற்கு | 96 | | |
| உள் மூலத்திற்கு | | | |
| குடைச்சலுக்கு | | | |
| வீக்கங்களுக்கு | | | |

# பஞ்சபக்ஷி தொழிலின் ஏகசக்கரக் குறிப்பு.




சந்திரகலையில்
பி-புதன்-2
அ-சந்திரன்-3
தே-சுக்கிரன்-4
வா-குரு-1
ஆ-வாரத் புதன்-5

3

| | ஊண் | ஊண் | ஊண் | ஊண் | பூர்வ. |
|---|---|---|---|---|---|
| வாரம் | பூ-ப | பூ-யி | அ-ப | அ-யி | ஊண் பக்ஷியானது |
| கதிர்செவ்வாய் | வா | க | தே | வா | னபக்ஷியாகும். |
| காரியிர் | கோ | வி | லோ | டே | இ ரு ளே போ க ஓ. யா |
| மதிதினம் | வீ | டே | சோ | லே | ஞாதி செ பு வி வெசவீ |
| மன்னைநாள் | ஆ | ரோ | வீ | டு | இ உ எ ஒ அ இ அ |
| புதநிட | நீ | யே | கூ | டி | |
| புகருநாள் | பே | ச | டா | போ | பூர்வம் சத்துருமித்துரு. |

| நாள் மா | அபரபக்ஷம் படுபக்ஷி. |
|---|---|
| | கூ ரிய தே வே லோ னே. |
| | ஞாதி செபு வி வெ சனி. |
| | உ இ அ ஒ, எ ஒ. எ. |
| | அபரம் சத்துருமித்துரு. |

சூரியகலையில்
பி-சூரியன்-4
ஆ-சனி-3
தே-அங்-2
வா-குரு-1
ஆ-கே-5

கிழக்கு ஆதியாக
பூர்வபக்ஷம் 4 திக்கில் நின்ற பக்ஷி
வ ஆ கா கோ மத்தியமயில்
அபரபக்ஷம் வ கா ம ஆ மத்திகோழி
அமாவசை பருவங்களில் நிற்பது
கா ஆ ம கோ மத்திவல்லூர்.

| | அ | | | அ | |
|---|---|---|---|---|---|
| உ | | எ | இ | | எ |
| ஒ | | இ | ஒ | | உ |

ஆண்-உச்சபக்ஷ
பெண்-ஆட்சி
ஆண்-நட்பு
பெண்-பகை
ஆண்-நீச்சம்

மீதெழுத்திர்க்கு நடுசத்துரு அடிமித்துரு
மீதெழுத்திர்க்கு நடுசத்துரு அடிமித்துரு

| பக்ஷி | பூர்வநிறம் | அபரநிறம் | தாதுமூலஜீவன் | பூர்வபக்ஷபூதம் | அபரபக்ஷபூதம் | காலபட்சி | கோணபட்சி |
|---|---|---|---|---|---|---|---|
| வல்லூர் | பொன் | கருப்பு | மூலம் | தேயு | பூமி | வருங்காலம் | நீள்வட்டம் |
| ஆந்தை | வெள்ளி | சிவப்பு | ஜீவன் | வாயு | அப்பு | மூன்காலம் | ஐங்கோணம் |
| காகம் | சிவப்பு | பொன் | தாது | பூமி | தேயு | வருங்காலம் | அறுகோணம் |
| கோழி | பச்சை | வெள்ளி | மூலஜீவன் | நீர் | வாயு | நிகழ்காலம் | நாற்கோணம் |
| மயில் | கருப்பு | பச்சை | தாதுமூலம் | ஆகாயம் | ஆகாயம் | முன்காலம் | முக்கோணம் |

உ

மீனும்பாள்சகாயம்.

# அடியார்கள் துணை.

ஒன்பதுவாசலுடையதோர்பிண்டத்து
ளொன்பதுநாடியுடையதோரோரிட
மொன்பதுநாடியொடுங்கவல்லார்கட்
வொன்பதுவாசலுலை நலவாமே.

நாடியென்றால் நாடியல்ல நரம்பில்தானே
நலமாக துடிக்கின்ற துடிதானல்ல
நாடியென்றால் வாதபித்த சிலேத்பனமுமல்ல
நாடியெழுபத்திராயிரந்தானல்ல
நாடியென்று லண்டபகிரண்டமெல்லா
நாடியெழுவகைத் தோற்றத்துள்ளாய்நின்ற
நாடியதையாராய்ந்துபார்த்தாரானால்
நாடியுறும்பொருள்தெரிந்து நாடுவாரே.

நாபியிற்சூடுண்டாகில் நற்குணஞ்சிதறிப்போகும்
நாபியில்வாதஞ்சேரில் கமனதாய் வாய்வுமீறும்
நாபியில் தோஷமெய்துநாவறட்சியுமுண்டாகும்
நாபியிற்பித்தஞ்சேரில் நளிர்குளிர் சுரங்களாண்டே.

அக்கினியும் வாயுவும் மலத்தில் சார்ந்தால் வாதமும் வாயுவும் மீறும் ஆகாயத்தில் காற்றும் தீயும் சார்ந்தால் பித்தமதிகரிக்கும் தண்ணீரும் காற்றும் சுழியைச்சார்ந்தால் ஐயமிகும்.

குருநாடிஎன்பது வாதத்தில் சார்ந்தால் கோழி, யன்னம் மயில் போலும் நடக்கும், குருநாடி பித்தத்தில் சார்ந்தால் ஆமை அட்டைபோலும் நடக்கும், குருநாடி ஐயத்தில் சார்ந்தால் தவளை சர்ப்பம் போலும் நடக்கும்.

தொண்டையிலேசோதிறங்கும் குரலைப்போலும்
சூக்ஷமமாய்கைவைத்துச் சுகமாய்ப்பார்க்கில்
கொண்டெழும்பும்வாதமெனும் நாடிதானே
கோழிகுரல் பார்வையதும் மதுவேவாதம்,



மண்டைபிடிக்காரர்தலை கைவைத்தக்கால்
வகையுடனேதெரிவதுதான் பித்தமாகும்
சண்டையிலே வளைபாம்பு தவளைநின்ற
தன்மைதான்சிலேத்பமென்றறிந்துபாரே.

நாயனார் திருவுளிச்செய்த

குறள்.

மிகினுங்குறையினு நோய்செய்யு நூலோர்
வழிமுதலா வெண்ணியமூன்று.

மருந்தென.வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றியுணின்

அற்றாலளவறிந்துண்க வஃதுடம்பு
பெற்றானெடிதுய்க்கு மாறு,

அற்றதறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப்பசித்து

மாறுபாடில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபாடில்லை யுயிர்க்கு

இழிவறிந்துண்பான் கணின்போனிற்கும்
கழி பேரிரையான்க ணோய்

தீயளவன்றித் தெரியான்பெரிதுண்ணி
னோயளவின்றிப்படும்

நோய்நாடி நோய்முதனாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச்செயல்

உற்றானளவும் பிணியளவுங்காலமுங்
கற்றான் கருதிச்செயல்

உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச்செல்வானென்
றப்பானாற்கூற்றேமருந்து

கண்ணோட்டமில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்டமின்மையுமில்.

வாதத்தில்மூன்று பித்தத்திலிரண்டு வன்னியொன்று
தாதுற்றமற்றவினாஞ்சுவாய்வில் சார்ந்ததெனில்
பூதம்தலைப்பட்டு தானிதேதுபுலப்படுமோய்
பேதமிதுவழியாமதும் மன்பர்கள் பேசவரோ.

இருதயகாபாா திகிலடைந்தவர்களுக்கு.

சிறுலவங்கப்பட்டைசெவ்வப்பு காவிச்சந்தனத்தூள் வகைவி-னி (க) வெள்ளை சர்க்கரை வி-னி (௩) கூட்டி ஒரு விராகனிடையாக புசிக்க (௫) எலுமிச்சம் ரசத்தில் குலாப்புதூள் தோலா (க) சந்தனத்தூள் தோ (க) காவிக்கல் வி-னி (க) கூட்டிவைத்துக்கொண்டு வேளைக்கு தோலாவீதம் கொடுக்க.

சந்தனத்தூள் ப. உ சுக்கு ப. உ காசினிவிதைபலம் க சீரகம் ப. க இவைகளை சலத்திலரைத்து பில்லைகளாகச் செய்து உலர்த்தி வேளைக்கொரு தோலாவீதம் புசித்துவர மிதுபன்னீராகிலும் சலமாகிலும் கொடுக்க.

இலவங்கோந்து சுக்கு ஏலரிசி சோம்பு அதிமதுரம் சந்தனம் வில்வசதை ரோசாபூவகைக்கு தோ (க) தனியா ப. ௩ சீனிகற்கண்டு ப. உ சூரணம் செய்து முன்கற்கண்டை சலத்திலிட்டு பாகு செய்து சூரணமிட்டுப்பாகமாய்ச் செய்து வேளைக்கு தோலாவீதம் கொடுக்க.

சன்னிக்கு நசியம்.

கொச்சிக் கொழுந்து புங்கன்கொழுந்து மிளகு இவைகளை அமுரியில்கசக்கி நசியமிடத் தீரும்.

சன்னிமயக்கந்தீர்க்க புகை தீரி.

தும்பைப்பூ ப. க லவங்கம் ப. க வால்மிளகு ப. க இவைகளை முலைப்பாலி லரைத்து வெள்ளைத் துணியில் தடவி திரிசெய்து நிழலுலர்த்திக்கொளுத்தி மூக்கில் புகைபிடிக்க.

பூபதிகுளிகை.

காசிகூஷம் தாரம்திரிகடுகு கெந்தி காயம்வாளம்சமனெடை சித்திரமூலக் கியாழத்தால் எ நாளரைப்பு மிளகு பிரமாணம் மாத்திரை தேன் இஞ்சி ரசத்திலிட சன்னி சுகதோஷம் வாதவாய் குன்மம் அசாவறட்சி சயகாசம் மேகந் தீரும்.

மேகச்சூடுதணிய துத்தியிலை கியாழம்வடித்து பாலும்சர்க்கரையுமிட்டுக் கொடுத்துவரவும்

மலபந்தம் நீங்க துத்தியிலை பயறுவெங்காயமிட்டு சமைத்துக் கொடுக்கத் தீரும்.

நீர்சுருக்கு நாகம்திர துத்திவேர் ப. ௩ கிராம்பு ப. கஉ நல்ல சலத்தில் கியாழமிட்டு வடித்துக் கொடுக்க.



மலம் உதய சரக்கொன்றை புளி சர்க்கரை உப்பு மிளகாய்கூட்டித்து வையல்செய்து புசிக்க.

மேகம்திர சீந்தில் உப்பு மூங்கிலுப்பு ஏலக்காய் கற்கண்டு கூட்டி யரைத்துச் சுண்டைக்காய் பிரமாணம் கொடுக்க.

விக்கல்திர லவங்கப்பட்டை சூமைத்தகி கியாழம்வடித்துக் கொடுக்க நீங்கும்.

சாராயவெறிநீங்க.

கொத்தமல்லி விதையை காடியிலரைத்து உள்ளுக்குக் கொடுக்கமுள்ளங்கிக்கிழங்குரசத்தில் படிகாரந்தூளிட்டுக் கொடுக்க. சரீரத் சர்ப்பத்தும் கொடுக்க நீங்கும்.

கைகால்குடைச்சலுக்கு பூமிசர்க்கரைக் கிழங்கை சலத்திலரைத்துப்பூசிவர மருந்தணிபூவை நல்லெண்ணெயில்காய்ச்சி பூசினாலும் தீரும்.

பல்கூசுநீங்க, பேதாளுவிதையைமெல்ல நீங்கும்.

குழந்தைகள் கிருமிகள் வெளிப்பட, புரசம்விதை சர்க்கரை நெய் பால்சேர்த்து லேகியமாகச்செய்து கொடுக்க.

பசிதீபனத்திக்கு புதினாரசம் க பழரசம் ௩ கூட்டி சர்க்கரை சேர்த்துக் கொடுத்துவரவும்.

வாய்வெக்காட்டுக்கு மருதணியிலை கியாழம்வடித்து கொப்பளித்துவரவும்.

வெட்டுக்காய உதிரப்பெருக்கை நிறுத்த, மாசிக்காய்ச் சாம்பல்தூளை அதின்மீது தூவ.

நாவுகுளறல் நீங்க மூமியாவை தேனிலரைத்து நாவில் தடவிவரவும்.

உதிரக்கடுப்பு வயிற்றுவலி இருமல் தொண்டைகம்மல்இர்ந்து குரல் ஓசைநன்றாக, தேன்மெழுகைப் பசுநெய்யில்உருக்கிக்குன்றி எடையாகப் புசித்துவரவும்.

சரீரம்நன்றாக, சுக்கு கடுக்கா திப்பிலி வாலுழுவைசமன்தேனிலரைத்து நெல்லிக்காய்ப்பிரமாணம் கொடுத்துவரவும்.

கைகால் குடைச்சலுக்கு, தைலம் நல்லெண்ணெய் எருக்கம்பால் புளியிலைரசம் கொச்சிலைரசம் வெள்ளாட்டுப்பால் வகைக்கு சேர் ௨ அபினி தோ ௨ காய்ச்சிவடித்து ௩ நாள் தடவ.

வயிறுகடுப்பிற்கு, ஆலன்விழுதை எருமைத் தயிரிலரைத்து பழரசம் வகை ப-க, கூட்டிக்கொடுக்க.

கோழை யிருமலுடன் கபங்கட்டியிருந்தால், தேன், ப-ரு இதை காய்ச்சிவடித்து சுடுகையில்தானே மிளகுதூள் தோ-க, பொரித்த வெண்காரம் தோ-க, இட்டு ஒன்றாக்கி வேளைக்குக் கால் தோலாவீதம் கொடுக்க,

இரத்தவெள்ளைக்கு செச்சக்காயிலை ரசம் ப, அரை தயிரில் கலந்து ங நாள் கொடுக்க. கபிப்பத்தியம் ஒருபலம் சிறுலவங்கப் பட்டையைபொடிவடித்துக்கொடுக்க. இவ்விதமாகமூன்றுவேளை.

## பற்பவகை.

சுத்திகவசம் சீலை வறட்டி புடமடுக்கும்பாகம் தீயினளவு, இவைகளை மறவாமல் செய்பவர்களுக்கு பேதப்படாது.

மிஞ்சிய தீய்க்கு வெறுங்குகையாகும்.

### நெல்லிக்காய் கெந்திபற்பம்.

சுத்திகரமாகிய கெல்லிக்காய் கெந்தியை யிரும்புகரண்டியிலிட்டு கொஞ்சம் நெய்விட்டு உருக்கி பசும்பாலில் சாய்க்க இவ்விதம் பத்துதரம்செய்து நன்றாகதுடைத்து ரவியில் உலர்த்தி மருதம்பட்டைசாம்பல் படி ஒன்றரை ஒரு குண்டுசட்டியிலிட்டு மத்தியில் கெந்தியை வைத்து நன்றாகச்சாம்பலை அழுத்திசிறுதீயாகஒரு நாழிகை எரித்து தீயை நிறுத்தி ஆறியபிறகு கெந்தியை எடுத்து அதின்மீதிருக்கும் சாம்பலை துடைத்துவிட்டு இதில் தேவையான வரையில், அரைபலம்ஒருபலம் எடுத்து குப்பைமேனியிலைசிறுகீரையிலை யிரண்டையுமரைத்துக் குகைசெய்து சற்றுகாற்றுறச்செய்து அதில் கெந்தியைவைத்து மேல்படி மூலிகையால் பில்லை செய்து மூடி ச மண் சீலைசெய்து ங வறட்டியில் புடமிடப் பர்ப்பமாகும் மேகப்படைகள் சிரணம் வெள்ளை கொறுக்கு இவைபோன்ற வியாதிகளுக்கு தேகக்கூறறிந்து தக்க அனுபானங்களில் பணவிடையாக அரைமண்டலம் கொடுக்க.

முன்சுத்தித்த கெந்தி பலம்-க, தாளக்கி ஒருபிங்கானிலிட்டு வெள்ளறுகுரசம் மிதக்கவிட்டு ரவியில்வைத்து சரியெடைரசம் வறும் வரையில் விட்டுவிட்டு ரவியில்வைத்து நன்றாக உலர்த்தி இரண்டுபலமாக இருக்கபார்த்து அதை வெள்ளாட்டு நெய்விட்டு மெழுகுபோல் அரைத்து சுண்டக்காய்பிரமாணமாகச்சர்க்கரையிற்



இருவேளையாக வ-உ-மண்டலம் கொடுக்க மேற்கண்ட வியாதிகள் நீங்கும். இச்சாபத்தியம்,

### மால்தேவியாகிய தாளகபஸ்பம்.

ஒருபலம் தாளகத்தை கல்சுண்ணாம்புமத்தியில்வைத்துபனங் கள்ளாகிலும் சிறுவர் நீரிலாகிலும் ங தரம் தோய்த்து சுத்தப்படுத்தி சரக்கொன்றைபட்டை சாம்பல் படி ஒன்றின் மத்தியில் வைத்து சிறுதீயாக ஒருசாமமும் கமலம்போல ஒருசாமமாக எரித்துஆறியபிறகு எடுத்து தக்க அநுபானங்களில்விட இருமல் கபரோகம் சீதள வியாதிகள் சுரம் தீரும்.

### மகாசன்னிகளுக்கு குருபஸ்பம்.

பாஷாணரசம் பலம்-க, சவ்விரசம் பலம்-உ, வெள்ளி காடி காரம் விராகனெடை-க, மூன்றையும் சின்ன பிங்கானிலிட்டுக்கலக்கச்செய்து கெந்தி திராவகம் விராகனெடை-அ, இட்டு வாய்புறம் சரியாக தட்டுபில்லைமூடி ௭ மண் சீலைசெய்து ரவியில்உலர்த்தி ஒரு குண்டு சட்டியில் இரண்டுபடி மெல்லியமணலிட்டு மத்தியில் பிங்கானை வைத்து சிறுதீயாக உ-சாமமும் கமலமாக ச-சாமமும் எரித்து ஆறவிட்டெடுக்க பஸ்பமாக இருக்கும். இதை கல்கார்க்கிட்டசிமிழ புட்டியில் வைத்து மகாசன்னிகளுக்கு அரிசி யெடை தேனில் குழைத்து உள்ளுக்குச் செலுத்தவும், ரு நிமிஷம்சென்று மிளகும் கடுக்காயும் மொழும்செய்து அதில் இரண்டுமூழங்கு உள்ளுக்குப் புகட்டவும், நாடிகள் அசைந்திருந்தாலும்சுபாவம்தெரியாமையாக இருந்தாலும் கிதானப்படுத்திக் கோழைகளை வெளிப்படுத்தும்.

### படிகார பஸ்பம்.

சிறியமண் குடுவையில் ஒருபலம் பசுவெண்ணெயையிட்டு மத்தியில் ஒருபலம் படிகாரக்கட்டியை வைத்துவாய்புறம் ஓடுமூடி ங சீலைசெய்து ங வறட்டியில் புடமிடப்பூத்து பஸ்பமாக விருக்கும் இதில் மூன்று குன்றி யெடை முசுமுசுக்கையிலையில் மடித்து சா பிடதினம் ஒவ்வொரு இலையாக அதனைப்படுத்தி அதில் பஸ்பத்தை வைத்துச் சாப்பிடவும், நாள் எ. இருமல்நீரும்நெய் மோர் கெட்ட பதார்த்தங்கள் நீக்கவும்.

## மான்சிங்கி கற்பூரசிலாசத்து.

### கல்லூர் கெருடக்கல்,

### பற்பக்கூட்டு.

சிங்கிலைப் பிள்க்து சிறுதுண்டுகளாக குமரிமடலுக்குள் வைத்து மேழும் மேலும் ஒவ்வொருமடல்களை வைத்து சீலைசெய்து கொள்ள கற்பூரசிலாசத்தை கல்சுண்ணாம்பில் ஒருநாள்ஊறி எடுத்துக்கழுவி தாமரையிலையை யரைத்து அதற்குள் வைத்து மண் சீலைசெய்யவும், நாட்டுகல்லூரை கோவையிலையை யரைத்து அதில் வைத்து சீலைமண்செய்யவும் கெருடக்கல்லைதாமரை யிலையிலைத்துச்சீலைசெய்து கொண்டு கஉமுழநீட்டமும்ஒருமுழஉயரமுமாக வரட்டிகளை அடுக்கி அதின்மத்தியில் மேற்கண்ட திலுசுகளை ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்படாமல் வைத்துப் புடமிட்டு எடுத்துஒன்றாக சரிஎடைகளாகக் கூட்டிக்கொண்டு வெண்ணெயில் இரண்டு குன்றி யெடைகொடுக்க, கொதிப்பு வெப்பம் நீர்தாரைரூடு கைகால் எரிவு நீர்சுருக்கு நீர்அதிகப்பெருக்கல் இவைகள்போன்ற வெப்பத்தினாலாலும் இன்னம் பலவியாதிகளும் வெள்ளையும் தீரும். பத்தியம்நோயறிந்துபுகலவும்.

### சகலவியாதிகளுக்கும்,

### சஞ்சீவிமாத்திரை,

சுத்திசெய்த சூதம் தாளகம் கெந்தி வெண்காரம் நாபிநிர்விஷம் வகைகளஞ்சி ௩ திரிகடுகு கடுக்காய் தானிக்காய் வகை ப. ௨ வாளபருப்பு ப. ௩௨ இதுகளில் சூரணம் செய்பவைகளை செய்து சூதமும் கெந்தியும் கூட்டியரைத்து மற்றதிலுசுகளைச் சேர்த்து நொச்சிரசம் முருக்கின்ரசம் மேனிரசம் கையான்ரசம் ஆடாதோடைரசம் இதுகளில் திலுசொன்றுக்கு ஒருநாள் வீதமரைத்து பின்களவு மாத்திரைசெய்து நிழலுலர்த்தி அடியிற்கண்ட அனுபானங்களிலிடத்தீரும்வியாதி. கபாலசூலைக்கு பசுவின்பாலில்உள்ளும் மேலும்பூசவும், மண்டைகரப்பானுக்கு மேனிரசத்தில்பூசச் சகலகரப்பானுக்கு நெருப்படிரசம் கபாலகுட்டத்திற்கு உத்தாமணிரசம் ஒருதலைவலிக்கு நார்த்தம் பழரசம் படலத்திற்கு மேனிரசம் காசத்திற்கு காக்கணரசம் நீலகாசத்திற்கு வெ. காக்கணரசம் பித்தகாசத்திற்கு குட்டிதக்காளிரசம் கண்பூவிற்கு முலைப்பாலில் சுக்குரபடலத்துக்கு புள்ளடிரசம் கண் அமரத்துக்கு வேப்பிலைரசம் இரணசுக்குரனுக்கு ஊமத்தஞ்சாறு நத்தைபடலத்துக்கு



வேப்பம்பட்டைசாறு கண்புழுவெட்டுக்கு முருக்கிலைசாறு கண்விழிப்பதற்கு மூத்திரத்தில் சேத்மகரப்பனுக்கு பிரண்டைரசம் பித்தகரப்பனுக்கு கெஞ்சாரசம் சிரந்திகளுக்கு ஆடாதோடைரசம் வாயுவுகளுக்கு வெற்றிலை ரசம் மேகமத்திற்கு கொள்ளுபொடி வயிற்றுகழிச்சலுக்குஅத்திப்பட்டைரசம் கிராணிக்கு எருமைவெண்ணெய் பேதியாக மிளகுதூள் குன்மமெருமைகோமியம் எரிகுன்மத்திற்கு முருங்கைரசம் உதிரகுன்மத்திற்கு உமிகருக்கிவிட சத்திகுன்மத்திற்கு வில்வஇலை சிவாழும் வயிறுவலிக்கு மாவிலிங்கன்ரசம் கவுசிக்கு தகரைரசம் பித்தவாயுக்கு நீலிரசம் காதெழுச்சிக்கு நெல்லிச்சாறு கழல்வாதம்முடக்கொத்தான் தனுர்வாதம் நாடரியிலை சூலைவிரணவாதம் நொச்சிசாறு அந்தரவாதம் வேப்பெண்ணெய்சந்துவாதம் சாட்டறணைரசம் பல்லடிவாதம்சுக்குமியாழம் முடிவாதம் ஊதுவாதம் பழரசம் நடுக்குவாதம் கழற்சிபருப்பு குதிவாதம் உவர்மண்ணில் ஆசனபிளவை பசும்பால் தண்டுபிளவை பொன்னாங்காணி உச்சிபிளவை பசுநெய் பித்தசுரம் முலைப்பால் சன்னிக்கு முசுறுமுட்டை வாதசுரம் நொச்சிரசம் பித்தசன்னி ஒறுன் இலைரசம் அலட்டுசன்னி துவரை இலைரசம் நடைசன்னிக்கு சாட்டறணைரசம் பாம்புகடிக்கு பாகலிலைரசம் நசியத்திற்கு வெற்றிலைரசம் வழுதலை பூமத்தன்ரசம் விஷகாலிக்கு.

இவ்வித அனுபானங்களிலிட தீரும்.

### திமிர்தடிப்பு துட்டரிணம் புடைசட்டை மேகம் துர்ப்டம்

### இவைகளுக்கு எண்ணெய்.

பூவரசு பட்டைரசம் அத்திப்பட்டைரசம் வெள்ளறுகுரசம். சோவைரசம் பிசெங்கன்ரசம் வைரசம் படி ௧ வெவித்துமூத்து எண்ணெய் படி ௨ அமுக்கறா கிழங்கு ப. ௨ பறங்கிசக்கை ப. ௩ லவங்கப்பட்டை கார்போக அரிசி கடுகுரோகணி வாய்விளங்கம் திப்பிலி வகை ப. ௧ மிளகு ப. ௨ பூரம் ப. ௧ இதுகள்தான் செய்கிட்டு காய்ச்சிவடித்துமேனிக்கு அரைபலம்வீதம் கூடம்ளை எ நாள்விட்டெப்புசிக்க சுரக்காய்பீர்க்கன் முருங்கை துவரம்பருப்புஉப்புஆறைக்கீரை நெய் ஆகும், புளிநீக்கிவிட.

### நெல்லிவற்றல் தயிலம்.

நெல்லிவற்றல் கிச்சிலிகிழங்கு பச்சிலைவெட்டிவேர் கோரைக்கிழங்கு வகை ப. ௫ இடித்துத் தூளாக்கி நல்லசலத்தில் ௨ நாள்

ஊறி அதில்தானே அரைத்து ஈ வடை செய்து ஐ தரம் உலர்த்தி ருய ப நல்லெண்ணெயில் சிவக்கச் சுட்டெண்ணெயைவடித்து ஸ்நானம்செய்துவர பித்தரூடு தணியும்,மயிர்உதிர்ந்த விடத்திலும் தடவிவரவும்.

வாயுவினுல் நேர்ந்த சிறுஅண்டவாதம்தீர.

ஒருபலம் பூரத்திற்கு பால்நண்டையிடித்து ரசம் எடுத்து ச-சாமம் சுருக்குகொடுத்து உத்தாமணி வேர்பட்டை ரசத்திஞல் ங-சாமம் சுருக்குகொடுத்து மேற்படி ரசத்தாலரைத்து பயறுபோல் மாத்திரைசெய்து முத்தெண்ணெயில் நனைத்து உய-நாள் சாப்பிட்டுவரவும் இச்சாபத்தியம். இதற்கு முதல்நாள் பேதிக்கு கழற்சிவேர் ப. ங-கியாழம்வடித்து மிளகு ரசம்செய்து முத்தெண்ணெய் படி க, விட்டு சாப்பிடவேண்டும்.

அகஸ்தியமகா முனிவரருளிய கோடாகுழிமாத்திரை.

திரிகடுகு, திருபலாதி, அக்கருகாரம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, சித்திரமூலம், முள்ளிக்காய், இந்துப்பு, வெண்காரம், கெந்தி, தாளகம், மனேசிலை, லிங்கம், நாபீருடன், சூதம், வாளபருப்பு படி அரை, சிற்றுமணக்கு பருப்பு படி அரை மற்றதினுசுவகை விராகனெடை-க, இவைகளில் வெண்காரமுதலிய தினுசுகளை ஒவ்வொன்றும் கிரமமாய் சுத்திசெய்து வாளத்தைச் சுத்திசெய்து நஞ்சுபோக்கி சூரணங்கள் செய்யவேண்டியவைகளை சூரணஞ்செய்து கெந்தி சூதம் இவைகளை முன்னதாக மடிய அரைத்துப் பிறகு மற்றதினுசுகளைக்கூட்டிநீலியென்னும் அவுரிரசத்திஞல் ங-சாமமும் கையாந்தகரை ரசத்தில் சு-ஜாமமும் எலுமிச்சம் பழரசத்தில் ங-ஜாமமுமாக அரைத்து மிளகு பிரமாணமாகச்செய்து வைத்துக்கொண்டு செரியாகுன்மத்திற்கு தயிரிலும் சயித்தியசுரத்திற்கு ஊமத்தன் ரசத்திலும் சுரோணிதவாதத்திற்கு பசளைரசத்திலும் ரத்தக்கழிச்சலுக்கு சாதிக்காய் தூளிலும் தாதுவிர்த்திக்குக் கோவைரசத்திலும் கிராணிக்கு பசுநெய்யிலும்வயிற்றுப் பொருமலுக்கு நெய்யிலும் பிரிமியத்துக்கு நொச்சிரசத்திலும் மேகபிரமியத்திற்கு ஆட்டுப்பாலிலும் சுவாசதீபனத்திற்கு தகரையிலை ரசத்திலும் உஷ்ணத்துக்கு புளிகொட்டை சலத்திலும் உடம்பு இளைப்புக்கு தேனிலும் நெஞ்சுகட்டுக்கு திரிகடுகிலும் முகவசீகரமாக பருத்தியிலை ரசத்திலும் தாம்பூலத்திலும் குன்மம் யஉ-க்குப் சூலைக்கும் முருங்கைரசமும் நெய்யும் கூட்டிக்கொடுக்க தொந்தவியாதி



களுக்கு கொத்தமல்லி வசம்பு நெய்யிலும் உஷ்ணத்திற்குச் சர்க்கரை சீரகத்திலும் தாகத்திற்கு சீரகத்திலும் இருமலுக்கு திரிகடுகிலும் பித்தபயித்தியத்திற்குச் சர்க்கரையிலும் நீரொழுக்கு தண்ணீர்விட்டான் கிழங்கு நன்னாரி கியாழத்திலும் வாதசுரத்திற்கு நொச்சிரசத்திலும் பித்தசுரத்திற்கு சுக்குகியாழத்திலும் அய்யசுரத்திற்கு திரிகடுகு இஞ்சிரசத்திலும் தாபசுரத்திற்கு தனியாசுக்கு கியாழத்திலும் கிராணிக்கு மோரிலும் பல்லரணைக்குகொத்தமல்லியிலும் மாருனைப்பிற்கு பசுநெய்யிலும் காய்ச்சல்கடுப்பிற்கு கரிசாலைரசத்தில் கலிக்கவும் கழிச்சலுக்கு கோரைக்கிழங்கு ரசத்திலும் அண்டவாத சுரத்திற்கு கழற்சியிலை ரசத்திலும்வாயுவிற்கு சர்க்கரையிலும் போகத்திற்கு பிரமியிலை ரசத்திலும் ஜன்னிக்கு ஊமத்தன் ரசத்திலும் தீபனத்திற்கு வெந்நீரிலும் மூலவாயுவுக்கு முள்ளங்கிரசத்திலும் வீக்கத்திற்கு வசம்பு நீரிலும் வண்டுகடி ரோகம் பழரசத்திலும் சகலகடிக்கும் கோமியத்தில் செம்பட்டை மயிர்கருக்க கொட்டைப்பாசி ரசத்திலிழைத்து தடவ இஞ்சிரசத்தில் கலிக்கமிட்டுப் பார்க்க பாதாளஅஞ்சனம் ஒடும்பேய்க்குகலிக்கமும் நல்லெண்ணெயிற் கலிக்கமிட வெள்ளெழுத்துதீரும் மூலத்திற்கு ஆசனவாயில்தடவ பிள்ளையுண்டாக ஆலவிரையிலிட பாம்புவிஷத்திற்கு கடிவாயில்தடவ தேளுக்கு கடிவாயில்தடவ செவ்வட்டைக்குப் பழரசத்திலிட இவ்வித அநுபானங்களாக வியாதியளவின்படி கொடுத்துவர ஆண்டவர் கிருபையால் சுகுணமாகும்.

வாயுசீநனத்திற்கு.

எட்டுப்பலம் தேனைக்காய்ச்சி அபினிதோலா அரைக்காலிட்டு கரைத்து இதில் ஓமம் பலம-ங, சாதிக்காய்சாபத்திரிபெளம் பலம் அரை தூளாக்கியிட்டு பிசைந்து புளியங்கொட்டைப் பிரமாணம் புசித்துவரவும்.

சூடுதணியக் கியாழம்.

குலாப்பு தோலா அரை, நிலாவிரை தோலா-க, சோம்புகடுக்காய், அதிமதுரம் சீந்தில்தண்டு வகை தோலா அரை, கூட்டி கியாழம் வடித்துக்கொடுக்க ரு-வேளை.

கெந்தகச் சூரணம்.

நெல்லிக்காய் கெந்திரை புருக்கி ஆவின்பாலில் பத்து தரம் சாய்த்து சிறு அம்மான் பச்சரிசி ரசம் விட்டு அரைத்து ஒருபா

ண்டத்தின் வாய்புறம் மோட்டா துணியை யேகட்டி மீறு செந்திலைப் பரப்பி அதின் மீது ஒருபாண்டத்தை மூடி பூமிக்குள் மேல்சட்டி தெரியும்படியாய் புதைத்து உ-விராகனிடை மணல் பரப்பி ௩௰-வறட்டிபுடமிட்டு அடிபாண்டத்தில் உருகிவிழுந்தசெந்தி ப. ௩ வாயுவிளங்கம் வலம் திரி கடுகு வகைப.௩ சித்திர மூலவேர்பட்டை ப.௧ கந்திசெய்தபறங்கிசக்கை ப.௨ சீரகம் ப.௪ இவைகளைச்சூரணமாக கூட்டி வேளைக்குத்தகதிட்டத்தின்படி ஒருவிராகனெடை முதல் இரண்டு விராகனெடை வரையில் நெய் அல்லது சர்க்கரை தேன் இவைகளிலொன்றில் அநுபானமாகமண்டலம் கொடுக்கப் புளி கசப்பு பூசணி கரப்பன் பதார்த்தம் நீக்கி சங்கிலையில் புடமிட்ட உப்பைப்பதார்த்தங்களுக்குச் சேர்க்கவும். இரும்வியாதி மேகம் கிரந்தி பிளவை பவுத்திரம் குஷ்டம் கடிவிஷம் வண்டுகடி கரப்பன் மகோதரம் பாண்டு காமாலை பீனிசம்தீரும்.

வல்லாரை சூரணம்.

வல்லாரை யிலையை பசும்பாலில் வேவித்து நிழலுலர்த்திய சூரணம் ப.௰ கிராம்பு ஏலம் சாதிக்காய் சாபத்ரி மாசிக்காய் தாளிசபத்திரி திருபலாதி வகை பூ.௧ இவைகள் சூரணம் சர்க்கரை ப.௰௬ கூட்டி கடிகை பிரமாணம் பசுநெய்யில் கிருஷ்ண அபிரேக்கு சிந்தூரம் குன்றியெடைகூட்டி அரைமண்டலம்கொடுக்கநிரும்வியாதி நீரருகல் நீரெரிவு கண்ணெரிச்சல் உடம்பெரிவு மூலச்சூடு க்ஷயரோகம் தீரும்.

கெர்ப்பக் கோளி நிவாரண எண்ணெய்.

தேங்காய்ப் பால் பச்சைமஞ்சள்ரசம் தைவேளைரசம் நிலாவரைரசம்வகை படி (௧)முத்துவெண்ணெய்படி-௧, திரிகடுகுதிரிபலைவகை ப.௧ இந்துப்பு ப.௪ காயம் ப.௧ இதுகளை பதமாய்க் காச்சி வடித்து சுத்திசெய்தபூநீர் வி.௧௪ கூட்டி தூரமாகிய மூன்றுநாள் முதல் காலையாக ஸ்திரியின் தேகதிடப்படி கொடுக்கப் பேதியாய் வியாதிகள் நீங்கி கெர்ப்பமாகும். இச்சாபத்தியம்.

தூரகாலத்தில்வயிற்றுவலி கண்டவர்களுக்கு.

சிறுபின்னை அமுரியில் பனைவெல்லம் ப-௰ வெண்காரம் சவுக்காரம் வெடியுப்பு நவாசாரம் வளையலுப்பு இந்துப்பு பொரிகாரமெனும் படிகாரம் சூடனுப்பு வகை ப. தூள்செய்திட்டு லேக்கியம்செய்திட்டு லேக்கியமசெய்து கொட்டைபாக்கு பிரமாணம் கொடுத்து வரவும், சூதகவலிசுருக்குவலிதீரும்.



சூட்டினால்வந்த வறட்சிநீங்கி தேகம்வலிவுபட.

வெள்ளைக்கத்தாரித்தூள் ப-௰ சீமைத்தண்ணீர் விட்டான் கிழங்கு ப.௫ கோளிக்கிளைவிரை வி.௩ ௩-கீரைக்காரைபவிருப்பு வி.௩ உ-சுரைவிரைபருப்பு வி-௩ உ-காவுசாபான் வி.௩-க, குலாப்பு வி-௩ க மூங்கிலுப்பு வி.௩ க பாமனேசைபைத் வி.௩ கஸ்தூரி தோ.க இவைகள் சூரணம்செய்து வெள்ளை சர்க்கரை ப. அரை சலத்தில்பாகுசெய்து பன்னீர் ப.௩ விட்டு சூரணங் கலைவிட்டுக்கிளறி யிறக்கும்சமயம் குங்குமப்பூ வி.௩.௧, பன்னீரிலரைத்திடவும், வெள்ளிரேக்கு வி.௩.௨ இட்டுக் கலக்கச்செய்துகழற்சிக்காய்ப்பிரமாணம் இருவேளையாக ௰, ௨௰, நாள் புசிக்கவும்.

இந்திரியக் கட்டுச் சூரணம்.

நருவளியின்பிஞ்சு கருவேலன்பிஞ்சு காட்டு பொன்னாடையிலை யிலைகளைத் தனித்தனி நிழலுலர்த்தி சூரணமாகச்செய்து சமமாகக்கூட்டி அவைகளுக்கு பாதியெடை சர்க்கரை கூட்டி கடுகு பிரமாணமாக ௰ நாள் புசித்துவரவும் நீர்த்திருந்தவை கட்டிவிடும்.

சிரசிந்து தைலநெய்.

ஆவின்பால் படி ௨ பொன்னாங்காணி ரசம் படி ௨ இரண்டையுங்கூட்டி காய்ச்சிப்புரைகுத்தி மறுநாள் மத்தினால்கடைந்து வெண்ணெயெடுத்து உருக்கி நெய்யாகவைத்துக் கொண்டு உச்சியிலும் பிடரிபள்ளத்திலும் சடைவைத்தும் நேத்திரத்திலும் இட்டுவரநேத்திரத்தில்வரும் வியாதிகள் நீங்கும் கபாலசூடுதணியும் நேத்திரத்தில் வாதகோபத்தால் கருவிழியில் ௰௫- பித்தகோபத்தால் இமையோரத்தில் வருபவை-௪௬ கடைக்கண்ணில் கரு-ஐய்யகோபத்தால் வெள்ளைவிழியில் வருபவை ௨௰-ஆகநேத்திரவியாதி ௯௰௪.

நேத்திரபேதி.

சுருவேருமை சாணிப்பாலில் சிற்றுமணக்கு பருப்பையிழைத்துதீட்ட மறுநாள்வரையில் பீளைசாரும்.

நேத்திரசுத்திகம்பி.

காரியத்தை திரிபலாதி யாழுத்தியும் மழைநீர் கரிசாலைசம் பசுநெய் தேன் இவைகளில் உருக்கித் தனித்தனி சாய்த்து உருக்கிநீட்டயாய் ௭ அங்குல நீளமாக செய்து காலை யெழுந்து உடனே நேத்திரத்தில் தீட்டிவர நேத்திரரோகங்கள் வாரிருக்கும்.

அமரம் சேவப்பு மந்தத்திற்கு

புளிப்பு மாதளம்பழரசம் ப. ச சீனாகற்கண்டு ப. உ லவிசி ப. வ பூநீக்கியலவுங்கம் ப. வ இவைகளை நறுக்கி யிட்டு ரவியில் வைத்து தெளுவில் ஒருதுளிவிட்டு வரவும்.

பித்தசாளோசரத்திற்கு.

கடுக்காய் விரைக்குள்ளிருக்கும் பருப்பு எடை ய உ கெட்டி. மிளகு எடை ரு திப்பிலி யெடை ரு இதுகளைநெல்லிபழரசத்தாலரைத்து திப்பிலி போல்மாத்திரை செய்து நிழலுலர்த்தி வெந்நீரிலிழைத்து தீட்டிவரவும். அமினியிட்டு வறுத்த துத்திகாகபஸ்பம் க பொரித்தபடிகாரம் க சுருமாகல் உ மூன்றையும் மைபோலரைத்து இந்ததூளில் கடுகளவு நேத்திரத்தில் தீட்டிவரவும்.

அந்திமாலைக்கு.

காலைபாக கிருஷ்ண துளசியிலைரசம் இரண்டு துளியாக மூன்றுநாள் நேத்திரத்தில்விடவும்.

நீர்மாமிச வளர்ச்சிக்கு.

பத்துகஞ்சாவிரையை மைசியில்குத்தி தீபத்தில் கருக்கி எண்ணெயில் குழைத்துத் தீட்டிவரவும்.

ஆமலகதைலம்.

கரிசாலைரசம் படி க நெல்லிக்காய்ரசம்படி. க பசுப்பால் படி-க கூரெள்ளெண்ணெய் படி உ பசும்பாலிலரைத்த அதிமதுரம் ப ச இவைகளை கூட்டி. பதமாய்க்காச்சி வடித்து ஸ்நானம் செய்துவர சிரசில்சேர்ந்த கொதிப்புக ளனைத்தும் நீங்கும்.

குழந்தைகள் முதல்பெரியவாள் வரையில் மை.

மெல்லியவெள்ளைச்சீலையை குமரிசாத சலத்திலும் கரிச்சாலை ரசத்திலும் பொன்னாங்காணி ரசத்திலும் தனித்தனிநனைத்து நிழலுலர்த்தி திரித்து சுத்தஎள்ளெண்ணெயால் தீபமெரித்து மேல் பற்றும் மையை வெண்ணெயில் குழைத்து வெள்ளி சிமிழில்வைத்து நேத்திரத்தில் இட்டிவரவும்.

காசோசரத்திற்கு.

வெள்ளாட்டுப் பிச்சியில் விரைநீக்கிய சூரத்துக்கடுக்காய் துண்டுகளையிட்டு அந்தபிச்சின்வாய் புறத்தைக்கட்டி பூரும் வரையில் நிழலில்தொங்கவிட்டு கடுக்காயை மாத்திரம் எடுத்து இதற்கு



நாலிலொன்று தண்டவாளபொடி கூட்டி புளிப்பு மாதுளம்பழரசத்திறல் மைபோலரைத்து திப்பிலிபோல்செய்து நிழலுலர்த்தி முலைப்பாலிலிழைத்து காலைமாலையாக ஒருவாரம் தீட்டிவரவும். புகை புளி ஆகாது. மச்சம்நீக்க. ரவியில் திரியலாகாது அதிகபோகம்லாகிரி அதிகநடை, மனோவியாதி இவைகளால் மூலஅனலெழும்பி நேத்திரத்தில் சார்ந்து நேத்திரரோகங்களை யுற்பவம் செய்வதால் கூடியசாக்கிரதையோடு நடந்துவருவதில் ரோகம்வந்தால் அதிக கேவலசிகிச்சை செய்தாலும் நீங்கிவிடும்.

கஸ்தூரிமெழுகு.

கஸ்தூரி வி-நி (க) பச்சைகற்பூரம் வி-நி (உ) கோரோசனை வி-நி (ச) குங்குமப்பூ வி-நி (ச) புனுகு வி-நி (ரு) சவ்வாது வி-நி (ரு) பூநீக்கியலவுங்கம் வி-நி (ச) வால்மிளகு வி-நி (ச) ஏலக்காயரிசி வி-நி (அ) சிறுலவுங்கப்பட்டை வி-நி (அ) சூரணம் செய்யவைகளை செய்து கூட்டி கற்பூரவாசனை வெற்றிலைரசம் கற்பூரவல்லிரசம் துளசியிலைரசம் மட்டிநீக்கிய இஞ்சிரசம் மிளகுசியாழ் சித்திரமூல வேர்பியாழும் மஞ்சள் கரிச்சாலைரசம் இதுகளில் தனித்தனியாக விட்டு ஒவ்வொரு சாமமரைத்து நிழலிலுலர்த்தி சுயத்தேனுல் மெழுகு பதமாயரைத்துக் கொள்ளவும், பயறுபிரமாணம் தேனில்விட சன்னி சீதளம் சுரம் கபரோகம் உப்பிசமாந்தம் மூகவாத சன்னி ருககசன்னி இருமல் மாரடைப்பு நடுக்குவாதம் பிரசமதியபரவியாதி நீக்கும்.

மூசாம்பரமாத்திரை.

மஞ்சள்நிறமுள்ள மூசாம்பரம் தோலா (அ) சடாமாஞ்சிசாருஞ்சுருமஸ்தகி குங்குமப்பூமிளகுலவுங்கம் பெரியலவுங்கப்பட்டை வகைக்கு தோலா (வ) தனித்தனிதூள்செய்து கஸ்தூரி வி-நி (வ) தேன் ப. ச காய்ச்சி அழுக்கைநீக்கி அதிலிட்டு சிறிதுகல்லிலரைத்துக் கொண்டு ரோகிக்கச்செய்து இதில் இரண்டுகுன்றி அல்லது ச குன்றியெடை உள்ளுக்குக்கொடுக்க சீதளசன்னி காக்கைவலி வலி வாய்கோணல் பின்னிழுப்பு பாரிசவாயு முருக்கல் ருககவாயு நீங்கும்.

ஆமலகலேகியம்.

பாலில் வேவித்த நெல்லிவற்றல் தோலா ய தனியா தோலா க குலாப்பு வி-நி (கூ) ருமஸ்தகி தோலா ஸ, மூங்

கிறுப்பு தோலா அரை, தாமரை விரைபருப்பு தோலா அரை ஏலக்காயரிசி தோலா அரை சாம்பிராணி தோலா அரை, சமக்த்தாறு தோலா அரை, முத்துச்சிப்பி விராகனிடை-க, இவைகளைதனித்தனி தூள்செய்து வெள்ளைசர்க்கரை பலம்-௰உ, நல்லசலத்தால் பாகுசெய்து கீழிறக்கி வைத்துக்கொண்டு சூரணங்களையிட்டு சேர்க்க பிசைந்து வைத்துக்கொண்டு கால் தோலா விதம் இருவேளையும் ௰-நாள் புசிக்க பிரமேகபித்தியம் பசிமந்தம் தீர்ந்து இருதயத்திற்கு வலிவும் ஆகாரபைக்கு வலிவும் கொடுத்து மலக்குற்றத்தையும் நீக்கும்.

## நாரிஞ்சிபழ சர்பத்.

எட்டு நாரிஞ்சிபழத்தின் சுளைரசம் பன்னீர் படி-க, குங்குமப்பூ விராகனிடை-வ, பச்சைகற்பூரம் விராகனிடை-வ, இரண்டையுமரைத்து அதில் ஆட்டி வெள்ளைசர்க்கரை ப. கூ௰ பாகுசெய்து பிறகு முன்கூட்டிய ரசங்களைவிட்டு பதமாய்க்காய்ச்சி இறக்கி புட்டியில் பத்திரப்படுத்தவும் வேளைக்கு ஒரு தோலாசாப்பிட பித்தம் ஒக்காளம் அரோசிகம் தீர்ந்து தீபனமாம்.

## குல்கந்து கூட்டு.

குல்கந்து பலம்-உ, சீமைநிலாவிரை சூரணம் படி-உ, திராக்ஷி பலம்-உ, பாதம்பருப்பு பலம்-உ, இவைகளைக்கூட்டி யரைத்து இரவில் கழற்சிக்காய் பிரமாணம் புசித்து நித்திரைசெய்ய காலை மலம் தாராளமாய் உதைந்து மலக்கட்டு ஆசனக்கடுப்பு கணுக்கள் நோய்விக்கமும் தீரும்.

## சீதளரோக நிவாரணி.

மிளகு லவுங்கம் திப்பிலி பொன்வறலாக வறுத்துத் தூளாக்கி வஸ்திரகாயம் செய்து வகை பலம்-க, வெள்ளாட்டுக் கோமியத்தில் டோலாந்திரம் கட்டி எரித்தநாபி சூரணம் பலம்-க, சுத்தித்த வெள்வங்கம் பலம் அரை, சூதம்பலம் அரை இரண்டையுந்தொந்தித்துநன்றாக சேர்க்க அரைத்து அழுக்கு நீக்கியதேன்பலம்-உச, கடுகைசெய்து இறக்கி கடுகையில்தானே முன்றினுசுகளையிட்டு சாறுள்ளமிளகாய்க்குச்சியினால் சேர்க்கதுழவிபுட்டியில் பத்திரப்படுத்தினால் விராகனெடை உள்ளுக்குக்கொடுக்க சகலவித சீதளம் தலைபாரம் மபக்கம் தீரும்.



இருமல், நீர்மட்டியாயிருப்பதுந்தீரும்.

பாதம்பருப்பு ப. க மேல்படி கோந்து தோலா க கருவேலம்பிசின்தோ (க) பேதாறு தோ-வ, இவைகளை பக்குவப்படுத்தி ஒருபலம்தேனைக்காய்ச்சி யதிலிட்டுப்பிசைந்து வேளைக்கு-வ, தோலா விதம் இருவேளையாக நாள் (௰) புசிக்கவும்.

## ஆமலக லேக்கியம்.

தேன் ப. ௰உ வெள்ளைசர்க்கரை ப. ௰உ இரண்டையும் கூட்டிக்காய்ச்சி இதில்நெல்லிவற்றல் ப.௲ குலாப்புவி-நி-௬ கோரைக்கிழங்கு ப.௭ அசாருன் வி-நி (௪) சடாமாசி வி-நி (௲) லவுங்கம் வி-நி (௲) ருமஸ்தகி வி-நி (௲) ஏலக்கா யரிசி தாளிசபத்ரி சாபத்ரி சாதிக்காய் இலவங்கப்பட்டைகுங்குமப்பூ வகை வி-நி (உ) இவைகள் தனித்தனி தூள்செய்துவிட்டுப் பிசைந்துகொண்டு பீங்கானில்வைத்து வேளைக்கு ௨ தோலா முதல் ஒருதோலா வரையில் புசித்துவர, வாய்நாற்றம் தீர்ந்துமூளைபலம் குடல்பலம் உண்டாகி தேகம்சிவப்பாகி மனசந்தோஷமாகும் அசீரணம் தீரும்.

## வெப்பரோகத்திற்கு லேக்கியம்.

நாரிஞ்சி பழரசம் ப. க௨ புளிப்பு மாதுளம் பழரசம் ப. க௨ தித்திப்பு மாதுளரசம் ப. க௨ சுக்காகிளை ரசம் ப. க௨ பழம்புளிதெளிவு ப. க௨ பன்னீர்ப-௬ இவைகளைக்கூட்டியதில்சீனகற்கண்டு ப. ௬ யிட்டுபாகுசெய்து புளிப்பு திராக்ஷி ப. வ கர்ஜெசுமாக் ப. வ ருமஸ்தகி வி-நி (உ) குங்குமப்பூ வி-நி (க) சடாமாசி வி-நி (௨) லவுங்கம் வி-நி (௨) அகர் வி-நி (க௨) ஹங்கிலாப்புவி-நி (க௨) பாதாஞ்சிபோயா வி-நி (௲) வெள்ளைசந்தனத்தூள் ப. வ இவைகளைத்தனித் தனி தூள்செய்து பாகிலிட்டு பிசைந்துபதமாய் வைத்துக் கொண்டு இத்துடன் சீமைஇலந்தன் முறப்பா தோலா அபிகிமுரப்பா தோலா அ-தேன் ப. ௪ வெள்ளிரேக்கு தோலா ௩ இட்டுப் பிசைந்து வேளைக்கு வி-நி (க) விதம்புசித்துவர.

மூலம் தாதுபுஷ்டி குடல்ஆகாரப் பைகளுக்கு வலிவு தந்துநீர்பெருக்கைக் குறைவுபடுத்தி வாயு தலைநோய் வாதபேதிமூலச்சூடு குண்டிக்காய்நோய் எச்சில்சுரப்பு அசீரணம்தீரும் மயிர்கருக்கும்.

## நீர் ரோகநிவாரணி.

செங்கழுநீர்க்கிழங்கு செவ்வல்லிக்கிழங்கு சீமைதண்ணீர்விட்டான்கிழங்கு பூமிசர்க்கரைக் கிழங்கு நிலப்பனைக் கிழங்கு

கோஷ்டம் சாதிக்கா சாபத்ரி மதுரம் கோரைக்கிழங்கு பூனைக்காலிவித்து இலுப்பைப்பூ குகைநீறு நிலாவரை சிரகம் வகைக்கு வி-தி (க) உலர்த்திய அத்திவேர்பட்டை ப-௨ இவைகளை தனித்தனி தூள்செய்து பசும்பாலில் வெள்ளைசர்க்கரை ப. க௨ இட்டுபாகு செய்து சூரணங்களையிட்டு லேகியமாகச்செய்து வேளைக்கு கொட்டைப்பாக்கு பிரமாணம் காலையில் தேனிலும் மத்தியானம் வெண்ணெயிலும் மாலை பசும்பாலிலுமாக ௨௰ நாள் புசிக்க மூத்திரகிரிச்சிரம் கை கால் எரிவு நெஞ்செரிவு நீரடைப்பு இந்திரியநஷ்டம் தீர்ந்து விந்தூறும்.

உதிரங்கொதிப்பும் சூடும் தணிய.

அரைக்கால்படி இளநீர்சலத்தில் பசும்பால் ப. ௩ சிரகதூள் வி-தி (க) சீனிசர்க்கரை தோ ௨ அரைத்தசந்தனம் புன்னைக்காயளவு கூட்டி காலையாக நாள் ௭ பிரதி தினமும்

உடம்புநோய் பசிமந்தம் சீதளத்திற்கு.

ஓமம் ப. ௩ பௌளம் ப. ௨ சாதிக்கா ப. ௨ சாபத்ரி ப. ௨ இவைகளை சூரணம்செய்து மெழுபலம்தேனைக்காய்ச்சி இதில் அபினி தோலா அரைக்காலையிழைத்து இறக்கி சூரணமிட்டு பிசைந்து புளியங்கொட்டை பிரமாணம் புசிக்கவும்.

மலபந்தங்களுக்கு.

நிலாவரை பிஞ்சுகடுக்காய் திராக்ஷி சிரகம் மிளகு வகை ப. ௩ லவங்கம் ப. வ சாபத்ரி ப. வ தனியா ப. ௨ ஆவாரம்பூ ப. ௨ சூரணம்செய்து தேனைக்காய்ச்சி அதிலிட்டு பிசைந்து இரவில் ஒரு தோலா விதம்புசிக்கவும்.

இஞ்சிநீர்கூட்டு.

கால்படிபிஞ்சிரசத்தெளிவில்கெந்திதிராவகம்தோ. வ. ஸூகர் உப்பு தோலா வ. இந்துப்பு தோ. வ. நாயுருவி உப்புதோலா வ. தூள்செய்து புட்டியிலிட்டு ரவியில்வைத்து ஒரு தோலா விதம்கொடுக்க, அஜீரணபேதி மந்தம் வாந்தி ஒக்காளம் வாயு வாந்திபேதி தாகமும்தீரும்.

புதினாரசக்கூட்டுநீர்.

புதினாரசம் இஞ்சிரசம் கரும்புரசம் எலுமிச்சம்ரசம்சமமாகக் கூட்டி புட்டியிலிட்டு ரவியில்வைத்து தோலா விதம் கொடுக்க-



வாந்தி ஒக்காளம் நாகம்நீங்கும் வாந்திபேதி கண்டவர்களுக்கும் உபயோகமாகும்.

மலபந்தங்களுக்கு.

நெய்யில்வறுத்த பிஞ்சுகடுக்காய் திராக்ஷி பாதாம்பருப்பு நிலாவரைவகை ப. ௨ இவைகளை சூரணம்செய்து தேனிலரைத்து பசுநெய்விட்டுப் பிசைந்து ௨௰ நாள் சும்மா வைத்திருந்து பிறகு இரவில் கழற்சிக்காய்பிரமாணம் நித்திரைக்கு முன்புசிக்க.

மூளையில்நீர்கேடுதலை காருமந்தத்திற்கு.

காபுலிகடுக்காய்பிஞ்சுகடுக்காய் மஞ்சள்கடுக்காய்தானிக்காய் இவைகளின் விரைநீக்கியதுவகை ப. க தனியா ப. க தூள்செய்து தேனைக்காய்ச்சிவடிக்கு தக்கபடிவிட்டு கிளறியிறக்கி பாதாம் நெய் தோலா க விட்டுப்பிசைந்து மண்டலம்வைத்து ஒரு தோலாவிதம் இரவில் கஉ மணிக்குபுசித்து மீது சோம்புகியாழம்புசிக்க.

சூரணம்.

திப்பிலி லவங்கம் ஓமம் ஏலக்கா யரிசி விளையதுப்பு கருப்பு உப்பு சிவப்பு உப்பு கல்லுப்பு வகை தோலா. க நிலா வரை தோலா உ இவைகளை சூரணம்செய்து சர்க்கரை தோலா சு கூட்டி இரவில் அன்னம் கொண்டபின் ஒரு வி-தி புசித்துவர வாதம் வாயு பித்தவாயு மேகநீர் தேகநாற்றம் சிரங்கு அஜீரணம்உப்புசம்வயிற்றுளைச்சல் பித்தகுன்மவலியும்தீரும்.

தக்ஷிண நாயனீ டாகஷாவுந் துரைத்தயாருக்கு.

கெம்புமாசா (௩) துளைபிடாத ஆணிமுத்துமாசா (௫) அஜமீர அற்பனிமாசா (எ) அஜமீரலாசவர்த்மா (எ) கஸ்தூரிமாசா உ ஒருமப்பு மாசா (௩) ருடன்மாசா (௩) இவைகளைதனித்தனியாகப் பன்னீரில் ஒவ்வொருநாள் அரைக்கவும் காஜுபான்பூ காசினிவிரை கக. ரூபா பட்டுப்பூச்சிகூண்டுகொல்நீக்கிய கஸ்தூரிகோளிக்கிளைவிரை துளசிவிரை உஸ்தகதூஸ் பாமனைசுபேத் அகிற்கட்டை ஏல்க்கா யரிசி சோத்துவர்கத்காயி தருவஞ்சி அகராபி ஜடாமாசி ரோஜாப்பு கிளாக்காய்விரைவகைஒன்றுக்கு தோலா (௭) தனித்தனி தூள்செய்துக் கொள்ளவும். பீங்கானில் திந்திப்பு மாதுளம் பழ சர்பத் தோலா (௩௰க௨) இதில் மேற்கண்டதிலுகைகளை இட்டு மூடி (௱) நாள் சும்மாவைத்திருந்து பிறகு (வ) தோலா முதல் (௨) தோலா வரையில் மண்டலம் இருவேளையாக உட்கொள்ள

வும், கெட்டபதார்த்தங்கள் மீன்வகைகளும் புளியும்நீக்க சிரத்தி னுள்ள வியாதிகளும் குலைசம்பந்தவியாதி மேகவியாதிகளனைத்தும் நீங்கி தேகபுஷ்டியும் சரீரகாந்தியுந்தாதுவலிவும்மனோவுற்சாகமும் தரும்.

## மூபரோபாரீந்.

கெட்டிமுத்து மாசா (௯) நற்பவளமாசா (௭) ககருபாமாசா (௭) இவைகளை பன்னீரால்தனித்தனியாகவெவ்வொருநாளரைக்கவுங் காவிகல்மாசா (௬) வெள்ளை சந்தனத்தூள்மாசா (௭) தனியாமாசா (௭) மூக்கிஇப்பு பாயனிசபேத் ரோஜாப்பூ காவுஜபான் வகை தோலா (௧௰) பாமனிகருக் போஸ்து பேருனிபிஸ்தா கோளிகிளைவிரை புளிப்புதிராக்ஷி பட்டுப்பூச்சிகூண்டு கத்திரித்துவன்திரகாயம் செய்யவும் வகைக்கு தோ.(௩) இவைகளைத் தனித்தனி தூள்செய்யவும் சீனிகற்கண்டு ப. (௰௨) நல்லசலத்தில் பாகுசெய்யவும் துருஞ்சிபழரசம் ப. (௬)விட்டு கொதிப்பித்து கீழிறக்கி முன்கண்ட தூள்களையிட்டு லேகிக்கசெய்து தங்கரேக்கு (௰)வெள்ளிரேக்கு (௨௰) இட்டு தமூரவி பீங்கானில் வைத்துக் கொண்டு வேளைக்கு (௬) மாசாவிதம் புசித்துவரவும். சூடான பதார்த்தங்கள் புளி மீன்வகைகளையும் நீக்கவும் மன இளப்பு குலைகாபரு பித்தபயித்தியம் நெஞ்செரிவு இவைகள் நீங்கி தேகதிடமும் உச்சாகமும் இந்திரியவலிவும் தரும்.

## சுகமாதுதிராவகம்.

பனங்கற்கண்டு ப. (௨௰) கருப்புதிராக்ஷி ப. (௮௰) கருவேலன்பட்டை ப.(௯௰)நெல்லிகாய்வற்றல் ப. (௧௬) உகூபடிசலத்தில் வேகவைத்து வடித்து இதிலசடாமாசி வுஷ்று பங்கருவெட்டிவேர் வகை ப. (௨) சலிக்கா ஜாவசியிக்தி பேக் கேலப்லாப் வெற்றிலைவேர் பாநாரஞ்சிபோயா பெரியவலக்காய்நீர்முள்ளிவிரை பேக்கேபந்துபிர் கூலேதாவா அமுக்க ஞ்கிழங்கு கோரைக்கிழங்கு கஜ்வெப்பாலரிசி கக்ரூர் கேலீ கேலா சிவப்பு சந்தனம் வெள்ளைசந்தனம் தண்ணீர்விட்டான் கிழங்கு நிலப்பனைக் கிழங்கு தொக்மே வெட்டங்கன் ஜனுவர்வகை பலம் (௧) நைய நறுக்கியிட்டுப் பாலையில் திராவகம் இறக்கி இதில்சாலேமிசிரி அகர் லவுங்கம் ஜாதிக்காய்ஜாபத்ரி சிவப்பு முள்ளங்கிவிரை வுல்கம்விரை வெங்காயவிரை பூனைகாஞ்சோரி விரை வெள்ளைபாமனீ கறுப்புபாமனீ தூதரிபீ ஷாகாகுல்மிசிரி நாகேசர்வகை தோலா (௨) பறங்கிசக்கை நரிஞ்சிக்காய்தோல் வகை பலம் (௨) நைய நறுக்கியிட்டு நாலுநாள்சென்று அதில்



வெள்ளைகற்கண்டு ப. (௧௭) ஆவின் பால் (௧௧) கூட்டி பாலையில் திராவகம் இறக்கி புட்டியில் பத்திரப்படுத்தி வேளைக்கு ஒரு தோலாவிதம் புசித்தால் கொழுமைதரும் நல்ல ஆகாரங்கள் புசித்துவர தளர்ந்த விருத்தாப்பியருக்கும் வலிவுவந்து வாலிபரைப்போல்மனோதிடம் உண்டாவதுமன்றி லாகிரி வஸ்துக்களால் நேரிடும்வியாதிகள் நீங்கிவிடும்.

## தங்கபற்பம்.

காசரோகத்திற்கும் அதிககொழுமையினு லடைந்ததாதுசேர்வைக்கும் தங்கரேக்கு வி. நி-(௫) சுத்திசெய்தசித் தண்டவோடு வி. நி-௧ இவ்விரண்டையுமரைத்து உத்தாமணிப்பால் (௫)துளிவிட்டுப் பிசறி மூசையிலிட்டோடுமூடி சீலைசெய்து குண்டுசட்டியில் உமிகொட்டி மத்தியில்வைத்து தீயிட பற்பமாம். தக்க அனுபானங்களிலிட சுகுணமாம்.

## இரத்தினுநீ லேகியம்(௬௦)வயதுள்ளவர்களும்புசிக்கலாம்.

கெம்பு, ஆணிமுத்து, நற்பவழம், ககருபா, தங்கரேக்கு வகை தோ. (௧) ரேக்கைநிறுத்தி மற்றதை தனித் தனி தூள்செய்துக்கொண்டு சாலேமிசிரி சீமை தண்ணீர்விட்டான் கிழங்கு சின்னநெரிஞ்சிக்காய் பெருநெரிஞ்சிக்காய் வகை ப. (௧) ஜாதிக்காய் ப. (௨) ஜாபத்திரி ப. (௨) வெப்பாலரிசி நீர்முள்ளிவிரை பூநீக்கிய லவுங்கம்வகைதோ. ௰ ரூமஸ்தகி வி. நி. ௨ தனித்தனிதூள்செய்து (௮) ப. பாதம்பருப்பை நல்ல ஜலத்திலரைத்து பால்பிழிந்து சீனிகற்கண்டு ப. (௨௰) கூட்டி பாகுசெய்து சூரணங்களையிட்டுக் கிளறி பசுநெய் ப. (௫) விட்டுப் பக்குவமாய்வரும் சமயம் முதலிலிருக்கும் தினுசுகளையிட்டு ரேக்கைச் சேர்த்து மிசிரமாக்கி பத்திரப்படுத்தவும். தேகதிடப்படி அரை தோலா முதல் ஒரு தோலா வரையில் புசித்து மீது வெள்ளாட்டுப்பால் பசும்பால் மூலைப்பால் கோழிசூப்பு இதுகளிலொன்று புசிக்கவேண்டும் புளி புகை புளிப்பாகிய வஸ்துக்கள்சீதளவஸ்துக்கள்நீக்கவும், லேகியமெரிக்க விலாரி, மாதுளன், கொய்யா இவைகளிலொரு தினுசு விறகில் எரிக்கவும் வாலிபவலிவும் உதிரக்கொழுமையும் தாதுவலிவும் விந்தூறலும் செய்யும்.

## மகாபோகதுளிகை.

தங்கரேக்குவிராகனெடை-௧,கஸ்தூரிவிராகனெடை-௧, கோரோசனைவிராகனெடை. ௭௨, பச்சைகற்பூரம்விராகனிடை-௫, கும்

குமப்பூ விராகனெடை-ரு, மயிலோசனம்விராகனெடை-க, படிகாரச்சுன்னம் விராகனெடை அரை, இவைகளைசர்மூலிகைரசத்தால் அரைத்து மிளகுபிரமாணம் செய்து நிழலிலுலர்த்தி மாலை ஒரு மாத்திரை புசித்து மீது பசும்பால் பீ-ரு, புசிக்க இரவு புளி நீக்கிப் போகம்செய்யவும், சகல சீதளசுர சன்னிகளும் தீரும்.

## சடாதார போஷகம்.

தங்கபற்பம் விராகனெடை-க, ஆணிமுத்து பற்பம் விராகனெடை-க, வெள்வங்கபற்பம் தோலா அரை, வெள்ளிபற்பம்தோலா அரை சீமை முங்கிஉப்பு தோலா-க, ரூமஸ்தகி விராகனெடை கூ, ஜாதிக்காய் தோலா-க, ஜாபத்ரி தோலா-க, இவைகளை தனித்தனி தூள்செய்து கற்கண்டுபத்தாசா தோ-உக, ஆலம்பால்தோலா உய, இவைகளை மறத்மான் ஜாடியிலிட்டு மூடி சீலைசெய்து பூமியில் பத்துநாள் புதைத்தெடுத்து நாளுநாள்சென்று காலை மாலை கால் தோலாவிதம் புசித்து மீது இரண்டுபலம் பசும்பால் கொள்ளவும் இவ்விதம் கால் அரை மண்டலம் கொள்ள கவுமாரதிசையினரும் வாலிபவயதினையுடைய பலமுடையவர்களாவர்கள்.

## திரிதோஷ நிவாரணம்.

ஜடாமாசி பெரியலவுங்கப்பட்டை சிறுலவுங்கப்பட்டைசித்தரத்தை லவுங்கம் சுக்கு மிளகு திப்பிலி கோரைக்கிழங்கு குதேபல்லான் அசாருன் கோஷ்டம் சுருபித்தா குங்குமப்பூ மஸ்தகி வகை பலம்-க, ரூமஸ்தகி பலம் அரை இவைகளை தனித்தனி சூரணம் செய்து வெள்ளைசர்க்கரை பலம்-சகூஉ, நல்லஜலத்தில்பாகுசெய்து சூரணங்களையிட்டு லேகிய பதமாக இறக்கி இரவில் போஜனத்திற்கு முந்தியாவது பிந்தியாவது இரண்டு முதல் மூன்று விராகனெடைவரையில் கொள்ளவும், இதினால் உள்ளுறுப்புகளுக்குபலம்உண்டாகும் வாய்நாற்றம் தீரும் காற்கறுக்கண்டிக்கும் ஊத்தாம்பிள்ளையின் குளிர்ச்சியாலுண்டாகும் நீர்ப்பெருக்கைமாற்றும்தாதுபுஷ்டியை தரும பயித்தியங்களை நீக்கும் குளிர்ச்சியைப் பற்றிய தலைவலி இருமலை நீக்கும், மூலநோய் பாதநோய் கால்விரல்களினிசிவுபடைகள் கல்லடைப்பு நீர்த்தாரை ரோகங்கள்தீரும்ரோமங்கள்வெளுக்காமல் காக்கும் உக-நாள் கொள்ளவும்.

## மகா திராவகம்.

பனைவெல்லம் ப-அ, சுக்கு மிளகுதிப்பிலி சாதிக்காய் ஜாபத்ரிலவுங்கப்பட்டை லவுங்கம் கசகசா லவுங்கப்பத்திரி ஏலரிசிகஞ்சாவகை



ப-உ, இஞ்சி ப-க, புளி பலம்-ரு, லிங்கம் பலம்-ச, கருவேலம்பட்டை பலம்-அ, மலைநாங்கிவேர் பலம்-க, இவைகளைச்சற்றுநையநறுக்கி எ-படி சலத்தில் பாண்டத்திலிட்டு அ-நாள் ஊறியபிறகு பாலேயில் திராவகம் இறக்கிக்கொண்டு நல்ல சலத்தில் ஒரு ரூபாயெடைவிட்டுக்கொடுக்க விஷபேதி, வாந்தி, அசத்தி விந்துநஷ்டமிவைகள் தீரும்.

## பிரிதிப் திராவகம்.

சுத்திசெய்த வாளப்பருப்பு ப. உய லிங்கம் பலம் - உ, சுக்கு மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தானிக்காய், கழிசுரோகணி, வெங்காரம், வகைக்கு பு. உ, பூநீறு ப-க, இவைகளை நையநறுக்கி ச-படி நல்லஜலத்தில் பாண்டத்திலிட்டு அ-நாள்ஊறிதிராவகம் இறக்கவும் நல்லஜலத்தில் கால்ரூபாஎடை விட்டுக்கொடுக்க மலபந்த வியாதிகளும் சூதகவாயுவும் மேகவாயுநிவாரணமாகும்.

## பஞ்ச தீபாக்கினி திராவகம்.

ஓமம்பலம்-ருய, கருஞ்சீரகம்சித்திரமூலப்பட்டைசுக்குமிளகு திப்பிலி இஞ்சி வெள்ளைப்பூண்டு பெருங்காயம் சர்க்கரைவகைக்கு ப-உ, மூன்றுதேங்காயின் திருகல் ரு-படி ஜலத்தில் அ-நாள் ஊறி திராவகம் இறக்கவும் நல்லஜலத்தில் ஒரு ரூபாஎடை கொடுக்க அஜீரணம் உப்பிசம் பொருமல் வாய்வு குத்தல் பித்தம் தீரும்.

## அப்பு திராவகம்.

சித்தரத்தை சதகுப்பி சுக்கு உத்தாமணிவேர்பட்டை மாவிலங்கன்பட்டை கொச்சிப்பட்டை வகை ப-உ, இஞ்சி பலம்-அ, இவைகளை முன்மாதிரியாக நீர் இறக்கிநல்லஜலத்தில் அரைரூபாஎடைகொடுக்க மேகரோக சம்பந்தவியாதிகளும் சுரம் சீதளம் குளிர் சுரம் பாலசுரம் தீரும்.

## சோம்பு திராவகம்.

சோம்பு ப-சய, இதை கூஉ-படி நல்லசலத்தில் ஊறவைத்து மறுநாள் பாலேயில் திராவகம்-அ, புட்டிக்கு அதிகப்படாமலிறக்கவும்.

## ஓமத்திநீர்.

மேற்கண்ட நிறைபடிக்கு இறக்கிக்கொள்ள வேண்டியது.

### சிவகரந்தை திராவகம்.

சிவகரந்தை சமூலம் விசை ஒன்றுக்கு மூன்றுபடிசலம்விட்டு திராவகமிறக்கி இந்ததிராவகத்தில் வெள்ளைசர்க்கரையிட்டு சர்பத் செய்துவேளைக்கு அரைபலம் சாப்பிட்டுவர மேகவியாதிகள் தீரும்.

### வெள்ளைத் தாமரைப்பூ திராவகம்.

வெள்ளைத் தாமரைப் புஷ்பத்தின் இதழ்களாக எடுத்து ப-உ௰ நல்லசலம் படி-உ விட்டு உடனே திராவகம் இறக்கி வெள்ளைசர்க்கரையிட்டு சர்பத்செய்து அரைபலம் நல்லசலத்தில்விட்டு புசித்துவர உள்கொதிப்பு நீர்த்தாரை சூடு நீங்கிஆரோக்கியத்தைத் தரும்.

## சிகஞ்சபின்னனும்.

### அங்கூர்காடி சர்பத்.

அங்கூர்காடி பலம்-௪, வெள்ளைசர்க்கரை பலம்-௰௫, இரண்டையும் பதமாய்க்காய்ச்சி பதமாயிறக்கி புதினாஇலை ஒருபிடி அதிவிட்டு வைத்துக்கொள்ளவும் இதினால் வாந்தி யோக்காளம் நீங்கும்.

### பாதாம் சர்பத்.

அகிற்கட்டை தோலா-௨, இதை விசம்படியாக கியாழம் வடிடித்து பாதாம்பருப்பு பலம்-௪, வ-படி சலத்தில் பால்பிழிந்துகலந்து வெள்ளைசர்க்கரை பலம்-உ௰, கூட்டி பதமாய்க்காய்ச்சிஇறக்கும் சமயம் பாலிலிழைத்த குங்குமப்பூ விராகனெடை அரைக்கால்ம் பன்னீர் ப-உ-ம்விட்டு பதமாய்செய்துபுட்டில்யிலைவத்துக்கொண்டு நல்லசலம் ப-உ-ல் சர்பத் தோலா-௬, விட்டு சாப்பிட நாபிரணம் கொதிப்பு சூடு வாய்ரணமும் நீங்கும்.

### சரீஷ் சர்பத்.

பழம்புளி ப-௯, காலேஅரைக்கால்படி சலத்தில் பிசைந்து தெளிவை எடுத்து இதில் சரிஷ் தோலா-௪, இட்டு பிசைந்து திப்பியை நீக்கிவிட்டு வெள்ளைசர்க்கரை ப-௧௨, இடுக் காய்ச்சிபதமாயிறக்கி ஒன்றரை தோலா புசிக்கபித்தம்தீர்ந்துஆரோக்கியம்தரும்.

## உன்னாப்பென்னும்.

### சீமைஇலந்தம்பழ சர்பத்.

உன்னாப் ப. அ ௩௰௨ ப. சலத்திலிட்டு வேகவைத்து பிசைந்து உ௰௪ பலமாக எடுத்து திப்பியைநீக்கி வெள்ளைசர்க்கரை ப.௰௪,



இட்டு பதமாய்க்காய்ச்சி எடுக்கவும் ஒரு தோலா நல்லசலத்தில் புசிக்க பித்தம் மயக்கம்கிறுகிறுப்பு தீரும்.

### தாமரைப்பூ சர்பத்.

வெள்ளைத்தாமரைப்பூ உலர்ந்ததாக இருந்தால் ருத்தல்-௧,பச்சையாக இருந்தால் ரு-௪, இதில் இரண்டுருத்தல் சலம்விட்டுவேகவைத்து மூன்றிலொன்றாக வடித்து வெள்ளைசர்க்கரை ப. உ௰, இட்டு பதமாய்க்காய்ச்சி அரைபலம் வீதம்புசிக்க தலைநோய் பித்தக்காய்ச்சல் பக்கநோய் வயிறுநோயிவைகள் தீரும்.

### வெற்றிலை சர்பத்.

இருநூறு வெற்றிலையை சற்றுநசுக்கி இரண்டு ரு.சலம்விட்டு மூன்றிலொன்றாக கியாழம்வடித்து வெள்ளைசர்க்கரை ப. ௯௨, இட்டு பாகுசமயம் குங்குமப்பூ சாதிக்காய் சாபத்ரி வெள்ளை யேலக்காயரிசி வகை தோ. ௨, லவுங்கம் தோ. வ, இவைகளை பன்னீரால் அரைத்துக்கூட்டி இறக்கிக்கொண்டு அரைதோலா வீதம்புசிக்க மனசந்தோஷம் தாதுபுஷ்டியும் சுத்தஉதிரமுமாம்.

### சந்தன சர்பத்.

வெள்ளைசந்தனம் ப. ௩, பன்னீர் ப. ௰உ, ல் ச, சாமம்ஊறி சற்றுக்கொதிப்பித்து பிசைந்து வடிகட்டி இதில் வெள்ளைசர்க்கரை ப. ௰உ, இட்டு பதமாயிறக்கி ஒரு தோலா புசிக்க குலைக்கு பலம்தரும் காபரு பயித்தியம் வயிறுசூடு தாகம்நீர்ந்து ஈரல்குலைக்கு வலிவுதரும்.

### ரோசாபூ சர்பத்என்னும் சர்பத்தேதல்.

குலாப்பு ப. ௰௩, ௬௰உ ப. நல்லசலத்திலிட்டு ௪௰, ப. மாக வடித்து மறுபடியும் ௰௩, ப. குலாப்பு இட்டுக்காய்ச்சி உ௰௪, ப.மாக வடித்து மறுபடியும் ௰௩, ப. பூவிட்டுக்காய்ச்சி ௰௩, ப. மாகஇருக்கக்காய்ச்சி பிசைந்து வடிகட்டிக்கொண்டு இதில் வெள்ளைசர்க்கரை ப. ௰௩, இட்டுக்காய்ச்சி பதமாயிறக்கிஒரு பலம் சோம்புகியாழத்தில்கொள்ள மலபந்தம் பித்தம் வயிற்றின்சூடு தீரும்.

### கிருமிகள் நாசனி.

நெல்லில்வேவித்தெடுத்ததேங்காயுடன்வலக்காயரிசி ப. (௧) தோல் நீக்கிய புரசம் விரை ப. (௧) கூட்டியரைத்துக்கழற்சிக்காய்பிரமா

ணம் உருட்டி சர்க்கரையில் வைத்துப் புசிக்க பேதியில் கிருமிகள் வெளிப்படும்.

வாளப்பருப்பு சாரைப்பருப்பு கஸ்தூரிமஞ்சள் பாதம்பருப்பு வகை ப. (க) கூட்டியரைத்து துணியில்கட்டிசலத்தின்மீதும்டோலாந்திரம் கட்டிஎரித்து அதில்வரும் எண்ணெயைப்பிழிந்து சர்க்கரையில் (க) (உ) துளிகொடுக்க பேதியுடன் கிருமிகள் வெளியாய் விடும்.

### பேதிக்கு சந்திரவதன குளிகை.

கழற்சிபருப்பு வேம்பின்பருப்பு இரத்தபாளம் வாளப்பருப்பு சமனெடை இவைகளைச் சுத்தித்து மிளகாயிலையைவதக்கி ரசம் எடுத்துவிட்டரைத்து சிறுபட்டாணி பிரமாணம் மாத்திரைகள் திரட்டி நிழலுலர்த்தி சர்க்கரை பனைவெல்லம் இவைகளில் சிறுவர்களுக்கு ஒன்றும் பெரியவர்களுக்கு (உ) (ங) ம் கொடுக்கபேதியாய் பித்தம், வாயு, பிடிப்பு, முடக்கல், சுரம்தீரும்.

### சுகுணவிரோசன சர்பத்.

ஆலுபுகருபழம் (மகு) நருவளிக்காய் (சும) சீமைஇலந்தன் பழம் (ஙம) சுத்திசெய்த சக்முனியா ப. (எ) நிலாவரை ப. (ஐ) குலாப்பு பனப்ஷா காவுசபான்பூ தாமரைப்பூ பெருங்கிளாக்காவிரை சிறுங்கீரைக்காவிரை காசினிவிரை வகை தோலா (உ) இவைகளை (கு) (ப) தாமரைப்பூ கியாழத்திலிட்டு வேகவைத்துப் பிசைந்து வடித்து இதில் வெள்ளைசர்க்கரை ப. (உம) இட்டு பாகுபதமாய்காய்ச்சி வைத்துக்கொண்டு காலையில் (கஎ) தோலாவீதமாக(ங)நாள் புசிக்கவும்.

### சுகபேதி மாத்திரை.

நல்ல சலத்திலூறிய கோதுமைமாவை ப. கவ, சுத்தித்துமுளை நீக்கிய வாளம் ப. (ஐ) பூரம் ப. (வ) சுக்குத்தூள் ப. (வ) இவைகளை பன்னீர் ப. உ. விட்டரைத்து பயறுபோல் மாத்திரைசெய்து நிழலுலர்த்தி குழந்தைகட்கு முலைப்பாலிலும் பெரியவர்களுக்கு சோம்பு,கிராம்பு, சுக்கு இதின் கியாழத்தில்தேகவலிவு தெரிந்து உ-ங, கொடுக்க மனக்களிப்புடன் சுகுணமாய் பேதியாகும்.

### காசினியிலை சர்பத்.

காசினியிலை ரசம் எடுத்துக்காய்ச்சி வடிகட்டியது ப. மங, வெள்ளைசர்க்கரை ப. உம, இட்டுக்காய்ச்சி பதமாயிறக்கி இரண்டு



தோலா நல்லசலத்தில் புசிக்க, நீர்கட்டு நீர்எரிவு உட்காய்ச்சல் தீரும் மலம் இளகும், குலைக்குப்பலம்தரும்.

### நாழன் விழுதின் சர்பத்.

விழுதின் ரசத்தை முரித்துவடித்தது ப. மங, வெள்ளை சர்க்கரை ப. உம, இட்டுப் பதமாய் காய்ச்சிவைத்துக்கொண்டு இறக்கும் சமயம் ஒரு எலுமிச்சம்பழம் ரசம்விட்டுக் கொண்டு நூன்றரை இரண்டு தோலா வரையில் நல்லசலத்தில் புசிக்க, கொதிப்பு பித்தம் இவைகள் சாந்தமாகும்.

### அங்கூர் என்னும் கொடிமுந்திரிபழ சர்பத்.

பச்சை அங்கூர்பழ ரசம் ப. மகு, சீனிகற்கண்டு ப. மகு, காய்ச்சி முடிவில் பன்னீர் ப. உஎ, விட்டு இறக்கி வேளைக்கு ஒருபலம் நல்லசலத்தில் புசிக்க, பித்தசூடு தணியும்.

### நன்னாரி வேர் சர்பத்.

நன்றாக வொரு படிசலத்தைக் கொதிப்பித்து இறக்கி இதில் மஉஎ, ப. வேரையிட்டு இரண்டுசாமம் ஊறியபிறகு அடுப்பின்மீது வைத்து வேகச்செய்து எ, படியாக வடித்து இதில் மஉஎ, ப. சீனியிட்டு பதமாய்காய்ச்சி இறக்கி இரண்டு தோலா நல்லசலத்தில் விட்டுசாப்பிட காங்கை பிரமேகம் சுருக்கு நீர்கடுப்பு நீங்கும்.

### துரிஞ்சிபழ சர்பத்.

துரிஞ்சிபழத்தினுள் சுளையின் ரசம் ப. எ, வெள்ளைசர்க்கரை ப, உம, இட்டு பதமாய்க்காய்ச்சி இறக்கும்சமயம் குங்குமப்பூ வி-கி விசம் நல்லசலத்திலிழைத்து அதிலிட்டுக்கலக்கி வைத்துக்கொண்டு வேளைக்கு கஎ, தோலா புசிக்க உஷ்ணபேதி பித்தம் கிறுகிறுப்பு எரிவு அரோசிகம் தீரும்.

### சுகருபா சர்பத்.

நன்னாரிவேர் நாகமாசல்லிவேர் அக்கிபட்டை மகிழம்பூப்பட்டை ஆலம்விழுதின் நுனிகள் கொட்டைகரந்தைப்பூ கோரைக்கிழங்கு வகை ப. ங, இவைகளை நையநறுக்கி ஒருபடி சலத்தில் ஒருநாள் ஊறவைத்து பிசைந்து வடிகட்டிக் கொண்டு இதில் கும, ப-சீனக ற்கண்டுஇட்டு அழுக்கைநீக்கிஒன்றரைதோலா - சுகருபாவைடு-ப பன்னீராலரைத்து வைத்திருந்து அதிலிட்டுப்பதமாய் இறக்கிக் கொண்டு வேளைக்கு உ, தோலா நல்லசலத்தில் கலந்துசாப்பிட

நாள் ஒன்றுக்கு மூன்றுதரம் சாப்பிட ரூடு காந்தல் தீர்ந்து இரத்த விர்த்தியுண்டாகும்.

## நெல்லிக்காய் முறப்பா.

முதிர்ந்த பெருநெல்லிக்காய்களை நன்றாகக் குத்தி நல்ல சலத்திலிட்டு ஊறியபிறகு ஒவ்வொன்றையும் கையினால் அழுத்தி நீரை நீக்கி துணியினால் ஒத்திவிட்டுப் பெருங்காய்கள் நூறுக்கு வெள்ளைசர்க்கரை ப-௨௰, பாகுசெய்து அதிலிட்டு ஒரு ஆவிவரும்படி எரித்துச் சாடியிலிட்டு ஒருநாள்வைத்து மறுநாள் வடிகட்டி இறங்கியசலத்தைக் காய்ச்சி பதமாயிருக்கும் சமயம் காயிலிட்டுக்குலுக்கி ஒருமாதம்வைத்து பிறகு உபயோகப்படுத்தவும்.

## இஞ்சி முறப்பா.

அரைவீசை முதிர்ந்த இஞ்சியாய் நார்நரம்பு இல்லாததாய், தோல்போக்கி நல்லசலத்தை நன்றாகக் கொதிப்பித்துக் கீழிறக்கி இதில் இஞ்சியைப்போட்டு மூடி ஆறியபிறகு வடித்து மறுநாள் வேறேசலத்தைக் கொதிப்பித்து இட்டு முன்மாதிரியாக (௭) தரம் செய்து கடைசியாக நல்லசலத்தில் இஞ்சிகளையிட்டுசோடா ப-௨, இட்டு வேகவைத்து இறக்கி நன்றாகக்கழுவி. வெள்ளைசர்க்கரை ப-௨௰, பாகுசெய்து இறக்கி ஆறியபிறகு அதில் இஞ்சிகளையிட்டு மூடிப் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

## தூரக்கடுக்கா முறப்பா.

௫௰, கடுக்காயை பூமியில் மணல்பரப்பி அதின்மீது காய்களை நனைத்துப்பரப்பி அதின்மீது ௪-விரல்கனம் மணல்பரப்பி நல்ல சலத்தால் நன்றாகநனைத்துசாரம் நீங்காமல் ௫-நாள் நனைத்துஎடுத்து அலம்பி ஊசியால் காய்முழுமையும் குத்தி அழுத்தி அதிலிருக்கும் துவரை நீர்வழியாக நீக்கி ௨௰-ப. வெள்ளைசர்க்கரையைப் பாகுசெய்து அதிலிட்டு சாடியில்போட்டு ஒருமாதம் சென்றெடுத்து உபயோகப்படுத்தவும்.

## சித்தண்ட தைலம்.

௫௰, முட்டையை நீரில் வேவித்து மஞ்சட்கருக்களை எடுத்து ஒரு மண்பாத்திரத்தில் நன்றாகக் கருகும்வரையில் எரித்து தயிலமிறங்கும் சமயம் அடுப்புமீது அந்தப்பாத்திரத்தை முன்புறம் சாய்த்துவைத்து மத்தினால் கருக்களை அழுத்த தயிலமிறங்கும்; அதை எடுத்துக் கொள்ளவும்.



## மெழுகு தைலம்.

தேன்மெழுகு ப-௮, லவங்கப்பட்டை லவங்கம் சாதிக்காய் சாபத்திரி ருமஸ்தகி அக்கர்காரம் சாம்பராணி வகை தோ-௫, குங்குமப்பூ தோ-௨, கன் றிதா-௨, குங்கிலியம் ப-௪, மணல் ப-௪, கூட்டி உருக்கி குழாவழியாய் இறக்கவும்.

புங்கெண்ணெய் ப-௩௰-ல் தேன்மெழுகு பலம்-௨, குரோசாணி ஓமம் ப-௧, பளிங்குசாம்பராணி ப-௧, கஸ்தூரிமஞ்சள் லவங்கம் கற்பூரம் வகை ப-வ, சாதிக்காய் கிச்சிலிக்கிழங்கு வகை பலம்-௨, தூள்செய்து போட்டு ஊறவைத்து அடுப்பில் காய்ச்சி வடிகட்டிக் கொண்டு பிடிப்புமீது தேய்த்துவரவும், குன்றி உள்ளுக்குக்கொடுக்க சீதளசுரம் நீங்கும்.

## சாம்பறணி தைலம்.

சாம்பராணி ப-௫, கற்பூரம் பலம்-௧வ, வெள்ளைகுங்கிலியம் ப-௧ஐ, தூள்செய்துக்கொண்டு பானையிலிட்டுவாய்புறம்மணல்மூட்டைவைத்து குழாவழியாக இறக்கிக்கொண்டு தலைபாரம்தலைவலிக்கும் தடவிவரவும்.

## வாலுழுவை தைலம்.

ஒருபழய மண்பாண்டத்தில் அடியில் ௫-துவாரமிட்டு அதில் வாலுழுவை அரிசியையிட்டு மீதுமூடி சீலை வாய்ப்புறம்செய்து குழிபறித்து அதில் ஒரு சின்னகலயம்வைத்து பாண்டத்தின் கீழ்துவாரத்தில் இரும்புகம்பிகளை சொருகி அதின்மீது வைத்து ஓரம் மண்கட்டிசுத்தி-௩௰, வறட்டிவரையில் அடுக்கிதீயிட அடியில் வைத்த கலயத்தில் தயிலமிறங்கும், வேளைக்கு இரண்டுதுளி வெற்றிலையில் தடவிப்புசிக்க பாண்டுவிக்கம் நீங்கும்.

## சிவனார்வேம்பு தைலம்.

சிவனார்வேம்பு சமூலம் ப. ௨௰. நெல்லிக்காகெந்தி ப-௨, வாலுழுவையரிசி ப-௫, இதுகளை ஒருபாண்டத்திலிட்டு முன்பாதிரியாகத்தயிலமிறக்கிக்கொண்டுமணக்கத்தைஅரிசிமாவில்௫-துளிவிட்டு காலை மாலையாக ௨௰-நாள் புசிக்க விஷக்கடி மேகம்தீரும்.

## விளாம்பட்டை தைலம்.

விளாம்பட்டை பலம்-௨௰, முன்மாதிரியாகக்குழித்தயிலமிறக்கி பித்தவெடிப்புப் படைகளுக்குத் தடவிவர நீங்கும்.

## காங்கேயரெண்ணெய்.

திமிர், கடிப்பு, குட்டம்ரிணம், படைசட்டை தீரும்.

பூவரசுபட்டை ரசம் அத்திப்பட்டை ரசம் வெள்ளறுகு ரசம் கோவைரசம் நாரசெங்கன்ரஸம் வகைபடி வ. வெகித்த முத்தெண்ணெய் படி உ, அல்லவெந்தி கிழங்கு ப. உ௦, பறங்கிசக்கை ப.ங, லவுங்கப்பட்டை கார்போகரிசிகடுகுரோகணி திப்பிலி வாய்விளங்கம் வகை ப. க. வால்மிளகு ப. எ, தூள்செய்துபோட்டு பசும்பால் படி வ, காய்ச்சிவடித்து பசுநெய்யை துணியில் தடவிபூரத்திற்கு சுத்தி கொளுத்தியபூரம் ப. வ, இட்டுநன்றாக அரைத்து எ, ப. வீதமாக (எ) (கச) (உக) நாள்புசிக்க, சுரக்காய் பீர்க்கன் முருங்கை பருப்பு உப்பு அரைக்கீரை நெய் ஆகும், புளிநீக்க.

## அண்டவாதத்திற்கு.

பூரம் வீரம்துரிசி தத்தம் பளிங்குசாம்பருணி கற்பூரம் வகை வி - கி. க, வெண்ணெய் ப. க, கூட்டியரைத்து இரும்புசிமிளில் வைத்து அண்டபெரு நரம்புமீது அடுப்புபோல் ங, புள்ளி பருப்பளவாக வைக்க அந்தவழியாக நீர்மாமிச நீர்வடிந்து குணமாகும்.

## சுகபேதி எண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய்படி க, பசும்பால்படி-ச, மதுரம்கடுக்காய்இந்துப்பு கடுகுரோகணி வாளம்வகை ப. எ, காய்ச்சிவடித்து. பெரியஆளுக்கு உ,ப. வீதம் ஒருநாழிகைசென்றுவெந்நீர்கொடுக்க, பேதிநிறுத்த உப்புக்கஞ்சி மோர், மாலையில் மிளகுசுக்குசீரகக் கியாழம்புசிக்க இரவு மிளகுநீர் சாதம் கொடுக்க.

## கரப்பன் எண்ணெய்.

பூவரசு செங்கத்தாரிபூ தகரப்பன்பட்டை கண்டங்கத்திரி நிலாவரை வகை ப. ய, ரு, படிசலத்தில் கியாழம்வடித்ததுபடி க, முத்தெண்ணெய்படி க, வெள்ளாட்டுப்பால் படி க, மிளகுகருஞ்சீரகம் கார்கோலரிசி பூண்டு வசம்பு சதகுப்பை வலம்புரிக்காய் பாங்கிபட்டைவகை ப. வ, காய்ச்சிவடித்து காண்டிவீதம்கொடுக்கசகலகரப்பான் தீரும். அரிப்பு,ரிணமிதுதடவ வுதிரும் பத்தியமாகப்புசிக்க.

## தேனாத்தேன்ணெய்.

முத்தெண்ணெய் படி, க. கையான்ரசம், பொன்னாங்கண்ணிரசம் தும்பரி ரசம், வெள்ளைவெங்காயரசம் கோவை, புளியாரை,



கந்தூரவள்ளியிலைகள் ரசம், வகை படி, வ. சாதிக்கா சாபத்திரி, மாசிக்கா, கடுக்காய்ப்பூ,கோஷ்டம்,அமுக்கறாங்கிழங்கு,இருசீரகம் வெந்தியம், லவுங்கபத்திரி, லவுங்கபட்டை,பூண்டு வகை ப.(அரைக்கால்)பசும்பால்படிக.இதிலரைத்துக்கூட்டிகாய்ச்சிவடித்துகோரோசனைகுங்குமப்பூ, சாதிக்காய்வகை ப.(அரைக்கால்)தூள்செய்திட்டு களஞ்சிவீதம் கொடுக்க, கெணவெட்டை கணசுரம்மார்தம் உப்பிசம் ரணங்கள் கெர்ப்பவெட்டை கணப்பாண்டு நீரிழிவு வெளுத்த தேகமும் உஷ்ணமும் தீரும்.

தேகமென்ற மூலமதில் சூடுகொண்டால்
சிவசிவாவப்புகைதான் மேலேசென்று
ஆகடமுன் சிரசதிலே யனல்தான்மீறி
யப்புவெனும் நீர்ப்பணைத்து வலியுண்டாச்சு
பாகமுடன் பன்னீர்தான் தசையில்சேர்ந்து
பக்குவமாய்சூடுகொண்டு சுரங்களாச்சு
தாகமுடன் சுரமீறிவாதபித்தர்
தணிந்ததினால் சிலேத்துமத்துக் குயிர்தானாச்சே.

ஆச்சப்பா சேத்துமந்தான் மீறிற்றானால்
அப்பனே தோஷத்துக்குறுதியாச்சு
நீச்சப்பா தோஷத்துக் கடிதானென்ன
நிலையான வாதமதில் பித்தம்மீறி
போச்சப்பா பாதாதிகேசம் தொட்டு
பொங்கியந்தப் பித்தநீர் பரந்துமீறி
காச்சப்பா தேய்வுடனே வாய்வுங்கூடி
கடினமுடன் ஆகாசம் புக்கும்பாரே,

பாரப்பா மூன்றுமொன்றாய்க் கூடிப்போச்சு
பகையான பிரிதிவியும் அப்புமின்று
சேரப்பா கரைத்துதண்ணீர் மண்ணாய்ப்போச்சு
சிவசிவா பஞ்சகர்த்தர் கூத்திதாச்சு
ஆரப்பா அழிவார்கள் சடலவாழ்க்கை
அரகரா நீர்க்குமுளி மாய்கை மாய்கை
தேரப்பா கனாப்போலே சடலவாழ்க்கை
சிவசிவா இதையறிந்து குருவைக்காரே.

## விதியை மதியால் நீக்கலாகும்.

மதியமூர்த்த மென்றதொரு வகையைமைந்தா
மார்க்கமுடன் கோடியிலே யொருவன் காண்பான்

விதியறிந்தால் மதியறியும் மதிதான்தேய்ந்து
விசையான ரவியதனை லமுர்தங்காணும்
பதியறிந்து யமுர்தமதைக் கொள்வதற்கு
பக்குவமாய் மூலமதில் மனதையொட்டி
கெதிமோக்ஷமென்ற மேல்மூலம்பாரு
கிருபையதி லுண்டாகும் வரிவைப்பற்றே.

மேகவாய்வுகளுக்கு மாத்திரை.

கருநாபியை மூன்றுநாள் ஆவின் கோமியத்தி லூறச்செய்து எடுத்துமேல்தோல்போக்கி உலர்த்தித்தூள்செய்தது,வி-நி-உ, கோரோசனை வி-நி-க, சூதம் வி-நி-வ, பூரம் வி-நி-வ, இரசசிந்தூரம் வி-நி-வ, வெள்ளைக்காக்கணைவேர் வி-நி-வ, லவுங்கம் வி-நி-வ, நய செந்தூரம்வி-நி(அரைக்கால்)சுக்குவி-நி(அரைக்கால்)திப்பிலி வி-நி (அரைக்கால்)திப்பிலிமூலம்வி-நி(அரைக்கால்)நெல்லிக்காகெந்தகம் விராகனெடை (அரைக்கால்) தம்பராஷ்டகம் வி-நி(அரைக்கால்) அக்கரகாரம் விராகனெடை(அரைக்கால்)வெண்காரம்,வி-நி-வீசம், லவுங்கம் விராகனெடை வீசம், இவைகளை கறுப்புவெற்றிலை ரசத்தாலரைத்து பயறு பிரமாணம் மாத்திரைசெய்து வாய்வுவாய் கிட்டல் இடுப்புவலி இவைகளுக்கு வெற்றிலை ரசத்திலும் திமிர் விக்கியிவைகளுக்கு இஞ்சிரசத்திலும் ஆள் தேகதிடத்தின்படி ரு-நாள்சு-வேளைகொடுக்க நீங்கும், ஏழாவது நாள்முத்தெண்ணெயுடன் அன்னகாடி மஞ்சள்ஓமம்வெற்றிலைக்காம்பு கூட்டிக்காய்ச்சி ஸ்நானம்செய்து வைக்கவும், இச்சாபத்தியம்.

மகாகோடாசூழி மாத்திரை.

தாளகம் வீரம் பாஷாணம் கௌரி லிங்கம் சூதம்கெந்திபூரம் பச்சைகற்பூரம் கல்லுப்பு தூரிசி வெண்காரம் சவுக்காரம் இந்துப்பு நவாசாரம் படிகாரம் அன்னபேதி செப்புதொட்டி பால்துத்தம் மனோசிலை காயம் சந்தனத்தூள் திரிகடுகுதிரிபலாதி வசவாசிதேவதாரம் கிராம்பு ஜாதிக்காய் சாபத்திரி கோஷ்டம் கடுகுரோகணி சித்திரமூலம் குராசானி யோமம் கஞ்சாவேர் பேரிச்சங்காய் திராக்ஷி மந்திஷ்டி சிறுநாப்பூ வலம்புரிக்காய் பூண்டு வாளம் வகைக்கு களஞ்சி க. சுத்திசெய்தவைகளைச் செய்துசூரணம் செய்பவைகளைபொடிவேறலாகவறுத்து சூரணம்செய்து யாவும் ஒன்றாய்க்கூட்டி கரிசாலைரசத்தால் எ-நாள் நொச்சிரசத்தினால் எ-நாள்விஷ்ணுகிரந்தை ரசத்தால் எ-நாள் இவ்விதமாக உயக-நாளரைத்து பயறுபிரமாண



மாக மாத்திரைசெய்து அடியில்கண்டஅனுபானங்களில்கண்டபடி கொடுத்துவரவும். வெட்டைக்கு அறுகன்வேர் கியாழத்தில் கச ரோகத்திற்கு தாமரைப்பூ கியாழம் சுசு - விஷத்திற்கு பழரசத்தி லரைத்துப்பூச,தேளுக்குக்கடிவாயில்தடவி கலிக்கமும்சுகசன்னிக்கு இஞ்சிரசம் சுர தாகத்திற்கு சர்க்கரையில் உஷ்சுரத்திற்கு மோர், பித்த சிலேத்பனத்திற்கு இஞ்சி, முறைக்காச்சலுக்கு முடகொத்தான் கியாழம் விஷவாதம் வேப்பிலை தாணிக்கா மிளகு சுக்கு பசு கோமியத்தில் காமாலை சோகை பித்தங்களுக்கும் முன்மாதிரியாக பில்லி சூன்னியத்திற்கு சலத்திலிட்டு குளித்து பாப்பூர முள்ளிப் பழத்தினுள் வைத்து குளிசமாடி முன்கையில் கட்ட, அண்டவாதத்திற்கு பூலாசெடி தாளும் அமுக்குராதாளும் கூட்டிக் கொடுக்க, மாலைக்கண் குருடுகாசத்திற்கு கையான்ரசம் பழரசத்திலும்கலிக்கமிட மூலகிராணிக்கு சர்க்கரையில் நஞ்சுதின்றவர்களுக்கு கருவூமத்தன் ரசத்தில் அயிச - வாதத்திற்கு மாவுலிங்கன் ரசத்திலும் அஷ்டகுன்மம் தசவாய்வு விப்புருதிகாசம் சுவாசம் பீலிகை ரோகம் பல் கோவை அடிவயிறு வீக்கம் கவுசி மந்தாரகாசம் சுசு-சிலேர்ப்பனத்திற்கும் தும்பட்டிக்கா ரசம் முசல்வலிக்கு ஊமத்தன் ரசத்தில் நசிபம் கபாலகுஷ்டம் கிரந்தி சூலை சிலவிஷம் கடிவிஷம் வாய் நீரொழுக்கிற்கு திரிகடுகு தூளில் பாதசக்கரம் பாதபுத்திற்கு சாதிக்காய் தயிலத்திலிழைத்துத்தடவ கண்டமாலை புண் புரைபிளவைக்கு வெண்ணெயி லிழைத்துத் தடவதண்ணீரி லிழைத்துஉள்ளங்காலில் பூசிநடக்க நோயிராது, தங்கத்தகட்டில் குளிசம்கட்ட வாசியுள்ளடங்கும்.

கோடாசூழி.

சூதம் கெந்தி தாரம் சிலை லிங்கம் நாபி நிர்விஷம் காயம் அன்னபேதி மாங்கிஷபேதி ஏவாசாரம் நவாசாரம் சத்திசாரம் சகஸ்திரபேதி சீனாரம் பொரிகாரம் இந்துப்பு பொட்டிலுப்பு சவுடுப்பு வளையலுப்பு கல்லுப்பு சடாமாசி திரிகடுகு திரிபலாதி கோஷ்டம் அக்கிராகாரம் சாதிக்காய் கிராம்பு ஏலரிசி லவுங்கப்பட்டை வாலுழுவை கார்ப்போகவரிசி அதிமதூரம் லவுங்கபத்திரி கொத்தமல்லிவாய்விளங்கம் மஞ்சள் கஸ்தூரிமஞ்சள் சீரகம்கருஞ்சீரகம் சிறுநாகப்பூ செவ்வியம் சிறுதேக்கு தேசாவரம் வகைக்கு வி. நி. க, வாளம் வி-நி. ச, கையாந்தகரைரசத்தினால் எ, நாள

ளைத்து குன்றிப்பிரமாணம் மாத்திரை செய்யவும். சுரத்திற்கு பஞ்ச மூலக்கியாழத்தில், குளிர்காய்ச்சலுக்கு கண்டங்கத்திரி முக்காவேளை கோஷ்டம் அக்கிரகாரகியாழத்தில், மேகத்துக்குசீந்தில் சர்க்கரை, இருமலுக்கு கண்டங்கத்திரி கியாழத்தில் அசீரணத்திற்கு ஓமக்கியாழம் வயிற்றுவலிக்குபெருங்காயத்தில்சுகபேதிக்கு சர்க்கரையில் நீர்கிருச்சனத்திற்கு உத்தாமணிரசம் மஞ்சள்மேகம் வெள்ளாட்டுப்பால் நீலமேகத்திற்கு வலரிசிகியாழம் தாபசுரம் லவுங்ககியாழம் கெர்ப்பசுரம் தனியாகியாழம் குழந்தைசுரத்திற்கு சுக்குகியாழம் தோஷத்திற்கு குட்டிவிளாகியாழத்திலு மிடவும், நோயாளியின்திடமும் வயதும் நோயினளவும் தெரிந்து பத்தியமும் மருந்தும் யூகித்து நடத்திவர மேற்கண்டவைகள் நீங்கும்.

## அயதங்க செந்தூரம்.

கெந்தி ப. க, நாட்டுஇரும்புத்தூள் ப. ரு, வாலைரசம் வி-நி-அ, தங்கப்பொடி வி-நி. க, வெள்ளைப்பாஷாணம் வி-நி. வ, எலுமிச்சம் பழரசத்தால் ச, ஜாமமரைத்து பட்டாணிபோல் மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி காசி குப்பியிலிட்டு கார்க்குமூடி தளசட்டியில் இரண்டுவிரற்கடை மணல்பரப்பி புட்டியைவைத்து புட்டிக்குக் கழுத்தளவு மணல்கொட்டி கமலம்போல் அ-சாமமெரித்து ஆறவிட்டு எடுக்கவும், கருக்கிருந்தால ஓட்டில்வைத்து வறுக்கச் சிவந்துவிடும, பரிசைகாடிசலத்தில் பணவிடையிடக் கட்டும், இதைமூநண்ட லேகியத்தில் மண்டலம் கொள்ள தளர்ந்த நரம்புகள்இறுகி தேகவலிவுபெறும் உஃ, மேகமும் பாண்டுரோகங்களும் தீரும்.

தேமல் படைகளுக்கு குசும்பாபூவை தேனிலரைத்துப் பூசுவதாலும் துளசியிலையைப் பழரசத்திலரைத்துப் பூசுவதாலும் ரேவல் சீனியைப்பழரசத்திலரைத்துப்பூசுவதாலும்கோருமைசத்தும் குன்குடப்பூவுமரைத்துப் பூசுவதாலும் பிதுர்ரோகணியைதேனிலரைத்துப் பூசுவதாலும் பொன்னுவாரைவேரை சந்தனம்போலரைத்துப் பூசுதலாலும் மாசிக்காயைக் காடியிலரைத்துப் பூசியும், நாகமல்லி வேரைப்பழரசத்திலரைத்துப் பூசினாலும் நீங்கும், ரேசன் ப. கூ. குழாகெந்தி ப. ரு. பொரித்த வெண்காரம் ப. ஐ சீனாகற்கண்டு ப - (அரைக்கால்) வெள்ளாட்டுப் பாலினாலரைத்து பில்லையாக்கி உலர்த்தி நல்லெண்ணெயிலிழைத்துத்தடவிவர, படைகளனைத்தும் நீங்கும்.



சொரிசிரங்கு காடியிலரைத்த மருதோன்றிப்பூவைநல்லெண்ணெயில் ஊறவைத்தும் நிரடிமுத்துப்பருப்பை பழரசத்திலரைத்துப் பூசி மாலை சாணந்தேய்த்துக் குளிப்பதால் நீங்கும்.

கட்டிகள் உடைய அத்தியிலையும் சாதமுமரைத்துக் கட்டினாலும் சிறுபசளையிலையை பிரமதண்டு எண்ணெயில் வதக்கிக் கட்டினாலும், நாய்துருவி யிலையரைத்துக்கட்டினாலும் அரிசிமாவும் யாளிவிரைமாவும்கூட்டிக்காடியினால் களிகிண்டிகட்டிவருதாலும்கிராகழியும் ஆட்டுக்கொழுப்பு மரைத்துக் கட்டுவதாலும் உடையும்.

நரம்புசிலந்திக்கு சருள்ளிசப்பு தேன்மெழுகுஎள்ளெண்ணெயில் பிளாஸ்திரிபோல் செய்து சிலந்திமீது போட்டுவரவும், ஊமத்தைக்காய்க்குள் கற்பூரம் சாம்பிராணி இரண்டும்வைத்து மூடிகும்பியிலுக்கி வெந்தபிறகுஎடுத்துக்கோவைரசத்தாலரைத்துக் கட்டிவரநீங்கும் சுடுசாதம் பிடி (க) ரசம் வி-நி. (க) கூட்டியரைத்துச் சிலந்திமீது வைத்து எருக்கம்பழுப்பு (எ) மீதுவைத்துக் கட்டிவைக்க ஆற்றிவிடும்.

## சந்தரஸ்பிளாஸ்திரி.

இரும்புபாத்திரத்தில் நாள்சென்ற நெய் ப. (ச) தேன்மெழுகு ப. (உ) கூட்டியுருக்கித் தூள்செய்த சந்தரஸ் ப. (ச) இட்டுக்கிளறக்கி சுடுகையில்தானே காரியசெந்தூரம் தோ. (ச) இரசகற்பூரம் கற்பூரம் லிங்கம் சாம்பிராணி முர்தார்சிங்கி வகை தோ. (ரு) தூள்செய்திட்டு இரும்பு ஆயுதத்தால் ரேகித்துக்கடைந்து இதை பிளாஸ்திரியாக சகலகட்டிகள் மீதிட்டுவரக் கட்டிகளை உடைத்து நோய்களைதீர்த்து ஆற்றிவிடும்.

அடிபட்ட காயத்திற்கும் அதினால்வந்த வீக்கத்திற்கும் சுட்ட கல்சுண்ணாம்பு ப. (ரு) சப்பு ப (ரு) ஒருசித்தண்டத்தின் இருகருவும் தயிர்கட்டி ப. (உ) கூட்டியரைத்து அந்தஇடத்தில்வைத்து போல் பூசிவரவும், ரத்தங்கட்டியிருந்தாலும் கரைந்து குணப்படும்.

அம்மைவடுமாற, வேம்பினிலையும்கஸ்கஸா கஸ்தூரிமஞ்சள் கூட்டியரைத்து தேகத்தில் பூசித்தேய்த்துக் குளித்துவரவும்.

குதிகால்வெடிப்புமாற நண்டுசுட்ட சாம்பலைத்தேனிலிழைத்துப் பூசுவதாலும் கிளிஞ்சல் சுண்ணாம்பு நெல்லிவற்றல் முந்தென்னெய் நாற்றநெய் கூட்டியரைத்துப் பூசுவதாலும் விளாம்பட்டைத்தயிலம் பூசிவருவதாலும் மாறும்.

அழுபட்ட நரம்புகள் பூநாகத்தை யரைத்துப் பூசிவரக்கூடும் காலில்தைத்த முள்வெளியாக நண்டையிடித்துக்கட்டி வைக்கவும்.

ஆறாரிணங்களுக்கு ரிணத்தை நன்றாக சுத்தப்படுத்தி காலேமல் என்னும் இரசபற்பம் வி-நி. (உ௰) சந்தனத்தூள்வி-நி. (வ) கூட்டி லேசாகத்தூவி துணியால் மூடிவைத்துவர ரிணம் ஆறும், நாயுருவி ரசத்தில் ஈயவெள்ளையைக் கலந்து ரிணமீது பூசிவந்தாலுமாறும்.

வெண்குட்டம் கருங்குட்டத்திற்கு கோரோசனையை உமிழ்நீரால் அரைத்துப் பூசிவர நீங்கும். கருப்புபிளாஸ்திரி ப-அ, இதில் ஈய செந்தூரம் ப-உ, குங்கிலியம் ப-அ, தேன்மெழுகு ப-உ, இரசகற்பூரம் ப-வ, இட்டுக் காய்ச்சிக் கருக்கும்வரையில் துழாவிவந்து பதமாகும் சமயம் இறக்கித் துணியில் தடவி ரிணமீதிட்டு வரவும்.

பச்சைபிளாஸ்திரி பங்காளபச்சை குங்கிலியம் வகை ப-க, ரசம் ப-வ, ஊமத்தன் ரசத்திலரைத்துப் பசுவெண்ணெய்கூட்டி எகு பாத்திரத்திலரைத்து வெற்றிலையில்தடவிப் போட்டுவரப் புத்துகிரந்தி புடைகள் தீரும்.

### நாகபற்பம்.

சுத்திசெய்த நாகம் ப-க௰, சூதம் ப-௰, இரண்டையும்உருக்கி தொந்தித்து கல்வத்திலிட்டு அஞ்சாங்காய்ச்சல் வெடியுப்பு ப-க, சேர்த்து உத்தாமணியிலை ரசத்தால் ச-ஜாமமரைத்துபில்லைசெய்து உலர்த்தி ஓட்டில் வைத்து சீலைசெய்து ம-எருவில் புடம் இதில் குன்றியெடை பாலில்வேவித்து உலர்த்தி எடுத்த சுக்குசூரணமும் பனைவெல்லமும் சமமாகப் பிசைந்து கழற்சிக்காய் பிரமாணத்தில் வைத்து மூன்றுநாள் கொடுக்க சீழ்மூலம் மூலம் தீரும்.

### வன்னிகேர்ப்பமாகிய லிங்கக்கட்டு.

ஒருபலம் லிங்கத்தை தேன் முலைப்பாலில் கூ-நாள் ஊறி எடுத்து ஒருபலம் நெல்லிக்காய்கெந்தியை ஆலம்பாலில்விட்டு நன்றாக ரேகிக்க இடித்து லிங்கத்திற்கு கவசம்கொடுத்து உலர்த்திசிறு குழியில்வைத்து மீது மணலினால் மறைத்துச் சூடு படும்படியாக உ-வறட்டியால் புடமிடவும், எடுத்து கெந்தியைநீக்கி வேறு கெந்தகம்பலம் ஒன்றைமுன்பாலிடத்து கவசித்து முன்மாதிரியாகக்குழியில்வைத்து ஒருவறட்டி அதனப்படுத்தவும் இவ்விதமாக கூ-புடம் புடத்திற்கு ஒருவறட்டி அதிகப்படுத்தி வரவும், கெந்தியும் புதிதாய்க் கவசித்துவரவும், முடிவில் முன்மாதிரியாகக் கெந்தியை கவ



சித்து ச-சீலைமண்செய்து பூமியின்மீது ம-வறட்டியில்புடம்எடுத்து சகல வாயுவிற்கும் சீதளம் சுரம் சன்னியிவைகளுக்கு, தேன் இஞ்சி ரசத்திலிழைத்துக் கொடுக்கவும், இதைபாகப்படிக்குச்செய்துஅனுபவித்து வரும்போது இந்தக்கட்டின் பெருமையை நன்றாக அறியக்கூடும், எட்டுச்சுரக்காய் கறிக்காகாதென மதித்து இருப்பவர்களுக்கு என்ன அறியக்கூடுமானது.

### கெந்திமெழுகு.

சுத்திசெய்த நெல்லிக்காய் கெந்தி ப-க, இதை புதுபாண்டத்திலிட்டு கொட்டைமுந்திய முந்திரிப்பழரசம் ப-மஉ, விட்டுக்கொதிப்பித்து நீரைவடித்து மறுபடியும் மேல்படி பழரசம் ப-மஉ, இட்டுக் கொதிப்பித்து வடித்துவிட்டு இவ்விதம் மூன்றுதரம்செய்து நாலாவது மேல்படி ரசம்விட்டு சுண்டஎரித்து மெழுகு பதத்தில் யாவும் சுறண்டி எடுத்து பத்திரப்படுத்தி கால்படி ஆவின்பாலில் இரண்டு குன்றியெடை சேர்த்துக் காலைமாலையாகக்காலமண்டலம்கொள்ளவும், கரப்பன் பதார்த்தம் நீக்கி அதிகாரம் சேர்க்காமல் கிச்சடி நெய் பால் இவைகள் புசிக்கவும், சகல மேகங்களும் நீங்கித்தேகம் வச்சிரகாயமாகும்.

### சீரகலேகியம்.

சுத்தித்த சீரகம் ப-டு, பழரசம் கரும்புரசம் அப்புகோவை ரசம் கையாந்தகரைரசம் தும்பைரசம் இவைகளில் ஒவ்வொருநாள் ஊறி யுலர்த்தி சூரணம்செய்து சாதிக்காய், சாபத்திரி, வால்மிளகு வகை ப-க, சுக்கு மிளகு நாட்டுக்கல்நார் வகை ப-௰, சூரணம் செய்யவும், புதுசட்டியில் பசும்பால் படி-௰, வெள்ளைசர்க்கரை ப-ரு௰, இட்டுப்பாகுசெய்து சூரணங்களைக்கொட்டிக்கிளறிநெய் ப-ம தேன் ப-டு, விட்டுக் கிண்டிப் பதமாயிறக்கிப் புன்னைக்காயளவாக மண்டலம்கொள்ள, சகல பித்தமும் நீங்கிப் பித்தத்தால் வெளுத்த ரோமமும் கருத்து தேக ஆரோக்கியத்தை யுண்டாக்கும்.

ஸ்திரீபோகம் கடுகு நல்லெண்ணெய் கிரந்திபதார்த்தங்களும் நீக்கவும்.

### தலையிடிதுத்தல் நோயிவைகளுக்கு.

ஆவின்வெண்ணெய் ப-௯-ல், சித்திரமூலம் வேற்பட்டை அரைத்தது ப-க, கூட்டிக்காய்ச்சி நெய்வடித்து இதில் கால்பலம் தேய்த்து ஸ்நானம் செய்துவரவும்.

## லக்ஷ்மிவாச ஏழுப்பு பற்பம்.

இந்துப்பு அஞ்சாங்காய்ச்சல் வெடியுப்பு கறியுப்பு வளையலுப்பு லாகூர் வெள்ளையுப்பு வகை ப-க, வெண்காரம் ப-ரு, இவைகளை சிறுசாக நறுக்கி சின்னகுடுவையிலிட்டு வெள்ளெருக்கன் பால் மிதக்கவிட்டு ஓடுமூடி ரு-சீலைசெய்து அமைகிச புடமிட்டு எடுத்து தூரிசி ப-ரு, கூட்டிக்கல்கோவை என்னும் சவுரியிலை ரசத்தாலரைத்து ஓட்டில்வைத்து ஏ-வறட்டியில் புடம் இவ்விதம்புடம் (எ) புடம் ஒன்றிற்கு இரண்டுவறட்டி அதிகப்படுத்தி வரவும், பிறகு ஆடுதீண்டாபாளை ரசத்தில் புடம் (ரு) பப்புளி பாலில் புடம் (உ) இதை பத்திரப்படுத்தி குன்மம் பசிமந்தம் வயிறுநோய் சூதக வாயு நீர்கோவை சதையடைப்பு இவைகளுக்குத்தக்க அநுபானங்களிலிட புத்திமான்களாகிய பண்டிதர்கள் இன்னம் பலவித பிணிக்கும் உபயோகப்படுத்துவார்கள்.

## யோகிகளுக்கு.

பஞ்சகர்ப்ப ஸ்தானம் பசும்பாலில் நெல்லிபருப்பு (கரு) மிளகு (கவ) கருக்காய்த்தோல்சதை (க) வேம்பின்வித்து (ஙு) கஸ்தூரி மஞ்சள் (ரு) இவைகள் விராகனெடைகள் இவைகளை முன் பாலில் குழம்பாக வரைத்து சற்றுக் கொதிப்பித்து சிரசிற்கும் தேகத்திற்கும் தேய்த்துக்குளித்து வரவும்.

## தைலம்.

சிவனார்வேம்பு சமூலம், தலைச்சுருளிவேர் குழிமிட்டான்வேர் சமனெடையாக குழித்தயிலமிறக்கி அந்த சந்தி தக்கபடி உட்கொள்ள வாசிவெளி வாராதிருக்கு மென்று முன்னோர்கள் நூல் கூறும்.

## சூரணம்.

குப்பமேனி சிறுசெருப்படை கரிசாலை சமன் சூரணம் இதற்கு நாலுக்கொன்று கற்கண்டு கூட்டி தேன்நெய்யில் வெருகடி மண்டலம் கொள்ள புத்திமந்தம் மதிமயக்கம் பித்தசோகை எரிபித்தம் நீர்கட்டு மலபந்தம் பித்தவெறி மூர்ச்சைதீர்ந்து மனமுண்டு வாக்குண்டாய் சுகம்படலாகும்.

## தீனுசுகள் சுத்திவிபரம்.

இரும்பு பொடியை ஒருநாள் எலுமிச்சம்பழ ரசத்தில் ஊறச்செய்தெடுத்து, மறுநாள் எள்ளெண்ணெயில் ஊறி அயசட்டியில்



விட்டு வறுத்து காடியில்கழுவி வெலப்பட்டை யொழுக்கில் கொதிப்பித்துக் காடியில் கழுவி யெடுக்கவும்.

காந்தம் பழரசத்திலும்காடியிலும்மோரிலும் கொதிப்பித்துக் சூலாரிரசத்தில் எ - தரம் காய்ச்சி துவைக்க.

அயதொட்டி ஆவின்பாலில் (ச) ஜாமம் நெய் தேன் இவைகளில் (அ) நாள் ஊறியெடுக்கவும்.

நிமிளையினுலும் வாழைகட்டை அடிசலத்தில் கொதிப்பித்து எடுக்கவும்.

பொன்நிமிளை (ரு) நாள் காடியில்ஊற கிருஷ்ண அபரேக்கு ஒருபடி தாளை (ரு) படிகோமியத்தில் வேகவைத்து எடுத்து உலர்த்தி நெல்லுசேர்த்து கிளிகட்டி காடியில் தேய்த்து இறங்கும் தெளிவை நீக்கிஉலர்த்திக் கொள்ளவும்.

பால்துத்தம் கிளிகட்டி சிறுவர் அமுரியில் (எ) நாள் ஊறி ஆவின்நீரில் (உ) சாமம் ஊறியெடுக்கவும்.

சூதம் அருக்கன்பாலில் ஒருநாள் ஊறி செங்கத்தூள் ஓட்டடை சர்க்கரை இவ்வைகளி லரைத்து எடுக்கவும்.

இருவங்கம் நாகம் இலுப்பையெண்ணெயிலாகிலும் தேங்காயெண்ணெயிலாகிலும் சாரத்தூள் தூவி (எ) தரம் உருக்கி சாய்க்க மோர்காடி கோமியம் பழச்ரம் அருக்கன் பாலிவைகளிலும் சாய்த்தெடுக்கலாம்.

கருவங்கம் வெள்ளாட்டு நீரில் பிரண்டை வேரரைத்துப் போட்டு நல்லெண்ணெய்விட்டு உருக்கி (ய) தரம் சாய்க்க.

நாகம் ஆட்டுநெய்விட்டு உருக்கி அமுரி பழரசம் கூட்டி சாரம் கல்சுன்னமிட்டு கலக்கி இதில் (ம) தரம் சாய்க்கவும்.

லிங்கம் தேங்முலைப்பாலில்ஊறி மறுநாள் பழரசம் வேளிரசம் முலைப்பாலும்கலந்து ஒரு ஜாமம் சுருக்கிடவும்,

வீரம் இளநீரில் கரைத்துசி கற்பூரமிட்டுக் கலக்கியதில்டோலாந்திரம் நீரில்படாமல்கட்டி எரித்து எடுக்கவும்.

இரசகற்பூரம வெற்றிலை மிளகு யொழுக்கில் கிளிக்கட்டி (ரு) நாள் வைத்து எடுக்கவும்.

வெள்ளைகெவுரி மிளகு கிழாழம் வெள்ளாவி ஆவின் பால் சுன்னநீர் சாணிப்பால் இவைகளிலொன்றில் டோலாந்திரம்எரிக்க கெவுரியை பன்றிப்பாலில் கிளிகட்டி அவித்து எடுக்கவும்.

மநோசிலை காடியில் கிளிகட்டி எரிக்கவும் ஆட்டுமூத்திரத்தில் டோலாந்திரம் எரித்து எடுக்கவும்.

தாளகம் அமுரிநாழி கல்சுன்னம் மேனிரசம் பழரசம் கலந்து இதில் கிளிகட்டி எரிக்க.

மோமியம் காடி சுண்ணாம்புநீர் ஆவின்பால் அரசன் பட்டை கியாழத்திலும் டோலாந்திரம் கட்டிஎரிக்க.

ஆமலசகெந்தகம் நெய்விட்டு உருக்கிப்பசும் பாலில் (௰) தரம் சாய்த்து எடுக்கவும்.

இரும்புக் கரண்டியில் முத்தெண்ணெய் விட்டு உருக்கிப் பசும்பாலில் (ரு) தரம் சாய்க்கவும்.

பவழபுத்து ஆவின்மோரில் கிளிகட்டி விட்டு (௪) நாழிகை யெரித்து எடுக்கவும்.

சிலாசத்து பழச்சத்தில் கொதிப்பித்து எருக்கன்பாலில் (௧) நாழிகையூறி கழுவி எடுக்க அல்லது அல்லிப்பூரசத்தில் ஊறியும் ஆவின்பாலில் டோலாந்திரமும் எரித்து எடுக்கவும்.

கல்னார் கழுதைமூத்திரத்தில் (௧) நாழிகை ஊறி கழுவி யெடுத்துக்கொள்ளவும்.

கெருடப்பச்சை பயறுபோல் செய்து கிளிகட்டி குமரிசாற்றில் ௧௰ நாழிகை எரித்துஎடுக்கவும்.

சீனம் ஆவின்பாலில் ஊறிஎடுக்கவும்.

பொரிகாரம் எருமைசாணத்தில் கிளிகட்டிவைத்து எடுத்து கழுவ அல்லது சிறுநீரில் (௧) நாள் ஊறியெடுக்க.

குக்கில் எருமைமோரில் ஊறியெடுக்க கிளிகட்டி திரிபலைதேவாரம் பேபுடலைகியாழத்தில் டோலாந்திரங்கட்டி எரிக்க.

முடிகாரம் பனங்கள்ளு படி நாலில் கிளிகட்டி எரிக்க.

மிருதார்சிங்கி வெள்ளாட்டுநீரில் கொதிப்பித்து எடுக்கவும்.

தொட்டி (௪) ம் முலைப்பால் வெள்ளாட்டுப்பாலிலும் தனி தனி (௰) நாழிகை ஊறி யெடுக்கவும்.



தொட்டிபாஷாணம் துண்டுகளாகச்செய்து கிளிகட்டிநெல்லி லவித்து எடுக்கவும்.

மடல் துத்தம் வெண்ணெய் தயிர் குமரிசாற்றில் ஊறிக்கழுவியெடுக்கவும்.

பச்சைதுரிசி ஆவின் நீரில் எரித்துக்கழுவி உலர்த்தவும்.

சகஸ்திரபேதி நாரத்தங்காய்ரசத்தில்ஊறவைத்து எடுக்கவும்.

அஞ்சனக்கல் புளியாரைரசத்தில் ஊறி யெடுக்கவும்.

கல்மதம் அமுரியில் கழுவியெடுக்கவும்.

நாபி பருத்தியிலைரசத்தில் ஊறி முத்திலைக்குள்வைத்துச்சுற்றிக் கும்பியில்வைத்து சீந்தில் கியாழத்தில் டோலாந்திரம் எரித்து எருக்கன்பாலில் சற்றுஊறிக் கோமியத்தில்கழுவிஎடுக்க.

நேர்வாளம் எருமைசாணத்தில் காடிவிட்டு இதில் கொதிப்பித்து நஞ்சுநீக்கிக் காடிமோர் பழரசம் கலந்து இதில் கொதிப்பித்து எடுக்கவும்.

செங்கொட்டை உதகத்திலூறி மறுநாள் மூக்கைவெட்டிநீக்கவும்.

சிவதை ஆவின்பாலில் அவித்து எடுத்து உலர்த்தியெடுக்கவும்.

அமுக்குரா ஆவின்பாலில்சுத்தி.

மூலிகை திணுசுகளின் வித்துவேர் இவைகள் யாவும் ஆவின் பாலில் டோலாந்திரம் எரிக்க.

சுயசுபாஷாணமும் எகசுத்தி மேனிரசம் தக்காளிரசம் ஊமத்தன்ரசம் பழரசம் அமுரி காடி சமனாகக் கலந்து இதில் உப்புச் சுன்னாம் வெடியுப்பு சாரம் சீனம் வகை ப-க, தூள்செய்து கலந்து சரக்குகளை கிளியாய்கட்டி மண்டலம் இட்டு எடுத்து உலர்த்திக்கொள்ள மிகசுத்தியாகும்.

### சுத்தி விபரம்.

வெள்ளை காக்கணம்வேர் பசும்பாலில்சுத்தி திப்பிலி பழரசம் அல்லது சிறுநீரில் பாவனம் செய்யவும்.

சுக்கு மேல்தோல்சீவி சுண்ணாம்புபூசி உலர்த்தவும், மிளகு புளித்தமோரில் ௧-நாள் ஊறி ஓட்டில் வறுக்கவும்.

ஓமம் சுண்ணும்பு; தெளிவில் சாமம் ஊறி எடுக்கவும், 'இரு சீரகம் ௭-சாமம் உலர்த்தி வறுக்கவும்.

ஊமத்தன்விரை ஒருசாமம் சலத்தில் ஊறிப் பழரசத்தில் ௪-சாமம் ஊறி எடுக்கவும்.

எட்டிக்கொட்டை நெல்லிலவித்துசிறுகீரைரசத்தில் ௧-சாமம் ஊறி தேற்றாங்கொட்டை ரசத்தில் வேவித்து எடுக்கவும்.

பெருங்காயம் தாமரையிலை ரசத்தில் பாவனம் செய்யவும்.

கொம்பரக்கு நல்லசலத்திலிட்டு ௯-தபா எரித்து எடுக்கவும்.

மாசிக்காய் பசுநெய்யில்வறுத்து வெடித்தபிறகு எடுக்கவும்.

சகலவித எண்ணெய்களும் நல்லசலத்தில்விட்டு ௪ - நாழிகை சென்று எடுக்கவும்.

வெண்காரம் பொரித்துக் கொள்ள காடியிலாவது பழரசத்திலாவது அரைத்து எடுக்க.

மனோசிலை நாரத்தம்பழத்தில் புடம் அல்லது சிவப்பு அகத்திப்பூ ரசத்திலாகிலும் கரிசாலை ரசத்திலாகிலுமரைத்து எடுக்கவும்.

இந்துப்பு காடியிலாகிலும் ஆட்டுநீரிலாகிலும் மத்திக்க.

துரிசி தயிரினலரைத்து அடைதட்டி ஒடு காயவைத்து அதில் புரட்ட, அல்லது தயிரில் ஒருசாமம் ஊறவும்.

தாளகத்தை சிறுதுண்டுகளாகச்செய்து சின்னமொந்தையிலிட்டு மீதமூடும் ஓட்டில் (௫) துவாரமிட்டு கரிநெருப்புமீது வைத்து விசிறக்கருப்புப் புகைவந்து செவப்புப்புகை வருங்காலம் எடுத்துக் கொள்ள.

தாளகசுத்தி சுண்ணாம்புக்குள் வைத்து கழுதைநீர்விட்டு(௭) தரம்தாளித்து எடுத்து சுன்னநீர், கொள்ளுகியாழும், தயிர், கூழ்ப்பாண்டநீர், காடி, அகத்திவிரை தயிலம் இவைகளைக்கூட்டி (௨) சாமம்சுருக்குக்கறந்தைசாற்றால் (௨) சாமம் சுருக்கு கொடுத்தெடுத்து சத்தி சாட்டாணைவேர் குக்கில் இதை முருங்கிலைரசத்தாலரைத்து கவசம்செய்து லகுபுடமிட மிகசுத்தியாம்.

௬௪-பாஷாணங்கள் சுத்தி மேனிரசம், கற்றாழம்பால், அமுரி, பழரசம், செம்பருத்தி, வெற்றிலைரசம் வகை படி - ௧. முலைப்பால் படி ௨. இவைகளைப் பாண்டத்திலிட்டு அதில் பாறையுப்பு, வெடி, காரம், சீனம், சாரம் வகை ப-வ, தூள்செய்து கலந்து திரவகளை



நிளிகட்டியிட்டு நிழலில்காற்றில்லாவிடத்தில் பட்சம் வைத்து எடுத்துக் காடியில் ௯ - நாள் ஊறி எடுக்க.

ஆன்றோர் பலவிதநூல்களில் ஒரு திரவுக்கு பலவித்சுத்தி விவரங்கள்சொல்லி யிருந்தாலும் கூடிய வரையில் திரவுகளினுள்ள துர்க்குணங்களை மனதிற்கும் முன்னோர்கள் கூறிய சுத்திகளின் பாகப்படிக்கும் சுத்திசெய்து துர்க்குணங்களைநீக்கி ஔஷதங்களை முடிப்பதுதான் புத்திமான்கள் கருத்து. அவ்வகை சுத்திசெய்யாமல் கடைகளிலிருந்து பெற்றகணமே ஔஷதங்களை முடித்து சிவர்களுக்கு உபயோகப்படுத்துவதில் அதினால் வியாதியாளரடையும் துர்க்குணங்க ளளவின்றி. பண்டிதனடையத் தடையிராதென்று எமதுள்ளம் மதிக்கின்றது.

சிவசெயல், சிவசெயலென இரண்டுவகுப்பாக நேரும் வியாதிகளுக்கு சிவசெயலால் வருபவைகள் அவரவர்கள் செய்யும் தீங்குகளால்நேரும் தீவினையான கொடிய நோய்கள் ஆண்டவரது ஆக்கினையால் நேருவதால் அதற்கு முன்னோர்களால் கன்மகாண்டத்தில் சொல்லியபடி கன்மநிவாரணங்களின் ஒழுங்கின்படி கன்மநிவாரணம்செய்து ஔஷதப் பிரயோகம்செய்யில், குழந்தையழத் தாய்மனமிரங்கி ஆதரிப்பதுபோல ஸ்தூல சூக்ஷமத்தின்தேகமாகிய தாய்க்குக்கருணைவந்து அதில் நேர்ந்த கொடிய உபாதைகள் தரும் நோய்களும் பானுவைக்கண்ட பனிபோல் நீங்கி மதியைக் கண்ட மலர்போல் தேகம்செழித்துப்பிரகாசிக்கும்.

கன்மமென்ன தன்மமென்ன வென்றபானால்
'காயத்தில் நோய்யிருந்து சண்ணும் சண்ணும்
வன்மமென்ன வகையறிந்து கன்மந்தீர்த்து
வகையுடனே மருந்துசெய்யில் வயித்தியனுகு
நின்றுடனுக்கால் கன்மந்தீர்க்கான்
நினைவுகெட்டு மருந்து செய்யிற் பிணிதீராது
கன்மமதை நிவிர்த்திசெய்து மருந்து செய்யிற்
கருத்துள்ளவயித்தியனுங் கருதிப்பாரே.

## முறிவு திரவுகள் விவரம்.

தேளுக்கு-வெந்தகரி-சலம்.
நெய்க்கு-புளித்தமோர்.
தேங்காய்க்கு-புழுங்கலரிசி.

சாதத்திற்கு-காந்தலடி.

நெல்வேர்-சர்க்கரைக்கு-விலாமிச்சு.

நாபிக்கு-சிறுகீரை-வெள்ளாட்டுநீர்-பசுநெய்.

வெண்காரம்-மிளகு-சுக்கு-பச்சைபயறு-சலம் கடுக்காய்-கியாழம்-சோகிவிரையும்—நெய்யும்.

செங்கொட்டைக்கு வெடிதிராவகம்.

காட்டு முருங்கைக்கு-எள்ளெண்ணெய்-வாளத்திற்கு-வசம்பு கரி-சாணிப்பால்.

பழவர்க்கத்துக்கு-மிளகு-சுக்கு-கியாழம்.

மாங்காய்க்கு-புழுங்கலமுது.

மாஜூம்-நெய்-கத்திரிகியாழம்-புளிசலம்.

மிளகு-பசுநெய்—தேங்காய்.

வாழைப்பழம்-மிளகு-கற்பூரம்.

வெல்லத்துக்கு-எருமைமோர்.

எள்ளெண்ணெய்க்கு-தேங்காய்.

அலரிக்கு—கடுக்காய்-கியாழம்.

பல்லி-எச்சத்துக்கு-மாம்பட்டை.

கஞ்சாவிற்கு - சுக்கு-கியாழம் - பழரசம். }
கதலிபட்டைரசம் - ஈருள்ளிரசம்.

எருக்கன்பாலிற்கு - ஆவின்மோர்-நெய்-கருவேல்கியாழம்-அவுரி-காடி-எள்ளு-சர்க்கரை-முத்தெண்ணெய்-மஞ்சள்.

கள்ளிக்கு-வாழைப்பட்டைரசம்-ஆவாரை.

அபினிகஞ்சாவிற்கு-நெய்-வென்னீரில்கொடுக்க.

அபினிக்கு-நெய்-வெண்காயம் - பழரசம் - சுக்கு-மாசிக்காய் உப்புதேனிலரைத்துக்கொடுக்க.

எள்ளுக்கு - சர்க்கரை.

கருணைக்கு - வெற்றிலை.

கள்ளுக்கு-ஆவாரைச்சாறு.

குன்றிக்கு - வெண்காரம்-விடத்தாரன்வேரும்-வென்னீரில் கொடுக்க.

சதுரகள்ளிக்கு-கடுக்காய் - ஆவாரை.

சிவதைக்கு - வெள்வேல்பட்டை.

மருதோன்றிக்கு - தான்றிக்கா கியாழம்.

எருக்கிலைக்கு - சங்கன்பழம்-எள்ளு-சர்க்கரை.

எட்டிக்கு - தாழம்முலைரசம்-நாவல்கொழுந்து.



சுண்ணாம்பிற்கு - எள்ளெண்ணெய் — எருமைத் தயிர்-சீந்திற்கொடி-மஞ்சள்.

புளிக்கு - உப்பு.

உள்ளிமஞ்சளுக்கு - சீரகம்.

உப்புக்கு-வெண்காயம்.

இறைச்சிக்கு-பூண்டு.

அழிஞ்சிக்கு-அலரி-நல்லெண்ணெய்க்கும்-கடுக்காய்கியாழம், துளசி - வெண்கரு.

நீற்றினங்களுக்கு - கரிமஞ்சள்.

எலிபாஷாணத்திற்கு - பாகலிலை.

கெந்திக்கு-பசுநெய்.

தாம்பரத்திற்கு - பழரசம்-புளித்தமோர்.

தாரிசிக்கு-பழரசம்-இஞ்சி-தேன்-சர்க்கரை.

சாராயத்திற்கு-முள்ளங்கிரசத்தில் - படிகாரமிட்டுக்கொடுக்க-சீரகம்-தனியா-வாழைப்பட்டைரசங்கொடுக்க.

முயல்புட்டை - சாம்பலைக்கொடுக்க.

பாஷாணத்திற்கு—முத்துஇலைமிளகு -நீலிகியாழம் - ஆட்டுத்தோல்சாம்பலைச்சலத்தில்—கொடுக்க.

இருவங்கத்திற்கு கருப்பு பூலாரசம் கோழிருப் புளியாரை.

சூதம்சேர்ந்த அவுடதம் சாப்பிட்டுக்கெடுதியானல் சங்கனிலை பாகலிலை வெற்றிலை குரிஞ்சானிலை பிரண்டையிவைகள் கியாழம் (௬) வேளைகொடுக்க, அல்லது ஆரைக்கீரையையரைத்து கத்தரிக்காய்க்குள்வைத்து வெதுப்பி உ-நாள்கொடுக்க தீரில் சூதம்மிறங்கும்.

தாமரையிலைமீது கத்திரியிலைகளைப் பரப்பி அதின்மீது புளியாரை யிலைபரப்பிக் கணுக்களில் கட்டி மறுநாளவிழ்த்துப்பார்க்க சூதமிருக்கும்.

பூரம் வெள்ளைசாட்டரணை ரசம் துளசி முத்தெண்ணெய் பாகலிலை கொடுக்க.

வீரம் சிறுபசளை எருமைவெண்ணெய் நெய்சிட்டி தென்னங்கள் விளக்கெண்ணெய் நீலி நெருஞ்சிரசம் முத்தெண்ணெய் கொடுக்க அதிமதுரத்தூள் ப-க, முலைப்பாலில் கொடுக்க.

பேய்ப்பீர்க்குக்கு கோரைக்கிழங்கு.

வெற்றிலைநல்லெண்ணெய்க்கு தேங்காய்ப்பால்.

செங்கொட்டைக்கு பூவரசு பட்டை பூக்கியாழம் அல்லது பழம்புளிகரைத்து உள்ளுக்குக்கொடுத்து தானிக்காயும் புளியிலை யுமரைத்துப்பூச, சாரைப்பருப்பும் எள்ளும் பசும்பாலில் கொடுக்க.

பாஷாணம் தின்றவர்களுக்கு எருமைவெண்ணெயில் மிளகையரைத்துக் கொடுக்க, எருமைத்தயிரில்சந்தனத்தையரைத்துப் பூசமிளகு சிறுகீரை நீலிதுளசி பாகலிலை கொடிப்பைகோவை பசளை ஏரண்டஇலை எலுமிச்சம்இலை இவைகள் கொடுக்க, அவுரிவேர் மிளகு பிரமியிலை கியாழம்கொடுக்க.

சகல வஸ்துக்களினால்வந்த விறுதணிய அவுரிவேர்சாட்டரணை வேர் மிளகு அறுகன்புல்வேர்கியாழம் கொடுக்க.

இரத. சம்பந்த செந்தூரங்கள் விறு தணிய சுரைகுடுக்கைக் கரியைப் புளித்தமோரில் (௩) நாள் கொடுக்க.

அவுடதங்கள் புசித்து அது தேகத்திற்குப் பொருந்தாமல் கடுப்புபேதி உதிரபேதிநேரிட்டால் முருங்கையீர்க்கு ப. (௨) ஆவாரம்வேர்பட்டை ப. (௧) சருள்வி ப. (௰) கியாழம்செய்து (௫) நாள் கொடுக்க, அறுகன்வேர் ப. (௧) மிளகு (௫௰) கியாழம் வடித்து அதில் மாதுளம்பூ மதுரம்குகைநீறு பனங்கற்கண்டு பசுநெய்யிட்டு ௩-நாள்கொடுக்க.

இரத வேக்காட்டிற்கு கருவேலம்பட்டை வெள்வேலம்பட்டை துரிசிவேர் எருக்கன்வேர் கியாழம்வைத்துக் கொப்புளிக்க, படிகாரசலம் கொப்புளிக்க, கத்திரகாம்பு சலத்தைக்கொப்புளிக்கவும், அதற்குப், புகை கருவேலன் பிசின்முருங்கைவேர் எருக்கன்வேர் அழிஞ்சுவேர் சிவனார்வேம்பு சயம் தூளாக்கி நெருப்பில் தூவிப் புகைபிடிக்க.

இரசம்சாப்பிட்டு முடக்குகண்டால் அகத்தி மிதிபாகல் கியாழம் கொடுக்கவும்.

பாஷாண கெந்தகமுறிவு அவுரிவேர் மிளகுதாமரைக்கிழங்கு கத்திரிவேர் கியாழம் கொடுக்கவும், பன்னீர் ப-௫, கற்பூரம் மாசா-௨, இட்டுக் கலந்துகொடுக்க முறியும்.

ரசமுறிவிற்கு சூரணம் திரிகடுகு திரிபலாதி சித்திரமூலம் வாய்விளங்கம் லவுங்கம் லவுங்கபத்திரி சணப்பவிரை ஏலம் வகை ப-௯, கெந்தி ப-௩, தூள்செய்து கடிகைபிரமாணமாக சலத்தில் கொடுக்க, வெண்சங்கின்சாறு பாகல்சாறு அவுரிவேர்.



காரியசெந்தூரம் சாப்பிட்டு முடக்குகண்டாலும் தொண்டை கம்மலானாலும் இஞ்சியும் உப்பும் வாயிலிட்டு ரசம்விழுங்க.

எவ்வித நஞ்சிற்கும் முறிவு பசும்பாலும் நெய்யும் கலந்து ௪-தரம் கொடுக்க வெந்தியம் மிளகு வெண்ணெய் வெந்நீரில் கலந்துகொடுக்க, கடுகையரைத்துச் சலத்தில் கலந்து கொடுக்க வாந்தியாய் முறிவுபடும்.

விஷமுள்ளவஸ்துவைத் தின்றவர்களுக்கு அழிஞ்சிவேர்பட்டை தோலா-௧, கடுகு தோலா-௨, பூண்டுதோலா-௨, கூட்டியரைத்து ௯-மாத்திரைசெய்து முன்னதாக நெய் ப-௧, பசும்பால் ப-௪ கூட்டிக் கொடுத்து, பிறகு ஒருமாத்திரை வெந்நீரில்கொடுக்க, ஆகாரம் கோதுமைநொய் பால் சர்க்கரை கூட்டிக் கஞ்சிசெய்து கொடுக்க ௩-நாள் கோழிருப் பிறகு கொடுத்துவரவும்.

செங்கொட்டைப் புகையினால் வீக்கம்கண்டால் புழுங்கலரிசியும் கஸ்தூரிமஞ்சளுமரைத்துப் பூச எள்ளும் வெண்ணெயும் காடியிலரைத்துப் பூசவும்.

கருவங்கம் சூதசம்பந்த அவுடதத்தினால் கெடுதியானால் கோழியெலும்பைப் புடம்வைத்து ௯-வேளை கொடுக்க.

தாளகம் மனோசிலைக்கு சுண்ணாம்பு தெளிவு ஆவாரம்பூ சீரகம் காசினிவிரை கியாழம் கொடுக்க.

ரவை தின்றவர்களுக்கு பசும்பாலில் நெய்கலந்து வாந்திக்குக் கொடுத்துவரவும்.

ஊமத்தன் அபினிக்கு மாசிக்காய்கியாழம் மிளகு சீரகம் தனியா சோம்பு கியாழமிட்டுக் கொடுக்கவும்.

அலரிவேர் எள்ளெண்ணெய்க்கு கடுகுகியாழம் கொடுக்க, முடிமேல்முடி கிழங்கை வெந்நீரில்கொடுக்க.

தனிமூமத்தைக்குத் தாமரைக்கிழங்கைக் காடியிலரைத்துக் கொடுக்க, கத்திரிக்காய் சலத்தி லரைத்துகொடுக்க, பருத்திப் பால் உப்புக்கூட்டிக் கொடுக்க, அழிஞ்சிவேர் பழரசத்தில்கொடுக்க மாசிக்காய்த்தூள் அவுரிவேர் கொடுக்க.

சுண்ணாம்பிற்கு மஞ்சள்கியாழம் எருமைமோர் சீரகஞ்சொள்ளு நாவேளைவேர்.

வாவாத்திற்கு வசம்புகரியைத் தேனில்கொடுக்க, சலத்தில் சக்கரை எலுமிச்ச ரசம் கலந்துகொடுக்க, வென்னீர்சாதம் ஈசப்கோல் ஊறியசலம் மோரன்னம்.

மருதோன்றி-எள்ளெண்ணெய்க்கும்-தான்றிகாகியாழம்.
பனறுங்கிற்கு-பெருங்காயம்.
நெல்வேர்சர்க்கரைக்கு-நெல்லியிலைச்சாறு.
நெல்வேர்-நல்லெண்ணெய்க்கு-சுரையிலை-எலுமிச்சம்வேர்
பேய்பீர்க்குவேர்-விலாமிச்சுகியாழம்.
தில்லைபாலிற்கு-கோவைசாறு-விளக்கெண்ணெய்-எருமைக்
கோமியம்-மோர்.
வேர்கடலைக்கு-சீறுசற்கண்டு.
தேங்காய்க்கு-பச்சரிசி-சர்க்கரை.
நெய்-தேனுக்கு-அடுப்புகரியை சலத்தில்கொடுக்கவும்.
கோழி-வாத்துமுட்டைக்கு-முள்ளங்கிகிழங்கு-ரசம்.
வாழைப்பழத்திற்கு-புகையிலைக்கியாழம்
நல்லெண்ணெய்-சோற்றிற்கு-காடி.
— நல்லெண்ணெய்-வெற்றிலைச்சாற்றுக்கு-தேங்காய்ப்பால்.
கடலை-துவரை-மொச்சைக்கு-செம்மண்சலம்.
நெய்க்கு—பசும்பால்.
உளுந்திற்கு-கொள்ளுகாவேளைவேர்-மிளகு-சீரகக்கியாழம்.
பலாப்பழத்திற்கு-தேன்-பசுநெய்,
பாலாடைக்கு-புளித்தமோர்.
கோதுமைக்கு-நெய்-மிளகாய்.
நல்லெண்ணெய்க்கு—சிக்கிராம்பட்டை.
சகலநஞ்சிற்கும் - வெந்தியம்—அடுப்புகரி-சலம்-வெண்ணெய்
படிகாரம்-நீலிவேர்-கூட்டிக்கொடுக்கவும்.
புகையிலைக்கு அகத்திக்கீரை குறிஞ்சானிலை-சீரகக்கியாழம்.
உளுன்கிழ்ற்கு-சங்கம்பழரசம்.
நாவற்கொட்டைக்கு-கொள்ளுகியாழம்.
கற்பூரத்திற்கு-காசிக்கட்டியை-பழரசத்தில்-அரைத்துமோரில்கொடுக்க.
சிவனார்கிழங்கிற்கு-சுக்குக்கியாழம்-நாவற்கொழுந்துவெள்ளரிவித்து.
இலவன்பிசினுக்கு-சிவனார்வேம்பு.



மகிழம்பிஞ்சுக்கு-தாமரைவேர்.
கொடிகள்ளிபாலிற்கு-கோவைசாறு-ஆவாரங்கியாழம்.

கழுதைவண்டிற்கு, தாமரைவேர் பசும்பாலில், அவரையிலை சீரகம் பசும்பாலில், வெண்சங்கின்வேர் அரைக்கீரைவேர் பசும்பால், அகத்திசாறு வேலம்பட்டை பருத்தியிலை.

மிளகாய்க்கு-தனியா.

உப்பிற்கு - குப்பமேனி ரசம் - தாழைவிழுது ரசம் - சித்திரபாலாடை.

இடுமருந்துக்கு—கருஞ்செம்பையிலை — கல்யாணபூசணி - நீலிவேர்-சிவப்புமணத்தக்காளி.

இரத்தபாளத்திற்கு-பேரரத்தை-கியாழம்.

கூச பாஷாணத்திற்கும்-மிளகு-பருத்திக்காய் அவுரிவேர்.
சிறுகீரைவேர்-கியாழம்.

வீரம் ரசபற்பத்திற்கு (மஉ) வெள்ளை கருவை நல்லசலத்தில் கலந்து கொடுத்து பிறகு முள்ளங்கி கிழங்கு ரசம் கொடுக்கவும்.

பலம் உண்டாக்கும் தினுசுகள், இரும்பு அத்திரகப்பூ கொவிறு திலவேம்பு சரபட்டை கியாழம் கழற்சிக்காய் தம்பாருதான் முருங்கை வெடிதிராவகம் உப்புசலம் நிரகதிசாரயம் கெந்தகதிராவகஜலம் ஆல் கோல் சுண்ணாம்பு சலம்.

மூடக்குதீர்க்கு மருந்துகள், இரசபஸ்பம் அபினி பொட்டாஸ் அயோடன் பொட்டுப்பு மநஉப்பு ஐயோடான் பழரசம்.

மூர்ச்சையாகுமருந்துகள், அபினிலாடனம் ஊமத்தன்காய் கற்பூரம் கெஞ்சா.

இருதயத்திற்கு வலிவுதரும் தினுசுகள், இசர்கிராகதி சாராயம் வால்மிளகு தனியா மிளகு, கடுகு குளோரடின் அம்மோனியா இஞ்சி லவங்கபட்டை மருதம்பட்டை புதினா சிச்சிலிதோல் காயம் காசர்கினா ஓமம்,

பேதியாகு மருந்துகள், மஞ்சட்கிழங்குபால் பேதிகிழங்கு ஜாலப் எகன்றுட்டேர்வாளம் காக்கணபுகையிலை கியாழம் ஜகமூனியா ஜகமூனியாபால் ஜகமூனியாபவுடர் ரசபற்ப பவுடர் குரத்தி

லாவிரை திராக்ஷிஉப்பு ஆமணக்கெண்ணெய் சரக்கொன்றைப் புளி மாதுளவேர் கியாழம் கள்ளி முசாம்பரம் கடுக்காய் சத்திகெந்திசல்பட் ஆப்பட்டாஸ் குலோபாசால்ட் இந்துப்பு பேதியுப்பு.

வாந்தியாகுமருந்துகள், நஞ்சுமுரிச்சான் வாந்திவேர் மயில்துத்தம் வாந்திவேர் சாராயம் டாட்டர்மிட்டிக் பால்துத்தம் மறக்காளங்காய்.

நீர்இறங்குமருந்துகள், நரிவெங்காயம் கடுகு வாசனைபுல் பொட்ளுப்பு நைட்ரிக்இதர் கார்போனட் ஆப்பட்டாஸ் ரசபஸ்பம் திராக்ஷி உப்பு.

நுரையைநீக்குமருந்துகள், நஞ்சுமுரிச்சான்வேர் நரிவெங்காயம் மேல்படி காடிகுன்றிமணி மேல்படிவேர் கம் அமோனியா சாம்பிராணிபூ வாந்திவேர் மேல்படிசாராயம் பெரிகாரி கவிச்சர்.

வேர்வை யுண்டாகுமருந்துகள், டாட்டர்மிட்டிக் டோவர்ஸ் பவுடர் கோயாக் கஸ்தூரி வாசனைபுல் சீமைசுண்ணாம்பு பாணம் அண்டிமெவுனியல் பவுடர்.

நாக்குபூக்கிகளிறக்குமருந்துகள், சயினட்நின் பப்புளிபால் பூனைகாஞ்சொரி ரசபஸ்பம் மாதுளைவேர்தோல் பெருங்காயம்.

கட்டுமருந்துகள்-வேலம்பட்டை மாசிக்காய் காசிகட்டி சீமைசுண்ணாம்பு கெந்தக திராவகத்தண்ணீர் படிகாரம் அபினிலாடனம் மாதுளம்மொடு ஈயகற்கண்டு.

பஞ்சமூலம், செவ்வியம் பேராத்தை சித்திரமூலப் பட்டைசுக்கு கெண்டுபாரங்கி இதின்கியாழத்திலிட, சிறுபஞ்சமூலம், வழுதலைவேர் நெருஞ்சிவேர் கண்டங்கத்திரிவேர் மல்லிவேர், பெருபஞ்சமூலம் பாதிரிவேர் குமிழின்வேர் தழுதாழைவேர் வில்வைவேர் வாகைவேர், அஷ்டமூலம், விஷ்ணுகிரந்தி பேய்ப்புடலை சிந்தில் துளசி கஞ்சாங்கோரை ஆடாதோடை பற்பாடகம் முத்தக்காசு.

தசமூலம், வில்வம் பெருங்குமிழ் நெருஞ்சி முன்னை இரும்பிலி சிறுவழுதலை கண்டங்கத்திரி காலி பெருவாகை.

பஞ்சாமலகம், நெல்லி மாதுளை விளா இலந்தை எலுமிச்சை இதினால் பித்தந்தீரும்.

மலைபடுதிரவியம், மிளகு கோட்டம் அகில் தக்கோலம் குங்குமம்.

காடுபடுதிரவியம், இருல் தேன் அரக்கு நாபி மயிர்ப்பீலி.



நாடுபடுதிரவியம், செந்நெல் சிறுபயறு கரும்பு வாழை இளநீர்.

நகர்படுதிரவியம், அரசன் பித்தன் மந்தி யானை கண்ணாடி.

கடல்படுதிரவியம், உப்பு முத்து பவளம் சங்கு ஒக்கோலை,

லிங்கவலிவிந்து.

பச்சை நிலப்பனைகிழங்கு சீமைத்தண்ணீர்விட்டான் கிழங்கு ஆனைநெருஞ்சிக்காய், வகை, தோ-க, இவைகளை மைபோலரைத்துக் கால்படி பசும்பாலிலிட்டுக் காய்ச்சிச்சாப்பிட, இவ்விதமாய் ௩-நாள் புசிக்க நீற்றிருந்த இந்திரியம் கட்டுப்படும்.

மதன் கோலாகல இரசமணிகுளிகை.

கொட்டைநீக்கிய கச்சூர்காய் ப-ம், ஒவ்வொன்றிலும் உள்ளத்தன் விரைகளை நிறைத்துக் காய்களை நூலால்கட்டி பசும்பாலால் பிசைந்த கோதுமைமாவைக் காய்களுக்குக் கவசம்செய்து நிழலிலுலர்த்தி ஒருபடி பசும்பாலில் வெந்துகொண்டும்சமயம் காய்களையெடுத்து மாவுவிரைகளையும் நீக்கி கச்சூர்காயை மாத்திரமெடுத்து நிழலிலுலர்த்தி இத்துடன் வாலைரசம் கெந்தி லவுங்கம் அபினி சாபத்திரி வகை பணவிடை-௨, திப்பிலி, ப-௩, கெஞ்சா, ப-௨, குங்குமப்பூ, பச்சைகற்பூரம், இசப்கோல்விரை, பலகறை, வகை, காசெடை ௩, இவைகளைத் தூள்செய்து முருங்கைப்பூ முருங்கைபிசின் சீனி கற்கண்டு, வகை, ப-௨, யாவும் ஒன்றாகக் கூட்டி எருமைப்பாலினால் அரைத்துத் தேற்றாங்கொட்டைப் பிரமாணம் மாத்திரைசெய்து சர்க்கரை தேனில் மண்டலம்கொள்ள காரம் புளி லேசாகக்கூட்டவும், பசும்பால் விசேடமாய்ப் புசிக்கவும், தாதுவலிவும் இந்திரிய புஷ்டியும் தருவதுடன் தேகவலிவும் கொடுக்கும்.

இந்திரியபுஷ்டிக்கு.

ஒரு சித்தண்ட வெள்ளைக்கருவும் தேன் இஞ்சிரசம் பசுநெய் வெள்ளைவெங்காயரசம் ரு-ம், சமமாகக்கூட்டி, மத்தித்து சிறுலவங்கப்பட்டை தூள் வி-கி-௨, கூட்டிப்புசிக்க இவ்விதம் எ-நாள் கொள்ளும்போது ஒருபலம் எள்ளெண்ணெயில் குங்குமப்பூ, கோலா-வ, கூட்டியரைத்து லிங்கத்திற்கு லேபசெய்து வரவும்.

போககாலத்தில் நேரும் லிங்க சோர்வுக்கு.

உலர்த்தி சுட்டுசாம்பலாக்கியபூநாகம், ப-க, மனோசிலை வி-கி-௨, முர்தார்சிங்கி வி-கி-௨, வாளம் வி-கி (அரைக்கால்) இவை

களைப் பசுநெய்யாலரைத்து சீலையில் தடவி திரியாக்கிக் கொளுத்தி பிங்கானில் சுடர்தயிலமிறக்கித் துணியில்தடவி லிங்கமீது பட்டி கட்டி மறுநாள் அவிழ்த்துக் கொப்பளித்திருப்பதைக்குத்தி நீர் எடுத்து விட்டுப் பசுநெய்தடவி வரவும்.

நாபி புனுகு சவுக்காரம் படிகாரம் வெண்காரம் அதிமதுரம் அகிற்கட்டை திப்பிலி நன்னாரிவேர் காமப்பூ சமனெடை இவைகளைச் செங்கன்பழ ரசத்தாலரைத்து இரும்புடப்பியில் வைத்திருந்து தேவையானபோது லேசாக லேப்செய்யவும்.

எட்டிக்கொட்டை அமுக்கறாங்கிழங்கு வசம்பு சமனெடையாகப் பசுவெண்ணெயிலரைத்து லிங்கசம்புமீதொருவாரம்தேய்த்துவரக் கெட்டிப்படும்.

## லேபதைலம்.

தித்திப் மாதுளம்பழத்தோல் ப-௫, கால்படி சலத்தில் வேகவைத்து ௪-ப-கியாழமாக வடித்து எள்ளெண்ணெய், ப-௨, லவங்கபட்டை சிறுநாகப்பூ நாயுருவிவிரை முள்ளங்கிவிரை வெங்காயவிரை அக்கல்காரம்கோஷ்டம் வெள்ளைப்பூ அலரிவேர்பட்டை சிவப்புஅலரிவேர்பட்டை, வகை, ஒன்றுக்கு, தோ. ௭, கூட்டிக் காய்ச்சிவடித்து, ௰௫, தினம் லிங்கமீது தடவிவர சோர்வைநீக்கி வலிவைத்தரும்.

அக்கல்காரம் மருதோன்றிவிரை அபினி சமனெடையாகத் தேனிலரைத்து ௰௫, நாள் லிங்கமீது தடவிவர நீண்டு கெட்டிப்படும்.

## எடைகளின் விபரம்.

கிரைன் ௭, குன்றி ஸ்க்ருபல் ௰, குன்றி டிராம் ௩௨, குன்றி அவுன்சு, வி-தி, அ, பவுன், பலம்-௰௩, மினிம்துளி க, டிராம் வி-தி. க, பயின்டு வி-தி [illegible] காலன் பலம் ௱௨௰அ, பலத்திற்கு வி-தி-௰, மூன்றுரூபாஎடை, ப-க, பணவிடைக்குகுன்றி, ௩௯, கழஞ்சி வி-தி. கவ, ஒருதோலா ரூபாஎடை-க, ரூபாஎடைக்கு, மாசா-௰௨, ராத்தல் பலம்-௰௩, சேர்ஒன்றிற்கு, ப-அ, பக்காசேர் ஒன்றிற்கு ப-௨௰௪, மூலிகைரசம், ப-ஒன்றிற்கு, ப-௰௬, விராகனெடைக்கு பணவிடை ௬, விராகன், க ; க்கு மஞ்சாடி-௰௨, பச்சைரதிக்கு, வி-தி. விசம், முத்துசவுக்கு பணவிடை (முக்காலே அரைக்கால்,) பவழம் கழஞ்சிக்கு பணவிடை ௰, ரவைமஞ்சாடிக்கு பணவிடை (முக்காலே அரைக்கால்)



## கரப்பான்புண் [illegible] எண்ணெய் சீலை.

எள்ளெண்ணெய், ப. ௫, புங்கெண்ணெய், ப. ௩, புங்கன்பால் ப. க. இதில் தாளிசி தத்தம் வெள்ளைகுங்கிலியம் மூர்தார்சிங்கி கருங்பட்டை [illegible] வசம்பு வகை, ப. வ. தூள் செய்து சேர்த்துக் காய்ச்சி வடித்து சீலையில் தடவிப்போட்டுவர ரணங்கள் ஆறும்.

புங்கன்வேர் அத்திவேர் பாவேர் இலுப்பைவேர் மாவிலிங்கன்பட்டை அரசன்பட்டை கடம்புபட்டை குமிழன்பட்டை புன்னைபட்டை வெங்காயம், வகை ப. க. இவைகளை இடித்து, உ௰. பலம் முத்தெண்ணெயில் காய்ச்சி வடித்துத் தடவிவர ஆறாரணம் வாயுவிப்புருதி புரையோடியரணம் வெட்டுகாயம் அரையாப்பிரணமும் தீரும்.

எருமை வெண்ணெய், ப-௨௭. இதை நல்ல ஜலத்தில் (௱)தரம் கழுவி யெடுத்து அதில்சேர்ந்த நீரை சுத்தமாக நீக்கிவெண்ணெயுடன் இரசகற்பூரம், ப. (௰) கூட்டி ரேகிக்க அரைத்து தாம்பாளசிமிழில் வைத்து சகல ரணங்கள் மீதுதடவி வர ஆறும்.

## தைலம்.

செங்கன்வேர் விரை (க) பூவரசுபட்டை விரை (௨) மலைவேம்பின்பட்டை விரை (௨) வாகைவேர் விரை (௨) இவைகளைக் குழித்தயிலமிறக்கிக் காசெடையாக உள்ளுக்கும் ரணங்கள்மீதும் தடவி வர ஆறாரணங்களும் மேகரணமுமாறும்.

## புண்களிலிருந்தும் கிருமிகள் வெளியாக.

அரசமையிலையரைத்துக் கட்டுவதாலும் மூங்கில்குருத்தையரைத்துக் கட்டுவதாலும் கற்பூரத்தை எருக்கன் பாலலரைத்துத் தடவி குதிரை லத்தியைப்புகை காட்டுவதாலும் நண்டுவலை களிமண்ணைப் பூசிவைப்பதாலும் கிருமிகள் ரணத்தை விட்டு வெளியாய் விடும், பிறகு வேம்பின்பட்டை கியாழத்தில் கழுவவும்.

## புரை கண்ட ரணத்தில்விட தயிலம்.

நொச்சிவேர் அழிஞ்சிவேர் சிறுதேவோர் சமனாகக் குழித்தயிலமிறக்கி ரணத்திலுள் விட்டு வரவும்.

அடிபட்டு எலும்பு முறிந்தால் பட்டையிலையை அரைத்துப் பசும்பாலில் கலக்கி (௩) நாள் கொடுக்கவும்.

### அடிபட்டு மார்பில் ரத்தம் கட்டி யிருந்தால்.

மிளகுதூள், ப. (க) வெள்ளை சர்க்கரை, ப.(க) கலந்து இதை மூன்று வேளை கொள்ளக்கரைந்து விடும், அடிபட்ட காயத்தின் மீது ஆவாரையிலையும் சர்க்கரையுமாக அரைத்துக்கட்டி வரவும், அல்லது எள்ளெண்ணெய், ப. ய௨. இதில், க. ப. ஆதண்டையிலை யிட்டுக்காய்ச்சி வடித்துத்தடவிவருவதாலும் மேற்கண்ட எண்ணெய் ப. அ. ல், பெருமரப்பட்டைரசம், ப. அ. விட்டுக்காய்ச்சி வடித்துத் தடவி வருவதாலும் வீக்கங்கண்டிருந்தாலும் நீங்கும்.

### கடுக்காய் லேகியம்.

கடுக்காய், ப. உ௰ு, உ௫-படி சலத்தில், அ, க, ஆகக் கியாழம் வடித்து சிவதை இஞ்சி மிளகு ஓமம் திப்பிலி சுக்கு சர்க்கரைவகை. ப. வ, சூரணம்செய்து நெய், படி வ, விட்டுக்கிளறி புன்னைக்காயளவு சாப்பிடத் திரும்வியாதி, அக்கினிமந்தம் சூலை மலசலவாயு சு, மூலம்திரும்.

### நெல்லிக்காய் லேகியம்.

நெல்லிக்காய் ப-உ௰ு, முன்போலக் கியாழம வடித்துதிப்பிலி மிளகு சுக்கு ஓமம் மூலம் கிரும்பு ஏலம் குக்கில் வாய்விளங்கம் சீரகம் தனியா குகைநீறு மதுரம், வகை, ப-வ, சர்க்கரை, ப-உ௦, நெய், படி-வ், லேகியம் கிளறிப் பாக்களவு கொள்ள மேகம் அஸ்தி சுரம்காய்தல் கிராணி வாயு பொருமல் இருமல் க்ஷயம் ஈளை சிலேற்பனம் தீரும்.

### தானிக்காய் லேகியம்.

தானிக்காய், ப-உ௰ு, முன்போலக் கியாழம் வடித்து சாதிக்காய் அபினி கஞ்சா, வகை-ப-வ, சீனி, ப-உ௦, நெய்விட்டுக்கிளறி லேகியம் புசிக்க வயிற்றுப்பொருமல் வாயு கடுப்பு இரத்தம் அதிசாரம் கிறுணி வாயு தீரும்.

### சுக்கு லேகியம்.

சுக்கு, ப-உ௰ு, முன்போலக் கியாழம் பனவெல்லம் ப-உ௦, ஓமம் படி-வ, கறிவேப்பிலை, ப-௦, நெய் படி (அரைக்கால்) கிளறிப் புன்னைக்காயளவு புசிக்க கிராணி மூலம் வாயு அதிசாரம் கடுப்பு இரத்தம் வீக்கம் பாரிசவாயு பொருமல் மந்தம் புளித்தேப்பம் தீரும்.



### மிளகு லேகியம்.

மிளகு, ப-உ௰ு, முன்மாதிரியாகக் கியாழம் கற்கண்டு ப-உ௦, அக்கிறகாரம் சீரகம் கிரும்பு ஏலம் கோஷ்டம் மதுரம் சிறுதேக்கு வாய்விளங்கம்நருக்குமூலம் வகை, ப-வ, நெய்நாழி-வ, தேன்நாழி (அரைக்கால்) பதமாய் லேக்கியம்செய்து கொள்ள, கூசு - சிலேற்பனம் கபங்கள் நீர்தோஷம் சிலவிஷம் ௯-சுரம் வாதம் வாயு திரும்

### திப்பிலி லேகியம்.

திப்பிலி, ப-உ௰ு, முன்மாதிரியாகக்கியாழம்கற்கண்டு, ப-௨௦, சுக்கு கடுக்காய் அக்கிராகாரம் அரத்தை ஓமம் சீரகம் தனியா வெப்பாலரிசி செண்பகப்பூ கோஷ்டம வகை ப-க, தேனவுரி-வ, நெய் உழக்கு - வ, பாகமாய்செய்துத் தானிக்காயளவு கொள்ள சிலேற்பனம் வாதம் இருமல் வாயுகுன்மம் உப்புசம் உள்மாந்தை ஈளை காசம் திரும்.

### உதிரக் கோதிப்பிற்கு குழைதிராவகம்.

கொடைக்கரந்தை, ப-உ, சாத்தூறு ப-உ, பறங்கிசக்கை, ப-க, சிறுநெருஞ்சிகா ப-க, காட்டுலிகடுக்காய் தானிக்காய் நெல்லிக்காய் சித்தாமிபூ குலாப்புவகை, ப-க, இவைகளை நீறுக்கி, ௬-படி, சலத்தில் ஊறவைத்துப் பசும்பால், ப-உச,சுரைக்காய்சதை, ப-ய௨, கல்யாண பூசுணிக்காய் சதை, ப-௬, இடித்துப்போட்டு திராவகமிறக்கி வேளைக்கு ஒருபலம் வீதமாக உய-நாள் கொடுக்க உதிரக்கொதிப்பு சிரங்கு உதிரச்சுண்டலும் தீரும்.

### உதிரக்கோதிப்பிற்குக் கியாழம்.

குலாப்பு சோம்பு கடுக்காய்த்தோல் சூரத்துகடுக்காய்த்தோல் வகை, தோலா-௩, அதிமதுரம் மணத்தக்காளி வற்றல் தாமரைப்பூ வகை, தோ-௨, சாத்தூரா கல்லுருவி கற்பூஸ்விதை வெள்ளரிக்காய்விதை பிஞ்பாயல் அப்தீம் உஸ்தகதூஸ் அமுவணாஇலை வகை, மாசா-ச, நருவளிகா-ம௧, உன்னாப்பூ கொட்டைக்கரந்தைபூ - ம௬, இவைகளைக் கியாழம்வடித்து இதில் சர்க்கரை,தோலா-௩, இட்டுப்புசிக்கவும், திப்பியைச் சலம்விட்டு மாலை காய்ச்சிப் பிசைந்து வடித்து சர்க்கரையிட்டுப் புசிக்கவும், ௫-நாள் புசிக்க.

### மதன காமேஸ்வர லேகியம்.

சுக்கு பெருஞ்சீரகம் அதிமதுரம் கிராம்பு மிளகு வால்மிளகு இருதிப்பிலி சிறுநாகப்பூ திரிபலாதி ஏலம் சாதிக்கா சாபத்ரி லவங்

கப்பட்டை லவங்கப்பத்ரி கோஷ்டம் கொத்தமல்லி தாளிசம் கருஞ்சீரகம் அசுவகெந்தி செண்பகப்பூ கஸ்தூரி மஞ்சள் தக்கோலம் கலகலா நீர்முள்ளிவித்து உளுந்து முள்ளிலவம்பிசின் வேலம்பிசின் நிலப்பனைகிழங்கு திராக்ஷி அபினி வறுக்கும் இவைகளை பொன்வறலாக வறுத்துத் தூளாக்கி வஸ்திரகாயஞ்செய்யவும், வகை ப-க, இவைகளுக்குச்சரியெடைகெஞ்சாவைசலத்தில் எ-தரம் கழுவியெடுத்துச் சலம் படி-ச, பசுநெய், படி-க, இதிலிட்டு நன்றாகக் காய்ச்சி கிட்டி கட்டி நெய்யை அயச்சட்டியில் பிழிந்துகொண்டு பிநந்த நெய்யைபக்கையால்வழித்துக்கொள்ளவும். ஆவின்பால்நாழியில் சர்க்கரை, ப-சுய, இட்டுப் பாகுபதத்தில் சூரணங்கள் இட்டு நெய்யைவிட்டு வெந்தசமயம், தேன் பலம் ௰, விட்டுப் பதமாயிறக்கிப் பத்திரப்படுத்தி இரவில் போசனமும் பாலும்புசித்து களஞ்சி முதல் மூன்று களஞ்சிவரையில் கொண்டுவர விரியமதிகரித்துசரீரம்சிவந்தும் நேத்திரப்பிரகாசம் தந்தும் நரைதிரைமாற்றிவைக்கும், யோக அப்பியாசிகளுக்கு வாசியோடசன் மருவிநின்று முப்பண்டலமும் தாண்டி ஆனந்தகேசரத்தி லறிவுண்டாய் கேசரியைக்காட்டி வைக்கும் உலகோர்க்கு சளையிருமல் அக்கினிமந்தம் சூலை பழய சுரம் வீக்கம் சயங்கள் ௰உ-ம், தீருமென ஆன்றோர் கூறினர்.

சகல சுரத்திற்கும் கோயினமாத்திரை.

கொயின-ச-திப்பிலி—ச—மிளகு-ச-சித்தரத்தை-ச—அக்கரகாரம். உ. சுத்திசெய்த ரத்தபாளம். உ. இவைகள் கிராகனெடைகள். தனித்தனிதூள்செய்து கூட்டி யிஞ்சிரசத்திலரைத்து வேலன் கோந்து தெளிவுசலத்தால் பிசைந்து கடலைபிரமாணம் தேகநிடத்தின்படி-உ, ௩, ச, ரு. சீதள சுரத்திற்குத் தேனிலும் பித்தசுரத்திற்கு இஞ்சிரசத்திலுமிட.

பித்தக்காய்ச்சல் அதிக சூட்டிற்குக்கியாழம், தாமரைப்பூ. கூ மதுரம். ச. சோம்பு. கூ. காவுஜபான். ச-கிந்துமி. ச. மணத்தக்காளிவற்றல். ச. கல்லுருவி. ச குலாப்பு. கூ. இவைகள் மாசாகள் திராக்ஷி ௰ ஆலுபுகாராபழம். ௰க. இவைகளை நல்லசலத்தில். ச. ஒன்றாகவடித்து சர்க்கரை தோ. க, காய்ச்சி, தோ. வ. இட்டுக்கொடுத்துவரவும்.

நெல்லிவற்றல். கூ குலாப்பு. கூ. கடுக்காபூ. அ. பனப்ஷா. கூ சீரகம். ச. சோம்பு. ச. மதுரம். ச. காவுஜபான். ச. மாசாளடைகள் மூன்மாதிரி கியாழம். ரு. நாள் கொடுத்து மறுநாள் இத்தக்கி



யாழத்தில் சிர்க்கிஸ்த். ப. க. பாகம் நெய்தோலா இட்டுக் கொடுக்கப்பேதியாகும். சாயபானைக்கு பிசப்கோல் விதை, தோ. ௧. பேதனுமாசா. ச. சலத்திலூறி எடுத்துக் கற்கண்டு, தோ-க. கூட்டிக் கொடுக்கவும்.

பித்த சுரத்திற்கு, குலாப். தோ. க. சுக்கு. தோ. ௧. சோம்பு. தோ. ௧ தூரிஞ்சிக்காய்தோல். தோ. ௧ நெல்லிக்காய் தோ-௧. வெந்தியம். மாசா. உ. பரங்கிசக்கை. தோ. வ. கியாழம் வடித்து இவ்விதம் ௩. நாள்.

சூடான சுரத்திற்கு, சோம்பு. கூ. குலாப்பு. கூ. காவுஜபான்-ச. மணத்தக்காளி. ச. மதுரம். ச. காசினிவிரை. ச. கீரைகாய்விரை-ச. மாசாக்கள் ஆலுபுகாரா. ௰. கியாழம் வடித்துக் கொடுத்து மீது குல்கந்து. தோ. க. கொடுக்க நாள் ரு ஆறுவதுநாள் இந்தக்கியாழம் வடித்துக் கொண்ணைபிசின், தோ. உ. சிர்கிஸ்த். தோ. உ. இட்டுக்கொடுக்கவும்.

குளிர்பழயசுரத்திற்கு, நெருஞ்சிக்கா. ச. செம்மரத்தூள். ச. தனியா. ச. கிச்சிலிக்கிழங்கு. ச. சுக்கு. ச. சீந்திற்கொடி. ச. இதை அ. ஒன்றாக இறக்கி வெள்ளைசர்க்கரை. தோ. க. இட்டு ரு-நாள் கொடுக்க மாலை அந்தக் கியாழ மட்டியை சலம்விட்டுக் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டிக் கொடுக்கவும்.

வாதசுரத்திற்கு, மிளகு-அ. சுக்கு. அ. வாய்விளங்கம். அ. மதுரம். ச. சோம்பு கூ. சீந்தில்கொடி. ௰. மாசாளடைகள் கியாழம்வடித்து. ௩. நாள் கொடுக்கவும், புளி, நெய் நீக்கவும்.

பொதுகியாழம், அதிமதுரம். ரு. கர்புஸ்வேர். ரு. சோம்பு-ரு. சிக்காய். ௩. புதினா. உ. சூமஸ்தகி. உ. தனியா. ச. குலாப்பு. ச. மாசாளடைகள் கியாழம்வடித்துத் தூரிஞ்சிபிசின் தோ. ச. கூட்டி. ௩. வேளை புசிக்கவும்.

சீதளத்தால் வரும்முறைகாய்ச்சலுக்கு, சுரம்வரும்முன் உத்தாமணியிலைரசம் துட்டெடை உள்ளுக்குக்கொடுக்க நிற்கும்.

பித்தசுரத்திற்கு, கிழாநெல்லிரசம் துட்டெடைகொடுக்க நீங்கும்.

முறைக்காய்ச்சலுக்கு, வருமுன் காட்டாமணக்குநனிகொழுந்து. ரு. மிளகு. ரு, கூட்டி மென்று உட்கொள்ளமூன்றுநாள் நாம

காருகள் விரியிலையும் மிளகும் கொடுக்க, ஒருநாழிமுன் தும்பைரசம் ப. ௧ பழரசம் ப. ௨ கூட்டிக்குடிக்கலாம்.

குழந்தைகள் கருஞ்சிவாப்பு செவப்பு மாந்தம் அள்ளுஇவைகளுக்கு.

முத்தெண்ணெய், ப. ௰௨, சொரையிலைரசம், ப. ௰௨. முக்கத்தாரி செங்கத்தாரி பூவரசு விளான் ஒகளன் கல்யாணமுருக்கன் இவைகள்பட்டை வகை, ப. ௪, பெருங்கிழங்கு கோழியவரை கன்னியாகுமரி இவைகள் வேர்வகை ப.(அரைக்கால்) வெற்றிலைக்காம்பு கள்ளிக்கொழுந்து மேனிக்கொழுந்து தும்பையிர்க்குஉத்தாமணியிர்க்கு வகை, ப. விசம், கருஞ்சீரகம், ப. ௨, பூண்டு, ப. ௨, பனைவெல்லம், ப. ௧, இவைகளைக்காய்ச்சிவடித்து நாக்கில்தடவிவர அல்லது உச்சிக்கரண்டி விதம், ௩, நாள் கொடுக்க ஸ்திரீகள் கெர்ப்பகாலங்களிலும் உள்ளுக்குக்கொடுக்க, பிறகு, குழந்தைகளுக்கு மேல்கண்ட வியாதிகள் வாராது.

இளம்பிள்ளை வாதத்திற்கு முத்தெண்ணெய் ப. ௪, முடக்கொத்தான் கழற்சியிலை முளகருணையிலை வகை பிடி, ௧, காய்ச்சிவடித்து உச்சிக்கரண்டி யெண்ணெயில் உப்பில் எரித்த பூரபதங்கம் குன்றியெடை சேர்த்துக்கொடுத்துவர நீங்கும்.

குழந்தைகளுக்கு சீதளம் இருமல் இவைகளுக்கு உத்தாமணியில் புடமிட்ட சிங்கிபஸ்பம் ப. ௧, நற்பவழபற்பம் ப. ௪, இரண்டையும் கோஜலமைரவை பிசைந்தெடுத்தசலத்தாலரைத்து பயறுபிரமாணம் தக்க அனுபானங்களிலிட.

குழந்தைகளுக்கு மாந்தம் சேராமலிருக்க, காரப்பொடி திரிகடுகு தாளிசம் லவுங்கம் ஓமம் ஏலம் குருசாணி இருசீரகம் பரங்கிசக்கை சித்தரத்தை பேரரத்தை மதுரம் வால்மிளகு கார்போகரிசி வாய்விளங்கம் வகை, வி-டி-௧, இவைகளை யிளவறுப்பாகவறுத்து சூரணம்செய்து சிட்டிகைதூள் வெந்நீரிலாகிலும் முலைப்பாலிலாகிலும் கொடுத்துவர மாந்தமணுகாதிருக்கும்.

செனாக்குட்டிக்கு குளுமையெண்ணெய், சிற்றுமணக்குஎண்ணெய் படி-௧, வல்லாரை ரசம் படி-௨, வெந்தியம், ப-௨, ஆவின்பாலிலரைத்திட்டுக் காய்ச்சிவடித்துச் சர்க்கரை கொஞ்சமிட்டுக் கொடுத்துவரவும், தேகம் தணிந்து குளிர்ச்சியாகும்.

சிறியவர் பெரியவர்களுக்கு அச்சரம் மேகவெட்டை கருங்கிரந்தி கணத்திற்கு எண்ணெய், மணத்தக்காளி தூளசிதுத்திபிரமி



வில்வம் வல்லாரை கய்யான் பொடுதலை நுணுபுங்கு சங்கு இவைகள் இலைரசம் வகை, படி-௪, முத்தெண்ணெய் படி-௧, தானிக்காய் சுக்கு கடுக்காய் திப்பிலி அரத்தை ஓமம் வசம்பு கஸ்தூரிமஞ்சள் வகை, ப-௨, சாதிக்காய் ப-(அரைக்கால்) தூள்செய்திட்டுப்பதமாய்க்காய்ச்சி வடித்து குழந்தைகளுக்குக் கரண்டி விதமும் பெரியவர்களுக்கு-௪, பலம், விதமுமாக ௭-நாள் கொடுக்க, இச்சாபத்தியம்.

சிறுவர்களுக்கு இளைத்ததேகம் பெருக்க.

ஆவின் நெய், ப-௰௨, சிற்றுமணக்கெண்ணெய், ப-௩௭, கழற்சியிலைரசம் கரிச்சாலைரசம் நொச்சி வெள்ளைசாட்டரணை வெள்ளைபில்லாஞ்சி யிலைகள் ரசம் வகை, ப-௬, குமரிசலம், ப-௭, வெங்காயரசம், ப-௨௰, பழரசம் ப-௧, வெந்தியம், ப ௩, கடுகுரோகணி ப-௩, அத்திபட்டை, ப-௪, லவுங்கபட்டை, வி-டி-௧, இரும்பு, வி-டி-௪, கூட்டிக்காய்ச்சி வடிக்கும்போது மாசிதாளிபதும் - ௨, தேற்றாங்கொட்டைத்தூள், வி-டி-௧, இட்டு வடித்து உச்சிக்கரண்டிவிதம் காலையில் புசித்துக் கழற்சிக்காய் பிரமாணம் கசண்டுமாலை புசித்துவர.

சித்திரமூல நெய்.

ஆவின் நெய், ப-௮, கூசெள்ளெண்ணெய், ப-௮, இதில்இரண்டு பலம் சித்திரமூலவேர்ப் பட்டையை அரைத்திட்டுப் பதமாகப் பொன்னிறமாகக்காய்ச்சி வடித்து அரைபலம் விதமாக ௰௨-நாள் கொள்ள பத்தியமில்லை, உள்கொதிப்பு வெப்பம் சூடு இவைகள் நீங்கும்.

சீமை கல்நார்பற்பம்.

ஒருபலத்தை நன்றாகத் தூளாக்கிக் காட்டாமணக்குப் பாலில் அரைத்துப் பில்லையை புலர்த்தி ஓட்டில்வைத்துச் சீலைசெய்து அரைசிசபுடமாகப்புடமிரண்டுபோடப் பற்பமாகும், வெண்ணெயில்பணவிடையாக ௫-நாள் கொடுக்கச்சூடுதணியும், தந்தம்விளக்கிவர இறுகிபலிவுபடும்.

பித்தங்களுக்குக்கியாழம்.

குலாப்பு சோம்புவகை தோ-௧, மணத்தக்காளிவற்றல் பனப்பழ வகை, தோ-௨, மதுரம் காவு ஜபான் கல்லுருவி சாத்தாரு துரிஞ்சிக்காய்த்தோல் சூரத்துக்கடுக்காய், வகை-வி-டி-௧, நருவளிக்காய், ௯-நறுக்கி ௨-படி. சலத்திலிட்டு அரைக்கால் படியாக

கியாழம் வடித்துச் சர்க்கரைதோ, ௨. இட்டுக்குடித்து அதன் மீது குல்குந்து. ப. ௨. சாப்பிடவும்.

பாலில் வெவித்த நெல்லிவற்றல், தோ. ௨. சிரகம்வி- ரு. க, சோம்பு வி-ரு-க, குலாப்பு. தோ. ௩, கடுக்காய்த்தோல், தோ. ௬. பனப்வுா தோ-௨, அதிமதுரம், தோ-௨, இவைகளைக் கியாழம்வடித்துபாதாம் நெய், தோ-௨, இட்டுப்புசித்து மீது குல்குந்து ப-௪, புசிக்க, மாலை யில் முன்தினசில் சலம்விட்டுக் கொதிப்பித்து வடித்து இதில் இசப்கோல் விரை தோ-௨, ஊறவைத்து கற்கண்டு, தோ-௪, இட்டுக் கொடுக்கவும்.

குலாப்பு சோம்பு வகை, தோ-கவ, மணத்தக்காளி வற்றல் தோ-௨, சுக்கு பிஞ்சிகடுக்காய் மஞ்சள் கடுக்காய் அதிமதுரம் இராகுதி கிராவரை வகை, வி-ரு-க, ஆலுபுகாரு-மக, உன்னுப்பு, ஏ-கியாழம் வடித்து சரக்கொன்றை புளி-ப-௪, இட்டுக் கரைத் துத் திப்பிலை நீக்கிப் பசுநெய், தோ-௨, சர்க்கரை, தோ-௨, இட்டுப்புசிக்கவும், மீது குல்கந்து, தோ-௨, சாப்பிடவும், வெந்நீரில் காலம்ப, குப்பாதம் அல்லது கடலை ரசம் ஒன்றைவிட்டு மறுநாள் கொடுக்க, மலப்பையிலுள்ள கெட்டசத்துக்களை நீக்கும்.

சுரக்கியாழம் முத்தக்காசு வழுதலைவேர் சீந்தில் பற்பாடகம் சுக்கு பேய்ப்புடலை வகை, களஞ்சி - ௩, தூள்செய்து, ௩ - வேளை கியாழமிட்டுத் தேன்விட்டுக் கொடுக்கவும்.

முத்தக்காசு விலாமிச்ச திரிகடுகு தனியா; செங்கொட்டிவேர் பற்பாடகம் பேய்ப்புடலை வகை, ப-௨, கியாழத்தில் திப்பிலிதூளும் தேனுமிட்டுக் கொடுக்கவும்.

ஆடாதோடைவேர் முத்தக்காசு தூதுவளை கண்டங்கத்திரி செவ்வியம் இராகுதி திரிகடுகு பேராமுட்டி பற்பாடகம் தனியா பேய்ப்புடலை திப்பிலிமூலம், வகை. ப. ௨; கியாழம்வடித்துத் தே னிட்டுக் கொடுக்க.

பலவிதசுரத்திற்கு, பேய்ப்புடலை ஆடாதோடை செருள்ளிம் வேர் சிவனார்வேம்பு சுக்கு, வகை. ப. ௨. கியாழம்வடித்துத் தே னிட்டுக்கொடுக்க.

திப்பிலி சீந்தில்கொடி, வகை. ப. ௨. கியாழம்வடித்து தே னிட்டுக்கொடுக்கவும்.

வாதசிலேத்மசுரம், மலைதாங்கி தூதுவளை கண்டங்கத்திரி நன்னாரி இருகாஞ்சொரி ஆடாதோடை வழுதலைவேர் திப்பிலி



சுக்கு பேய்ப்புடலை, வகை. ப. ௨, கியாழம்வடித்து இதில் லவங்கப் பட்டை மதூரம் மிளகு சித்தரத்தை திப்பிலி யிவைகளைத் தூள் செய்து இரண்டு சிட்டிகையிட்டுக் கொடுத்துவரவும்.

வாதசுரத்திற்கு சித்தாமுட்டிவேர் சுக்கு மிளகு தனியா பே ராமுட்டிவேர். வகை. களஞ்சி (௩) கியாழம்வடித்துத் தேன்விட் டுக்கொடுக்க.

குறுந்தொட்டி நொச்சி முத்தக்காசு கூத்தன்குதம்பை கண் டங்காரி பற்பாடகம் நிலவேம்பு வாதமடக்கி நெஞ்சிவேர் தோடை நெல்லிவேர்க்கு வேப்பிர்க்கு மாவிர்க்கு நாரத்தையிர்க்கு, வகை. களஞ்சி (௩) கியாழம்வடித்துத் தேனும் திப்பிலித் தூளுமிட்டுக் கொடுக்க.

## பிரம்மசிருஷ்டி.

பிரம்மாவில் ஆத்மா, ஆத்மாவிலாகாசம், ஆகாசத்தில்வாயு, வாயுவில் தேயு, தேயுவில் அப்பு, அப்புவில்பிரிதிவு, பிரிதிவில்ஔசை, ஔசையிலன்னம், அன்னத்தில்ரசம், ரசத்தில் உதிரம், உதிரத்தில்மா மிசம், மாமிசத்தில்மேதை, மேதையில் அத்தி, அத்தியில்மச்சை, மச்சையில்சுக்கிலம், சுக்கிலத்தில் சுரோணிதம், சுக்கிலசுரோணி தத்தால் தேகமாச்சு. இதை வினையளவாகப் பிராணவாயுவளர்க்கும்.

உண்ணும் ஆகாரங்கள், உள்சென்ற (௯௰) நாழிகையில் மூன் றுகூறாகும். மலம்.௧, சலம்.௧, உதிரம்.௧. இவ்வகையானது.௰௧, நாழி கையில் மலசலம்கழிந்துவிடும். அந்தஉதிரம், ௭௨, நாழிகையில்சரீரத் தில்கலந்து நிற்கும் ஏழிலொன் றொழிய உதிரமாம் இதுமலமும் தோலும் ரோமமுமாம் உதிரம்முற்றி ௰௨ நாழிகையில் ஆறிலொன் றொழிய சதையாம். மலமும் சேத்துமமுமாம். சதைமுதிர்ந்து (௯௰) நாழிகையில் அஞ்சிலொன்றொழிய மேதையாம். இதின் மலம்பித்தமாம் மேதை முற்றி அறுபது நாழிகையில் நாலி லொன்றொழிய அத்தியாம். இதின்மலம் மலமாம். அத்தி முதிர்ந்து நாற்பது நாழிகையில் மூன்றிலொன் றொழிய தசையாம், இதின்மலம் குறும்பியும் பீளையுமாம். தசைமுதிர்ந்து ௨௱௯௰-நாழி கையில் இரண்டி லொன் றொழிய சுக்கிலமா யிதின் மலம் தோ லும் நரம்புமாம். சுக்கில முதிர்ந்து ௪௱௰ நாழிகையிலொன்றி லொன்றொழிய பிலமாம். இதுமுன்னோர்கள் நூலின்கருத்து.

மனமானது பிரிதிவியில் நின்று ஒன்றை நினைப்பிக்கும், புத்தி அப்புவில் நின்று அதனை விசாரிக்கும், ஆங்காரம் தேயுவில் நின்று

கொண் டெழும்பும், சித்த மாவது வாயுவில்நின்று செய்து முடிக்கும், அறிவு ஆகாசத்தில் நின்றுகண்டு மகிழ்ந்துயாதும் பற்றற்றதாயும் சுயம் பிரகாசமாய் தபோதனர்களிடமன்பாய் விளங்கும்.

தொண்டைக் கம்மலுக்கு. வெந்நீரில் சர்க்கரை கலந்து சாப்பிட்டாலும், வெந்நீர். ப. ஙு. தேன். வி - கி, அ, காடி வி - கி, ச, கலந்து கொப்புளிப்பதாலும், கடுகு கியாழத்தில் தேன்விட்டு கொப்புளிப்பதாலும், கரும்பை தின்பதாலும், ஜடமச்சியும் சர்க்கரையுமரைத்துத் தொண்டையில் தடவி வைப்பதாலும் நீங்கும்.

கம்மல் கொண்டசரீரம் நன்றாக, தேன், ப. ஙு. கரிச்சாலை ரசம் ப-ச, எலுமிச்சம்பழரசம், ப-க, இஞ்சிரசம். ப-உ௦, ஒன்றாகக் கூட்டி ரவியில்வைத்து சுண்டியபிறகு நாள்ஒன்றிற்கு. ப. வ, கொண்டுவரவும், காரமான வஸ்துக்கள் சேர்க்கலாகாது.

ஸ்தூலதேகம் சிறுக்க, காலையாக தேன். தோ. க, நல்லசலத்திலிட்டு, சய, நாள் குடிக்கவும் கடலைகாடி. தோ. க௦, யில் கொம்பாக்குத்தூள். ஙு. குன்றிஎடை யிட்டுக்காலையாக உய, நாள், கொண்டாலும்ஒருபலம்கெட்டிபிளகைக்கியாழம் வடித்துக்கொண்டுவருவதாலும் சிறுத்துவிடும்.

குங்குமப்பூமெழுகு - ருமஸ்தகி. ஙு, சாதிக்கா. உ, கருஞ்சீரகம். உ, கோரோசனை. ௦, குங்குமப்பூ. ௦, அக்கல்காரம். க, பளிங்குசாம்பராணி. க, பழயநல்லவெல்லம். க, சிறுநாகப்பூ க, இவைகள் விருகனெடைகள் கூட்டி தேனால் மெழுகுபதமாகவரைத்து வேளைக்கு. வி - கி, ௦, ஐ, கொள்ள ஸ்திரீபோக சுகத்தைத்தரும்.

ஸ்திரீகள் பல்தேய்த்துவர, பொடி-அன்னபேதி ங, தண்டவாளப்பொடி, அ, படிகாரம் ங, மாசிக்காய் ங, துரிசி. ங, வெள்ளைக்காசிகட்டி. ங, குருசானிவசம்பு. ங, கொட்டைப்பாக்குச்சாரமேமல், ங, வேம்புவேர்பட்டை. ச, அமுக்கறாவேர். ங, இவைகள் விருகனெடைகள் தூள்செய்து பத்திரப்படுத்தி இரவில் போசனம் செய்வதற்குமுன் இதில் ஒருசிட்டிகை எடுத்துப்பல்தேய்த்து வெந்நீரால் நன்றாகக்கொப்புளித்து விட்டுபோஜனம் செய்துவருவதினால் ரகசியஸ்தானம் சிறுகலாகும்

ஸ்திரீகள் பிரசவித்தபிறகு ரகசியஸ்தானம் சுத்தம்செய்ய ஆலம்பட்டை மாம்பட்டை பூவரசுபட்டை அரசன்பட்டை நாகப்



பட்டை வேம்புபட்டை மருதன்பட்டை நுணாக்காய்காசிகட்டிபடிகாரம் கடுக்காய்தாளிக்காய் நெல்லிப்பட்டை சிறுசிறைவேர் பனைவேர் இவைகளை சிதானமாக எடுத்துக் கியாழம்வைத்து வடித்து இதினால் சுத்தப்படுத்தி வரவும்.

இந்திரியவலிவித்து மாணிலேகியம்.

வெண்மேஷத்தின்மாணி, ஙய, இதைப்பொடியாக அரிந்து ரவியில் உலர்த்தித் தூள்செய்து வஸ்திரகாயம் செய்யவும், அமுக்கறாங்கிழங்கு. ப. க, கஸ்கஸா திரிகடுகு ஓமம் சாதிக்காய் சாபத்ரி இரும்பு அதிமதூரம் கோஷ்டம் அக்கராகாரம் லவங்கபட்டை லவங்கபத்ரி நீர்முள்ளிவிரை பூனைக்காலிவிரை முருங்கைவிரை நத்தசூரிவிரை ஆலன்வித்து அரசன் வித்து சாரைப்பருப்பு பாதாம்பருப்பு. வகை. ப. வ, இளவறுப்பாக சூரணம் கெஞ்சா. ப. உ, சுத்தித்து வறுத்து சூரணம் பசும்பால், படி. ஙு, இதில் சர்க்கரை, ப. உய, இட்டுப்பாகுபதத்தில் சூரணங்களையிட்டு நெய். ப. உய, தேன் ப. ய, இட்டுப்பாகமாய்க் கிண்டி யிறக்கிக் கொட்டைப்பாக்கு பிரமாணம் புசித்துவரவும்.

மேகநீரால் காணும் கால்பிடிப்புகளுக்கு.

கற்பூரசிலாசத்து பூரம் பாலைரசம்பிளகு லவங்கம் கடுக்காய்த்தோல் நெல்லிவற்றல் வெள்ளைகுன்றிபருப்பு கத்தரிகாம்பு குலைபனப்ஷா, வகை. மாசா ச, தனித்தனி தூள்செய்யவும். திராக்ஷி தோ. க, முத்துக்கொட்டையின் பருப்பு. தோ. க, பழயநல்லவெல்லம். ப. க, இவைகளை நன்றாக உரலில் சேர்க்க இடித்து முடிவில் ரோசாப்பூ எண்ணெய், தோ. வ, விட்டுப்பிசைந்து கொண்டு சுண்டகாப்பிரமாணமாக ஆவின்பால் வட்டில் வைத்துக்காலைமாலையுமாக. எ,நாள்கொடுக்கபகலில்பிளகுநீர்சமுசாதமும், இரவில்கோதுமை ரொட்டியும்ஆட்டுக்கறியுமாகக் கொடுத்துவரப்பிடிப்புவியாதிகள் நீங்கும்.

வாயுவுகளுக்கு தாம்பிரபஸ்பம்.

தாம்பரம். ப. வ, வெள்வங்கம். ப. (அரைக்கால்) தொர்த்தித்து இத்துடன் சுத்திசெய்த சித்தண்டேவாடு, ப, (அரைக்கால்) கூட்டி அரைத்து முசையிலிட்டு முசையருக நன்றாக ஊதி எடுத்து ஆறியபிறகு அரிசிஎடை திரிகடுகு லேகியத்தில் கொடுத்து வரவும்.

## ஸ்ரீலோகசெந்தூரம்.

அயப்பொடி. ப. க, கெந்தி ப,உ, தங்கப்பொடி வி-சி உ வெள்ளிப்பொடி வி- கி, க, இவைகளைக் கல்வத்திலிட்டுக்கல்சுண்ணாம்பும் சாரமும் சமனாகக்கூட்டி நல்லசலத்தில் கரைத்து தெளிவையெடுத்து இதினால் ச, ஜாமம் அரைத்து உலர்த்தி புதுவோட்டிலிட்டுத் தீயிட்டு லேசாகவறுத்துவரச்சிவக்கும்பதத்தில் எடுத்துக்கொண்டு தேனில் பணவிடைக் கொடுத்துவரவும். சோகை வெளிறு ஊதல் நீரேற்றம் பசிமந்தம் வாயு தீர்ந்து ரத்தவிர்த்திதரும்.

## ஷீரபந்தேபுத்ரீ.

கர்சினிவிரை சோம்பு கற்பூசாவிரை சுரைவிரை காட்டுவிரை வகை. தோ. உ, பச்சைக்காசினிவேர் தோல் கித்துமிவிரை அதிமதுரம் சடாமாசி பனப்ஷாபூ காவுஜபான் இலைவகை. ப. ௭, கியாழம் வடித்து இதில் ம அ, ப. வெள்ளைசர்க்கரை இட்டுப்பதமாய்க்காச்சி எடுத்து, ௭, க, ப. வரையில் கொடுத்துவர பழயகாய்ச்சல் காமாலை நீரடைப்பு கல்லடைப்பு சூதகக்கட்டு குண்டிகாயில் அடைப்பதால் ரத்தம் கட்டியிருப்பதும், நுரையீரல் மண்ணீரல் கெடுதிகளும் தீரும்.

## ஷீரபத்தேதீநீ.

பச்சைக்காசினிவேர்தோல் தோ. ச, காசினிவிரை தோ. உ, ரோசாப்பூ, தோ. உ, தாமரைப்பூ தோ. க, காவுஜபான், தோ. க, தொக்மேகஷ்வுஷ். தோ. கஉ, இவைகளைக்கியாழம் வடித்து, ம அ, ப். சர்க்கரையிட்டுக்காய்ச்சி வேளைக்கு ஒருபலம் கொடுக்க உஷ்ணகாய்ச்சல் குடல்பைமெதுவு மலக்கட்டு வீக்கம் பக்கநோவு ஈரல்நோய் வயிற்றுநோய் நீர்ப்பைசூடு கெர்ப்பசூடு நீரடைப்பும் தீரும்.

## வலிவிற்குதிராவகம்.

வயதாட்டின்கறி, ப-ஈசுஅ, புறா, காடை-சு ம, கவுதாரி-ச, கூவாச்சாவல் - உ, அடைக்கலன் குருவி - ரும, இவைகளின் கறிகள், இதுகளிலிருக்கும் கொழுப்பை நீக்கிவிட்டு இவைகளை ஒன்றாகச்சேர்த்துக் கலாய்பூசிய தாம்பர தேக்சாவிலிட்டு ஒரு வெள்ளைச்சீலையில் அரிந்தவெங்காயம், ப-சு, லவுங்கபட்டை, ப-கஉ, லவுங்கம் தோ-க, சிவப்பு ஏலக்காய்-ப-உவ, லவுங்கபத்ரி, ப - உவ, இவைகளைச் சற்றுசதுக்கி வைத்துத் தளர்ச்சியாக முடிந்துகறியின் மத்தியில்வைத்து வாய்ப்புறம்கலாய்பூசியதாம்பாளம்மூடி உளுந்துமாவு தட்டிய சீலைவாய்ப்புறம் நன்றாகச்சுற்றிக் கறிவேகும்படியாக



எரித்து ஆறவிட்டுக் கறியில் பிறந்த சலத்தைவடித்துக் கறியை நன்றாகப் பிசைந்துப் பிழிந்து அதில்சேர்த்து வடிகட்டிக்கொண்டு கறிகளை நீக்கிவிடவும். அதில் பசும்பால் ப-உாரும, விடவும். அரைபடி நல்லசலத்தில் நெல்லிவற்றல் கிராகறி, கச்சூர்கொட்டகரந்தை காவுஜபான் குலேகுடல் முசலா சிறுநாகப்பூ பாதுரஞ்சி போயா வகை, ப-ரு, உஸ்தகதூஸ் லவுங்கபட்டை பெரியலவுங்கபட்டை லவுங்கபத்ரி குலாப்பூ காசினிவிரை வெள்ளைசந்தனத்தூள் செவப்பு சந்தனத்தூள் அம்புஸ்தூள் ஆனைநெருஞ்சிக்காய் உன்னாப்தாமரைப்பூ வகை, ப. க உ, பாமனிசுபேத் பாமனிசுருக் தூதரிசுபேத் தூதரிசுருக் சிமைதண்ணீர்விட்டான் கிழங்கு நிலப்பனைகிழங்கு வெப்பாலரிசி வகை. தோ. ச, இவைகளை இடித்து முன்கண்டசலத்தில் ஊறவைத்து முன்கறிசலமும் பாலும் கூடியிருப்பதிலிட்டு பன்பாண்டத்தில்சேர்த்து வாலையிட்டுவாய்ப்புறம் உளுந்துசீலைசெய்துவாலையின் திராவகமிறக்கும்,குழைவாய்ப்புறத்தில்ஏலக்காய்தோ. ௭, குங்குமப்பூதோ, வ, இரண்டையும் ஒருதுணியில் வைத்து வாய்ப்புறம் தொங்கலாகக் கட்டித் தீயெரித்து திராவக மிறக்கி வேளைக்கு வி-கி. அ, விதம் உட்கொள்ள மூளைபலம் குலைபலம் தாதுபுஷ்டி உதிரசுத்திதருவதுடன் தேகம் செழுமைபெறும். சொல்லாதவர்களே நல்லவர்கள் நல்லவர்கள் மற்றெல்லோரும் யாரோ வழியென்னப் பெரியவர்கள் கூறியிருக்கின்றனர் ஆகலால் அவரவர்கள் நீரத்தன்மைபடி நடத்தவும்.

## சரீரத்தில் கிரகங்களுக்குரிய இடமும் அவைகளுக்குரிய பிணியும்.

அங்காரகன் தலை, தலைநோய் வெதுப்பு, சுக்கிரன் முகம் கண் வியாதி, புதன்கழுத்து, தோள்கைகீழ் கழலை கட்டியாம், சந்திரன் மார்பு, மார்புநோய் சீதளம், ரவிவயிறு, வயிற்றில்நெரும் நோய்வகைகள், குரு அரை, மூலவியாதிகள், சனி தொடை, வாதம் கால்முடக்கு பீலி ராகு கால் விஷபிடித முசல்வலி.

செனனகாலத்தில் மேற்கண்டகிரகங்கள் ராசிகளில்கேந்திரகோணநட்பாட்சி உச்சமாக சுபஅம்சம்பெற்று பாபிகள் நோக்கமுறாமலிருக்கில் அவரவர்கள் திசாபுக்தி அந்தரகாலங்களில் திரவியஆபரண

வஸ்திர போஜன சுபங்களைக் கொடுப்பார்கள். அவ்வகையிராமல் லக்கினத்திற்கு ௬, ௮, ௰௨, இந்த ஸ்தானமேறியும் அவர்கள் பகை நீச்சம்பெற்றும் பாபிகள் நோக்கமுறினும் மேற்கண்டவியாதிகளையும் வறுமையும் அவரவர்கள் திசாபுக்திகளில் கொடுப்பார்கள்.

அஷ்டமாதிபதி இன்னால் இவ்வகையால் மாரகமென்பது.

ரவியாகில் அக்கினியாலும் சந்திரன்சலத்தினாலும் அங்காரகன் ஆயுதத்தாலும் புதன்வெறுப்பினாலும் குருவயிற்று நோயாலும் சுக்கிரன் குளிர்வாயுவினாலும் சனிபசியினாலும் ராகுவிஷத்தினாலா வது நாபியுண்டாகிலும் மாணமாவார்கள்.

இன்னராசியோர்க்கு இன்னதேசத்தில் மாரகமென்பது.

சரராசிக்கு அன்னிய தேசத்திலும், ஸ்திரராசிக்கு சயதேசத்திலும், உபயராசிக்கு அடுத்ததேசத்திலும், ஆயுள்ஸ்தானாதிபதியும் காரகனும் சரராசியிலிருந்தால் தேசாந்திரத்தில், அட்டமராசி திரராசியாகில் தனதுவீட்டிலும், உபயராசியாகில்மத்தியில்துர்மரணம்.

கோட்களுக்குரிய குணமும் வியாதிதோன்று மிடமும்.

ரவிக்கு—சமரசமான சூடுவறட்சி பித்தம் ஆண்மசூடுதலைமூளைநரம்பு வலதுபுறம் தலைமார்புஇருதயம் நரையிரல்வாய்ப்பற்கள் விலாவுறுப்புகள் வலதுகண் பித்தத்தையும் உதிரத்தைப்பற்றிய வியாதிகள்.

மதிக்கு—குளிர்ச்சியீரம் தோல் மயிர் நகம் இடதுபக்கம் பிடரிகால் இடதுகண் இரசத்தையுங் குளிர்ச்சியும் பற்றியவைகள்.

செவ்வாய்க்கு—அதிகசூடு வறட்சி சூட்டைப்பற்றிய பித்தம் மாமிசம் பித்தப்பை பீஜநீர்த்தாரை ஊத்தாம்பிள்ளை வலதுநாசி கெந்தபுலன் சுரம்காமாலை கருப்பசின்னம்பீனிசம் பெரும்பாடுமூலம்.

புதனுக்கு—அதிகவறட்சியும் குளிர்ச்சிகலந்த வறட்சியும் சரம்கலந்த வண்டல் நரம்புபரிசபுலன், நா, கண், காது நாசி சொரப குளிர்ச்சியும் வறட்சியும் பற்றியவியாதிகள்.

குருவிற்கு—சமரசமான சூடும்குளிர்ச்சியும் பரிசுத்த உதிரம் விந்துதலைமூளை இரத்ததாரை எலும்பின் மூளையீரல் தீனிப்பைகுடல் அன்னம்தொண்டை இடது செவிபரிசப்புலன்கள்.

சுக்கிரற்கு—சமரசகுளிர்ச்சியும் சரமும் இரசதாது நிணம்சுக்கிலம் கருப்பாசயம் ஆண்குறி நாசித்துளை நீர்த்தாரை சொறி கொழுமையும் குளிர்ச்சிபற்றியதுமாம்.



சனிக்கு—அதிகுளிர்ச்சி வறட்சிவண்டல்வலது செவிதோல் சத்தபுலன் மயிர்நகம் மண்ணீரல் மலம்சலம் கால்விரல்களிலுண்டாகு பிசிவு உள்ளுறுப்புகளிலுண்டாகும் வியாதிகள்

## வியாதிகள்.

லக்னாதிபர்குசன் புதனிவர்கள் மிதுனம் கன்னியிலிருக்க புந்தி பார்க்க ஆசனத்தில் ரோகம்.

௰-௫-அதிபர்களை சசிகூடினும் பார்க்கினும் ஏகராசியிலிருக்கினும் பத்தாதிபன்திசையில் நீரிழிவு ரோகம்.

௪-௧-அதிபரோடு புதன் குசன்கூடில் நீரிழிவும் நுவாரமுமிரண்டாம் இவர்களுடன்சுக்கிரிகூடில் கல்லடைப்பு ரோகம்.

லக்கினாதிகுருவாகவும் ௪-ல் ராகுவும் அல்லது மூன்றுபதிபனுடன் கூடினும் அண்டவாத ரோகம்.

இவர்கள் மத்தியில் அங்காரகனிருந்து சுகி பார்க்கில் சிரம்பிளந்து அண்டரோகத்தால் மரணம்,

௬, ௮, அதிபர்சத்துரு நீசத்தானத்திருக்க பாவர்சென்மத்திருக்க சென்மாதி குளிகனுடனிருக்க சசிசநி ௬-௰௨-லிருக்க பலபிணியால் மரணம்.

சென்மாதி எட்டிலும் எட்டாமதிபர்சென்மத்திலும் சனிகூடி சசிபாவருடன்கூட வுருவில்லாரோகம்.

ஒன்றில் எட்டில் சூரியனுடன் சென்மாதிப னிருக்கில் பித்த ரோகம்.

குளிகன்ராகு சென்மாதிகூடி. லக்கினத்தாறிலும் குளிகன் திரிகோணங்களிலும் எட்டாமிடத் தாறிலும் குளிகன் நாலாமதிபனுடன் கூடினும் அண்டம் பெருத்தவரும்.

சென்மாதிபனுடன் பாவக்கோளுறினும் குசன்சகிதனாகியும் அல்லது பார்க்கினும் கல்லடியால் விரணம்.

வைசூரியால்வடிவுமாகும். லக்கினாதிபர் ராகுமதிசேய் புதன் இவர்கள் ௬ ௮, ௰௨, லிருக்க காலவிடத்தில் வெண்குட்டமாம் வைசூரியால் வடிவாம்.

ரவிசேய்புதன் சென்மாதி ௬, ௮ ல், கூடியிருக்க செங்குட்டமாகும்.

தனுசு மீனம் மகரம் விருச்சிக மேடரிஷபமிவைகளில் பாவ ரிருக்கலக்கினாதியுமிருக்க குட்டரோகம்.

சென்னிரவி, முகம்சசி, கண்டம் அங்காரகன், இடக்கை புந்தி, வலக்கைகுரு, மார்புசுக்கிரன், முழந்தாள்சனி, காலில்ராகு, கிரகங்களுக்குரிய இடங்களில் குட்டவியாதி ஆரம்பத்தில்தோன் றும்.

எட்டில்சனியுற, க, எ, ல் சென்மாதியும் பாம்புமிருக்க குட் டநோய்.

குரு பாவருடன் கூடி, உ, அ, விருக்க குருவையும் லக்கினத் தையும் பாவர்நோக்க சயரோகம்.

சசிபாவனைகூடி சலராசியாய், க, ௮, ல் இருக்க சயரோக மாகும்.

லக்கினத்தில் குசனும் புதன் பாவருடன்கூடி உ, அ விருக்க சுரரோகம்.

சென்மாதி பிருகுடன்கூடி அ, விருந்தாலும் சென்மாதி நீச்ச மடைந்தாலும் பிரமியரோகம்.

௬-அ, மதிபர் ராகுடன்கூடி உ, விருக்க சென்மத்தில் குசனி ருக்க சென்மத்தை பாவர்நோக்க முலைவியாதி.

லக்கினத்திற் காரியும்சசியும் பாவருமிருக்க, ௬, மாதி உ, விருக்க குன்மம் ரோகம் ௪-ம் மாதி க-௫-எ-௰, விருக்க, சென்மத்தில் அங்காரகனுற நல்லோர் பார்வையிலாதிருக்க அதி சாரம்.

௬-ம் மாதிசென்மாதி குசனுடன்கூடி சென்மத்திலிருக்க அதி சாரபேதி.

லக்கினத்தில்ராகு ௩-ல் சனியிருக்க அண்டம்பெருத்துவரும்.

சென்மத்தில் ரவிகுசன் கூடியிருக்கில் குன்மம்வலி பெரு மூச்சு.

சென்மாதிபன் குசன்கூடி தீயோர்காணத் தலையில் கல்லடி காயம்.

லக்கினத்தில் சசிராகு நிற்கில் பேய்பிடிக்கும்.

சென்மத்தில் குசனிருக்க தீயோர்காண அடிவயிற்றில் வலிகாணும்.



ராகுஇருந்த வீட்டதிபனும் ௬-ம் இடத்ததிபதியும் இம்மூ வரும் கூடியிருந்தால் உ-ம் மாதிதிசையில் பொசிப்பில் தந்த ரோகம் சூரியன் சனி எட்டிலிருக்க மகோதரநோய்.

க, ௪, ல் ரவிகுசனுற ௰-ல் சவுரிநிற்க உ-ல் சசியுறபாம்பு திரிகோணத்திருக்க சூலைநோயால் மரணம், லக்கினாதிசனி இவர் கள் ௬, அ, ௰உ, விருக்க சிரசில்விரணமாம்.

செவ்வாய் மந்தவாரத்தில் பிறந்து க, ௫, ௯, ல் சசிரவியி ருக்க ௪-எ-௰-ல் குரு விருந்தும் சந்திரன் கேந்திரமேறினும் உன்மாதரோகம்.

சென்மகேந்திரத்தில் புகரும் சசியுமிருக்க பாவர் ௫-அ- விருக்க மூயல்வலி.

சென்மத்தில் பரிவேடம் ௬-அ-ல் குசன் திரிகோணத்தில் குருவில்லாதிருக்க குமரகண்டவலி.

க-ல் சனிசெவ்வாய், உ-அ, -௰உ-ல் லக்கினாதியிருக்க கேந் திரங்களில் நல்லோரிலாதிருக்க சரீரமுழுதும் வியாதி. உ-மிடம் சனியுடன் பாவர்கூடி இருந்து பாவர்நோக்க நாய்க்குபயம்.

உ-மிடத்ததிபன் அதினுற பாவர்கூடினும் நோக்கினும் நாய் கடிக்கும்.

அ-மிடத்தில் ராகுஇருக்க, உ-ல் பாவரிருக்க விஷசெந்துக் கள்திருஷ்டியாம்.

சென்மாதி ஆறுமாதி ராகு இம்மூவர்கள் ஒருவீட்டிலிருக்க அரவம்கடித்து மரணம்.

சசிபாம்புகூடி எ-அ-ல் இருக்க நமனியன், சென்மத் திருக்க விஷத்தினால் மரணம்.

௪-ல் சசிபாவருடன்கூடி இருந்தால் திருடன்.

சசி எ-ஆம் ௬-ல் தாயனும், ௰உ-ல் பாவிகளிருந்து பார்க்க வெட்டினு லொருகைதுண்டாகும்.

க-அ-க்குடையவர் குளிகனைக்கூடி, அ-௰உ-ல் இருக்க கால்இருதுண்டாகும்.

அ-ம் மாதியும்குசனும் ௬-௰உ-விருக்கதிருடரால் கத்தியினால் மரணம்.

ரவிசசிராகு மூவருங்கூடி இருக்க மதிபிரகாசத்தில்தலைவெட்டுண்ணும்.

லக்கினாதி எட்டாமதிபர் சசிகூடியிருக்கில் மேகஇடியால் மரணம்.

உ-ல் குரு ரு-ல் சனி கூ-யஉ-ல் ரவிநிற்க கையறுப்பட்டு பின்னமாம்.

குரு எ-அ-ல் இருக்க ல-ல் செய்புதன் சனிராகு இருக்க கால்கள் துண்டாகும்.

ரவிசசிகாரி சேய் இவர்கள் ௬-அ-ல் இருக்க நல்லோர்பாரா திருக்க கைகால் துண்டாகும்.

சசிசென்மத்திலும், அ-ல் சூரியர் குசன் சநியிருக்கவாளாயுதத்தால் அறுபடும்.

ஆறுமிடத்ததிபதி கர்மாதிபுடனும், க-அ-ம் மதிபருடன் கூடினும் தேகரிலம்.

கூ-ம் மாதிரவியுடன் கூடில் சிரரோகம்.

சசிகூடில் முகத்தில் குசனுடன்கூடில் காதில்- புதனுடன் கூடில் இருதயத்தில் சுக்கிரன்கூடில் முழங்காலில் சநிகூடில் பாதத்தில் ராகுகேதுடன்கூடில் வயிற்றில் கூ-ம் மாதிநீசமுடமாய் லக்கினாதியுடன் சம்பந்தப்பட்டிருந்தால் விசேடரிணமாம்.

லக்கினாதி குசன் புதன் ராகு கேது இவர்களுடன் கூடில் குஷ்டமாம்.

லக்கினாதியுடன் சூரியன் அங்காரகன் கூடில் ரத்தகுஷ்டம்.

லக்கினாதி சுகசந்திரர் குருவுடன்கூடினால் வெள்ளைகுஷ்டம்.

லக்கினாதி சநியுடன்கூடில் நீலகுஷ்டமாம்.

அ, மதிபர் சூரியனுடன்கூடில் சுரத்தினால் மரணம்.

அ-மதிபர் சந்திரனுடன்கூடில் சலத்தினால் மரணம்.

குசனுடன்கூடில் கிரந்தி அக்கினி சுரம் இவைகளாலும் புதனுடன்கூடில் நானாவித வியாதியாம்.

குருவுடன் கூடில் அஸ்திரோகம் வயிற்றுவலியாலும் சுக்கிரனுடன்கூடில் ஸ்திரீபத்திரவத்தால் சநியுடன்கூடில் சண்டாளஸ்திரீயாலும் திருடராலும் ராகு கேதுடன்கூடில் சர்ப்பத்தால்



லக்கினாதி பாபிகளுடன் கூடியிருக்க, ௬-ம் மாதி கூ-அ-யஉ-லிருக்க அவர்கள் திசாபுக்தி காலங்களில் அசீரணத்தால் மரணம்.

லக்கினாதி பாபியாய் சனி சம்பந்த முற்றிருந்தால், திசாபுக்தி காலங்களில் விஷபக்ஷணம் செய்து மரணம்.

லக்னாதிபருடன் ராகு கேது இருந்தால் காவலிலிருக்கும் போது மரணம்.

லக்கினாதி குசனுடன்கூடி, கூ-அ-யஉ-லிருந்தால் அவன் திசை புக்தியில் மரணம்.

வைசூரி விபரம்.

தந்தலக்கினமும் லக்கினாதிபனுஞ் சநிராகு சேய்வர்க்கமுறினு
மந்தமாறெட்டிலைக் கிறைவனாங்கி சாதிபர்.தன்னுடன் செவ்வாய்
மந்தனோடிராகுவர்க்கமுற்றினும் வருஞ்சாமி யிருந்தாசியினு
முந்தலங்கிசாதி சேய்சனிராகு முற ரவிபார்க்கில் வைசூரி.

சத்துருக்காலத் திறையுடன் செவ்வாய் சாற்றியராகு கூடினு
மற்றவாறெட்டிற் சேய்ராகுநினும் மன்னுமொன்றேழெட்டிலிரவி
யெத்தளசநிதா விருந்திடச்செவ்வா யிராகுவும்பார்த்திடவேதான்
சித்தளவுடம்பில் வைசூரியேயுண்டாந் தேனினுமினியசொல்லனே.

சாயனாதேவியால் வாந்திபேதி.

போற்றுதாரத்தனில் சனியுமொரு மூன்றுதானிற் புதனிருக்க
பேடம் தேனினிற் செவ்வாயிருக்கின்.
மாற்றுயரா ரோகத்தையுள ளுகுமன்றுகேந்திரத்தி லவர்
துர்ப்பலமேயாக
தோற்றுமெட்டை சநிபார்க்க லக்கினத்தை பாவர்துன்னெ
னப் பார்த்திடி லந்ததுவேஷமே யுண்டாம்.
ஏற்றமதிசேயாறி லிருந்திடவே பாபரெதிர் நோக்கினால் வாந்தி
பிராந்தியுமுண்டாமே.
என்னமாமிரண்டோன் மூன்றைக்குடனே ழெட்டுக்கிறையவர்
சநியோடிராகு குளிகனுடன்கூட வன்மைமதிநாத் தானத்துறி
லந்த துவேஷம் வாந்தி பிராந்தியுமுண்டாம்.

கூ-ம் மிடத்துக்குடையவரும் சநிராகு கேது குசன் இவர்கள் கூ-அ-யஉ-ல் நீச்சமாய் குளிகனைச் சார்ந்திருந்தால் வாந்தி பே

திஷினல் - திசாபுக்தி அந்தரகாலங்களில் மரணம் - மேற்கண்டபடி கிரகங்கள் பகைபெற்றிருந்தால் வாந்திபேதிகண்டு மிகதுர்ப்பமடைவார்கள் நட்பாட்சியாக இருந்தால் கண்டு உடனே குணப்படும், இந்த அனுபவங்கள்.

கிரகங்கள் திசாபுக்திகாலத்தில் சேரும்,

விதியால்வருத்தும் பலவாதம் விட்டகுறையாம்பித்தமது
சதியால்வினையுஞ் சிலேட்டுமந்தான் தாமேமூன் றுங்குடியாகி
மதியாமன்பர்க் கிதுமூன்றும் மாறுமட்டோ ருறவாகி
கெதியாம் வினைதீர்ந்திட்டோர்க்குக்கிடைத்தபொருளாம் நல்வினை
[யே,

வாதம் வாய்வு மலத்தில்சாரும், பித்தம் அக்கினியும் நீரில் சாரும் ஐயம் சீதம் விந்தில்சாரும், அக்கினியும் வாயுவும் மலத்தில் சார்ந்தால் வாதம் வாயுவுமீறும், ஆகாயத்தில் காற்றும் தீயும்சார்ந்தால் பித்தமிகும் தண்ணீரும் காற்றும் சுழியைச் சார்ந்தால் ஐயமிகும்-

பிரிதிவியாகிய மண் சத்தி - விந்தாகிய சலம் சிவம்.

## பஞ்சபூதம் சேர்தலின் பயன்.

ஆகாயமும்காற்றும் சேர்ந்தால்நிலைக் கொட்டாது ; ஆகாயமும் காற்றும் அக்கினியும் கூடில் கைவல்லியம்.

அக்கினியும் சலமும்சேர்ந்தால் சலத்தை அக்கினி வெல்லுமானதால் சலம்கூடாமை.

மண்ணும் தண்ணீரும் சார்ந்தால் சலத்தை மண்உண்டுவிடும், இதுகளில் மண் தண்ணீர் சேர்க்கலாகாது.

வாதம்புளிப்பு பித்தம்கசப்பு ஐயம்தித்திப்பு- வாதமும் பித்தமும் கூடில் பித்தசுரமாகும்- அய்யமும்பித்தமும் கூடில் சீதசுரமாகும் வாதமும்பித்தமும் சரியாகநடந்தாலும் அய்யம் அரைபித்த மிரண்டுவாதம் ஒன்று இம்மாதிரியாக நடந்தாலும் தோஷமெய்தும்.

பித்தம்வாதத்தில் சென்றால் புத்திமயங்கும் அய்யம் மேவிடில் நாள் (ங) மூன்றுநாடியும்படபடத்துநடந்தால் சன்னி- அய்ய நாடி தனித்துநடந்தால் (ரு) நாள் அய்யமெழும்பிடாவிடில் மரணமாம்.

தன்டுமுகம் தந்தம்நா கறுப்பேறில் (சு) நாள் பித்தத்தாடம்பை பிணைக்கசெய்யில் (சு) மாதம் - அய்யத்தால் அந்தியையுறச்செய்யில் (க) மாதம் நாடிகீழ்நோக்கி நடந்தாலும்பித்தமடங்கி அய்யம்விரலில் துடியாகநடந்தாலும் உந்தியில் நாடி உயரவெழும்பித் துடிக்கினும் காதிலும் நாசியிலும் நடுக்கம்கண்டு (உ) கருவிழியும் நீலம்போல கறுத்தாலும் மலம் சலம் விரியமிவைகள் சுபாவம்தப்பினும் மரணம்.



உதடுநாமேலண்ணம் வறண்டு பசையற்றால் (ங) மாதம்மார்பு சூடு அதிகரித்தலும் நெற்றியும் கால்களும் குளிர்தலும் விரைவாக மூச்செறிதலும் முகம்மஞ்சள் நிறமாகுதல் பார்வைமந்தப்படல், கண்களிலொன்று சிறுத்தாலும் மூடிக்கொண்டாலும், நெற்றி தோல் இழுத்துக்கொண்டாலும் செவியின் சோணை தொங்குதலோடசைதலும் மூக்குமுனையுயர்ந்து துவாரகளகன்றுலும் நீர்கறுத்திரங்கியசுரமும் புத்திவார்த்தை பார்வை நித்திரை உரிமை நியமம் இவைகள் நீங்கினும் கண்மணிபேதப்படினும் நேத்திரநரம்பு நீலமாகக்காண்கினும் சமீபகாலமரணமாம்.

கண்டம்நொந்து துடித்து சரீரம் வெளுத்தும் புருவம் தாழ்ந்தும் புருவமய்யம் நீண்டுமிருந்தால், (ச) மாதம்.

முகம்கறுத்து சிறுநீர்புலால் நாற்றம் நாறினும் (ங) மாதம்.

முகம்பெருத்துசரீரம் வெளுத்தால் (க) மாதம்

முகத்தடி பெருத்து வெளுத்துபுருவம் ரத்தமாய்காணில் (உ) மாதம்.

உண்ணுங்கால்சுவாசம் அதிகமாயந்தால் (க) வருடம்.

புருவமமூர்ந்தி பல்கறுத்தும் உயர்ந்தும் விக்கம் நெஞ்சுகுழி பள்ளம்நிறமாறியும் மேடிட்டும் தொப்புள்நரம்பு படபடத்தாலும் குதிகால்நரம்பு தானாகஆடினாலும் சீக்கிரம் மரணம்.

பேசும்போது மார்புக்குள்ளடைத்தாலும் (ங) மாதம்.

நாவுதடித்தும் வார்த்தை தடுமாறினும் நாவறட்சி மந்தமாய் மயக்கம்காணினும் (க) மாதம்.

சோகைவியாதியால் சரீரம்பெருத்துக்கழிச்சலானால் (க) வருடம்.

சரீரம்பசுமைநிறமாய் கையடிசுருங்கில் (அ) மாதம்.

வியர்வைகண்டு நெஞ்சயர்த்து வற்றிருபமாயில் (சு) மாதம்.

கண்டம்நீண்டு மிடறுதாழ்ந்து தோல்கள் சுருங்கில் (உ) மாதம்.

அடிசுருண்டு தோல்கறுத்து சுருங்கில் (ய) நாள்.

உடம்புபதறி நடக்கும்போது கால்பின்னி சாய்ந்தால் (க நாள்.

ஐயரோகத்திலிளைத்த வுடல்வீங்கிடில் (க) மாதம்.

பித்தரோகத்திலிளைத்த வுடல்வீங்கிடில் ௬, மாதம்.

ஐயநாடிபடபடத்து நடக்கில் ௰நாள் பித்தம் சிதறிபோடில் (௫) நாள் வாதம்சிதறி நடக்கில் நாள் (அ) வாதபித்தமிரண்டும்கூடி நிலைதப்பிசிதறில்நாள் (௫) மூன்றுநாடியும் நிலைதப்பிநடக்கில் (௨௰) நாள்மூன்றுநாடியும் அரணைவால்போல் துடிக்கில் நாள் (க) காலைஐயம் உச்சியில் பித்தம் மாலைவாதமாக நிலைதப்பிநடந்தால் நாள் (௫) பித்த சிலேத்மம்கூடி பேரடம்போல் நடந்தால் க-மாதம் ஐயம் குதிரைபோல் நிமிர்ந்து காணில் க-மாதம் சரீரம் குளிர்ந்தும் ரப்பையி ஆதிரமில்லாமையாயினும் வியர்வையில்லாமை உலராதவியர்வை நேத்திரதேகம் நீங்கில் ஆல் உள்ளங்கையி ஆதிரமில்லாமை காதிற் சமுத்திர யிரைச்சலாகவும் முககாந்தியில்லாமை மூக்கு தொப்புள் மார்பு கால்கைகுளிர்ந்தும் விக்கல் நடுக்கல் கண்டத்தில் கபம்கட்டுதல் பரிமளம் தெரியாமைதுருவன் சாயாதெரிசனம் தெரியாமற் போனாலும் சமீபகாலமரணமாம்-சரீரநிழலைந்து காட்டினும் உமிநீர் தப்பில் சமீபமாகவிழுந்தாலும் கண்டு உதடு பல்லு நாக்கு கறுத்தாலும் நாள் ௬, சூக்ஷமஉடம்பில் துலித்தாலும் ஸ்தூலவுடம்புசிறுத்தாலும் க, மாதம் ரப்பையை மூடி நேத்திரத்தை அழுத்திப்பார்க்கமயிலிறகுகண்போல்தோன்றுதிருக்கினும்சூரியமண்டலம்தோன்றாமைகண்ணைமூடிப்பாற்க கதிர்கள் தோன்றாதிருந்தாலும் உ-வருடம் உடல்சாயை தொண்டியாகவும் நிழல்பரப்பாகவும் கண்டால் ௬-மாதம் சலம் உமிழ்வதில் பஞ்சவர்ண இந்திரதனுசு தெரியாதிருந்தால் க-மாதம் காதைமூடிப்பார்க்க உள்நாதவொலி கேளாதிருந்தால் ௰௫-நாள் ஸ்தானம்செய்யும்போது வயிறு கால்கை நனையாதிருந்தால் ௬-மாதம், நடக்கும்போது அடிச்சுவடு சிதைந்து காணில் ௫-நாள், கண்ணாடியில்முகம் தெரியாதிருந்தாலும் இரவி இரண்டாகத் தெரிந்தாலும் க-மாதம்

நோயாளர்க்கு.

இரவில் நக்ஷத்திரம் தெரியாமல் பகலில் தோன்றினும் பூரண சந்திரன் புகைபோல் மழுங்கிக்காணினும் ஆகாயநிறம்பார்ண கறுப்



பாகத்தோன்றினும் நெய், எண்ணெய், பால், தண்ணீர் இவைகளில் தன்முகம் தோன்றாவிடினும் ௰௫-நாள் இல்லையென்று சொல்பவன் கொடாமல் நிறுத்தினும் கொடாதவன் கொடுக்கினும் சாதாரணமாய் நடப்பவன் குனுங்கி கெர்வமடைந்து மனிதரை மதியாமல் நடந்தாலும், ௬-மாதம் சட்கோசத்துவம் கூடிய தேகத்தில் வாயுநாடிகள் அநதக்கரணம் பஞ்சேந்திரயங்களில்முடிவுபெறும் காலத்திற்கு முன்பாக தேகநிலைமைக் குரியவஸ்துக்களில் விசேட அபேதம் எவையடைகின்றனவோ அவைகளுக்குரிய குறிகளை சிலதைக்காட்டி முடிவில் ஒன்றிலொன்று ஐக்கியமாய் ஸ்தூலதேகத்திலிருந்த ஆதியாகவும் அந்தியாகவும் கட்டுதற்படுத்திக்காட்ட விடம்தராதாக விருந்த தெவைபோ அவை நீங்கிவிடும்

பவளம்.

குழந்தைக ளிடுப்பிற்கட்ட சித்திரையில் மருண்டமூலவதை நீக்கு சூரி-சுக்-சந்-ஒரு ராசியிலிருக்கும்போது தங்கம் வெள்ளியில் மோதிரம் செய்திட யாவராலும் பூசிக்கப்படும்.

கெம்பு புஷ்பராகம் நீலம் கோமேதகம்.

இவைகளை மோதிரம்தரிக்க நினைத்தகருமம் முடியும் தானூனென்னும் வியாதியணுகாது. வாயிலடக்க வாய்நாற்றம் தாகம் நீக்கும்.

வயிரம் குளிசமாகக்கட்ட அச்சம் விசனமிவைகளை நீக்கியிருதயத்தைப் பலப்படுத்தும், வெற்றியுண்டாகும், பிரசவவேதனை நீங்கி விரைவிற் பிரசவமாகும், ௬-கோணவயிரத்தை குளிசமாடிக் கட்டக் காக்காய் வலிநீங்கும்.

எமனியெனு மிரத்தினம் குளிசமாகக்கட்ட பகைவன் கோபமடங்கும், மோதிரமாய்த்தரிக்க பயித்தியம் தீரும், பகைவரையஞ்சச்செய்யும், மந்திரங்கள் பிரார்த்தனைகள் பலிக்கும், கள்ளர் அஞ்சுவார்கள் வசீகரமாய் சகலஜெந்துகளும் நேசிக்கும்.

பைரோஜாவென்னுமிரத்தினம் மோதிரம்தரிக்க பகைவர்கள் போற்றுவார்கள் இடிவிலகிப்போகும் விஷஜெந்துக ளோடிப்போகும் இதைப் பார்த்திருக்க நேத்திரவொளியதிகரிக்கும் பாக்கியமுண்டாகும்.

மரகதமென்னும்பச்சை யென்னேரமும் பார்த்துவர சாலேசரம் நீங்கும், சரீரமீதிருக்க காக்காய் வலிநீங்கும், மேகரிணங்களும் வாராது.

கன்னியாராசியில் சூரியன் உச்சத்தி லிருக்கும்போது தங்கம் ப-வ, வெள்ளி ப-வ, புருக்கி (அனைக்கால்பலம்) நல்ல பச்சைவைத்து மோதிரமிட்டிருக்க சகலரும் அஞ்சுவார்கள், நாடிய கருமமுமுடியும் செல்வமதிகரிக்கும் விஷங்கள் முறியும் கிரகதோஷங்களணுகாது தேகத்தில் தரித்திருக்க ஈக்கள் மொய்க்காது.

ஜபர்ஜத் என்னும் இரத்தினம் சந்திரன் மீனராசியிலிருக்கும்போது இந்தக்கல்லை குதிரையினுருவம் செதுக்கி மோதிரத்திற் பதித்து இடதுகையின் அணிவிரலிற்றரிக்க சந்தோஷமுண்டாகும் காக்காய்வலிநீங்கும் பிரசவவேதனை நீங்கும் சந்திரன் கடகராசியிலிருக்கும்போது கல்லை மச்சத்தினுருவஞ்செதுக்கி யீயத்தகட்டிற்குள்வைத்து வலையிற்கட்டி மீன்வலைவீச மச்சங்கள்யாவும் கிடைக்கும்.

அறிந்து மேன்மை மருத்தில முதலைத்தினுள்ள குணகுண
நோக்கினும்
செறிந்தவத்துலத்துற்றபிணிதனை சிந்தித்தே மருந்தொப்பக்
கொடுப்பினும்
முறிந்து நோயறக் கொண்டிடும் பத்தியம் முன்னிசைத்த
திசைந்தருந்தினும்
பிறிந்ததா லப்பருவமு மொத்திடிற் பேதியாது மேன்மை
யியம்புவாம்

வாயுவ்பூமிக்கு மேல் (சயிறு) மயில் வரையில் வசிக்கும் இதில் ஒருபங்கு பிராண வாய்வும், ச. பங்குஉப்புவாய்வும்.

அமில வாய்வும் விஷவாய்வும் உண்டாகும் சரீரத்தில் உட்புகுவது பிராணவாய்வு - வெளி விடுவது விஷவாயுவு.

ஆதலால் நாம்வசிக்குமிடத்தில் துர்க்கந்தங்களில்லாமல் நன்மையான காற்று சஞ்சரிக்கும்படியான விடத்தில் வசிக்கவேண்டும்.

பூமியில் தண்ணீர் அனேக பேதங்களாக விருப்பதால் தேகத்திற்குப் பொருந்திய சலத்தை யுபயோகப்படுத்தி வருவதிலும் சலத்தில் தேரிலை தேற்றாங் கொட்டை காசுகட்டி மாம்பருப்பு கொட்டைப்பாக்கு இவைகளிலொன்றை உரைத்துவைத்து தெளி



வை யெடுப்பதாலும் இரண்டொடி சலத்தில் ஒரு குன்றி படிகாரத்தையிட்டுவைத்து, மணிசென்று உபயோகப் படுத்துவதாலும் குற்றமிராது.

சரீரத்தை அசைத்துச்சிரசை ஆட்டி நடக்கையாலும் மல்லாந்து இருகையை துடையுள்ளவைத்தும் புரண்டு புரண்டு மார்பின்மீது கைவைத்து நித்திரைசெய்வதாலும் நெடுமூச்செறிந்து விடுவதாலும் மலசலமடக்கையாலும் வலிவறிந்து செய்யாமல் அதிகமாக ஸ்திரீபோகஞ்செய்து விந்தைநாசப்படுத்துவதாலும் அகாலபோசனம் சதாவிசனம் ஏக்கம் பொறாமை வஞ்சகம் சதாகோபசிந்தை இருக்குமாகில் அதிகசீக்கிரத்தில் பிணிஅணுகும்.

சுழிமுனை அக்கினி வாயு வாதம் இதற்கு ஸ்தானம் உந்தியின்கீழ்.
இடைகலை ஆதித்தன் நெருப்பு பித்தம் இதற்கு ஸ்தானம் கண்டத்தின்கீழ்.

பிங்கலை சந்திரன் சலம் அய்யம் இதற்கு ஸ்தானம் உச்சியின்கீழ்.
மும்மண்டலமென்றுப்பேர்.

சரீரத்தில்வாதபித்த அய்யசீர் அதிகமும் குறைவுபடுகையால் அனேகவியாதிகள் உற்பவமாகின்றது. அஷ்டவித பரீட்சையில் ஒன்றாகிய நாடியைப்பார்த்து வியாதியின்னவை தேகவுறுப்புக்குள் இன்னவிடத்தில் இவ்வாறாக பேதப்படுத்தி இருப்பதென்றும் இனியிந்தநிலையை முடிக்குமென்றும் நிச்சயிப்பது மகாஅருமை அவ்வகையறிபவர்கள் சதாஅந்தர முகதிருஷ்டியை நோக்குறும் மகான்களாகிய தபோதிபுணர்கள். சாக்கிரசொற்பன சுழுத்தியினிடம் அலைவுறும் சிவர்களறிவது மிகதுல்லபமாகும்.

வைத்தியர் ஆயுள்வேதியர் பிடகர் ஆமாத்தியர் மருத்துவர் ஆரியர் பண்டிதர் இவ்வகை நாமங்கொண்ட சிலர் சிவகாருண்ணியம் இரக்கம் தன்னுயிர்போல் மன்னுயிரையும் பாவித்தல் துன்பத்தில்வசிக்கும் நோயாளருக்கு ஔஷதஉபகாரமளித்து இன்பவிருத்தியில் விடவும் அடியார்கள் வாஞ்சையும் அண்டபிண்டசராசரங்களனைத்திற்கும் ஆதிநாயகமாய் விளங்கும் கடவுளை அந்தரங்கமாய் சதாவாழ்த்த வல்லமையுடைய வைத்தியருக்குக் கடவுள் கிருபைபெருகி சகலஉணர்வுமளித்து உலகின்கண் சகலசீவராலும் பெருமைகொண்டாட முடிவில் சிவன்முத்தர்களாய் விதேககைவல்லிய பரசுகத்திலடைவரென்று மேலோர் கூறியிருக்கின்றனர். அதற்கொருயாதொரு அய்யமுமில்லை.

## அஸ்வனி தேவர் ஆயுள்வேதத்தில் கூறியசுருக்கம்.

ஆகாரம் தங்கும் இரைப்பையின் தொழிலால் மலம்நீங்கிப் பக்குவமடைந்த அன்னரசம் அன்னரசத்திலிருந்து பிரிந்த திருவரூபத்தையுடைய இரத்தம் பித்தம் சிலேத்மம் வண்டலெனும் வாதமாம் இவையில் உதிரத்தை யீரலிழுத்துப்புழை நரம்புகளின் வழியாக உடலெங்குமேற்றிப் பரவச்செய்து சரீரத்தைப் போஷிக்கும் இருதயகமலம் தடிநரம்புவழியாக ஆன்மசத்தியை சரீரமெங்கும் பரவச்செய்து உயிர்ப்பிக்கும்.

தலைமூளை வெண்நரம்புகள் வழியாக உணர்வையுடலெங்கும் நிறைத்து இயக்கச்செய்யும் குண்டிக்காய்கள் உதிரத்தோடுகலந்து சரலிக்கின்ற சிறுநீரைப்பிரிப்பதுமன்றி சுக்கிலநரம்புகள் வழியாக இரத்தத்தின் சத்துக்களையிழுத்து விந்துவாக வெளுக்கச்செய்யும்.

உதிரத்தினின் றெழுகின்றஆவியே தேகச்சூடாயிருக்கிறது அதனையேஆன்மாவென்று சொல்லப்படும், உதிரத்திற்கும் தேகத்திற்கும் சம்பந்தத்தை யுண்டாக்குவது சிலேத்மநீரவ இத்தசிலேத்ம நீரதிகப்பட்டு உதிரத்தின் கொழுமைகுறைந்து ஆன்மசத்தியைக்குறைத்து சீவர்களை நசிப்பிக்கும்,

பண்டிதர்கள், சரீரலக்ஷணம் இருதயத்தின்றன்மையை நாடியாலும் ஈரலின்றன்மையைக்காட்டும் மூத்திரத்தாலும் இரைப்பையின்தன்மையைக்காட்டும் மலத்தினாலும் தலைமூளையின் தன்மையை யறிவிக்கும் இயக்கத்தாலும் அறிவதுடன் ரோகநிதானம் சிகிச்சாகிரமம் அவுடதபாகமும் அவசியமறிபவர் பண்டிதராவார்.

சூட்டின் விகற்பமேவறட்சி குளிர்ச்சியின் விகற்பமே கொழுமை தேய்வுசூட்டுடன் வறட்சியையும் வாயுசூட்டுடன் கொழுமையும் அப்புகுளிர்ச்சியுடன் ஈரத்தையும் பிரிதிவுகுளிர்ச்சியுடன் வறட்சியுமாகும்.

இரத்தம் சூட்டுடன் கொழுமையும் பித்தம் சூட்டுடன் வறட்சியும் இரசம் குளிர்ச்சியுடன் இரத்தத்தையும் வண்டல் குளிர்ச்சியுடன் வறட்சியுமாக சுபாவகுணத்தைப் பெற்றிருந்தாலும் இரத்தம் பித்தம் இரசம் வண்டல் இந்நான்கு சத்துக்களிலெழுகின்றதில் விசேடமாய் வண்டல் இரசத்தில் நின்றுமே யெழுகின்றவாயுகாறறும் ஆவியாக விருக்கிறது, இச்சத்துக்கள்உயர்வுகுறைவினால் ரோகங்கள் உற்பத்தியாம்.



## சரீரத்தில் அஷ்டவித பரீட்சையில்.

### நாடி. முகம் பல் நா சரீரம் சலம் வாய் மலமிவைகளில் மலக்குறி விபரம்.

மலமிறங்குவது அரைத்த சாதம்போல் விழில்திங்கள் ௪, கூழ்போல் விழுந்துகலங்கி பொருமினல் திங்கள், ௩, வெள்ளையாக விழுந்து விலாவுள்ளே செருகினல் திங்கள், ௨, கம்பின்கஞ்சிபோல் கழிந்தால் திங்கள் ௧, நினைக்கு முன்கழிந்து நீர்கறுப்பாக விறங்கினல், நாள் ௨௰, பன்றிநெய்போலும் பனிசலம்போலும்படர்ந்தால் நாள் ௰௬. கோழிமலம் போல் பலவர்ணமாகவும் இளையரிசிபோலும் உதிரம்சீழ்போலுமிறங்கில் நாள்,௰, மலமிறங்கும்போது தொப்புளுள்செருகி மயக்கம்காணில் நாள், ௮, கழிச்சலாக விருந்தது தடைபட்டு மயக்கங்காணில் நாள் ௫, சரீரம்நாற்றமாய் மலம் முட்டைகருபோலும் கூழ்போலும் அடிக்கடியிறங்கில் நாள் ௩, பச்சை அரைத்த வர்ன்னமாகவும் பால் நிறமாக கழியில் நாள் ௨, தேன்போலும் மல்லைசலம்போலும் நாற்றமடிக்கில் மாதம், ௨, இவ்வகையாக மரணமாகும் வாததேகிகளுக்கு மலம் இறுகிசெம்மை நிறமாயும் பித்ததேகிக்கு ஆவியோடு மஞ்சள்நிறமாயும் அய்யதேகிக்கு நிளாய் வெளுத்திரங்கும் ஒன்றோடொன்று மிசிரப்படில் மலம் மூவிதமும் கலந்திறங்கும்.

உடற்குறி சரீரவண்ணக்குறி கண்டத்தொனிக்குறிகண்களின்குறி நாவின்குறி மலக்குறி நீர்க்குறி நாடிக்குறி ஆக எண்வித பரிசைஷயில் நீர்க்குறியை விபரிப்போம்.

இரத்தக்குறி சிமை அத்திப்பழநிறம் இரத்தக்கொதிப்பின்குறிசிவந்தநிறம்.

பித்தக்குறி கொடிமாதுளம்பழம் மாதுளம்பழம்பித்த மதிகரித்தகுறி மஞ்சள்நிறம்.

இரசக்குறி குங்குமப்பூவைபோல் வெளுத்தசிவப்பு இரசமதிகரித்தகுறி வெளுப்புநிறம்.

வண்டல்குறி கருத்த ஆகாயநிறம் வண்டலதிகரித்தகுறி கறுப்புநிறமாகும்.

ஆகநீர் மேகத்தால், ௪, ம் பித்தத்தால். ௯, ம் அய்யத்தால், ௰, ம் ஆகநீர் வியாதி, ௨௰. இவைகளிலனேகவியாதிகள் உற்பவமாகும் அன்னீர்களின் பேதங்களை பஞ்சலக்ஷணமும்காட்டிய நீர்க்குறிசாத்திரத்தைப் பார்க்க விபரமாகவிளங்கும்.

### ரோகங்கள் அணுகும் விபரம்.

உதிரரோகம் பலவழியாய் நரம்புகளிலிருந்து வர்னம் கெட்டு காடுகட்டி மோதுகளில்தங்கி பலவாறுன ரோகங்களைவிளைவிக்கும்.

மகோதரம்- அக்கினியதிகரித்து நீருண்டாகி தேகம்கனத் வயிற்றில் வாய்வும்சலமும் கோர்த்துப்பெருக்கும்இராக்காலத் நெஞ்சுவறண்டு தாகிக்கும்.

சோம்பல்-தேகம்வெளுத்துவற்றி மார்பின்கீழ்வயிறும் காலும் வீங்கித் தாகித்துப்புளிப்பு மீதிச்சையாகும்.

பிறகீர்க்கோவை- தேகத்தில் அக்கினி அதிகப்பட்டு நீர்கோர்த்து கண்டவர்பயப்பட வீக்கமாகும்.

வெப்புபாவை- வயிற்றில் கட்டியுண்டாய் இடபுறத்தில்புரண்டு சாலேமுட்டி உதிரப்பொருமும் அன்னதுவேஷமாகும்.

கௌசி - நடுவயிற்றிலாவது வலதுபக்கத்திலாவது கட்டி போற்றி ரண்டு வலிந்துவயிறு ஊதிவலிக்கும்.

நீராமை- ஆமைபோல் வயிற்றில்கட்டி யுண்டாய் உடல்முறுக்கி அக்கினிசுவாலையாய் அன்னதுவேஷமாகும்.

பீலிகை- வயிற்றில் சலேப்பற்றி குழவிபோல் திரண்டுகுறுக்கேயி ருந்து புரளும் மேலேறும் உடல்வற்றும்.

பெருவயிறு- தேகம்வெளுத்து வற்றிக்கருவிகள் மந்தித்துவயிறு பெருக்கும் மலந்தீயும் அன்னஞ்செல்லாது.

பெரியோரைப் பழித்தல் சிவசேந்தை வதைத்தல் இலை பூ காயுள்ள மரங்களை வெட்டியதாலும் வரும்.

பீனிசவகை, அ-ம் மூலத்தில் கனதிலதிகப்பட்டு சிரசில் நீர்தங்கி நாசிவழியாகவருவன.

வாதபீனிசம், நாசிவறளும் நீர்வடிந்து சளிநாற்ற மில்லாமல்வரும்.

பித்தபீனிசம் - நாசிவழியாக மஞ்சள்நிறமாய் சளிவடியும் புலால் நாற்றமாகும்.

சிலேத்மபீனிசம் - நாசியை மாறிமாறியடைத்து முத்துபோல் நீர் வடிந்து நாறும் குளுக்காகச் சளிவிழும் நாசியில் ஊசிபோல்குத் தும் கண்ணில் பீளைசாரும்.

நீர் பீனிசம் நாசியில் நீர்வடியும் மழைகாலத்தில் பிடரியும் முகமும் ஊறலாகும் அடிக்கடி தும்பல் தலைகனத்துவலிக்கும்.



சீழ் பீனிசம் கபாலத்தில் அதிகவெப்பம் கொண்டு கபால முதல் நாசிவரையில் புண்ணாய்ச் சீழ்வடியும், தலைவலிக்கும்.

உதிரபீனிசம் கபாலத்தில் வட்டவிட்டமாய் புண்ணாய் நாசி வழி உதிரம்வரும் தலைவலிக்கும்.

சிராய் பீனிசம் நாசியில் சருள்ளிகூடுபோல் சீழ்திரண்டுவ ரும் மணம்தெரியாது விடாமல் தலைவலிக்கும்.

நேத்திரவியாதிகள் வாதகோபத்தால் கருவிழியில் சயடு பித் தகோபத்தால் இமையோரத்தில் டசு கடைக்கண்ணில் டகு அக் கோபத்தால் வெள்ளைவிழியில் உம ஆகவருபவை சயசு.

நவமூலவிபரம் உள்மூலம் அபானத்தில் சதைவளர்ந்திருக் கும் பிரமூலம் பவனவாயில் கத்திபோலிருக்கும்.

இரத்தமூலம் முளைவெளிவந்து உதிரம்வடியும் சீழ்மூலம் அடிவயிறு நொந்து மலத்துடன் சீழிறங்கும்.

மூலபாண்டு சரீரம் ஊதி வயிற்றில் மலம்கட்டும் முளைமூலம் வெளிதள்ளி மலமிறங்கும்.

வாதபித்த சிலேத்மத்தால் மூலமானது மேற்கண்டவைகள் மிசிரமாகவிருக்கும்.

### அதிசார விபாம்.

வாத அதிசாரம் வயிறுபொருமி சரீரம் வாடும் மலம்கருமை யோடு நுரையாகக்காணும்.

பித்த அதிசாரம் மலம் பசுமையோடு சீதம் ரத்தம் விழும் அபானம் கடுக்கும்.

சிலேத்ம அதிசாரம் மலம் வெண்மை சீதம் நுரையாகக் காணும்.

சுர அதிசாரம் சுரம்காயும் வயிறுகழியும் சீதரத்தம் விழும்.

அசாத்திய அதிசாரம் மலம்ஊன்போலும் தேன்போலும் கரி போலுமிறங்கும்.

கிராணி (சு) க்கு விபரம் மூலகிராணி சீழ்கிராணி நீர்கிராணி வாயுக்கிராணி குசிகாகிராணி அசீரணகிராணியாம், மாமிசம்தின்

னல் கற்பழித்தல் புண்ணியமழித்தல் நீரில் மலம்விடல் பூமரமழித்தலால் வரும்.

காமாலை வருமாறு உதிரங்கெட்டு தசைவெளுத்து சரல்கருகித் தசைகளில் இருமிகளாய் மாமிசத்தைத் தின்று மஞ்சள் நீர் கொள்வதன்றி பலவித வியாதிகளை யுற்பவம் செய்யும்.

சோகையானது பாண்டுரோகத்திலிருந்து நீர் கெட்டு சோகையாகும்.

## கண்ட மாலை.

மேகநீரால் நரம்புவழியாய் உதிரங்கெட்டு கட்டி போல்திரண்டு ரணமாகிக்கண்டத்தைசுற்றி யரிந்துத் தடித்து வெடித்துப் புரையோடும்.

சுரம் நீரிலுள்ள செந்துவை ரவியில்போடல் சுடல் சதையறுத்தல் பசிக்கு தாகம் அன்னம்கொடாமை சூரிய நமஸ்காரமில்லாமை.

சுரம் மூன்றுக்கு விபரம் இதில் அஸ்தியைப்பற்றிய சுரமானது தாகமிருந்து தேகம் வெளுக்கும் குளிர்ச்சியாய் ஒவ்வொரு நேரம் சுரம் மிகுதியாய்க்காணும்.

உதிரத்தைப்பற்றியசுரம் அதிகமாய்க்காய்ந்து பிளப்பு வியர்வை மூர்ச்சை சித்தபிரமை உடல்நோகும்தாகிக்கும் மாமிசத்தைப்பற்றிய சுரம் காய்ந்து அதிக சுவாசம் மூர்ச்சை மயிர்கூச்சு ஆயாசம் நோக்காடு நமைச்சல்.

## கொடிச்சுன்னம்.

சாற்றுகிறேன் பிறப்பிக்கும்போதுபிண்டம் தன்னுடனே
பிறந்தானோர் தனித்துலத்தி.
பேத்துவோ மிதுக்கண்டால் சகலநோயும் எந்தவழி போகு
மென் றேகும்பாரு.
கூற்றுவனு மில்லையப்பா குலையுமில்லை குருடருக்கும் கை
யதுவும் கூடும் கூடும்.
பார்த்துவரப் பின்னாலே யுன்னைக்கண்டால் பயித்தியமும்
பிணிமூன்றும் பறக்கும்பாரே.

அப்பனே யதையெடுத்துச் செய்யுமார்க்கம் அறைகிறேன் யகன்றசட்டிக்குள்ளேவைத்துத், துப்புரவாய்த்தோடையிலைச்சாறு



காழி சுண்டவிட்டுப் பிறகெடுத்துப் பற்பம்பண்ணிச், செப்பியே நோய்க் கணுவளவு தாக்கிப்பாரு செகசாலவைத்தியமும்மைக்குள்ளாச்சு, தப்பிதமுமில்லையடா மறைத்தநூலை தயவாக வுந்தனுக்குச் சாற்றினேனே.

## எக்கு தங்கசிந்தூரம்.

நாட்டு எக்குபொடி ப-க, தங்கபொடி ப-வ, இரண்டையும் தேய்வுபடாக்குழி கல்வத்திலிட்டுப் பச்சைகலப்பை கிழங்குரசத்தால்ச—சாமம் அரைத்து பில்லைகட்டிகாயவைத்து ஓட்டில்வைத்து சீலைசெய்து கோழிபுடமாகப் புடமிடவும், எடுத்து மேற்படிரசத்தினால் ஒவ்வொரு சாமமாக அரைத்து முன்மாதிரியாக புடம்-உக, இட குங்குமம்போல்சிவந்துவிடும், இதைத் தேனில் அரிசியெடையிழைத்து இருவேளையாக மண்டலம் கொள்ளவும், காப்பன் பதார்த்தம் மச்சம் கடுகு நல்லெண்ணெய் நீக்கவும், ஆவின்பால் சர்க்கரைச் சேர்க்கவும், தேகம் சிவந்து நரம்புகள் வலிவுபெற்று திரை நீங்கி விசேட பலனைக்கொடுக்கும்.

வியாதிமூலாறு விளங்கிய குட்டங்கேள்
சுயாதிகிரந்தி சுமூன்மேகத்தா லாறும்
பயாதிமன்றூணி பலவண்டி ருலெட்டு
நியாதிபுகழ் நாளாய்நிறைந்தன குட்டமே.

முன்னாளில்செய்த குறைகடினத் தாலே
முறையான வெளுப்புவந்த முறையைக்கேளாய்
நன்னாளிற் சிலவிடம்பு செய்பாவத்தால்
நாடிவந்த கர்மத்தால் சிலந்திவண்டு
இன்னாளில் விஷபூச்சு சேரத்தானு
மிசைந்தவிஷ மட்டையுட னெறும்புதானும்
தன்னாளில் மிருகதபுழு விந்தஞ்செய்யான்
தான்கடித்த விஷதோஷம் சாற்றக்கேளே.

கால்தனிலே கடித்தக்கால் திமிருண்டாகும்
கைதனிலே கடித்தக்கால் விரல்குறுகும்
மேல்தனிலே கடித்தக்கால் தடித்துக்காணும்.
மெய்கழுத்தில் கடித்தக்கால் பொருந்திக்காணும்.
சொல்பெரிய தலைதனிலே கடிக்கப்புண்ணாம்
சிறந்தவிரு தொடைதொடுக்கில் பொருந்திக்காணும்.

தொல்பெரிய விஷபூச்சி கடித்தால் தோஷம்
சொல்விடு குறைநோயும் தொகுக்கலாமே.

சரீரத்தில் கிருமிகளால் குட்டம் பெருவியாதி சொரிசிரங்கு
கள் சேர்வதால் அதற்கு அவுடத தினுசுகள் ஓமம் புரசைவித்து
இந்துப்பு மருதோன்றிவேர் பூவரசுகொட்டை சிவநார்வேம்பு பறங்
கிஷ்டி சடாமாசி வாய்விளங்கம் கருஞ்சீரகம் வெப்பாலரிசி கார்
போகவரிசி வாலுழுவை காட்டுசீரகம்தாளகம் காயம் ஆற்றுத்தும்
ட்டி கொடிமுத்து கந்தகாம்பு சர்க்கரை தேள்கொடுக்கு விழுதி
மஞ்சள் மரமஞ்சள் கிலதை வாளம் கஸ்கசா வேம்புகடுக்காய்காடி
பரங்கிசக்கை சதகுப்பை ஆடுதீண்டாப்பாளை கலைசருளி கொச்சி
சிறுநாகப்பூ மைசாக்ஷி அத்தி சீனக்கிழங்கு செங்கொட்டை திரு
பலாதியாம், மேற்கண்ட வியாதிகளுக்கு முன்னதாக கிருமி பூச்ச
களுக்குக்கொடுத்து அவைகளை நிவிர்த்திசெய்து பிறகு அவுடதம்
கொடுக்கவும்.

## முளைமூலம் எண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய் ப-ருய, மெருகன்கிழங்கு ப-ரு,
கெருடன்கிழங்கு ப-ரு, இவைகளை சிறுசாக அறுத்து முன் எண்
ணெய் கொஞ்சம்விட்டு சிவக்கவதக்கி சங்கன்குப்பியிலை நொச்சிக்
கொட்டை காந்தை முருங்கிலை செருப்படை வெள்ளைவெங்காயம்
அத்திப்பட்டை பூவரசுபட்டைபூவரசுபழுப்புவகைக்கு ரசம்படி-வ
இவைகளைக்கூட்டிக் காய்ச்சிவடித்து கருசீரகம், சாபத்திரி வகை
ப-௨, சாதிக்காய் ப-க, பறங்கிசக்கை ப-க, சிவனார்வேம்பு ப-க,
இலைகளை சூரணம்செய்திட்டு வேளைக்கு அரைபலம் வீதமாக-ரு-ள,
நாள் கொடுத்து இரண்டுநாள்சென்று முத்தெண்ணெய் ஸ்நானம்
செய்துவைக்கவும இப்படி மூன்றுதரம் கொடுக்க பத்தியம்.
இச்சாபத்தியம் அல்லது பசும்பால் சீனி அன்னத்துடன் கொடு
க்க மூலத்தில் முளை கரைந்திடும் மேகம் (உயக) கிராந்தி உஷ்ண
வாயு காந்தல்வெள்ளை அரையாப்புகட்டி யிவைகள் தீரும்.

## நீர்கோவை நீராம்பலுக்கு.

வியாதியாளனைக் காலைப் படுக்கையிலிருந்து எழுப்பி உட்கா
ரவைத்து உடனே வெள்ளைவெங்காயரசம் படி (வ) உள்ளுக்குக்
கொடுத்து நாற்காலிமீது உட்காரவைக்க நீராகவிறங்கிநீர்வடிந்து
விடும்.



## பித்தத்தால்வெளுத்த ரோமங்கருக்க.

கடுக்காய் நெல்லிக்காய் செங்கொட்டைவகை மணுகு (க
இவைகளை யிடித்துச் செம்மண்ணில் கலந்துகுழிவெட்டி அதில்
நிறைத்து சலம்விட்டு உறவாகிய பிறகுக் கிள்ளிச் சமானப்படுத்தி
பூவெடாத கரிச்சாலைச் செடிகளை நட்டு சலம்விட்டுவர இலைகள்
உதிர்ந்து கருப்பாக இலைவிடும், காலையில் மூன்றுஇலையாகமண்ட
லம் உட்கொள்ள புளி கைப்பு காரம் மச்ச மிவ்வகைகளை நீக்கவும்.

### மலசலக்கட்டுக்கு மாத்திரை.

இரசகற்பூரம் ப.௩, பூநீக்கிய லவுங்கம் ப, தெ, ஓமபொட்டு
ப. தெ, கூட்டி துமட்டிக்காய் ரசத்தால் யஉ, ஜாம மரைத்து பட்
டாணிப் பிரமாண மாத்திரை செய்து சோய்பு-ப, க, திராக்ஷி-ப.க,
கியாழம் செய்து அதிலிட மலசலம் உடனே யுடையும்.

### ஸ்திரீபோக லேகியம்.

பூமிசர்க்கரைக் கிழங்கு, தோ-ய, அமுக்கராங்கிழங்கு-தோ
உ, பூனைகாலிவிரை-தோ-உ. நீர்முள்ளிவிரை, தோ. உ, ஆத்திவேர்
சிறுநாகப்பூசாதிக்காய் சாபத்திரிலவுங்கம் லவங்கபட்டை யேலரிசி
வேலன்கோந்து இலவன் பிசின் வால்மிளகு வெந்தியம சாலேமி
சிரி சீயாமுசிலி சிமைத்தண்ணீர்விட்டான்கிழங்கு ருமஸ்தகி வெ
ள்ளைகுன்றிமணி பருப்பு வகை, தோ-க, பாமனைசு பேதி, தோ-க,
இவைகளைச் சூரணம்செய்து குங்குமப்பூ மாஷா, உ. தேனில்
குழைத்துக்கொள்ளவும், நல்லதேனைக்காய்ச்சி அழுக்கைநீக்கி அதில்
சூரணங்களையிட்டுப் பிசைந்து வேளைக்கு இலந்தன்காய்பிரமாணம்
புசித்து ஆவின்பால் புசித்துவரவும்.

### சம்பங்கி எண்ணெய்.

கழுவியாடிய என்னெண்ணெயைச் சாடியில்விட்டுச் சம்பங்கி
ப்பூ விதழ்களாகவிட்டு வால்மிளகு கோரைக்கிழங்கு கஸ்தூரிமஞ்
சள் பூலாங்கிழங்கு கோஷ்டம் அகிற்கட்டை சமனாகத் தூள்செய்
திட்டு உருத்துமாவு கவசம்செய்து பெரியபானையில் அரைக்காம்
சலம்விட்டு அதின்மீது, உ-விரற்கடை சாடிநிற்க டோலாந்திரம்
கட்டி கய-நாழிகை எரித்து எடுத்து வடித்துக்கொள்ளவும்.

### குழந்தைகளுக்குச்சகல மாந்தஎண்ணெய்.

முத்தெண்ணெய் ப-ருய, துளசி முசுமுசுக்கை உத்தாமணி
சிலந்திநாயகம் தேள்கொடுக்கு செருப்படை மையாந்தகரை மணத்

தக்காளி கஞ்சாங்கோரை கொஞ்சியிலை வெள்ளறுகு பிரமியிலை யிவைகள் ரசம் படி (அரைக்கால்) குமரிமடல்சாதம வரகுவைக் கோலில் வெதுப்பியெடுத்த ஆறு ஆற்றுதுமட்டிககாய் ரசம்விட்டுக்காய்ச்சிச்சேறுபதமா யிருக்கும் சமயம கருஞ்சீரகம் வெந்தியம் கோஷ்டம், வசை ப-௨, செண்பகமொக்கு வி-௩, க, பூண்டு ப, த யிட்டு பதத்தில்வடித்துத்தக்க படி, வ௨,ஞ, பலம் வீதமாகக்கொடுத்து, மாலை மிளகு சாம்பலாக்கி துத்தியிலை வெந்தியம் வெங்காயம் பொழமிட்டுக் கொடுக்கவும் சகல மாந்தமும் தீரும்.

குழந்தைகள் அள்ளுளவ்கணை.

சிற்றாமணக்கு எண்ணெய்-ப-௬-ல்-௧௨-ப, வெப்பாலன் பால் விட்டு வெங்காயரசம்-ப, ௧௨, கருஞ்சீரகம்-ப, (அரைக்கால்) கடுகுரோகணி, ப. (அரைக்கால்) கூட்டிக்காய்ச்சி வடித்து பால்குடிக்கும் குழந்தை யாயிருந்தால் வ-ப. விதம் ௫ நாள் கொடுத்துத் தாயாருக்குப்புளி யில்லாமல் பத்தியமிருக்கச்செய்யவும்.

கிரந்திவகை நான்கும மேகநீரால் கருங்கிரந்தி செங்கிரந்தி ஆலங்காய்கிரந்தி கள்ளிப்பூகிரந்தியுண்டாகும்.

தலைவலிசிரசில் மூளையில் நீர்தங்கிநரம்புகளில் அக்கினி சென்று அடித்தலுடன் நோகும்.

வயிற்றுவலி மூலத்தில் கனலேறிச்சூடுகொண்டு குடல்முறுக்குதலால் நோயுண்டாகும்.

குட்டம் (௧௮) ம் ஸ்திரீகள் கிரந்தி மேகத்தால்வருபவை (௬) மண்வளியன் வண்டு பூச்சி எலிகடிகளால் வருபவை (௮) சரீரத்தினுள் கிருமி புழுக்களால்வருபவை (௪) சீவவதை தாய்தந்தை மனதுநோகச்செய்தல் தெய்வவுருவைபழித்தலும் பெரியோரைப்பழித்தலாலும்.

பித்தரூபம் காசம் மந்தாரகாசம் விஷபித்தகாசம் இரத்தகாசம் சுவாசகாசம் இவைகள் மூலத்தில் அனலதிகரித்து மூளையில் நீர்கசிந்து நெஞ்சில் சுவாசம் சுவரி கபத்தை உறையச் செய்துவிடும் கடன்வாங்கி கொடாததால் நேர்ந்தவை.

சூலை, விசைநரம்பில் வெப்பம் கொண்டு தமர்விம்மிதமாசு பற்றி உதிரம்கெட்டு விசைநரம்பை மடக்கிக்கொள்வதாம்.

குன்மம், நெல்உமிகல் யுண்பதால் சோற்றைச்சேர்ந்துகுடலில் மாசு அதிகரித்து அதுபுரளும்போது கிருமிசார்வதால் நோகும், மாசு நிவர்த்திக்க நீங்கும்.



...த அய்யவலி சத்திபெரி குன்மசூலையென (௭) விதம் ...றிய குடிகெடுத்தல் பழித்தல் தானமில்லாமையிநா...ண்டதினுல் வருபவை.

...சாகை, வாயு வெழும்பி யீரல்வெந்து சரீரமெல்லாம் வெளுப்பேறி உதிரம்வற்றி அடிவயிறுகனத்து தாதுகெட்டு பசிதணிந்து கைகால் ஓயும்.

சன்னி வருபவை மூலத்தில் சிங்குவையும் தீ சலம் வாயுவும் கூடி நரம்புபின்னி யெழும்புதலால்.

கைகால் குடைச்சல் முடக்குவிக்கம் வருபவை குழந்தை மரம்வெட்டல் சீவஜெந்துவின்கைகால்முறித்தலால்வரும் (௫)வலியும் ஊர்வனவும் பறவை பட்சி ... ...ான்ற தோஷத்தால்வரும்.

௧௮, பித்தம், பயித்தியம், ... ா நிந்தைசெய்தல் தலங்களையழித்தல் தூஷணித்தல் ஸ்திரீ... ர் கெர்ப்பநோய்கள் விந்துவை யழித்தல் சிசுவைமரித்தல் கன்றுக்குப்பால் விடாமல்செய்து இளம்பயிரையழித்தல் பூபிஞ்சியை அழித்தலால்வரும்.

பாண்டு நோய் தாய் தந்தைமனம் நோகல் மனிதரை வம்பு செய்தல் ஆங்காரம் பொய்பேசலால்வரும், சிரநோய்கள்கோபம் பொய்வசனம் தூஷணம் இடம்பாகப்பேசல் சீவருக்கு நஞ்சிடுதலால் வரும்.

காப்பன்வண்டுநா, குருதூஷணம் வழியில்முள்ளடைத்தல் மரங்களை பூவுதிர அடித்தலால்வரும், பிள்ளை கண்டமாலை ஆயுதங்களாலடித்தல் கல்லெறிதல் உயிர்களைச் சுடுதலால்வரும்.

கண்ணோய் (௯௰)ம் மாதர்களை யுற்றுப்பார்த்து மோகித்தல் வதைப்பவரை விலக்காமை ஆலயம போய் கடவுளைத்தொழாததாலும மன்னுயிரை தன்னுயிர்போ லெண்ணாததாலும் வரும்.

ஆனந்தவாயு உயிர்களைக்கட்டித் தாக்கி அறுத்தல் பசுவையடித்தல் குடல்களைக்கீறி வெளிகண்டதாலும்.

சந்திரம்செய்ய ஆகா திதிகள்.

சீர்பெறு பிரதமை சேரும்பெருவிரல்
நேர்பெறுமுள்ளங்காலது துதிகை
திரிதிகைமுழங்கால் சேர்ந்திடுமென்க
சவுத்திபெருந்துடைதானியபஞ்சமி

குய்பத்திடத்தே குடியிருந்திடுமாம்
அய்யமேசஷ்டி யமர்ந்திடுமேநாபி
சப்தமிமுலையில் தானிருந்திடுமே
யொத்திடும் அஷ்டமியோதி ஞெய்காத்தில்
மெத்திடுநவமி மேவியகழுத்தில்
அதாந்தசமியிலாகு மவ்விடத்தே
யேகாதசியி லிருந்திடும்நாவில்
துவாதசியில் துயின்றிடும் நெற்றி
திரியோதசியில் சேர்ந்திடும்புருவம்
சதுர்த்தி யுடரி தானிருந்திடுமே.
உதித்திடும பூ ... யும்
செப்பியவமுர் ...
சத்திரம்பண் ... நாய்கள்
கொப்புளித்தி ... ம்
தப்பிலா அரவம தானகடிதமடிநும்
யட்டைகடிக்கினு மடிதடிசிலந்தியும்
வயிற்றில் பிணியெனும் மரணமதாகுமே
காசினிதனிலே வைகவிஷதாரி
திதிகளையறிந்துச் செய்திடபலிக்கும்
மகிழ்பெருமுனிவர் மகிழ்ந்துரைத்தனரே.

மார்பதாம்நெற்றி வளரிடது புயமுச்சி
சீர்வலததாம்நாபி சில்லோதிக்—கேர்பெருகும்
அருக்கநாட்கொண்டு சரியாகுமட்டும்
குறியிற் சுருக்கமெனச்சொல்.

## முப்பு.

அப்புவேமுப்பு வல்லதுவே றென்றுகுமோ
ஆவதற் கியல்போ
றப்புகெட்டவனே உப்பினைப்பிடித்தால்
சூதமும் புரைகழன்றுடும்
தப்பில்லைவேதைப் பாய்ச்சலாம்யோக
சாதனைசெய்திடற் கெனவே
பற்பமுமொன் றெளிதினுரைத்தனன்
பொதிகைபருப்ப தத்தனிலிருப்பவனே.

என்னவேவானத் திடியினிலொன்று
கன்னியமான கடல்தனிலொன்று



பொன்னெனப்பூக்த பூமியிலொன்று
முன்னவர்சொன்ன முப்புவிம் மூன்றே.

## அகத்தியர் சாலச் சுருக்கம்.

எடுத்ததொரு ரோகமெல்லாம் தீர்ந்துபோக
வென்மகனே செந்தூர மியம்பக்கேளு
தடுத்ததொரு லவணத்தைத் தண்ணீர்விட்டு
தயவாகப் பத்துதரங் காய்ச்சிக்கொண்டு
எடுத்ததனை யாட்டிடவே மருந்துகேளு
உத்தமனே துரிசிகெந்தி லிங்கந்தானும்
எடுத்ததொரு வுப்பொன்றுக் கரைக்கால்போடு
போட்டரைப்பாய் குமரிநீர் பொழ்தலையின்சாறே

பொடுதலைச்சாற்றானவலை உமிநீர்விட்டு
சாதகமாய் ஒவ்வொன்றுசாமமாக
நாட்டடங்க சாறதனி லாட்டிவாங்கி
நலமாகப் பில்லைதட்டி ரவியில்வைத்து
யோட்டில்வைத்து ஓடுகொண்டு சீலைசெய்து
ஒருபுடமாய்க் குக்கிடத்தில் நீரிப்போகும்
வாட்டமாயிருக்கவென்றால் வைத்தியரேகேளு
வியாதியென்ற வகையெல்லா மழிந்துபோமே.

போட்டடா பூபதியுமிதற்கு யீடோஞ்ணமாஞ்
செந்தூரமிதற்கு மீடோ
நாட்டிலே யுள்ளதொரு வயித்தியர்க்கு
நாடிவரும் நோய்களுக்கு மிதுவேயாகும்
தேடியதோர் செலவுமில்லை செந்தூரத்தால்
செயமான காலனைத்தா னெழுப்பலாகும்
கூடியதோர் பிணமெழுந்து பேசக்கேளு
குணமாகச் சிலாகையொன்று செய்திடாயே.

செய்திடுவாய் செம்பாலும் வெள்ளியாலும்
துவளாயிட பருமனப்பா நீளங்கேளு
அய்யாறு விரல்நீளம் ஆண்பிள்ளைக்கு
அரிவையர்க்கு எட்டுவிரல்நீளமாகும்
பைய அந்த யோனியிலே யேற்றிக்கொண்டு
பணவிடைதான் செந்தூரஞ் சூதப்பாதி

வெய்யவனைப் பார்க்குமந்த மூலிச்சாறு
 விட்டுநீ பிரணவத்தைச் செபித்திடாயே.

செபித்திடுவாய் ஆயிரத்தெட் டுருதானப்பா
 செத்தபிணமெழுந்திருந்து வார்த்தைபேசும்
பையஅந்த சலாகையதை வாங்கும்போது
 பண்டுபோ லிருந்திடுவாள் விதிதான்தீர்ந்தால்
மெய்யாக விருக்கவென்றால் எழுந்துபோவாள்
 வேதாந்தசித்த ரெல்லாம் மெச்சினார்கள்
கையடக்க மிதுகுருவும் கொண்டோர்க்கப்பா
 காசினியில் மாந்தருக்குக் காட்டொணாதே.

## கொள்ளைநோய் சங்காரன்.

வாந்திபேதி லேக்கியம், திரிகடுகு சிந்தரத்தை லவுங்கம் வகை ப. (க) சூரணம்செய்து லிங்கம் வி - நி. (க) இரசசெந்தூரம் வி - நி. (ஏ) வீரம் வி - நி. (உ) பூரம் வி - நி. (வ) கூட்டித் தேனில் (ச) சாமமரைத்து லேக்கிய பதமாய் எடுத்துப் பேதியும் வாந்தியும் கண்டவர்களுக்கு சுண்டக்காய்பிர பிரமாணமாக மூன்றுதரம் கொடுக்கவேண்டும், தாகமானால் அன்னகாடி கொடுத்து வரவும். ஆகாரம் புழுங்கலரிசி நொய்கஞ்சிசெய்து லவணமிட்டுக்கொடுக்கவும், சீதளமிருந்து விட்டிருந்தால் நேத்திரத்திற்கு இஞ்சிரசம் கலிக்கமிடவும்.

### புலத்திய மகாமுனியின் நாலிற்கூறிய உப்புச் சுன்னம்.

வாதியாய்புவியில் வாழ்வதற்கரிய மவுனமாங்கரியுப்பு
 கட்டு
வருத்திடும் தெளிவாய் வகையதாயுரைக்க மகத்துகள்
 மறைத்திடும் சூஸ்தலம்
பேதையென்றுலகிற் பெருத்திடும் மூலிப் பிரகாசமாங்
 குகினையினடிதான்
பிரளிடாமூலி தண்ணீர்மிட்டாளெனுமே பெருந்தும்பை
 தாழையுமேனி
நீதியைவகைச்சாறிது சமனதிறை
 தவறாமலிதற்கு
நிகழ்த்திடும்நாலுக் கொருவிதம் கரியுப்பெடுத்துடன்
 சாற்றினிற்கரைத்துச்



சோதியாய் பாகம் தெரிந்துடனடுப்பில் நீயெரித்
 ததுசலம் சுண்ட
செய்கையாய்ப் பொங்கி வருதலில்லாமல் சிறுகவே
 நீயெரித்திடுமே.

சிறுகநீயெரிக்க செலமெலாம்வற்றிச் செனிப்ப
 தில்லாமறுக் கட்டும்
சிறலில்லாமல் சுகிவபோய் சுரடத்திறமதாய்
 வறுத்துடனிருக்கும்
குறுகிடவிதற்கு அரைவிதபாகம் கூட்டிடு
 வெடியுப்புசீனம்
குறையவாதிடிலும் அறுவகைசெய்யடு குழுறவிட்
 டாட்டிடு மைபோல்
அறுவகையரியும் மழுரிதானெனுமே அதிக்கதி
 யாமறுமறைக்கார்
அதுமெழுகதுபோல் வருதலிலெடுத்து மதித
 வட்டதுசெய்து ரவியில்
மறுபடாமறுமே கதிரவன் முகத்தினில்வைத்து
 காய்ந்தறவெடுத் தோட்டில்
வருத்து மேலேரெழுடி. மண்சீலைமருபடா
 தொருமுழ புடமே.

முழுபுடமதனில் மூட்டிவெள்ளிபைத் தாவ்முறிக்
 கிடாமலும் புடமாறி
முதிர்ந்திடாமலும் மலர்ந்து கரியுப்பின் சுன்னம்
 உலகெலாம் விலைமதித்திடலாம்
பழமையுப்பதியார் பதனமாய்வைத்து பரிசை
 வேதைகளுமோயாடும்
பலபலநோயிகள் தீர்இல்லாசுன்னம் பாரினில்
 நினைத்ததமுடியும்
இறைபகல்துப்பின் கட்டுவெள்ளைய வெடித்துநீ
 பொடித்துமுன்சாற்றில்
இளமதாய்க்கரைத்து அப்பின்மேலேற்றி யெரித்திட
 நிதுகண்டும்
பிறைவருகாமல் குழுறவுங்காய்ச்சிப் பின்பதையாற
 வைத்திடுவாய்

பெருமைதானிதற்கு அரைவிதபாகம் பேணியே
வெடிசினமேற்றே.

விதமறவவை நீர்விட்டு நீரட்டிவிடாமல்செய்
நீரதுமூட்டி
விதுமெழுகதுபோல் பதம்வரவழித்து விதமதாய்
வட்டுசெய்திடுபின்
அதமருபத்து சரக்கிதில்மாளும் அருணனில்காய்ச்
சேடுத்ததனை
அடக்கியோட்டனிலதிற வோடதின்மேல்
ஆக்கினைசெய்து மண்சீலை
பதமுடபுடத்தில் பதியவுந்தாக்கிப் பகர்ந்தபின்
ஓடதுமெடுத்துப்
பார்த்திடும் கல்லுப்பது மலர்ந்ததிற பளிங்குதன்
னிறமதாய்ச் சுண்ணம்
சுதனருவதனால் சுன்னம்வந்தெய்தும் சுபஸ்தபுண்ணியம்
செய்தோர்க்கே
சுயாத்துமதுரோகியன்டைகப்புத்துபோல்குவிந்து
சுன்னமுங்கருகிப்பாழாமே.

### தன்வந்திரியார் சண்டமாருதசெந்தூரம்.

சுத்திசெய்த ரசகற்பூரம்-௪, லிங்கம்-௩, வீரம் - ௨, நெல்லிக் காய்செந்தி-௨, இரதசிந்தூரம்-௧, இவைகளை இரண்டுசாமம் கை விடாமலரைத்து பத்திரப்படுத்திப் பணவிடையாகப் பனைவெல்லத் தின் மத்தியில்வைத்து உருட்டி விழுங்கசெய்யவும், ஆறுவேளை சன்னி-௰௩, குட்டம் மகோதரம் பிலிகை குன்மம் வாதம் - ௮௰, கிரந்தி கொறுக்கு காமாலை பிளவை சுரம்-௬௪, விரைவாதம் தனுர் வாதம் சூலை பவுத்திரம் கண்டமாலை கருமேகம் வண்டுகடிகள் யோனிபுற்றும் வியாதிக்குத்தக்க அனுபானங்களில்விட தீரும். வியா திக்குத்தக்க பத்தியமும் ஆயுள்வேத பண்டிதர்கள் வைப்பது.

ரசபாஷாணாதிகளால் அனேக ஔஷதங்கள் செய்து நோயா ளர்க்கு உபயோகப்படுத்தும்படி. சிவகாருண்ணியராகிய சித்தரிஷி கள் சொல்லியிருக்கின்றனர். அவையவைகளுக்குரிய சுத்திகளையும் எடைபாகங்களும் சரீரபேதங்களையும் நோயினளவும் அறிந்து நோய்களுக்குரிய அநுபானங்களில் கொடுத்துவருகிறதில் நோயி னளவைமதித்து எந்தப்பருவத்தில் கொடாமல் நிறுத்தவேண்டு



மோ அதாவயம் நிறுத்தி உடனே அவுடதவேகங்களைத் தணிக்கச் சொல்லியிருக்கும் முறிவுகளைக் கொடுத்துவருவதில் பிணியாளனை யாதொரு துன்பங்களிலும் பொருந்தச் செய்யாமல் வினைக்கேடா கிய துன்பத்திலிருந்து விலகச்செய்யும்.

ஒருமண்டலம் இரண்டுமண்டலம் கொடுக்கவேண்டுமென் றும் பணவிடைகள் களஞ்சியலம் குன்றிஎடை அளவாகவும் ஒரு வேளை யிரண்டுவேளையாக கொடுக்கும்படியாக ஆதிநூல்களில் சொல்லியிருந்தாலும் சுமார் ௰௦௦-ஆண்டுக்கு முன்னேயிருந்த தேகங்க ளுக்கும் இப்போது இருக்கும் தேகங்களுக்கும் வெகுபேதமா கக் குறைவுகாட்டுகிறது ஆதலால் தேகதிடத்தைதக்கண்டு ஔஷத பிரமாணத்தைக் குறைவுபடுத்திக் கொடுக்கவேண்டும்.

அன்றியும் ரசபாஷாணகெந்தகம் சம்பந்தநிற்றுகைகளின் குண குணங்களையும் மூலிகாதிகளிலுள்ள பூமருதலியவகைகளின் குணங் களையும் உபரசங்களின் குணங்களையும் கூடியவரையில் பண்டிதர் கள் அநுபவத்திற்கு வந்திருக்க வேண்டும். அவ்வகையறியாமல் உபயோகப்படுத்துவதில் அநேகமே விஷமாகும் ஆதலால், கடவு ளாக்கினைக்குட் படவேண்டுவது அவசியம்.

### குங்குமப்பூ குளிகை.

குங்குமப்பூ ப. (௧) திரிகடுகு திரிபலை சாதிக்காய் கிராம்பு ஏலம் சந்தனத்தூள் தேவதாரம் கடுகுரோகணி வகை, ப. (௧) பழ ரசத்தில் (௩) ஜாமம் இஞ்சிரசத்தில் (௪) சாமம் கண்டங்கத் திரிபழரசத்தில், ௨, ஜாமமாகவரைத்து பயறளவாக மாத்திரை செய்து தக்க அநுபானங்களில் தேனம்வரட்டி இவைகளுக்கிடவும்.

### சாம்பிராணி பதங்ககுளிகை.

சுத்திசெய்த பதங்கம்-ப. ௫, கிராம்பு-ப. (காலேஅ ரைக்கால்) கோரோசனை ப. (அரைக்கால்) இவைகளைக்கல்வத்தில்வெற் றிலை ரசத்தாலரைத்துக் குன்றிபிரமாணம் தேகங்களுக்கு மிளகு நாள்செய்யிலும்சேர்க்கட்டுக்குச்சர்க்கரையிலும் தேனங்களுக்கும் தேனிலும் விட.

### கோரோசனை மாத்திரை.

கோரோசனை, ப. ௫, சூதம் கூடன் திப்பிலி லவங்கம் கோஷ்ட டம் ஜாபத்திரி சுருக்கிரகம் சாதிக்காய் ஏலம் மதுரம் அக்கரா ரம் கஸ்தூரிவேர் மிளகு வகை, ப. (அரைக்கால்) மாத்தக்காளிர சத்தால் ஒருசாமமரைத்து பயறுபிரமாணம் தேனிலிட பரிதாப பங்கள் தீரும்.

### சுரசன்னி யிவைகளுக்கு அநுபானம்.

வெள்ளெருக்கு மாவிலங்கம் கொடிவேலி முருங்கை இஞ்சி
யிவைகள் வேர்ப்பட்டை ரசம் சுரசம் செய்தும் ஆடாதோடைஆத
ண்டை தும்பை புரசன் கோடகசாலை பொற்றலை இஞ்சி யிவைகள்
ரசம்கூட்டி சுரசம்செய்து தேனிட்டும் கோரோசனை கஸ்தூரி பச்
சைகற்பூரம் குங்குமப்பூ சவ்வாது இவைகளைப் பழரசத்திலிழை
த்து முன்கண்ட வியாதிகளுக்குரிய ஔஷதங்களைக் கூட்டிக்கொடு
க்கவும்.

### சூட்டினால் வந்தவிரைநோய்களுக்கு.

அறுகன்புல்வேர் செப்புநெருஞ்சிவேர் முருங்கைவேர் மிளகு
கோரைக்கிழங்கு வகை, ப. ௨, அரைபடி சலத்தில் வீசம்படியாகக்
கியாழம்வடித்து இதில் வாழைச்சருகு சாம்பல்-ப. ௳, பசுவெண்
ணெய், ப. ௨, இட்டு சுடுகையாகவே இம்மாதிரி மூன்றுவேளை
கொடுக்கவும்- அல்லது உளுந்துமாவு கழற்சிபருப்பின்மாவு வெள்
ளைகுன்றியின்மாவு இவைகள் வகை, ப. வீசம் வெண்கருவால
ரைத்து நோகும்விரையின் மீது பற்றுகப்பூசி அனல்காட்ட நோக்
காடு தீரும்.

### நோயாளிக்கு தசாங்கவத்தி.

அகிற்கட்டை சந்தனக்கட்டை தேவதாரிக்கட்டை செம்பிளிச்
சங்கட்டை கிஷ்ணு அகிற்கட்டை சூரணம்வகை, ப. க, பளிங்கு
சாம்பிராணி,ப. ௨, சிலாரசம் ப. கரு, மட்டிபால் ப. க, யாவும்கூட்
டிப் பன்னீராலரைத்து மயிலாலக்கடி கியாழம்தடவிய குச்சிகளு
க்கு அதைச்சுண்டுவிரல் கனம்பூசி நிழலுலர்த்திக் கொளுத்தி நோ
யாளி சமீபம்வைத்துப் புகைபட சீதளம் பித்தம் மூர்ச்சை சிரோ
பாரம் முகசன்னி தீரும்.

### கண்டஸ்நானமிது வரும்நோய்கள் வராமலிருக்க நசியம்.

ஸ்ரீசந்தனம்அரைத்து உலர்த்தியவை-ப. ரு௨,முதல்தரம் புகை
யிலையைச்சற்று அனல்காட்டித்தூள்செய்தவை, ப. ரு௨, கஸ்தூரிம
ஞ்சள் மரமஞ்சள் லவுங்கம் பச்சிலை சிறுநாகப்பூ செஞ்சந்தனம்
குங்குமப்பூ சோம்பு சுக்கு ஏலம் திப்பிலி மிளகு நெல்லிவற்றல்
சீரகம் குறுவேர் சாதிக்காய் சாபத்ரி அதிமதுரம் வால்மிளகு
கோஷ்டம் வெட்டிவேர் மயிலிறகுச்சடை வகைக்குத் கோலா (௳)
இவைகளைத் தனித்தனி தூள்செய்து யாவும் ஒன்றாய்க் கூட்டி எலு
மிச்சம்பழரசத்தில், ௯, ஜாமம் இளநீரால் ௨, ஜாமம் பன்னீரால்



௨, ஜாமமாக அரைத்து ஒரு தோலாவீதம் வில்லைசெய்து நிழலுல
ர்த்தி பத்திரப்படுத்தி ஒருவில்லையுடன் பச்சைகற்பூரம்சாம்பிராணி
பதங்கம் புனுகு திரவசக்கு மஞ்சாடிசேர்த்து அரைத்து வெள்ளி
டப்பி வில்வகுடுக்கையில் வைத்துச் சிட்டிகையாக உபயோகபடு
த்தி வரவும், சாதாரணபுகையிலை தூள்போட்டுவரும் அப்பியாசி
கள் அத்துடன் சிட்டிகை கலந்து நசியமிட்டு வரவும்.

### சத்தி உப்பு பதங்கம்.

பளிங்குருடன். ப. க, திருநீற்றுப்பத்திரி ரசத்தாலரைத்து
உலர்த்தி சத்திசாரவுப்பு, ப. க, கல்லுப்பு வெண்காரம் வெடிவகை
ப. ௳, வீசம்,ப.ஆவின்நெய்யாலரைத்துச்சிறுலவுங்கபட்டைவால்மி
ளகு ஏலக்காயரிசியயிரவனஸ்தி வகை, ப. ௳, ஒன்றாக்கிச்சர்க்கரை
அத்தர், ப. ௳, புனுகு, வி-நி. க, கூட்டிப்பிரைத்து பீங்கானிலிட்டு
மேல்பீங்கான்மூடி உளுந்துமாவு கவசம்செய்து மணலில், ௬,
ஜாமம் எரித்து பதங்கத்தை எடுத்துக்கொள்ளவும். பண்டிதர்கள்
அனேக வியாதிகளுக்கு உபயோகப்படுத்துவர்.

### இங்கிலீஷ் ஔஷதம்.

தேகவலிவிற்கு. மில்க்கென்னும் பசும்பாலில் பல்லிஸ்டாலே
மிசிரி டிறம்சுசிக்பிளவர் ஜாதிக்காய்தூளிட்டுக் காய்ச்சிக்குடிப்பது.

அசீரணத்திற்கு, பெப்பர்மெண்டாயில், ௨, முதல் ௫ துளிவ
ரையில் சர்க்கரையிலும், பித்தத்திற்கு எப்பர்காஸ்டிக் டிஞ்சுடன்
டிஞ்சர்காடமம் டிஞ்சர்ஜிஞ்சிபரிஸ்சுகர் தண்ணீரில்கொடுப்பதும்
சோடா கல்பாதூள் பிஸ்மத் ரேவல்சினி . பாரக்கிஸம், குஞ்சி
வெடை கொடுப்பது.

வாந்திபேதிக்கு. சல்பூரிக்ஆசிட், ௰, துளி சலத்தில் தாமதப்ப
டுத்திக் கொடுப்பதும் குளோராடயின், ௰, முதல் ௰௫, துளிவரை
யில் பிராந்தியில் கொடுத்துவருதலும் இருமல் வயிற்றுவலிநோய்
இளைப்புகுலைநோய்க்குமாகும்.

நீர்சுருக்கிற்கு, பொட்டாஸ் அசிடேட்டெக்கர் பொட்டாஸ்
பொட்டாஸைட்ட்ரஸ் ஸ்பிரிட்ஸ்மிந்தரின் நைட்ரஸைடிஞ்சர் ஆய்
யாசமி கூட்டிக்கொடுப்பதும்.

நீரொழுக்கிற்கு. எகஸ்ட்ராக்ட்பெல்லாடோனா, ௳, கிரைன்
ஒப்பியம் ௳, கிரைன் கொயினைன் மாத்திரைசெய்து கொடுப்பதும்.

வயிற்றிலுள்ளபட்டைகிருமிகளுக்கு, சான்டநின், பெரியவர்க்கு ரு, சிறுவர்க்கு, க, முதல், ௪, கிரைன்வரையில் சர்க்கரையிலும் சிறுகிருமிகளுக்கு கோஷாயகியாழத்தில், ௪, முதல், அ, கூ, ௰, வரையில் எப்சம்சாலட் கலந்துகொடுத்தலும்.

ஒருதலைநோய்க்கு, காஜிபுட்டாயில் தடவுதலாலும் சிலம்மநாயல்தடவுதலாலும் வோலியம்காசுபோவுடர்தடவவும கொயினைவுள்ளுக்குக் கொடுப்பதும்.

வாய்வுகளுக்கு, பட்டாஸ்நயின்டர்ஸ் பொட்டாஸ அயோடைடம் தண்ணீரிலாகிலும் பிராந்தியிலாகிலும் கொடுப்பதும்.

சட்டைகளுக்கு, சிட்டு அயின்டுமெண்டு வெண்ணெயில் கூட்டிப் பூசுவதும்.

வெள்ளைக்கு, கொப்பயபா ௰, முதல் ந௰, துளிவரையில் சர்க்கரையில் கொடுப்பதும்.

குதகவாய்விற்கு, பில்ஆலோஸ்யெப்ட்மர், ரு, கிரைன் புசித்துசலம் புசிப்பதும்.

சொறுக்கிற்கு, காஸ்டிக் டெஞ்சபுளு அயின்டுமெண்டு கூட்டித் தடவிவருவதும்.

கண்நோயிற்கு, காஸ்டிக் அல்தது ஜிங்சல்விஸ நல்லஜலத்தில் அளவாகவிட்டு நேத்திரத்திலிட்டுவரவும்.

சுரங்களுக்கு, கொயினன் சின்கொயினன் உ௨, குன்றி தேனிலாகிலும் கெந்தகதிராவக சலத்திலும் கொயிநடம், உ௨,குன்றி சோடா உ௨. குன்றியும் சர்க்கரையிலும்.

முறைகாய்ச்சலுக்கு, பவுலர்ஸ் ஸொலீஷன்திராவகம் மித்தியாழத்தில், உ, முதல் ரு, துளிவரையில் கொடுப்பதும்.

இருமலுக்கு, டிஞ்சர்கேம்பர்திராவகம், ௰, முதல் ந௰, துளிவரையிலும் டிஞ்சர்சில்லி ௰, முதல் உ௰, துளியும் டிஞ்சர் அய்யாசயி ௰, முதல் ந௰, வரையில் ஸ்பிறீட்அமோனியா அரோமா டிகைச ௰, முதல் ந௰, வரையிலும் டிஸ்பிறிடிஸ்குளோர்பாரம் ௰, முதல் உ௰, வரையில் மார்பியா அசிட்டோகுளோர்ட்டயிஸ ௨, கிரைனும் சலத்தில் கொடுப்பதும்.

வயிற்றுவலிக்கு, டிஞ்சர்ஒப்பியம் ரு, துளிமுதல் ௰ரு, வரையில்டிஞ்சர் அசப்பட்டிடா ௰, துளிமுதல் ந௰ துளிவரையில் சலத்



திலும் சோடா-உரு, குன்றியெடையும் டிஞ்சர்காடனம் ௰, முதல் ந௰, துளிவரையிலும் பெப்பர்மெண்டு திராவகம் க, முதல்ரு,துளி சர்க்கரையிலும் குளோர்டயன் ரு, முதல் உ௰, துளிசலத்திலும்.

பக்கஇழுப்பிற்கு, எம்பிளாஸ்டகம் பெலடோனா தோலில் தடவி நோய்மீதுபோடுவதும்.

விரைநோய்க்கு,டிஞ்சர் அயிடன் பூசுவதாலும் போஸ்தகாகியாழம் காப்பிடம் செய்வதும்.

உள்மூலம் வெளிமூலத்திற்கு, ஐஞ்கொயின்டம் காலிகம் ஒப்பியோபூசுவதாலும் இதில்உதிரங்கண்டால் ஆஸ்ஸிற் என்பதை பேயிட்டண்டு உ௰, முதல் ச௰, துளிவரையில் சலத்தில் கொடுப்பதும்

குடைச்சலுக்கு, லெனிமண்டம் பெல்லடோனா கேம்பர் குளோர்ட்டபாரம் லிக்கர் அமோனியா லெனிமண்ட்டம் ஒப்பியம் இவைகளைச்சேர்த்துத் தேய்ப்பதாலும்.

வீக்கங்களுக்கு, பொட்டாஸ் அஸிட்ஸ்பொட்டாஸ்நைட்ஸ ஸ்ப்பிரீட்ஸயிதர்ஸ் நைட்ரோஸை டிஞ்சர் டிஜிடேலிஸ் யின்புருசன் பக்குஇதுகள் உள்ளுக்குக் கொடுப்பதும் டிஞ்சர் அயோடன் தடவுதலாலும்.

சீதபேதிக்கு, காஸ்டருயல் பேதிக்குக்கொடுத்து ஒப்பியம் யிப்பிகேக்கியூவானுபவுடர் அயின்டஞ்சர் ஒப்பியம் பல்வீஸை நோபல்விஸடோவரிஸ், ௰ரு, கிரைன்ஒப்பியம், ௨, கிரைனும் கொடுப்பதும் பல்வீஸயிப்பிகாக்கம்பவுடர், உ, குன்றிதேனிலும்.

அதிசாரபேதிக்கு, காஸ்டிக் அரைக்கால், கிரைன் அப்பினி ௨, கிரைனும்கூட்டிக்கொடுப்பதும் சில்பேட்அப்காப்பர் ௨, கிரைன் ஒப்பியம் ௨, கிரைனும்கொடுப்பதும்.

நீர்துவாரத்திலடைப்பு காரிவிற்கு, வால்மிளகு வி,—சி. க௨ தண்ணீர்பலம் ௰, ல், கரைத்து ஒரு நாளைக்கு, ௪. தரம்.

இரைப்பைக்குப் பலம்கொடுத்து அசீரணபேதியை நீக்கும். காசுகட்டி, வி-சி. உ௨, லவங்கப்பட்டை, வி—சி. ௨, கற்கண்டு, ப. (முக்காலேஅரைக்கால்) சலம், ப. சு,ல் பாகுசெய்து அதிலிட்டுப் பாகப்படுத்தி,(காலேஅரைக்கால்) முதல் தெ, ப. வரையில் கொடுக்கலாம்.

மார்பில்கபம் உலர்ந்தஇருமலுக்கு, நரிவெங்காயம், வி-நி.(காலேவிஸம்) சுக்குத்தூள் வி-நி. ௧. சப்பு வி-நி. ௧, கமநாயகம் வி-நி. (அரையேஅரைக்கால்)கற்கண்டுபாகில் சேர்த்தரைத்து, ௨, குன்றியெடை மாத்திரைசெய்து, ௫, மாத்திரைவரையில் கொடுக்கலாம்.

காக்கைவலி விக்கலுக்கு, கற்பூரம் குன்றி ௧, பெருங்காயம் குன்றி, ௨, சாருயம் தூளி, ௬, வேலன்கோர்த்து இளகில்கரைத்து ௩௰, மாத்திரைசெய்து நாழிகைக்கொருதரம் ௩, விதம்கொடுக்க கற்பூரத்தை வாயுவு இடுப்புவலிக்கு சாருயத்திலரைத்துத் தேய்க்கவும்.

கில் வாயுவுக்கு, கற்பூரம், வி, நி. ௪. சாருபம்தூளி ௰௫, எள்ளெண்ணெய், ப. ௨௭. யிதிலரைத்துத்தடவ. தாகமடங்க சுட்ட ரொட்டிசலத்தில் அடுப்புகரித் தூளிட்டுக் கொடுக்க அடங்கும் அசீர்ணரப்பம் மார்புளரிச்சலுக்கு கரித்தூள், ௫, குன்றிஎடை உள்ளுக்குக் கொடுக்கவும் ஆசனத்தில் மூலநோயுண்டானால் கஞ்சாஇலை, பிடி. ௧, மஞ்சள்தூள், வி, நி. ௨, எள்ளெண்ணெய் வி, நி. ௨, கூட்டியரைத்துத் தடவவேண்டும்.

சாதம்ஏற்றிக்கொள்வதுடன் தேகவலியும் நிலவேம்பு வி, நி. ௪, கிச்சிலித்தோல், வி, நி. ௧, தனியா, வி, நி. ௭, சாருயம் வி, நி. ௩௨. ௰௩. பலம் வெந்நீரில் கூட்டி இரண்டுநாள் சென்று வடிகட்டி, ௮, வி, நி. யாக இரண்டுவேளைகொடுக்க.

பேதிக்கு, சந்திரமல்லிவேரென்னும் பேதிகிழங்கு ௧, திராக்ஷிஉப்பு, ௨, கூட்டி, ௧. வி,நி. கொடுக்கவும்.

பேதி, அதிமதுரம் வி, நி. ௩௨, திராக்ஷி, வி, நி. ௮, கியாழம் வடித்துக் கொடுக்க பேதியாய் தாகமடங்கும்.

இரைப்புவியாதிக்கு,ஊமத்தம்வேர்நிழலுலர்த்திப் புகைபிடிக்க மார்பினுரையை அறுக்கும் இரத்தம்கட்டியிருக்கும் விக்கத்திற்கு வேப்பஇலையை அரைத்து சட்டியிற்கிளறிக் கட்டலாம், சிறுவர் யிற்றுப் பூச்சிக்கு. பப்பாய்காய்பால், ௧, வி, நி, முதல்-௩, வி, நி வரையில் வெந்நீர்பசும்பாலில் சிறுவருக்குக் கொடுத்து ௩.மணி பொறுத்து ஆமணக்கெண்ணெய் கொடுக்கவும்.

ராசபிளவைக்கு, வேலம்பட்டைத்தோல் தூள் வி, நி. ௨-எள்ளெண்ணெய், வி, நி. ௮, கலந்துதடவ.

எவ்விதவியாதியால் சொக்குக்கும் தலையில் இரத்தமதிகரித்தாலும் கடுகுதூள் ப. ௯௭, கோதுமையாவு ப. ௯௭, காடியில்



நனைத்துக் கூழ்போல்செய்து துணியில்தடவி பாதத்தின்கீழ்கட்டவும்.

காதுமந்தத்திற்கு,பூண்டுதைலத்தைபஞ்சியில்துவைத்து,௫,௬, வேளைவைக்க.

மண்ணீரல்விக்கத்திற்கு, பூண்டுதிரி ௨௰, முசாம்பாம் வி, நி. ௮, அரைத்து சாருபத்திலகலந்து, ௩, நாள் வெயிலில்வைத்து, ௨, வி, நி. வரையில்கொடுக்கலாம்.

பேதிக்கு,நிலாவிரை, வி, நி. ௪, தனியா, வி, நி. ௧, கியாழம் வடித்து திராக்ஷி உப்பு, வி, நி. ௭, யிட்டுக்கொடுக்கவும்.

பீஜவிக்கத்திற்கு கணுநோய்களுக்கு நொச்சி யிலையைவேக வைத்துக் கட்டலாம்.

முடக்குப்பிடிப்பு வினாவிக்கத்திற்கு, நன்னாரி நிலவேம்பு கியாழத்தில் பட்டாஸ்அயோடன், ௨௭, குன்றியெடைவரையில் உபயோகப்படுத்தவும்.

டிஞ்சர்பர்கி கோகூரியாஜூறியசலம் தூளி, ௱,ல் திராவகம்டு, முதல் ௰, தூளி வரையில்கொடுக்க வலிவாரும். முளைமூலம் கரைந்துவிட பல்விஸ்டில்டேஸ்லீஸ், தோ, ௧, கூட்டியரைத்துத் துணியில்தடவி முளைமீதுபோட்டுவரவும்.

சகலபேதியும் நிறுத்த, சூடன், வி, நி. ௧, மிளகு, வி, நி. ௭, சுக்கு, வி, நி. ௭, லவுங்கம், மாஷா, ௧, கூட்டி நல்லஜலத்தாலரைத்துப்புன்னைக் கொட்டைப்பிரமாணம்கொடுத்துமீறுஜலம்கொடுக்க. இப்படி மூன்றுவேளை.

| தமிழ். | இங்கிலீஷ். |
| --- | --- |
| கெந்தகம் | சல்பர் |
| பொட்லுப்புதிராவகம் | நைட்ரிக்ஆசிட் |
| உப்புதிராவகம் | மியூரிஆட்டிக்ஆசிட் |
| சீமைசுண்ணும்பிலாகும் | கார்போனிக் ஆசிட் |
| மரஉப்பு | கார்போநட ஆப்பொட்டாஸ் |
| திராகஷிஉப்பு | கிரிமிட்டாட்டர் |
| சச்சிகார் | கார்போநடை ஆப்ஸோடா |
| இந்துப்பு | ராக்சாலட்டு |
| கருப்புஉப்பு | பிட்லேபான் |
| வெண்காரம் | பொரக்ஸ் |
| நவாசாரம் | ஸால்அமோனியாக் |
| சுண்ணும்புநவாசாரதிநீர் | அம்மோனியா |
| சுண்ணும்பு | லயம் |
| சீமை சுண்ணும்பு | சாக் |
| பேதிஉப்பு | எப்சன்சால்ட் மெக்நிசா |
| படிகாரம் | ஆலம் |
| அபிரந்தாரம் | ரெட்ஆப்சைட் ஆப்ஜரன் |
| அன்னபெதி | சல்பட் ஆப்ஜரன் |
| ஈயம் | லெட் |
| மயில்துத்தம் | சல்பட் ஆப்காப்பர் |
| துத்திநாகப்பூ | பிளவாஸ் ஆப்ஜிங் |
| பால்துத்தம் | சல்பட் ஆப்ஜிங் |
| அஞ்சனக்கல் | அண்டிமனி |
| அஞ்சனக்கல்பஸ்பம் | அண்டிமவுனியல் பவுடர் |
| வரந்திபஸ்பமாவது | அஞ்சனக்கல்திராகஷியுப்புபரம் |

சிறுரிணங்களுக்குக்கடவ, முர்தார்சிங்கி ப. ௪, எள்ளெண்ணெய் ப. ௭வ, சலம்,வி-நி. ௰௬, சிறுதீயில் காய்ச்சி பெய்க்கவும்.

பிளுவுஅயிண்டுமென்ட்,சூதம் க, ஆட்டுக் கொழுப்பு உ, தினாள் அரைத்துக் கொருக்குகளுக்குப் போடவும்.

மெழுக்குபிளாஸ்திரி, மெழுக்கு க, எள்ளெண்ணெய் உ,கூட்டிக்காய்ச்சி புறரிணங்களுக்குப்போடவும்

அக்கினிபிளாஸ்திரி, ஆட்டுக்கொழுப்பு-க, மெழுக்கு-க, செ, குங்கிலியம்-க, தேள்ச-க, கூட்டிக்காய்ச்சி கடிதத்தில்தடவிப்போடக் கொப்புளிக்கும்,



துத்திநாகப்பூ பிளாஸ்திரி, ஷை பூ, வி-நி-ச, ஆட்டுக்கொழுப்பு.வி-நி-உச-கூட்டியரைத்துக்கைகாலில்வெடிப்பிற்குப்போடவும்

செந்தகதிராவகக்களிம்பு, ஷை திராவகம், வி-நி-க,ஆட்டுக்கொழுப்பு, வி-நி-அ, இரண்டையும் அரைத்துத் தடிப்புமீதுதடவக்குணமாகும்.

துஷ்டம் மேகசட்டைகளுக்கு நரசிம்ம எண்ணெய்.

வெள்ளைக் கல்யாண முருக்கன்பட்டை பூவரசன்பட்டை இலவன்பட்டை தனித்தனி இளநீர்விட்டிடித்துப் பிடித்துப் பிழிந்த ரசம்வகை படி-வ, பிரமதண்டு ரசம் படி-வ, துத்தியிலைரசம் படி-வ, சிறுசின்னி ரசம் படி-வ, குமரிசாதம் தேங்காய்பிரமாணம் வெந்தியம் ப-உ,೦, தான்செய்து சிற்றாமணக்கெண்ணெய்,ப-ருமை, கூட்டிக்காய்ச்சி பதத்தில்வடித்துப் பூரம், ப-೦, சேர்த்தரைத்து வேளைக்கு ஒருரூபா எடையாகக்கொண்டு வெந்நீர் சாதம் புசிக்கநாள்-ரு, எ-மறுபத்தியம் அரைஉப்பு புளிசேர்க்கவும்.

துஷ்டம் கிரந்திகளுக்கு சிவசத்தி லேக்கியம்.

சுத்திசெய்த ஆமலகசெந்தி ப-அ, பாலை சூதம் ப-ச, இரண்டையும்கூட்டி. இரண்டுசாமமரைத்து எடுத்து சீனிசர்க்கரை ப-உச ஏலம் கிராம்பு சாதிக்காய் சாபத்கிரி அதிமதுரம் ஓமம் சிற்றரத்தை மிளகு வாலுழுவை சுக்கு சித்திரமூலப்பட்டை திப்பிலி வகை ப-க பொன்வறலாக வறுத்துச் சூரணம்செய்து கூட்டி நல்லதேனைக் காய்ச்சி யழுக்கைநீக்கிச் சுடுகையில்தானே முன்திறுகளையிட்டுப் பிசைந்து லேக்கியபதமாகச்செய்துகொண்டு வேளைக்கு அரைதோலாவிதம் இருவேளையாக ரோகநிதானத்திற்கேற்க வ-೦-க-மண்டலம்கொடுக்க, உப்பு புளி காப்பன் நீக்கிய ஆகாரம் குட்டம் கெர்ப்பரோய் கிரந்தி பக்கபவுத்திரம் கொடிபவுத்திரம் கண்டமாலைவாயுகள்தீர்ந்து தாதுவலிவாகும். முத்தெண்ணெய் ஸ்தானம்.

வெள்ளை அயரேக்கு சுன்னம்.

சிறுகுடுவையில்-க-பலம் பொட்டிலுப்பை அடியில்பாதிபரப்பிமீது ஒருபலம் ரேக்கு அப்ரேக்கைவைத்து மீது பாதி உப்பை யிட்டு வாய்ப்புறம் புளியாரையிலையை யடைத்து ஓடுமூடி. அரைசிசயிட்டு வாய்ப்புறம் ... புடமிடச்சுன்னமாகும் வெண்ணெயில்கொடுக்க,நீர்சுருக்குஅழலை தீரும்.

### வெள்வங்க பஸ்பம்.

சுத்திசெய்த வெள்வங்கத்தைத்தகடாகச்செய்துபொடியாகக் கத்தரித்துக்கோணிப்பட்டையில் உலர்த்தித் தூளாக்கிய கொச்சிலி தூளை இரண்டுவிரல்கனம்பரப்பி வங்கபொடியைத்தூவி அதின்மீது மூலிகைதூளைத்தூவி தலையணைபோல் சுருட்டிக்கட்டி (ரு) படி உமி மத்தியில் வைத்து நெருப்பிடவும். நன்றாக ஆறியபிறகுபொரிந்திருப்பவைகளை எடுத்து அரைத்து வேகாமல் நின்றவைகளை, நீக்கி பற்பமாயிருப்பதை எடுத்து வெண்ணெயில் உபயோகப்படுத்தவும், மேகப்பிணிகளை தீரும்.

### மேகங்களுக்குப் பேரண்ட பஸ்பம்.

பசும்பாலிருக்கும் அண்டவோட்டை பூநீரில் கொதிப்பித்துக் கழுவிஎடுத்து எருமைச்சாணி யடைமத்தில் வைத்து (௭) கிசபுடமிட்டு (ச)-க்கு-(க) பூரம் சேர்த்து வாய்நீராலரைத்து பில்லையை உலர்த்தி (௭) கிசபுடமிட்டுப்பணவிடையாகத்தேனில் (௭) மண்டலம் கொடுக்கச் செமமேகம் தீரும்.

### அழிஞ்சிலை கெந்திபற்பம்.

கரும்பில்லாஞ்சி யிலையை அரைத்து அதற்குள் வைத்துச்சீலைசெய்து (கூ) வறட்டியில்புடமிட்டுக்குன்றியெடையாகவெண்ணெயில் கொடுக்க கொதிப்புகள் நீங்கும்.

### பாலைசூதசெந்தூரம்.

சிறியகுடுவையில் (வ) ப. நெல்லிக்காய் கெந்தியைப் பாலைரசம் பலம் ஒன்றுக்குக் கீழ்மேலிட்டு ஓடுமூடிச் சீலைசெய்து மூன்றெருவில் புடமிட்டு அரிசியெடைத்தேனிலிடவாயு சுரம் தீரும்.

### அன்னபேதிசெந்தூரம்.

மான்செவி கள்ளியிலைரசத்தி லரைத்துப்பில்லையை ம, எருவில் புடம் தேனிலிடவாயு விக்கம் தீரும்.

### பலகரைச்சங்குசுன்னம்.

குடுவையில் எலுமிச்சம்பழரசத்தில் (கூ) நாள் ஊறி அப்படியே (௭) கிசபுடமிட்டுப் பழரசத்தில் கொடுக்க வயிற்றுவலி தீரும்.

### முத்துச் சிப்பி சுன்னம் இருமல் க்ஷயத்திற்கும்.

ஒருபலத்திற்கு வீரக்குன்றி பாஷாணம் குன்றி இரண்டையும் உமிழ் நீராலரைத்துத் தடவி யுலர்த்தி ஓட்டில்வைத்து (௭) கிச



புடமிட்டு எடுத்துத் திப்பிலி ப. (க) திப்பிலிமூலம் சீரகம் சுக்கு ஏலம் சிறுதேக்கு வாய்விளங்கம் கடுக்காய்மிளகு வகை ப. (வ) இளவறுப்பு சூரணம் செய்து சர்க்கரை ப. கரு, கூட்டித் தேனைக்காய்ச்சி அதிலிட்டுப்பிசைந்து கெச்சக்காய் பிரமாணத்தில் முன்கன்னம், உ-அரிசி எடைவைத்துச் சாப்பிட்டு வரவும்.

### சித்தண்டம்.

அண்டத்தைச்சிறியதுவாரமிட்டு அதிலுள் (உம) தாளி உத்தாமணிபால்விட்டு குப்பைமுள்ளிக் கீரையைக் கவசம்செய்து பஞ்சீலைசெய்து (ய) வறட்டியில் புடமிட்டு எடுத்துத் தேனிலிட சீதளம் சுரம் தீரும்.

### சகலவாயுவிற்கு வாதமாருத மெழுகு.

பறங்கிசக்கை ப. (ச) கடுக்காய்த்தோல் ப. (ச) திரிகடுகு சித்துழாபட்டை சித்திரமூலப்பட்டை வகை, ப. (உ) கசகசா, ப. (க) கார்போக அரிசி விழலரிசி வெப்பாலரிசி வகை, ப. ௭, சாதிக்காய் சாபத்திரி ஏலம் லவங்கம் சிற்றரத்தை வால்மிளகு அதிமதுரம் வகை, ப. (வ) சூரணம்செய்யவும் - கோரோசனம் குங்குமப்பூ வகை, ப. (வ) தாளகம், ப. (க) வீரம், ப. (கீ) லிங்கம், ப. (ச) பூரம் ப. (வ) ரசசிந்தூரம், ப. (வ) இவைகளை முன்னதாக வரைந்துயா வும் ஒன்றாகக்கூட்டி திருபலாதி கியாழத்தால் (ச) சாமமரைத்து நிழலுலர்த்தித் தேனால் (கூ) சாமமரைத்துமிளகு பிரமாணம் பனை வெல்லத்தில் வைத்து இருவேளையும் கொடுக்க, புளிநீக்க, நெய் வெள்ளாட்டுவெற்றலாகும், தீரும்வியாதிகள், முடக்குவாதம் குலை மேகவாயு பாண்டுவலி குடல்வாயு சூலைவாயு மண்டைவாயு சூதக வாயு முரல்வாயு மூர்ச்சைவாயு பித்தவாய்வு பாரிசவாய்வு அற்புத வாயு திமிர்வாயு தீரும்.

### கூழ்ப்பாண்ட லேகியம் வெப்பந்தணிந்து தேகம் தணியும்.

ஒருசாம பூசணிக்காயின்மேல்தோலும் விரைச்சோற்றையும் நீக்கி மற்றதைத் துண்டுகளாக்கி (கவ) படிசலம் விட்டு வேகவைத்து சலம்வடித்துக் கொண்டு தண்ணீரும் சதையுமெடைக்குஇரண்டெடை சர்க்கரைகூட்டிப் பாகுவடுத்து சதையைக் கடைந்திட்டு பூனைக்காலிவிரை உ,
கற்புல்விரைபருப்பு (ச) வேலன்கோக் லால்முசிலி-ச, சபேத்முசிலி-க, குல்சேதுசாலம்-உ, வெங்காயவிரை-ச, சல்கம்விரை-க, நீர் து-உ, முருக்கன்பிசின்-உ,

முள்ளிவிரை-க, முள்ளங்கிவிரை-க, சிறுநாகப்பூ-க, நாதரிகருக்-க, நாதரிசுபேத்-க, லவுங்கப்பட்டை-க, இவைநிறை தோலாக்கள் சூரணமிட்டுக் கிளறிவேளைக்கு, ௨-தோலாவிதம், மீன்வகை நீக்கவும்.

## பக்கசூலை கேர்ப்பசூலைக்கு எண்ணெய்.

முத்தெண்ணெய் ப. (௰௨) சலம்விட்டு இடித்துஎடுத்த மிளகு ரணியிலை ரசம், ப. (௰௨) பூண்டுகிரி ப. (௪) கூட்டிக்காய்ச்சிவடித்து ஆள்தக்கபடி (௩) நாள் கொடுத்துவர ஆகும்பேதி வெளுப்பாக ஆனால் நோய்நீங்கிய குறிப்பாம். இச்சாபத்தியம்.

சிவனாமுர்தம் கெந்திருதம் நாபிபொரித்தவெண்காரம் மனோசிலை திரிகடுகு வகை, - கி. (க) முன்னதாக சூதமும் கெந்தியையுமரைத்து மற்றதினுசுகளையும் கூட்டி (௪) சாமம் அரைத்துப் பத்திரப்படுத்தி சுரம் சீதளம் தலைவலி தலைபாரமிவைகளுக்கு நசியம் கலிக்கமுமிட்டுத் தேனில் உள்ளுக்குக்கொடுக்கவும்.

சன்னிகளுக்கு உருக்குமாத்திரை, லிங்கம் வீரம் பூரம் சூதம் லிங்கதொட்டி வகை, வி - கி. (௧) இவைகளை அண்டவெள்ளைக்கருவில்மஞ்சளிட்டுத் தெளிந்தநீரால் ௪, சாமமரைத்துக் கோதுமை போல் மாத்திரைசெய்து உலர்த்தி வெற்றிலைத் துண்டுகளில் ஒவ்வொன்றாய் வைத்து நூலாற்கட்டி ஓலைசுருளுக்குள் வைத்து மீது மணலால்மூடி அதின்மீது ௰௫, வறட்டியில் புடமிட்டு எடுக்கஉருக்குமாத்திரையாக இருக்கும், தக்க அனுபானங்களிலிழைக்கவும்.

## சுகவாந்திக்கு.

அரைக்கால்படி சலத்தில், ௨, மரக்கலான் காவிளையும் முள்ளங்கிவிரை, தோ. க, இரண்டையில் துணியில் முடிந்திட்டுக் கியாழம்செய்து பிசைந்து வடித்து இதில் தேன், ப.க, காடி, ப.க, உப்புக்கல், ௩, கூட்டிச்சாப்பிட்டு, ௨, படி சலத்தில் மனத்தக்காளி வற்றல். தோ. க, அதிமதுரம், தோ, க, துணியில் முடிந்திட்டுக் காய்ச்சி அந்தசலத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகக் குடித்துவந்து வாந்திசெய்து வரவும், முடிவில் ஒருதோலா குல்குந்தில், ௪, மாசரூபவெந்தகிவைத்துக்கொடுத்து ஆகாரங் கொள்ளவும், மறுநாளு மிவ்விதமே கொடுக்கலாம்.

## பசிதீபனத்திற்கு.

ஓமம், ப. க, குருசாணி ஓமம் ப. க, நாகடுகு, ப. க, தூள்செய்து, ௩௦. ப. பனைவெல்லத்தில் பிசைந்து புங்கன்கொட்டை பிரமாணம் புசிக்கவும்.



## நவரத்தினங்கள் நீற்றின பற்பங்களின் குணம்.

மாணிக்கம், சுரம் சன்னிதோஷம் தாகம் மேகம் கண்ணோய்முதலிய நேத்திரரோகங்களனைத்தும்நீக்கும்—வயிரமெனும்ரவை, எப்பிணியும் நீக்கும்—வயிடூரியம், சீதவாதம் சிலேஷ்மம் வப்பம் சூலை குன்மபித்தம் நீக்கும்-கோமேதகம், வாதபித்தம் மலக்கட்டு மந்தாக்கினி நீக்கும்—புட்பராகம், வீரியவிர்த்தியு மழகுமுண்டாக்கும். கெட்டிநற்பவளம், திரிதோஷம் அய்யகபம் காசம் சுரதோஷம் உதிரவாந்திபேதி காக்கைவலி கல்லடைப்பு இருமல் நேத்திரரோகம் தீர்ந்து சுத்தஉதிரம்தரும்—ஆணிமுத்து அஸ்திசுரம் சோபை கண்ணோய் விந்துநஷ்டம் கபம் நீக்கும்—பச்சைமரகதம், மதுமேகம் புலம்பிசாசு நீக்கி தாதுவிர்த்தியாம்—நீலம், வலி மேகம் பித்தம் பாண்டு மதிமயக்கம் நீக்கும் உதிரவாந்தி உதிரபீனிசம்கக்குவான் தீரும்.

## உலோகநீற்றின செந்தூரங்கள் குணம்.

தாம்பரம், விஷங்கள் சன்னிபாதம் க்ஷீணசுக்கிலம் விழிநோய் கோழைகட்டும்-பொன், அய்யகபம் காசம் க்ஷயரோகம் சுவாதீர்ந்து தாதுவை வலிவுபடுத்தும்—வெள்ளி, சலமேகம் கரப்பன் பித்தகபம் மேகம் தாகம் கிராந்தி சூலை மந்தாக்கினி தீரும்—வெள்ளங்க நீற்றினத்திற்கும் இதுவேகுணமாம்.

இரும்பு, பாண்டு வெண்குட்டம் சோபை காமாலை குன்மம் மந்தம் குடற்புண் அதிசாரபேதி தீர்ந்து தாதுவிர்த்தி நாடிகளை வலிவுபடுத்தும். இரைப்பைவலிவு, ரோமங்கள்கருக்கும்.

எக்கு, சோபை கண்ணோய் மந்தம் கபம் பாண்டு தீர்ந்து தேகதிடமும் கருநிறத்தையும் தரும்—காந்தம், சரனுக்கும் மன்னிரத்துக்கும் வலிமைகொடுக்கும், சோகை குன்மம் மேகம் பாண்டு திரிதோஷம் வெட்டை பிரமியம் நீருமை கல்லடைப்பு பாரிசவாயு பிடிப்பு நரம்புகளினிழுப்பு தீரும்.

மண்டூரம், வீக்கம் அஸ்திசுரம் விஷபாகம் சுவாசசயம் பாண்டு இருமல் நீருமை நீர்பெருக்கு மூலரோகம் உதிரவாந்தி தீர்ந்து இரைப்பைக்கு வலிமைதரும்.

நாத்திரகம், மேகம் பேதி அழலை வெட்டை கிரந்தி முளைப்புண் பயித்தியம் படைகள் தீரும்.

காரீயம், விரணகுட்டம் குதவிரணம் சூலை மேகம் சுரம் தீரும்.

இவைகளின் தனிகுணம் இவ்வகைதரும். இவைகளுடன் வேறுதினுசுகளைச்சேர்த்து நீற்றின செந்தூரவகைகளுக்குச்சேரும் தினுசுகள் குணத்தையும் கொடுக்கும்.

வெள்ளி, பூரணசுரம் மரணிஷம் மேகவாதம் பிடிப்பு ஒழுக்கு வெள்ளை உதிரம்பதிக்ஷயம் கோழை விழிநோய் இருமல்அட்டகுன்மம் கிரந்திநீர் சோகைதீரும்—தாம்பரம், ரத்த பித்தம் சன்னிபாதம்வழுமை மகோதரம் கபாதிக்கம் பீலிகம் அகிரணம் வெண்குஷ்டம் இரத்தகுன்மம் வீரணம் கிருமி தாதுநஷ்டம் தீரும்.

பாஷாண வகைகளிற் சிலதினுசின் குணத்தைப் புகலும்.

குணக்கேடுநீக்கிய பாதரசம், நேத்திர நோய் நரம்பு கிரந்தி அஷ்டகுன்மம் கீல்பிடிப்பு மகாவிரணங்கள் பெருவியாதி க்ஷீண வாதம்—இரசகற்பூரம் வாதப்பிடிப்பு பித்தசூலை வயிற்றுநோய் சிலேத்துமவாதம் சுரோணிதவாதம் தீரும்.

சாதிலிங்கம், அதிசாரமருட்சை சன்னிபாதம் அற்புதபுண் அதிமூத்திரகாணவிஷம் இருமல் கற்பன் நாணுக்காய்கிரந்தி மண்டகுஷ்டம் வாதநோய் அந்தர்முகரோகங்கள் தீரும்.

சவ்வீரம், குன்மம் குரநோய் மகாவாதங்கள் தூர்மாமிசங்கள் கீல்பிடிப்பு சோகைரோகம் தீரு.

நெல்லிக்காய் கெந்தகம், மூல குஷ்டம் அல்ஜம் வல்லை கட்டி கவிசை மகோதரம் குந்தநோய் மகாவிஷம் மேகவியாதி வாதசுரம் கபாதிக்கம் தீரும்.

வாணகெந்தகத்தின்குணம், ரசாத்த தாதுகளிற்பிறந்த கிருமிகள்நமைகுஷ்டங்கள் தீரும்.

தாளகத்தின்குணம், சுரம் குஷ்டரோகம் நடுக்குசுரம் க்ஷய காசசுவாசம் துஷ்டவிரணம் தீரும்.

சிவந்தஅரிதாரம், குளிர் சுரம் மகாவாதரோகம் சரீரக் குத்தல் தினவு பிடிப்பு குஷ்டரோகம் தீரும்.

மடலரிதாரக்கறடுகள், சிலைஉடலினூறியவிஷங்கள்சருமகுஷ்டம் நளிர்சுரம் சுவாசம் சிலந்திவிஷம் தீரும்.

மிருதார்சிங்கி சரீரம் எங்கும்பரவும் விரணம்கரப்பன் கிரந்திகுட்டம் மகாவிரணம் தீரும்.



## எலிகளின் நாமமும் அவைகள்கடித்தாலதற்கு ஔஷத பிரயோகமும்.

அரசன் மயிலன்மூலத்திதி சிவப்புகிரியன் குலத்திரியன் பதி பாண்டு புலந்தரி புதன் வரனன் இவை மி க்கும் ஔஷதம் யான்கண்ட நூலில் புகலவில்லை.

திருவடிவிளக்கன் மாரபுத்திரன் உதிரமண்டலி அருணன் குலந்தன் மந்திரி முத்திரையன் உத்திரியன் விரிசெங்கன் விசையன் அலியன் உத்தமன் மிவை மிஉ க்கும் அவைகளின்குணமும் ஔஷதமும் இதினடியிற்காண்க.

திருவடிவிளக்கன் கடித்தால், கண்சிவந்து தேகம்சொரியாகும் கோணக்கிழங்கு என்னும் முத்தக்காசும் இந்துப்பும்தேனில் கொடுக்க.

மாரபுத்திரன், சரீரத்திற்குள் வெதும்பும்எரிக்கும் தலைசுண்டு வாய்நாற்றமாகும். அதற்கு வாகைப்பட்டையும் அதின் விரையும் தேனில் கொடுக்க.

உதிரமண்டலி, சிறுநீர் இரத்தம்போலிறங்கும் கடிவாயில் வட்டம்போலிருக்கும் அதற்கு மஞ்சள் பற்பாடகமும் நெய்யில் கொடுக்க.

அருணன், உடம்புகருக்கும் இருமல் தேகமிளைக்கும். அதற்குமுத்தக்காசும் பற்பாடகமும் தேனில் கொடுக்க.

குலந்தன், உடம்புகுளிர்ந்து நடுக்கங்காணும். அதற்கு செஞ்சந்தனம் தேனில் கொடுக்க.

மந்திரி, சொரியாகித் தினவாகும். பாவட்டம் இலை மாடப்புளச்சம் இவைகளை அரைத்து முகத்திலும் காதிலும் பூசிக்காக்கணுவேர் கருவேல்பட்டை வில்வவேர் சமன் தேனில் கொடுக்க.

முத்திரையன், உடம்பு வெண்குட்டமாகும். அதற்கு வாகை விரையைத் தேனில் கொடுக்க.

உத்திரியன், உடம்பில் கொப்புளங்களாகும். அதற்காகத்தகர விரையைக் காடியிலரைத்துப் பூசி உள்ளுக்கும் கொடுக்க.

விரிசெங்கன், காதுகேளாது வீங்கும் உடம்பெரியும் அதற்குக்கடுகுரோகணியும் கற்கண்டும் கொடுக்க.

விஜையன், வாய்நீருண்டாகும் வீங்கும் உடம்பு சுழற்றும் கிலிகிலிக்கும். அதற்கு நாழிஉளுந்தும் அரிசியும் விளங்காய்ச்சதையும் அரைத்து நெய்யில்குழைத்து உடம்பிலும் தலையிலும் பூச.

அலியன் உடம்புதத்துபோல் காணும் வீங்கும்கண்கருக்கும் அதற்கு சிறுகீரைவேரை தேனில்குழைத்துக் கொடுக்க.

உத்தமன், தேகமெங்கும் கொப்புளமாகும். அதற்குப்பாவட்டம் இலைச்சாறும் புறுளச்சமும் தேனில் கொடுத்து உடம்பிலும்பூச.

மேற்கண்ட நாமமுடைய எலிகடித்தால் மேற்கண்ட விதமாக நோய்கள் காணுவதால் மேற்கண்டபடி அவுடதங்களை, ௰ - ௰௫ நாள் கொடுக்க நிவிர்த்தியாம்· அப்படி வியாதிகளைக் கவனித்துப் பாராமல் மேகசம்பந்த வியாதிகள் என்று மதித்துப் பலவாறான அவுடதங்களைக் கொடுப்பதில் வியாதிகள் நீங்காமற் போவதுடன்அவுடதங்கள் புகன்ற முன்னோர்கள் பேரில் பிழைகூறுவது வீணல்லவா?





| தினுசு. | அதற்குப் பரிகார தினுசு. | அதற்குப் பதில் தினுசு. |
|---|---|---|
| அபிரேகம் | | கந்திரா - கற்பிஸ் |
| அரிதாரம் | பசும்பால் பாதாம்பருப்பு | |
| கற்பூரம் | அம்பர்கஸ்தூரி | மூங்கிலுப்பு சந்தனம் |
| காரியம் | பல்குடித்துவாந்தி | வெள்ளீயம் |
| கோரோசனை | வாதுமைபிசின் | பாத்ஷகர் |
| அகிற்கட்டை | கற்பூரம் | மேற்படி கட்டைகள் |
| அக்கிராகாரம் | வாதுமைபிசின் கிராக்ஷி | அரிசி திப்பிலி |
| அசாரூன் | தீபதிராக்ஷி | சுக்கு வசம்பு |
| அதிமதுரம் | நருவளிகாய்ரோசாபூ | திருபுது சுக்கு |
| அபினி | மிளகுலவுங்கப்பட்டைசுன்பற்பியூன் | குருசாணி ஓமம் |
| அம்பர் | குளிர்ச்சிவஸ்து | கஸ்தூரி குங்குமப்பூ |
| அரத்தை | சந்தனம் மூங்கிலுப்பு | வால்மிளகு லவுங்கம் |
| அரக்கு | ரூமஸ்தகி | ரேவல்சினி மூங்கிலுப்பு அசாரூன் |
| ஆல்புஹாரு | நருவளிகாய் குல்குந்து | புளி |
| ஆற்றுதும்மட்டி | பாதுமைபிசின் | விளக்கெண்ணெய் கள்ளி |
| கருங்காலி | தேன் | இலந்தங்கொட்டை |
| இஞ்சி | தேன்வாதுமை நெய் | அரிசி திப்பிலி |
| ஊமத்தைவித்து | மிளகுசோம்பு தேன் | பேகானுபா |
| எட்டி | சர்க்கரை பனிநீர் | மேற்படிபட்டை |
| எருக்கிலை | நெய்பால் மோர் | இலைக்கள்ளி |
| ஏலக்காய் | சர்க்கரை | கரு-ஏலரிசி |
| ஏலரிசி | வாதுமை பிசின் | வால்மிளகு |
| ஓமம் | தனியா | அசுமுத்ஓமம் |
| கெஞ்சா | கசகசா | ஊமத்துவித்து எட்டி |
| | பாதுமை பருப்பு | |
| கடுகு | வாதுமை நெய்காடி | அப்போஷாது |
| கரியபவுளம் } கற்றாழைப்பால் } | மைசாக்ஷி திருபலாதி கடுக்காய் | சிவதைவேர் செகமுனியா |
| கருசீரகம் | வாதுமை பிசின் | சதகுப்பிஅனிசூன் |

| தினுசு. | அதற்குப்பரிகார தினுசு. | அதற்குப் பதில் தினுசு. |
|---|---|---|
| காளான் | கடுகுகாடி உப்பு | |
| சீமைதுத்தி | தேன் சோம்பு | சிறுதுத்தி |
| மட்டிப்பால் | சடாமாஞ்சி | |
| சிலாரசம் | ரூமஸ்தகி | |
| காடி | சர்க்கரை | பழரசம் |
| காவி | ரூமஸ்தகி பனிநீர் | |
| குக்கில் | கத்திரு குங்குமப்பூ | வாலேந்திரபவுளம் |
| குசும்பாபூ | தேன் | |
| குங்குமப்பூ | அனிசூன் | சிகிஞ்சேபீன் |
| குந்திரிகம் | சர்க்கரை | ரூமஸ்தகி |
| கொடிவேலி | விளாம்பிசின் மஸ்தகி | பவுளம் கிச்சிலிக்கிழங்கு |
| தனியா | கோழிமுட்டை | கசகசா |
| கோஷ்டம் | அனிசூன் | அக்கிராகாரம் |
| கோரைக்கிழங்கு | காடி | சடாமாஞ்சி |
| சதகுப்பை | பழரசசர்பத் | சோம்பு |
| சந்தனம் | தேன் கற்கண்டு | கற்பூரம் கொட்டைப்பாக்கு |
| சவ்வரிசி | பால் சர்க்கரை நெய் | |
| சிறுலவங்கபட்டை | கத்திரு அசாரூன் | வால்மிளகு |
| சாதிக்காய் | சர்பத் தேபனப்ஷா | சாபதிரி |
| சாபத்ரி | விளாம்பிசின் | சாதிக்காய் |
| சாதிலிங்கம் | மூலைப்பால் ஆவின் பால் | மிர்தார்சிங்கி |
| நிலாவரை | மஞ்சட்கிழங்கு | சிவதைவேர் |
| சேந்திற்கொடி | பசும்பால் நெய் | அத்திப்பால்மேற்படிகள்ளு |
| சீரகம் | கத்திரா | கருசீரகம் |
| படிகாரம் | பசும்பால் | நவாசாரம் |
| சுக்குபிஞ்சி | கத்திரா | ருத்தியானஸ் |
| சோம்பு | சந்தனம் | கர்பீஸ் |
| தாமரைப்பூ | கற்கண்டு பனிநீர். | துத்திவிரை |
| தாளிசபத்திரி | கத்திரா | |
| தானிக்காய் | தேன் சர்க்கரை | நெல்லிபருப்பு |
| சிவதைவேர் | மேற்படி தோல் நெய் | சம்பளிபூச்சி அடிமரப்பட்டை |



| தினுசு. | அதற்குப் பரிகார தினுசு. | அதற்குப் பதில் தினுசு. |
|---|---|---|
| ஆனைதிப்பிலி | பழரசம் | சுக்கு |
| திப்பிலிமூலம் | நெய்பால் | சுக்கு திப்பிலி |
| திப்பிலி | சந்தனம் விளாம் | மிளகு சுக்கு |
| திராக்ஷிபழம் | சிகிஞ்சேபீன் | திராக்ஷி |
| துத்திநாகம் | தேன் | காரீயம் |
| துத்தி | பால் சர்க்கரை | சீமைதுத்தி |
| துரிசி | ஷை | வைதூரஸ் |
| அயம் | நெய் பால் மாமிசம் | மண்டூரம் |
| கழற்சிக்காய் | நெய்பால்மோர் | மேற்படி வேர் இலை |
| சாம்பிராணி | கசகசா | ருமஸ்தி மட்டிப்பால் |
| சுத்தகாம்பு | மீனம்பர் | கஸ்தூரி |
| மாக்கலான் | ரோசாபூதயிலம் | நஞ்சுமுரிச்சான் |
| பூநாகம் | ஷை | இந்திரகோபம் |
| நிலப்பனைக்கிழங்கு | நெய்பால் | காரட்கிழங்கு |
| நீரடிமுத்து | நெய்பால் | பறங்கிசக்கை |
| நீலிமருந்து | தேன் | நாட்டுக்கோழைமை |
| நேர்வாளம் | சுத்திகள் கடுக்காய் | சிவதைவேர் |
| பவளம் | வாதுமைபிசின் | இரத்தபவுளம் |
| வைரம் | நெய்பால் வாந்தி | ஷை |
| பனிநீர் | தேன் கற்கண்டு | ஷை |
| பாதரசம் | ஷை | காரீயம் |
| பிதுர்ரோகணி | தேன் | மஞ்சள் |
| புரசங்கொட்டை | நெய் பால் சர்க்கரை | குருசாணியோமம் |
| பூமிசர்க்கரை கிழங்கு | அனிசூன் | அக்கிராகாரம் |
| பூனைக்காலி | இலந்தைபழம் | துத்திவிரை |
| பெருங்காஞ்சொரி | விளாம்பிசின் | |
| பெருங்காயம் | மாதுளம்பழம் | ஜாவ்சீர் |
| பொன் | தேன் கஸ்தூரி | செம்பு |
| பொன்னுவாரை | நெய்பால் | தாழம்பூ |
| மஞ்சட்கிழங்கு | பழரசம் | பிதுரோகணி |
| மரமஞ்சள் | பழசர்பத் | குங்குமப்பூ |
| மருதோன்றி | வாதுமைபிசின் | மருக்கொழுந்து |
| மாசிக்காய் | வாதுமைபிசின் | மாதுளங்கொழுந்து |
| மிளகு | வெண்ணெய் நெய் | சுக்கு திப்பிலி |
| முத்து | பவளம் | முத்துச்சிப்பி |

| தினுசு | அதற்குப் பரிகார தினுசு. | அதற்குப் பதில் தினுசு. |
| --- | --- | --- |
| முங்கிலுப்பு | தேன்ருமஸ்தகி | சந்தனம் |
| ருமஸ்தகி | வாதுமைபிசின் | குந்திரீகம் |
| ரேவல்சின்னி | விளாம்பிசின் | ரோசாப்பூ |
| லவுங்கபட்டை | வாதுமைபிசின் | வால்மிளகு |
| லவுங்கபத்திரி | ருமஸ்தகி | சடாமாஞ்சி |
| லவுங்கப்பூ | வேலன்பிசின் | சாப்தரி |
| வசம்பு | சிகிஞ்சபின் | சிரகம் |
| வால்மிளகு | ருமஸ்தகி | ஏலம் லவுங்கபட்டை |
| வெடியுப்பு | வாதுமைபிசின் | இந்துப்பு |
| வெந்தியம் | அனிசூன் | ஆளிவிரை |
| பூண்டு | பசுநெய் | காட்டுவெண்காயம் |
| வாய்விளங்கம் | ஷை | வால்மிளகு |



| பதார்த்தம். | பரிகாரதினுசு. |
| --- | --- |
| புதினு | பழரசம் மாசிக்காய் |
| மணத்தக்காளி | கடுகு சீரகம் |
| தேயிலை | பால் சர்க்கரை |
| அகத்திக்கீரை | பசும்பால் |
| கரிவேப்பிலை | நெய் வெண்ணெய் |
| காப்பி | பசுநெய் சர்க்கரை |
| துவரை | நெய்புளி |
| பச்சைபயறு | தேன் சர்க்கரை |
| உளுந்து | நெய்சிரணபதார்த்தம் |
| மொச்சை | சீரகம் மிளகு உப்பு |
| கடலை | கசகசா காடி |
| பட்டாணி | பன்னீர் |
| பெருபயறு | கடுகு சுக்கு இஞ்சி |
| கொள்ளு | நெய் புளி |
| எள்ளு | தேன்கலந்துண்ண |
| பாதாம்பருப்பு | சர்க்கரைருமஸ்தகி |
| கசகசா | தேன் ருமஸ்தகி |
| கருப்புகசகசா | சோம்பு |
| சுரைக்காய் | புளிப்புகாடி |
| சுணிக்காய் | சுக்கு சீரகம் |
| கூழ்ப்பாண்டம் | சர்க்கரை கற்கண்டு |
| வெள்ளரிக்காய் | சுக்கு தேன் உப்பு |
| அவரைக்காய் | குல்குந்து |
| பீர்க்கங்காய் | கர்மசாலா |
| புடலங்காய் | கர்மசாலா இறைச்சி |
| மிதிபாவற்காய் | நெய் புளி |
| காட்டுப்பாவற்காய் | பழரசம் நெய் இறைச்சி |
| நாதுளங்காய் | உப்பு புளி நெய் |
| மிளகாய் | புளிப்பு நெய் |
| பச்சைமிளகாய் | பழரசம் உப்பு சருள்ளி |
| கத்திரிக்காய் | நெய் இறைச்சி |
| முள்ளிக்காய் | நெய்புளி |
| கொத்தவரைக்காய் | இஞ்சி சுக்கு சீரகம் நெய் |
| வெண்டைகாய் | ருமஸ்தகி |
| வாழைக்காய் | மிளகு சீரகம் |

| பதார்த்தம். | பரிகாரதினுசு. |
|---|---|
| வாழைப்பிஞ்சு | நெய் மிளகு |
| பலாக்காய் | இஞ்சி மிளகு சீரகம் |
| பலாப்பிஞ்சு | கர்மசாலா |
| அத்திக்காய் | சீரகம் புதினா |
| முருங்கைக்காய் | புளிப்பு நெய் |
| மேற்படிபிஞ்சு | பால் நெய் |
| அரிநெல்லிக்காய் | கல்லுப்பு |
| புளியங்காய் | உப்பு பச்சைமிளகாய் |
| மாங்காய் | உப்பு காடி சீரகம |
| மாம்பிஞ்சு | உப்பு சீரகம |
| தேங்காய் | பழரசம் புளிப்பு |
| கொத்த மல்லி | மஞ்சள்கரு |
| பருப்புக்கீரை | மிளகு சீரகம் |
| தண்டுகீரை | கடுகு பூண்டு |
| செங்கீரை | மிளகு சீரகம இஞ்சி |
| முளைக்கீரை | மேற்படி |
| அரைக்கீரை | புளி |
| புளியாரை | மாமிசம |
| வசளகீரை | மிளகு சீரகம் |
| வெந்தியகீரை | காடி தேன் |
| வேளைக்கீரை | பழரசம் நெய் |
| சதாப்பிலை | மோரிலவிக்கவும் |
| வெள்ளரிவிரை | சுக்கு சோம்பு தேன் |
| சுரைவிரை | காடி |
| வெள்ளரிவிரை | காடி |
| முள்ளங்கிவிரை | உப்பு தேன் |
| நெருஞ்சிவித்து | தேன் சீரகம் |
| துத்திவித்து | இஞ்சி காடி புதினா |
| நீர்முள்ளிவித்து | இஞ்சி சாசிரா |
| ஆளிவித்து | கொத்தமல்லி தேன் |
| வெந்தியம் | காடி தேன் |
| இசப்கோல்வித்து | காடி தேன் |
| நிலப்பனை | மிளகு சீரகம் இஞ்சி |
| கருணைக்கிழங்கு | நெய் புளி |
| சேமக்கிழங்கு | புளி |



| பதார்த்தம். | பரிகாரதினுசு. |
|---|---|
| உருளைக்கிழங்கு | இஞ்சி புதினா பழரசம் |
| வள்ளிக்கிழங்கு | சர்க்கரை |
| சிறுவள்ளி | சர்க்கரை தேன் |
| முள்ளங்கி | உப்பு தேன் |
| செம்முள்ளங்கி | குல்குந்து |
| ஈருள்ளி | உப்பு |
| பூண்டு | நெய் பால் |
| இஞ்சி | தேன் நெய் |
| ஆட்டிறைச்சி | கொத்தமல்லி லவுங்கபட்டை நெய் |
| தலைகறி | இஞ்சி பழரசம் புதினா |
| தலைமூளை | இஞ்சி கடுகு சீரகம் |
| கண்ணிறைச்சி | காடி பழரசம் |
| கழுத்திறைச்சி | கொத்தமல்லி வெண்காயம் |
| மார்பிறைச்சி | புதினா பழரசம் |
| இருதயஇறைச்சி | காடிபழரசம் |
| நுரையீரல் | புதினா மிளகு சீரகம் |
| ஈரல் | காடி கடுக்காய் லவுங்கபட்டை |
| நாவிறைச்சி | காடி சீரகம் கொத்தமல்லி |
| மண்ணீரல் | லவுங்கபட்டை நெய் |
| குடல் | சுக்கு திப்பிலி சீரகம் கடுகு |
| கொழுப்புகுடல் | காடிபழரசம் |
| குண்டிகாய் | மிளகு திப்பிலி உப்பு |
| கொழுப்பு | சீரகம் சுக்கு |
| பீஜம் | நாட்டுக்காடி |
| கால்கள் | சீரகம் புதினாகாடி |
| குட்டியிறைச்சி | புதினாபழரசம் |
| எலும்புமூளை | கருவாபட்டை |
| முயலிறைச்சி | நெய்சல்லாது கீரை |
| உடும்பிறைச்சி | புதினாபழரசம் |
| சேவல் | காடிபழரசம் |
| பெட்டைக்கோழி | மேற்படி |
| பாத்துகறி | காடிதேன் |
| கவுதாரிகறி | காடிதேன் பழரசம் |
| வலைக்குருவி | வாதுமைநெய் |
| கொக்கு | புளி தயிர் |
| புறாக்கறி | திராக்ஷபழரசம் |
| கோழிமுட்டை | காடிகுல்குந்து முள்ளங்கி |
| பாத்துமுட்டை | இஞ்சிசீரகம்தனியாமுள்ளங்கி |

## அம்மையென்பது.

சரீரத்தில் வேகம் மிஞ்சி வெட்டைகொண்டு தேகமெல்லாம் சூடாய் மூளையில் கொதிப்புமீறி அஸ்தியைத் துளைத்து (௰௪) விதமாய்ப் பனைமுறி - பாலம்மை—விறகுதிரி - கொள்ளம்மை-கல்லுதிரி, கடுகம்மை — மொழுக்கன் - உப்புதிரி—கரும்பனைசை - வெந்தியம் பாசிபயறு - விச்சிறப்பன் - நீர்க்குளுவன்-தளை-இவ்விதநாம பேதமாய்க்காணும்.

அவ்விதம்காணும் ஆரம்பத்தில் சிற்றாமணக்கெண்ணெய் ப. (க) மிளகுதூள் ப. (வ) சிறுகற்கண்டு ப. (வ) அனாஸநிமிச்சம் பழரசம் கூட்டி மத்தித்துக்கொடுக்க. ஆள்திடவானாக இருந்தால் இந்துப்பு, ப. (வ) கூட்டினால் பேதியாய் உஷ்ணம்கழிந்து அதிகமாக அம்மைகாணாது.

நஞ்சரப்பன் வேளைநாம்பு நீங்கலாகபுன்னைக்காயளவுஅரைத்துவென்னீரில் கொடுக்கப் பேதியும் வாந்தியுமாய் அம்மைவிசேடமாய்க்காணாது. ஆகாரம், கஞ்சிசெய்து கொடுக்க.

சுரம்-வாதத்தால் மாமிசத்தில் சாரும்-பித்தம்-சர்மத்தில்சாரும்-அய்யம்-அஸ்தியில்சாரும். குழந்தைகளுக்குத்தாய்முலைப்பால் பேதத்தால் மாந்தமும் - கெர்ப்பசூட்டால் கணமும் - புணர்ச்சியால் அக்கரங்களும் - அதிகபோகத்தால் வைசூரியும - கர்மத்தால் பலவிதவியாதிகளும் உற்பவமாகும்.

நோய்நிற்கும் காலஅளவு - பிறந்தநாள் முதல் கரப்பன்மாதம் (௫) புணர்ச்சியால் நேரும்வியாதி வருடம் (க) மாந்தவியாதி வருடம் (௫) மூன்றுக்குமேல் கணம்வருடம் (௭) ஏழுக்குமேல் அக்கரங்கள் வருடம் (௫௰) வைசூரி எற்கும் வரையில் உள்ளது.

தசநாடியிருப்பிடம் -புருவம்-உச்சி-கண்டம்- நெஞ்சு - கைகாலடி—முழங்கை-கணுக்கால்- முழங்கால்-கைகீழ்-ஆ ம.

கைபார்க்கும்போது கையைச்சரியாக நீட்டச்செய்து கெட்டிவாங்கிப்பார்க்கவேண்டும்.

வாதம்நாபியின்கீழ் - பித்தம்கண்டத்தின்கீழ் அய்யம் உச்சியின்கீழ்-வலக்கை புருஷருக்கும் - இடக்கை ஸ்திரிகளுக்கும்-காலையில்வாதநாடி கடும்பகல்பித்தம் மாலைசிலேத்மம். இரவுபவ்வித்மே பத்துநாழிகையாக மாறிநடக்கும்.



வாதம், சிறுபிள்ளைதாம்குழந்தொட்டில் வளைந்துவளைந்து செல்வதுபோலும் மண்டூகம், ஏறுன், சர்ப்பம், குருவி, ஆமை நடைபோலும்.

பித்தநாடி, அன்னநடை, மயில்நடை, தாறுமாடப்புறுநடை ஊக்குருவிபோலும், மெத்தென மீண்டு மீண்டு கெருடனைப்போல் பெலத்து எழும்புவதாம்.

சேத்மம், தயங்கித்தொத்தித் தொத்தாதாகிக் கோழிநடை கொக்கு உறக்கம்போலும் ஊக்குருவிபோலும் சிலந்திபூச்சிபோலும் ஸ்திரீபோகம்செய்தவன் நாடிபோலும்.

வாதபித்தநாடி, சிறுகுருவிபோல் நடந்து வலிவான மயில் நடையாகி ஒந்திநடைபோல் காட்டும்.

பித்தசேத்மநாடி, பாம்புபோலுயர்ந்து தவளைபோற்குதிக்கும்.

அசீரணநாடி, மதயானை அசைந்தசைந்து நடப்பதுபோல் தீபனத்தின்நாடி, சிறுகாக்கைபோல் தூங்கல்.

சன்னிக்கு, தீமோடி அன்னம் அட்டைமந்தமாக விறகுகட்டு சுமந்ததுபோலுமாம்,

சுகசன்னி, குக்கிடம்போல் நடந்து பாம்புபோல்மோதிமூஞ்சூர்போல்நடந்து அமரும்.

வாதசுரம், வாளைமீனைப் போல்பாய்ந்து சர்ப்பம்போலடங்கி ஆனைபோலார்ப் பரித்துக்காணும். வளைந்து முன்பாய்ந்து மீண்டு மயில்தாரா அன்னநடையாகநின்று முன்பாய்ச்சல் பின்பாச்சலாகவும் நடந்தால் (அ) நாளையிற்சிவபுரமேகும்.

பித்தநாடி, தேள்கொடுக்கு கெரிப்பதுபோல் தெரித்தால் (க) மாதத்தில்மரணம்.

பித்தம் தவளைசர்ப்பமதுபோல் வளைந்ததானால் பட்சத்தில் மரணம்,

பித்தநாடி, அரணைதுடிப்பதுபோற் காணில் எட்டுநாள்.

பித்தம், மீண்டுமீண்டு நடந்தால் மீளாது.

உந்திசுழியைப்பற்றிய வாதபித்த அய்யத்தில் அய்யநாடிதன்னில் சூரியன் சுடர்போலும் காந்தக்கனல்போலும் பம்பரம்போல் சுழன்றாலும் மரணம்.

வாதபித்தம் அய்யத்தைச்சார்ந்து அய்யம்தன்விடேகிக்காணு மாகில் மரணம் சிலேத்மம் வீணையைப்போல் ஆடிக்கில் (௩) நாளை யில்.

சிலேத்மம் தவளையைப்போல் குதித்து பாம்புபோல் புரண் டும் மரத்திற்கொடி பின்னியதுபோல் கண்டாலும் மரணம்.

கெர்ப்பநாடி - எறும்பூறல்போலும் ஆமையசைவுபோலும் குளிர்ச்சியாக வாதம்நடக்கும்.

பூதநாடி கின்னரத்தின் ஒலிவாகநடந்தும்கிடாப்பாய்ச்சல் செக்கு அருகல் மூஞ்சூர் சிறுபந்தெரும்பல் ஏற்றம் அசைவு போலும்.

விகாரநாடி புழுபோல் நிமிர்ந்து வண்டொலிபோலும் காஷ்ட த்தி லெழும்பும் சுவாலைபோலும் கிளியெழும்புதல்போலும் திரை யொடுங்குவது போலும் பித்தநாடிநடக்கும்.

௩, ஆண்டில் மரணத்திற்கு - பிங்கலைநாடி ஒருநாள் முழுமை யுமாக நடக்கும்.

௨, ஆண்டில் மரணத்திற்கு - வாதநாடி இரண்டுநாள் முழுமை யுநடக்கும்.

மூன்றுநாள் நடந்தால்—ஒரு ஆண்டில்மரணம்
௬, திங்களில் மரணம் — பித்தநாடி ஒருநாள்தயங்கி நீடந்தால்
௩, திங்களில் மரணம் —அசைவிலாமல் ௨, நாள் நடக்கில்
௪௰௫, நாளையில் மரணம் — மூன்று நாளோடுமாகில்
௫, நாளையில் மரணம் — சேத்மநாடி நாள்மூன்று கடிந்தோடில்
௰, நாளையில் மரணம் — ௨, நாள்நடக்கில்
௰௫, நாளையில் மரணம் — ஒருநாள் ஓடினால்

பித்தநாடி. (௩) நாள்புரண்டு ஆவினசைவாகவும் ஆடி அசை தலாகவும் உடுக்கை ஓசைபோலும் கண்டால் மரணம்.

சுரங்களில் அவபத்தியம்.

தித்திப்பு புளிபழம் கசப்புபாக்குவெற்றிலைபால்பரிமளம் குளிர் தசலம் சீதளவஸ்துக்கள் ஸ்திரீசங்கம் வாசிப்பு வழிநடை சந்தன கற்பூரம்பூசல் சிவந்தவஸ்திரம் நெய் வெல்லம் எண்ணெய் மோர் காற்று பெண்பார்வை யிவைகளால் மகாதோஷம்நேரும்.



இன்னவர்க்கு நாடிதெரியாது.

உண்டவர்கை அற்பிங்கனம் பசி அதிகவழிநடை இளைத்தவர் பேய்பிடித்தவர் கோபி ஸ்திரீசங்கமம் பயித்தியர் கஞ்சா கள்ளு அபினிகொண்டோர்க்கும் வாயு சாதனையர்க்கும் கோழி தவளை பாம் புண்ணவர்க்கும் காக்கைவலி குமரகண்டவலியோர்க்கும் பாஷாணகெந்தகம் விஷம் தின்றவர்க்கும் நாடியினால் வியாதி அறியக்கூடாமை.

தன்வந்திரியார் சுரலங்கணம்.

வாதசுரத்திற்கு நாள் (எ) - வெந்நீர்கொடுக்க - (௪) நாழி கைக்குள்ளாக.

பித்தசுரத்திற்கு நாள் (௫) - போசனம் கொடுக்க -(௰) நாழி கைக்குமேல்.

சேத்ம சுரத்திற்கு நாள் (௬) - கஞ்சிகொடுக்க - (௰௫) நாழி கைக்குமேல்.

வாயு பத்தின்செயல்வகை.

பிராணவாயு, மூலாதாரத்திலிருந்து மேலெழுந்து, ௰௨, அங் குலத்தில் (அ) உள்சென்று (௪) பாழாகும், நீலவர்னம் தேவதை சந்திரன். பொசிப்பை சீரணமாக்கும். இதைஉச்சரித்தால் பாலனாக விருக்கலாம்.

அபானன், சுவாதிட்டானம் உற்பத்தியாய் கீழ்நோக்கி மல சலத்தைப் போக்கும், பச்சைவர்னம். ஆசனத்தைச்சுருக்கி வைக் கும், அன்னசாரத்தைச்சேரவைக்கும். தேவதை வாதாசன்.

வியானன், தோலில்நின்று (எ௰௨௬) நாடியிலும் சர்வசந்துக் களிலும் நின்றுநீட்டல் முடக்கல் செய்து பரிசங்களறிந்து அன் னசாரங்களை அங்கங்கே நிரப்பித்து சடத்தை போஷிக்கும். பால் வர்னம், தேவதை யமன்.

உதானன், உதராக்கினியை எழுப்பிஅன்னசாரத்தைச்சமைத் துக் காமத்தைமூட்டும். மின்னல்வர்னம். தேவதை அக்கினி.

சமானன், வாயுக்களை மிஞ்சவொட்டாமல் அறுசுவை அன் னத்தண்ணீர் சமானப்படுத்திச் சரீரமெல்லாம் சாரச்செய்யும். வர் னம் புஷ்பராகம். தேவதை ஆதித்தன்.

நாகன், சகலகலை பாடிவைக்கும் கண்விழிப்பிக்கும், பொன் வர்னம். தெய்வம் அனந்தன். கூர்மன், இமைகொட்டல் கொட்டாவி

வாய்மூடும் கண்விழிக்கும் காட்சியாவும் காட்டும். வெளுப்புவா ணம். தேவதை விஷ்ணு.

கிருதரன், நாசிநாவில் கனிவுண்டாகும் பசி தும்மல்இருமல். கருப்புவர்னம். தேவதை சிவன்.

தேவதத்தன், சோம்பல் முழித்திடுதல் கண் தலையைபுலறச் செய்தல் சண்டை தர்க்கம் கோபமுண்டாக்கல். படிகவர்னம். தேவதை தேவேந்திரன்.

தனஞ்செயன், முடிவில் வீங்கச்செய்து கன்னத்தில் சமுத்திரம்போல் துடித்து வாயுக்கள்யாவும் போனபிறகு மூன்றுநாள் தலைவெடித்துப்போகும். நீலவர்ணம். தன்வந்திரி.

ஆச்சுதே யறிவொன்றின் விசாரத்தைக்கேள்
 அனைத்தையுமே பார்த்திருந்து அகண்டந்தானாய்
னோச்சுதேகுருவாகி தத்துவங்களாய்க்
 கொடியதீவினையாகி நல்வினையுமாய்
போச்சுதேபெண்ணாணாய்ப் பிரபஞ்சமாகிப்
 புகழுறிய நிர்க்குணமாய் நிர்மலருமாகி
நீச்சுதேசிவமாகிச் சிவனாகிச் செழுஞ்சுடரின்
 கதிரொளியாய்ச் சிறந்தவாறே.

## பித்தம் வர்த்திக்குங்காலம்.

ஆவணி, புரட்டாசி, அர்ப்பிசி, கார்த்திகை இந்தமாதங்களில் பொங்கி அதின்பிறகு அடங்கிச் சரீரத்தில்பரவும்.

அது, கடவுளைப்பணியாமலும் குருவைப் பணியாமலும்தாயை வஞ்சித்தாலும் பிறர்திரவியத்தைப் அபகரித்தலும் புளி, உப்பு, உறைப்புஅதிகமாய் உண்பதாலும் துக்கம் அதிகவேலை நெருப்பு வெயில் கோபம் கொண்டவர்க்கும் நித்திரை நீங்கியதாலும் நாய்க்குமேல்நின்றுபித்தம் (௪௨) விதமாய் உற்பவமாம்.

## பித்தம் (௪௨க்கு)விபரம்.

ஆயுரு, ஆமலகம், உமாதம், மந்தம் வன்னி, சேத்மம் சுரோணிதம், விகாரம், விதரணம், உரை, ரத்தம்,சுழிகாசம், அசிரணம், அருசி, எரி அழல், துடி, விஷ,அதிசாரம் மூல, உதிரகண்ட, ஓடு, மூடு, நடுக்கு கபால, சத்து, மந்தம் விலக வதைய, கிமிர், நாவில், சீத, தாந்த மார்க்க, மருந்திடு பித்தங்களாகும்.

—



## பஞ்சபூதமூலி.

தீராதநோயனைத்தும் தீர்வதற்குத்
 திறபாக மூலியொரு வகையோவைந்து
நீராய்பொன்மேனி வெண்துத்தியோடு
 நிறமான சிவதையொடுநீலிநான்கும்
போனமூன்றுவகை யனேகரோகம்
 பிறந்தவகையறிந்தமூலிகொண்டு
சீராகவளையில் வந்தபோதுவாங்கி
 செப்பதனில்வைத்திடவேசிதறிப்போமே.

போமென்றவாதநோய் வந்தபேர்க்குப்
 பொன்மேனிவெண்துத்தி யூடன்றாலே
வாமென்றபித்தத்திலெழுந்தநோய்க்கு
 வகையறிந்துசிவதையினிவாங்கிக்கொள்ளு
ஓமென்றசிலேத்துமத்தால்வந்தநோய்க்கு
 உத்தயனேநிகரில்லா நீலிதன்னை
யாமென்றவளையில் வந்தபோதுவாங்கி
 ஐந்துமாவைந்துதரம் அரிந்துவையே.

## அகஸ்தியர் சிந்தாரநடம்.

கேளப்பாவூழியென்ற காற்றைச்சொல்வேன்
 கெடியானசாமாளா தேவியாலே
காளப்பாமைபோலக் கருத்துநிற்கும்
 கண்ணுக்குந்தோற்றாது கடினமெத்த
வாளப்பாகாற்றினிட விபூமெல்லாம்
 மைந்தனேசொல்லுகிறேன் வகையாய்க்கேளு
பாளப்பாபண்ணிவிடும் உலகமெல்லாம்
 பரிசுத்தமாயிருந்தாற் பறக்குந்தானே.

பறக்குமென்றுசொல்வதுதானுருக்கென்றால்
 பாராளுமன்னவர்க்கும் சிவயோகிக்கும்
இரக்கமொன்றுமில்லாத வுலுத்தர்பேரில்
 என்னசொல்வேன் ஊழியிடவேகத்தாலும்
சிரக்குமென்றுநினையாதே தேகந்தன்னை
 சணத்திலேயொழித்துவிடும் தெளிவாய்நில்லு

இரக்கமதிபுள்ளவர்க்குத் தேகம்போகும்
என்மகனேயிதையறிந்து பாருபாரே.

பாருநீபுலத்தியனே அய்யாகேளு
பரிவாகமேலிருந் திறங்கும்பாரு
ஊரிலேசெனங்களிட சிரசிற்பட்டால்
உற்றதோரிரத்தமெல்லாம் முறிந்துநீராம்
காருநீகக்கலுடன் பேதிகாணும்
கண்மூடிதிறக்குமுன்னே களைத்துப்போகும்
ஆருநீயானலும் தேகமெல்லாம்
ஆச்சரியம்வியர்வையது பெருகிநிற்கும்.

பிசின்போலேவியர்வையது பெருகிநிற்கும்
பேறுனகண்டமது வறட்சிகாணும்
கசிந்துருகித்தேகமெல்லாம் கடினவேதை
கக்கல்கண்டநாழிகைக்குக் கடுப்புகாணும்
விசிதமாய்வயிற்றுவலி காணுமப்பா
வெகுசுருக்காய்சன்னியது பிரவேசிக்கும்
நிசிதமாயிருந்தக்கால் பிராணன்போகும்
நிமிஷத்திலௌஷதத்தை நினைவாய்ப்போடே.

இதற்கு அவுடதம்.

லிங்கம் வீரம் பூரம் குடன் அபினி சுக்கு மிளகு கஞ்சாவித்து குங்குமப்பூ கஸ்தூரி வகைக்கு வி-நி-க, செஞ்சாகியாழத்தில்சாமம் -௨, சித்திரமூலக்கியாழத்தில் சாமம்-௩, சாராயத்தில் சாமம் - ௨, இவ்விதமாகவரைத்து கொடிச்சுன்னம் களஞ்சி கூட்டியரைத்து மிளகளவாகத்திரட்டி ஒருமாத்திரைசாராயத்திலிட்டுக் கொடுக்க.

தாகமானல் நாயுருவி புளியம்பட்டை முருங்கைப்பட்டை மாவிலிங்கன்பட்டை சித்தாமூலப்பட்டை சிவனார்வேம்பு எருக்கம்பூ தென்னம்பிஞ்சு இவைகளை, ௪-படிசலத்திலெட்டொன்றுகக் கியாழம்வடித்துக் கொஞ்சமாகக் கஸ்தூரி யிழைத்துக் கொஞ்சங் கொஞ்சமாகத் தாகத்திற்குக் கொடுத்து வரவேண்டும்.

வாந்திபேதி மூன்றுவிதமாகக்காணும் விபரம்.

கொம்பனென்பது, நேத்திரத்தைச்சார்ந்து கருப்பாகப் பேதியாய்த் தேகம்பாவும் பிசின்போல் வியர்வை கடுப்பு நாவறட்சி விக்



கல் சன்னி கனை குளிர்ச்சியாகும், அசாத்தியம், ௩௰ - நாழிகையில் முடிவு.

குடார்ப்பபடுவனென்பது, மார்பைச்சாரும் மஞ்சள்நிறமாய்த்தாங் காதபேதி காதடைப்பு மூர்ச்சை அடிவயிற்றுவலி சீதமும் உதிரமும் காணும் நரம்புகளிழுக்கும் உடல்குளிரும் சந்துவிடும் ௩-நாள் சென்று கொல்லும்.

அக்கரனென்பது, உந்தியின் கீழ்ச்சார்ந்து அசீரணபேதிபோலும் மிசிரமாக வெள்ளையாகவும் சேறுபோலும்பேதியாகும், இதில் சாதமும் வெளிப்படும் தாகிக்கும் குளிரும் நெஞ்சுருக்தல்கைகால் கடுப்பு சரீரம் துர்க்கந்தங்காட்டும்.

உதிரத்தினுள்ள நீர்ப்பகுதிகள்ஜீரணபாதையின் சளி சவ்வின் வழியாய்த் தள்ளப்படுதலே இன் னேயாகும். இவ்வியாதியால் மாண்ட பிரேதகுறிகள் விபரம் - தியக்கநிலையைக்கடந்து சன்னி கோலமான காய்ச்சலையடைந்து மரித்தபிரேதம் குடல்கள் வெண்ணுண்டைகளுள்ள நீரால் நிறைந்திருக்கும், சளிசவ்வுவீங்கியும் பொட்டுப்பொட்டாய் சஞ்சயித்துமிருக்கும் வயிக்கில் சேவண மணிகளெல்லாம் பருத்துப் புடைத்திருக்கும், நாளங்களிலும் காரிரத்தம் திணித்திருக்கும், சுவாசப்பைகள் சிலரில் துஞ்சயித்தும் சிலரில் மெத்தசுருங்கியுமிருக்கும், ஈரலும பித்துப்பையும் பித்தநீரால் தேங்கியிருக்கும், பிருக்கங்கள் சஞ்சயித்தும்சலப்பைசுருங்கிவெறுமையாயுமிருக்கும். இவ்வியாதி வினைப்பகுதியால் வருவதாகவிருக்கினும் பலசனம்சுகத்தாட்சிகுடிவெறி அதிகாங்கை அசுத்தகாற்று அசுத்தநீர் தாழ்வார்கியவிடம் ஈரமானவிடங்களில் வசிப்பதாலும் உண்ணுமாகார பதார்த்தங்கள் பழுதடைந்து அதினுலுண்டாகும் ஒருவிதநஞ்சு உற்பத்தியாயிருப்பதை உட்கொள்வதால்நேருமென்று ஐரோப்பியர்செய்த அங்கசோதனை நூலிற் கூறியிருக்கின்றனர். இந்துமத ரிஷிகள்கூறிய சோதிட நூற்களில் செனனகாலஅமைப்பென்றும் ஆயுள்வேதிய பண்டிதர்கள்சாமளாதேவியெனும் விஷக்காற்றினுல் துர்மரணமென்று கண்டிருக்கின்றனர். இதின்ரகசியம் பிராணுதிவாயுக்களை யடக்கி அந்தக்கரணசேட்டை நிவிர்த்தித்துத் தனது சொரூபத்தை யடைந்தவர்க்குவிளங்கும். இக்கொடியபிணி வாராமுன் ஒவ்வொருவரும் நமதுசெல்வப்பொருளாகியகடவுளைச் சதாகாலமும் வணங்கிப்போற்றுதலே மேன்மையான ஔஷதமாக இருந்து ரக்ஷிக்கப்படும்.

வாதசுரத்திற்கு,—சுக்கு, முள்ளி, கண்டங்கத்திரி, வெட்டி பெருமல்லி, சிற்றுமல்லி, வகை, பலம்-௭, கியாழம்வடித்து இதில் அமுதிட்டுக் கஞ்சிசெய்து ஆகாரங் கொடுக்கவும்.

பித்தசுரத்திற்கு,—வில்வவேர், சித்தாமுட்டிவேர் கியாழத்தில்கஞ்சிசெய்து கொடுக்கவும்.

சேத்மசுரத்திற்கு,—பாதிரி, வில்வஇலை, பெருங்குமிழ், கியாழத்தில் கஞ்சிசெய்து கொடுக்கவும்.

நாவறட்சி தோஷம் சன்னிக்குக் கண்டாவுடதம்.

பொன் வெள்ளி பவளம் முத்து குங்குமப்பூ கோரோசனை கஸ்தூரி மதூரம் அக்கிராகாரம் அரத்தை கலைக்கொம்பு புரசன் வித்து மாஞ்சில் ஏலம் வால்மிளகு லவங்கபத்திரி ருத்ராக்ஷம் வில்வவேரோடு கோஷ்டம் கிராம்பு சுக்கு வகை, வீ-கி (அரைக்கால்) இவைகளைக் கோவைரசம் முலைப்பால் தேன் இவைகளிலரைத்து மைத்துக்கொண்டு தோஷம் சேர்ந்தபோது முலைப்பாலிலிழைத்து நாவில் தீட்டிவரவும்.

மரண நிச்சயக்குறி.

அழிந்திடுங் கைகாலெற்றி கண்ணந்தம்மிலடர்ந்து துடிப்புநில்லாண்டு திங்களாறு, மொழிந்திடுங்கன்மூன்று நாள்பத்திலாவி முடிந்துவிடு மிதுவொழியச் செவியிலோசை, பொழிந்திடு நாளே மூக்கண்ணி லொளிதானேந்தா முயர்ந்தமண்மூன்று நாவிரண்டினாளை வேறுனல், கழிந்திடுநல் ஆயிரென்றுக் கருதியீசன் கழலிணையைப் போற்றில்வினை கழிந்துபோமே.

எந்த அவுடதங்களாகினும் கொடுக்கும்போது விபூதியை "ஓம் கிலியும் ஓம்சிவ மனோன்மணியே நமஃ" என்று ௰அ-தரம் தியானித்துக்கொடுக்கவும்.

சன்னி வயிற்றுவலி குன்மம் காய்ச்சல் இவைகளுக்குக் கியாழம், கண்டங்கத்திரி பேய்ப்புடலை பர்ப்பாடகம் பேராமுட்டி விஷ்ணுகாந்தி சித்தாமுட்டி விலாமிச்சு தூதுளை சிந்திற்கொடி வகை களஞ்சி-௨, சுக்கு திப்பிலி ரோகணி வசம்பு தேவதாரம் வகை களஞ்சி-க-அ-க-அ கியாழம் வடித்துக்கொடுக்கவும்.

நடுக்கல்சுரத்திற்கு, கொயினா குன்றி-௫, நவச்சாரம் குன்றி-௭, கூட்டியரைத்து ௫-பாகம்செய்து, ௫-வேளை கொடுக்க, சிபதார்த்தம் நீக்க, ௰-நாள் பகல்நித்திரை கூடாது.



சன்னி சுசு சன்னிக்கு, முகரல் வசம்பைத்தட்டி இத்துடன் கஸ்தூரி கூட்டி முடிச்சு கட்டி முகரத்திரும்.

சகல எலிகடிக்கு-ஆடுதின்னாப்பாளைவேர் விளாம்பட்டைமஞ்சள் வகை பலம்-வ, வென்னீரிலரைத்து ௫-நாள் கொடுப்பதாலும் வ-படி எள்ளெண்ணெயில் சித்திரமூலவேர் உத்தாமணிவேர் மிளகுருணைவேர் வகைபலம்-க, பசும்பாலிலரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து ௩-காசெடையாக ௫-நாள்கொடுக்க உப்பு புளிநீக்கவும்.

தேள் நட்டுவாகாலிக்கு, பெருங்கிழங்குவேரை உள்ளுக்குக் கொடுத்து ஷை வேரை வெற்றிலைரசத்தி லிழைத்துக் கடிவாயில் தடவத்தீரும்.

நல்ல சர்ப்பத்திற்கு-வெள்ளருகுஇலையைஉள்ளுக்குக்கொடுத்தாலும் எருக்கிலை புகையிலையும் கசக்கி கண் காது மூக்கில்நசியம் விடுவதாலும் தும்பை துளசி மிளகு உப்பு கூட்டி கசக்கி முன்மாதிரி விடுவதாலும் மிளகு உப்பு வெற்றிலை கசக்கி விடுவதாலும் விஷம் நீங்கும், தும்பை ரசத்தில்மிளகுத் தூளிட்டுக்கொடுக்கவும்.

நேர்வாளப் பருப்பெடுத்து நேர்த்தசுன்னம்
வைத்தரைத்துக்
காரும்வெற்றிலைப் பாக்கிலிட்டுக் கரைய
மென்றுவிழுங்கிவர
வாரும்வாந்தி பேதியுமாய் மண்டையி
லேறும்விஷந்தீரும்
காரும்பத்தியம் பாசிபயறு பச்சரிசியும்
பால்கூட்டே.

சுவாதீன மில்லாதிருந்தால் தும்பைரசத்தில் நல்லெண்ணெய் கூட்டி மூக்கில் நசியமிடத்தீரும். மேற்படிக்கு, மெழுகு-வெள்ளைபாஷாணம் ரசம் கெந்தி சீலை காயம் துரிசி வேப்பன்வித்து வகை, வி-கி-க, நேர்வாளப்பருப்பு வி-கி-௰௪-கூட்டி எருக்கன் பாலால் ஒருசாமம்வேப்பெண்ணெயில் ஒருசாமமரைத்துப் மாட்டுக்கொம்பு டப்பியில்வைத்து பயறுபிரமாணம்வெற்றிலையில் தடவிக்கொடுக்க, மோர்சாதம்மறுநாள் உப்பு வறுத்துக்கூட்ட மூன்றுநாள் முத்தெண்ணெய் ஸ்நானம். அவபத்தியமானால் தனியா கியாழம் கொடுக்கவும்.

விருட்சிகவிஷமாத்திரை -௫௰ எட்டிப்பழச்சுளையுடன் வெள்ளைப்பாஷாணம், பலம்-க சிறுதுண்டுகளா யிட்டு ஆட்டுமூத்திரம்

வெள்ளெருக்கம்பால் இரண்டு பலம் விட்டு மூடி. சய-நாள் புதைத்துளடுத்து பாஷர்ண மாத்திரம் எடுத்து எருக்கம் பாலாலரைத்து மாத்திரைசெய்து சலத்திலிழைத்துக் கடிவாயில் தடவி அனல் காட்ட விஷம் நீங்கும்.

சிரஸ்நான தைலவகை.

கூர் எள்ளு எண்ணெய் படி-உ-அகத்திக்கீரை ரசம்படி-உ கூட்டி ரவியில் வைத்து மறுநாள் கோஷ்டம், பலம்-க, அரைத்திட்டு காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்து வரவும், குளிர்ச்சிதரும்.

எள்ளெண்ணெய் பலம்-சய நிலவிளா இலை விளாங்காய்ப் பிரமாணம் வில்வப்பழம்- பசும்பாலிலரைக்கவும்சீரகம்பலம்-க,முலைப் பாலிலரைக்கவும், கூட்டிக் காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்துவரச் சாளேசுரம் தீரும்.

தைலச் சுருக்கம்.

வில்வபட்டை பலம்-ய உ௦-படி சலத்தில் எட்டொன்றாகக் கியாழம் வடித்து அரைத்த சந்தனம், பலம்-க, எள்ளெண்ணெய் பலம்-யரு காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்துவர பித்தம் உஷ்ணம் மேகம் இருமல் மூலாத்தம நீங்கிக் கண்தெரியும்.

வேங்கைத்தூள் தைலம், முன்போலக் கியாழம்வடித்து விலாமிச்சு பலம்-க, எள்ளெண்ணெய் பலம்-யரு கூட்டிக் காய்ச்சிவடித்து முழுகிவர மண்டையிடி வீக்கம் பீனிசம் வாதம் நீங்கிக் காந்தியுண்டாகும்.

வெட்டிவேர் பலம்-ய, முன்போலக் கியாழம் வடித்து எள்ளெண்ணெய் பலம்-யரு. பாலிலரைத்த அதிமதுரம் பலம்-க, கூட்டிக்காய்ச்சி வடித்துமுழுகிவர பீனிசம் மண்டைசூலை குட்டசொரி பிரநீர்கோர்வை கண்புகைச்சல் கால்நோவுதீரும்.

நாள்சென்ற வேப்பம் பட்டை பலம்-உரு, ரு-படி சலத்தில் அ-க-ஆ கியாழம் வடித்து எள்ளெண்ணெய் பலம்-நய, ஏலம் பலம்-க, இட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவர சூலை குட்டரோகம் தழுதலைக்கடுப்பு செங்கரப்பன் புரைகள் தீரும்.

சித்திரமூலவேர்ப்பட்டை பலம்-ய, உ௦-படி சலத்தில் அ-க-ஆ வடித்து எள்ளெண்ணெய் பலம்-யரு பசுவெண்ணெய், பலம்-உ சீரகம் பலம்-க, காய்ச்சி வடித்து முழுக ஆனந்தவாயு ஸ்திரீமேகம் சிறுசொரி குட்டம் அரையாப்பு கிரந்தி சூலை புண்வீக்கம் தீரும்.



சீரகம் பலம்-உரு, அ-படி சலத்தில் அ-க-ஆ வடித்து எள்ளெண்ணெய் பலம்-ள-கார்கோலரிசி பலம்-உ-இட்டுக் காய்ச்சி வடித்துமுழுகிவர, அ, குன்மம் வாந்தி பித்தம் கிறுகிறுப்பு உஷ்ணம் கபாலசூடு நீங்கும்.

கீழாநெல்லிசமூலம் பலம்-உயரு, அ-க-ஆ கியாழம் வடித்து எள்ளெண்ணெய்பலம்-ள-சர்க்கரைபலம்-ரு- காய்ச்சிவடித்து முழுகப்பித்தம்யாவும் தலைசுற்று வாய்நீரூறல் உஷ்ணம் கைகால் எரிவு நீங்கும்.

கரிச்சாலை ரசம் படி-க நெல்லிக்காய் ரசம், படி-காலேவீசம் எள்ளெண்ணெய்படி-க சாதிக்காய் பலம்-க, காய்ச்சி வடித்து முழுகிவர தலைசெவி ரோகம் பித்தம் உஷ்ணம் பீனிசம் தீரும்.

உள்ளுக்கு நெய்

பொன்னாங்காணி வேர் வெட்டிவேர் விலாமிச்சுவேர் அறுகன்வேர் சிறுகீரைவேர் வகை பலம்-க- பசும்பாலி லரைக்கவும் நெய்படி-உ- சாதிக்காய் அதிமதுரம் சர்க்கரை பலம்(அரைக்கால்) கூட்டிக் காய்ச்சி வடித்துக்கரண்டிவீதம் கொள்ள உள்சுரம் உஷ்ணம் மேகம் அச்சரங்கள் தீரும்.

சர்வ பித்தங்களுக்குத்தைலம், இளநீர் படி-க பசும்பால் படி-க, நல்லெண்ணெய்படி-க,மதுரம் குங்குமப்பூ கோஷ்டம் சந்தனம் அகில் ஏலம் லவுங்கம் விலாமிச்சு பூண்டு ரோகணி நன்னாரி பசும்பாசி நெய்தல் சடாமாசி நீர்மிட்டான் செண்பகப்பூ கோரைக்கிழங்கு சாதிக்காய் புனுகு பச்சைகற்பூரம் வகைக்கு களஞ்சி-க இவைகளை இளநீரிலரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து உச்சிமுதல் பாதம்வரையில் தேய்த்து முழுக கண்குளிர்ச்சி காந்தல்தீரும் கக்கல் கண்புகைச்சல் நயனரோகம் வாயூறல் நெஞ்செரிவு தீரும்.

வல்லாரைநெய், ள-பலம் வல்லாரையை அ-படி, சலத்தில்ஒரு படி கியாழம்வடித்து பசுநெய் படி-க, சுக்கு ஏலம் கலைக்கொம்பு சாதிக்காய் தாளிசபத்திரி கோஷ்டம்விலாமிச்சு வெட்டிவேர் சீரகம் சண்பகப்பூ கஸ்தூரிமஞ்சள் இம்பூரல் கச்சோலம் மல்லி தான்றிக்காய் தக்கோலம் ரோகணி வகை வி-நி-க, ஆவின்பாலி லரைத்துக்கூட்டிக்காய்ச்சி கொடுக்க தொந்தமாந்தம் பேர்மாந்தம் மேகம் காசம் ஈளை இருமல் இரைப்பு மூலகணம் உட்சுரம் தீரும்.

## பித்த வெட்டைக்கு எண்ணெய்.

சிற்றாமணக்கு எண்ணெய் படி-க, பழாசம் படி-வ, இலந்தை ரசம், படி-வ, வெங்காயம்-படி-வ, கருசீரகம், பலம்-உ, குமரிசாதம் பலம்-க, கூட்டி வடித்துக் காண்டிவீதம் கொடுக்க, ௰அ-கணச்சூடு அஸ்திசுரம் வெட்டைபித்தம் வறட்சி தீரும்.

கணச்சூடு ௰அ-க்கும் எண்ணெய், முத்தெண்ணெய் படி-க, குமரிசாதம் தேங்காய்ப்பிரமாணம் வெந்தியம், பலம்-வ, வெண்காயம் பலம்-௰, சிறுக அரிந்திட்டுக் காய்ச்சி வடித்துக் கொடுக்க.

கணமாந்தம் தோஷஎண்ணெய், சிற்றாமணக்குஎண்ணெய் படி-க, குமரிசலம் படி-வ, பழாசம் படி-வ, வெண்காயசம் படி-வ பசும்பால், படி-௨, கோஷ்டம் ம்துரம் சண்பகப்பூ ஏலம் சிறுவழுதுகப்புட்டை. வகை பலம்-வ, வெந்தியம் பலம்-க, அரைத்திட்டுக் காய்ச்சி வடித்துக் காண்டிவீதம் கொடுக்க.

| உட்கொண்ட ஆகார தினுசுகள் ஜீரணமாகும் நாழிகை. | |
|---|---|
| வெல்லம் தேன் பச்சமுது கூடியவை நாழிகை | உ௰ |
| மாபொரியுண்டை பிளகோதனம் | உ௰ |
| பால் | உ௰ |
| நீர் அன்னம் | ௰அ |
| வெண்ணெய்கூடிய அன்னம் | ௰௬ |
| வென்னீர் | ௰௬ |
| அன்னம் | ௰௬ |
| மோர் அன்னம் | ௰௩ |
| தேன் சூரணம் தைல லேக்கியம் | ௰உ |
| தயிரன்னம் | ௰க |
| கக்கரிகாய் காய்வர்க்கங்கள் | அ |
| உபர்ந்த பழவர்க்கம் கிழங்குகள் வித்து கனிரசம் பூகனீர் இடித்துப்பிழிந்த ரசம் அரைத்தமருந்து செயநீர் குளிர்ந்தசலம் | எ௨ |
| நல்ல பதார்த்தம் வடிகஞ்சி இளநீர் சர்க்கரைப்பானகம் வருத்தமாசலம் | எ |
| கனிரசம் | ௬ |
| அறுசுவைகூடிய பதார்த்தம் கழுநீர்காடி | ௫ |
| தயிரன்னமீது சலம்குடிக்கல் | ௪ |
| ஆவியசலம் பற்பம் | ௩ |



| | |
|---|---|
| ஷொழம் | ௩ |
| சாராயம் | ௫-எ௨ |

## ஆகாரம் பிரிவு.

ஒருவேளை உண்ட வுணவில் பிரிந்த அன்னரசமானது அன்றைக்கு ரச தாதுவை நனைத்து ஊறிநின்று ரசதாதுவி லேறும், முன் அதில் நின்றவை ரத்த தாதுவிலேறும். இரண்டாநாள் ரச தாதுவிலிருந்து ரத்த தாதுவி லேறும். ௩-வது நாள் மாமிச தாதுவிலேறும். ச-வது நாள் மேதைத்தாதுவிலேறும். ௫-வது நாள் அஸ்தி தாதுவிலேறும். ௬-வது நாள் மச்சைத் தாதுவிலேறும். எ-வது நாள் சுக்கில தாதுவிலேறும். அ-வது நாள் தேகவலிவு தரும்.

உணவு முதலில் மதுர வஸ்து மத்தியில், புளிப்பு உப்பு உறைப்பு இலை கறி, முடிவில் துவர்ப்பு சம்பந்தமான புளிப்பு தயிர்வறு காய்கள் உண்ணவும்.

### இன்னவியாதியாளர்க்கு இன்னவை நீக்கவேண்டு மென்பது.

தயிர்- வீக்கம் குறைநோய் நேத்திரரோகம் வாதகுன்மம்சோபை சலதோஷம் விஷசுரம் பீலிசம் பீலிகம் கிரந்தி பாண்டு பேதி இவைகளுக்கு நீக்கவேண்டும்.

நெய்- தருணசுரம் சன்னிபாதம் நீர்கோர்வை சப்ததோஷம் பெருவயிறு பேதிவாதம் வாதகுன்மம்.

தாம்பூலம்-மகோதரம் மூர்ச்சை சன்னிபாத தாபசுரம்விஷம் பைத்தியம் க்ஷயம்.

வாத தேகிகளுக்குப் பதார்த்தம்-சாமபூசணிகத்திரிவழுதுளங்காய் முருங்கைப்பிஞ்சு வெள்ளவரை பிதிபாவல் பிஞ்சு காராக்கருணை காட்டுக்கருணை (கீரை) ஆரை மணத்தக்காளி நல்வசளை மேனி முன்னை நல்வேளை யானைநெரிஞ்சி முசுமுசுக்கை அப்பக்கோவை மூக்கிரட்டை (ரசவகை) வெள்ளைசாரணை பாவல் முருங்கை முளைகீரை தூதுளை பொன்னாங்காணி (வற்றல்) சுண்டை பேய்ப்புடல் தூதுளை நெல்லி ஆதொண்டை மணத்தக்காளி வெள்ளவரை முள்ளி காட்டுப்பிரண்டை (ஊறுகாய்) நாரத்தை தான்றி கடு தேற்றான் பருங்களா இஞ்சி இவைகளில் உப்பிட்டதாகும்.

பித்ததேகிக்குப் பதார்த்தம்- வெள்ளரி கொம்புபாவல் மிதிபாவல் நிலப்புடல் பீர்க்கு அவரை ஆற்றுமுள்ளி சாமை பூசுணிகத்திரி முருங்கை பருங்களா வாழை வள்ளிக்கிழங்கு வெங்காயம் வாழை பூவாழைத்தண்டு (கீரைவகை) புளியாரை கோவை முருங்கை வசலை பொன் முசுட்டை அப்புக்கோவை ஓரிதழ்தாமரை பாலை காட்டுமுசுமுசுக்கை ஆதனம் சுரை வல்லாரை சிறுகீரை மணத்தக்காளி (ரசவகை) கொத்துவசலை கொடிவசலை வெள்ளை அகத்தி பிரமீதைவேளைதொரு(வற்றல்)வெண்முள்ளி பேய்ப்புடல் ஆதனம் காட்டுசுண்டை கண்டங்கத்திரி பயற்றங்காய் மணத்தக்காளி தாமரை வல்லாரை(ஊறுகாய்)பச்சைமிளகு இஞ்சிஆதனம் கடுகு நெல்லி நாரத்தை தமரத்தை புன்னை ஆல்விளா தேற்றான்மா நன்னாரி நார்த்தங்காய் எலுமிச்சன்.

சிலேத்ம தேகிகட்கு-கத்திரி பேய்ப்புடல் அவரை கொம்புபாவல் மிதிப்பாவல் பெரியகளா கண்டங்கத்திரி அத்தி பலா பயிற்றம்பிஞ்சு பீர்க்குபிஞ்சி கருணைக்கிழங்கு வாழைத்தண்டு மேற்படிபூ முள்ளங்கி சாமபூசுணி வெண்காயம் வள்ளிக்கிழங்கு (கீரைவகை) காரை அப்புகோவை வரிகோவை பசுமுன்னை கருஞ்செம்பை பேய்ப்புடல் பிரமி நெருஞ்சி ஆரை புளியாரை மருதம் நெய்தல் மேனி வல்லாரை பொன்னாவாரை முசுமுசுக்கை முருங்கை பிண்ணாக்கி பண்ணை மணலி முளைக்கீரை முசுட்டை காராமணி உளுந்து கடலை மலைக்களாவேளை மணத்தக்காளி பொன்னாங்காணி வசளை கற்றாழை காய்வேளை வேளை (ரசவகை) ஓமம் செங்கடுகு சதகுப்பை வெந்தியம் கொத்தமல்லி வேளை சுக்கு அகத்தி குறிஞ்சான் பாவல் தும்பை (வற்றல்) சுண்டை மணத்தக்காளி ஆதனம் பிரண்டை கோவை முள்ளி பேய்ப்புடல் ஆதொண்டை அவரை கண்டங்கத்திரி நெல்லி நார்த்தைபிஞ்சு (ஊறுகாய்) மஞ்சள்மிளகு சுண்டை வாழைத்தண்டு மாம்பிஞ்சு ஆதனம் மிதிபாவல்பிஞ்சு ஆகும்.

இருதயத்திற்கு வலிவைத் தருவதாகிய நார்த்தம்பழம் தாமரைப்பூ தாழம்பூ திராக்ஷம் சீமை அத்திப்பழம் மாதுளம்பழம் முத்து பவளம் கெம்பு பொன் வெள்ளி இராசவர்த்திகல் முருங்கிலுப்பு எலுமிச்சமொக்கு சேபுப்பழம் நெல்லிக்காய் புளி கற்பூரம் கொத்தமல்லி ரோசாப்பூ கடுக்காய் கிச்சிலிக்கிழங்கு கோரைக்கிழங்கு லவுங்கபட்டை அம்பர் ஏலக்காய் அகிற்கட்டை சடாமாசி ஏலம்கஸ்தூரி பின்தாபருப்பு குங்குமப்பூ காவுஜபான் பாலங்கு உஸ்த



நூஸ் பஹமன் கருஃபகமன் சுபைத் சேதுவார் ஷாகாகுல் மிசிரி கஹருபாகத்திரு லவுங்கம் இவைகளில்சிலதை எவ்விதபாகமேனும் தக்கபடி பாகப்படுத்தி உண்டு வருவதில் இருதய பலவீனம் நீங்கி வலிவைத் தரும்.

சரலுக்கு வலிவைக் கொடுக்கும் பதார்த்தம், திராக்ஷிபழம் ரோசாப்பூ மாதுளம்பழம் சாதிக்காய் கிச்சிலிக்கிழங்குகோரைக்கிழங்கு லவுங்கபட்டை ஏலக்காய் அகிற்கட்டை காசினி ஆசாருன் பின்தாபருப்பு குமஸ்தகி பாதுரஞ்சி போயாஜரிஷிக் மழைத்தண்ணீர்.

நினைப்பைக்கு வலிவைத் தருவன, எலுமிச்சம்பழரசம் மிளகு ஜரிஷிக்பழம் காடி குமஸ்தகி கருசீரகம் இந்துப்பு ஏலக்காய் சுத்த ஜலம்.

தேகந்தீய்த்துத் தக்க ஸ்நானத்திற்குக் கூட்டு எண்ணெய் விபரம்.

வாததேகிக்கு, ஆவின் நெய்-௧ எள்ளெண்ணெய்-௨ முத்தெண்ணெய்-௩ இந்த எடைகளாகவும்.

பித்ததேகிக்கு, எள்ளெண்ணெய் - ௧ முத்தெண்ணெய் - ௨ நெய்-௩ இந்த எடைகளாகவும்.

ஐயதேகிக்கு. முத்தெண்ணெய்-௧ நெய்- ௨- எள்ளெண்ணெய்- ௩ இந்த எடைகளாகக் கூட்டிக்காய்ச்சி டாவுசெய்து சிரம் தேய்த்து முழுகவேண்டும்.

ஐங்கூட்டுத்தைலமாவது முத்து எள் புன்னை புங்குவேம்பு இவைகளின் எண்ணெய்களை சமமாகக் கூட்டிக்காய்ச்சிஉபயோகிக்க தனுர்வாதம் மகாவாதம் சன்னிபாதஜுரம் கபதோஷங்கள் நிவிர்த்தியாகும்.

கெர்ப்ப நாள்.

முக்கோணவடிவு நிதம்ப உதடுகள் இரண்டுபெரிய உதடு மேலாகத் தோல் மடிப்பு சின்ன உதட்டின் கீழில் சவ்வுமடிப்பு சுமரியென்பது ஆண்குறிக்குச் சமனுவாரம் உள்ளது. இது பூரிக்கும் போதுதான் இன்பமுண்டாகிறது. இதற்கடியில் முக்கோணவடிவு மூத்திரத் துவாரம் மேற்கண்டதிற்கடியில் நீர்வரும் குழை ஒன்றரை அங்குல நீளம் மேற்கண்டதிற்கடியில் ஒரு பெரியதுவாரம் அவைதான் நிதம்பம் அதன் நீளம் நாலு அங்குலம், சுற்றளவு ஒரு அங்குலம். அது விரியத்தக்க குணமுடைத்து. குதுவாகார

பெண்களுக்கு சவ்வு மூடியிருக்கும் விடப்ப உதடுகள்கீழ்ப்புறத்திற்கு நாவாயென்று பேர். கோழையுள்ள சவ்வு அபானத்திற்குமேலிருப்பது விரியத்தக்கவிடம். புருடன் போகித்தவுடன் இந்திரியமானது கெர்ப்பப்பையில் முதன்முதல் சென்று அதிலிருந்து பிலோப்பியன் குழைவழியாய் சுரோணித மிருக்கும் நாதாசயத்தினுள் பிரவேசித்து அவ்விடத்தில் சுக்கிலமும் சுரோணிதமும் மிசிரமாகிக் கருவுண்டாகி சில நாள் கழித்து பிலோப்பியன்குழைவழியாய் மறுபடியும் கெர்ப்பப்பைக்கு வந்து வளரும். ஒருசமயம்கெர்ப்பப்பைக்கு வாரமல் வளர்ந்தால் மிக அபாயம். கெர்ப்பப்பை சீமை அத்திக்கனி வடிவாய் அடி வயிற்றில் மத்தியில் முன் புறத்தில் நீர்ப்பையும் பின் புறத்தில் குடல்களும் அபானமும் அடியில் நிதம்பமுமாயிருக்கிறது. இரண்டே முக்கால் அங்குல நீளம் இரண்டேகால் அங்குல அகலம் ஒரு அங்குல பருமனுமாக இதில்கரு வளர்ந்த பிறகு, ௰௪-அங்குல நீளமும் ௰௮-அங்குல அகலமும் ௯-அங்குல பருமனுமாக இருக்கும் பிறக்குங்காலை ௧௬ ௰௮ முதல் ௨௨-அங்குல நீளமும் ௪௫, ௫-அங்குல சுற்றளவும் ௯-முதல் ௯-பவுன் நிறையுள்ள தாகவுமிருக்கிறது. கெனுல்என்னும்முக்கோணவடிவுள்ள இடத்தில் கரு வளருகிறது கெர்ப்பப்பைக்கு ௩- புரையுள்ளது மேலிருக்கும் புரைக்கு, அந்தரவேஷணி சவ்வு நடுபுரை சதையாயிருக்கிறது உட்புரை வழுவழுப்பாய் பசையுள்ள சவ்வு இதுகளுக்கு உதிரம் ஊட்டும் நரம்பு அநேகமிருக்கிறது. ஒவ்வொரு கருவுக்கும் ஒவ்வொரு பள்ளமிருக்கிறது. கோழிமுட்டை வடிவாய் கால் அங்குல நீளமும் காலேவீசம் அங்குல அகலமும் கால் அங்குல பருமனுமாக இருக்கிறது. பனிக்குட சலம் அரைப்படி முதல் ஒன்றரைபடி வரையில் தேகக்கூறின்படி யிருக்கும் கருவயிற்றிலிருந்து ௨- அடி நீளம் அதின் முனை நஞ்சைப்பற்றியிருக்கிறது அந்த நஞ்சு கெர்ப்பப்பையின் ஒருபக்கத்தில் ஒட்டியிருக்கிறது. உதிரத்தைக் கொடி வழியாய் சிசுவிற்கு ஊட்டுகின்றது. கருவுக்கு ௨- புரையுண்டு ஒன்றில் பனி நீரும் கருவுமிருக்கிறது. இன்னொரு புரை இதைச் சூழ்ந்து கோழிமுட்டையின் சவ்வைப்போல் மூடியிருக்கிறது.

## கெர்ப்பக்குறி விவரம்.

தேகத்தளிவு இரத்த விர்த்தி நாடிபடப்பு காலை குமட்டல் வாந்தி ஒருமணிநேரம்வரையில் எச்சில் சுரப்பதுமு மூன்று மாதம் வரையில் காணும். நாலாவது மாதத்தில் அடிவயிறு உருட்சியாய்த்



தோன்றும், அடிவயிற்றில் காதை வைத்துக்கேட்டால் சங்கு ஒலி கேட்கும், ௫-வது மாதத்தில் தனங்கள் விம்பி அதில்கருக்கென்று குத்தும் காம்புகள் கருக்கும் சிறுநீரை ஒரு சட்டியில் பிடித்து வைத்தால் வெளுமையாக உப்பு தோன்றும். மலடாகும் காரணம் யாதெனில் கெர்ப்பப்பை இராமையே. அவை வியாதியால் பின்னப்பட்டும் பிலோப்பியன் குழையில்லாமை அவை வியாதியாலடைபட்டுமேயாம். நாதாசயம் இல்லாவிட்டாலும் வியாதியால் பின்னமானாலும் ஔஷதம் பிரயோசனப்படமாட்டாது கெர்ப்பப்பையில்லாதவர்களுக்கு சூதகமும் காணமாட்டாது.

### மேகரோக நீர் வியாதி ௨௰-ல் வாத கோபத்தால் ௪.

ஆச்சியமேகம்— நாள் ஒன்றிற்குக் குருணி வீதம் துரிதமாய் நெய்போலிறங்கும் சீலையில் நனைத்துக் கொளுத்தினுலெரியும் தேக்ம்வாடும் ௭-வது நாள் மரணம்.

சுத்தமேகம்- வேளைக்கு நாழி கோசம் போல் மேற்படி வாசமாயிறங்கும் காய்ச்சினால் விளக்கெரியும் ௰௫-வது நாள்.

பிராமியம்- வேளைக்கு நாழி வீதம் அடிக்கடி இறங்கும் கொழுப்பான மாமிச நாற்றம் காய்ச்சினால் தேன்போல் ௯-மாதம்.

மாங்கிசரவி- இள ஆட்டின் கொழுப்புபோல் வேளைக்கு குருணி காய்ச்சினால் ஆட்டின் நெய்போல் கருப்புஞ்சாறு நாற்றம ௩, ௫-நாளையில் கொல்லும் அல்லது ௫-வது மாதத்தில்.

இந்த வியாதிகளில் கை, கால், கண் அழற்றும் நாவறள் பல் நாக்கு அடி தொண்டை கருப்பேறும் அன்னந்தண்ணீர் அதிகம் கொள்ளும் மயக்கம் வாயுபரியும் நாற்றந்தரும்.

### பித்தத்தால் ௬.

அப்பியம்— ஆனைமத சலம்போல் துரிதமாய் வேளைக்கு நாழி இறங்கும் காய்ச்சினால் உவர்மண்போல் ௮- திங்களில்.

அபிரமியம்—கற்றாழை சலம்போல்மேற்படி வாசமாய் நாழிகைக்கு இருநாழி விதயிறங்கி ௩-வது ஆண்டில்.

சம்பீரணம்-சுண்ணாம்பு நாற்றமாய் வேளைக்கு நாழியாயிறங்கும் எறும்பெரிக்கும் காய்ச்சினால் சுண்ணாம்பு ௨-ஆண்டில்.

மதுமீபம்-பசுமை மஞ்சள் நிறமாய் அடிக்கடி யிறங்கி பீசகோசம் கடுப்பு அடிபடியும் சடம் கண் வெளுப்பு ௫- ஆண்டில்.

சாத்தியம்- தாழை விழுதுபோலும் பளிங்குபோலும் கோசபீசம் கடுத்துக் கூசிக் காய்ச்சினுல் சீழ்போல் ௫-ஆண்டில்.

ஆவிருகம்- முயனுதிரம்போல் இருநாழியாகக் காய்ச்சினுல் புலால் நாற்றம் பீசகோசப் -பெருக்கும் ௯-மாதத்தில்.

இந்த ஆறின் குணம் சரீரம் வற்றி எரிவு கவுச்சி சீழ் கற்றாழை மீன் தேன்போல் நாறும் நாபி வேக்காடு வாய்நாற்றம் விக்கல் அருசி சுரம் மூர்ச்சை மயக்கம் நாவறள் மனசஞ்சலந்தரும்.

அய்யந்நால் ௰.

வசா.— வேளைக்கு குருணி மீது நிணம் ஆடைபோல் காய்ச்சினுல் நிணம் போல் நாறும், ௮-வது ஆண்டில் மரணம்

உத்தமம்.— வேளைக்கு குருணி தண்ணீர்போலிறங்கும்காய்ச்சினுல் ஒன்றுமிராது, கண்ட பத்து வருடத்தில்.

மச்சம்.— அஸ்திக்குள் சதை உருகிவருவதாய் வேளைக்கு முன்னாழி வீதம், ௫-வது ஆண்டில்.

ஆகிகம்.— இளநீர்போல் வேளைக்கு நாழிவீதம் காய்ச்சினுல்இளநீர் வாசம் தாகம் சஞ்சலம் இளைக்கும், ௭-வது ஆண்டில்.

சூறுரி.— வெளுப்பாய் பனங்கள்ளுபோல் நுரையுடன் இறங்கும் காய்ச்சினுல் கள் வாசனை, ௭-வது ஆண்டில்.

சுக்கிலம்.—தாளிச் சாறுபோல் சுக்கிலநிறமாய் சிறுத்திறங்கும் காய்ச்சினுல் ஈரல் போல் கட்டும், ௩-வது ஆண்டில்.

உதகம்.— சிக்கி கழுநீர்போல் மிகுதியாயிறங்கும் காச்சினுல் சங்கு சுண்ணும்புபோலாகும் சரீரம் நாறும், ௧-ஆண்டில்.

பின்னுனி.-தேன்போலிறங்கி அடியில் மெழுகுபோல் படியும்வேளைக்குக்குருணி எறும்பு சூழும் சரீரம்தேன்வாசனை,௫-மாதம்.

லவணம்.— காரமாய் சுண்ணும்பு நீர்போல் மிகுதியாக இறங்கும் காய்ச்சினுல் உப்பு படியும், ௰௫-வது ஆண்டில்.

தயித்தியம்.—இறைச்சிகழுவிய தண்ணீர்போல் காய்ச்சினுல் கவுச்சி நீர்தாரை முருக்கி விழும்வேளைக்குமுன்னாழி, ௩-ஆண்டில்.

இந்த ௰-ம் பருத்து வெளுத்து தினவுமிக அன்னந்தண்ணீர் தேடும் இருமல் கோழை ஆயாசம் அழலையைத்தரும்.

குருணியென்பது ஆறிலேதெசிகளுக்கு.



மூத்திர நிருச்சினம்.

வாதம்.— மேகத்தால் நாபியில் மாமிசம் சிக்கி சுக்கிலத்தால் மாமிசம் முற்றி வாயுவால் நீர் இறங்கும்கசியும் துர்மாமிசம் கருப்பாய் விழும் அருகல் தேகம் கடுப்பு.

பித்தம்.— சிறுநீர் மஞ்சள் சிவந்தும் கைகாலசந்தி சிறுகலாய் நீரிறங்கும் குதம் அண்டம் லிங்கம் இரைச்சல் வயிறுப்பும் வாயுலறும் வறட்சிகாணும்.

செட்பம்.— அண்டம் குதம் வலி வற்றும் மேனி வெளுப்பு கண் பச்சை கிறுகிறுப்பு தியக்கம் கடுப்பு சொறி நீரெரிவுஅடிக்கடி கசியும் லிங்கத்தில் கூச்சு.

வெகு மூத்திரம்.— அடிக்கடி வெள்ளை காணும் நீர்த்தாரையடியில் புரு எச்சம்போல் விழும் அடிவயிற்றில் புழுக்களிருந்து வெள்ளை விழுவது கவர்ச்சடிக்கும் விம்மும்போது உச்சிமயிர் தூக்கும் குதலிங்கம் வேக்காடு இதில் வாதமும் சிலேட்பமும் நீராது.

(நீர் விபூதி ௰-ல் வாதத்தில் கெந்தன் மாம்பூவாசம் சிலாங்கன் காடி நாற்றம் கைப்புளிப்பு.) (வாத பித்தம் பச்சை வர்னன் தசை நாற்றம் புளி கசப்பு ரத்த வர்னன் உதிர வாசம் இனிப்பு சுத்தன் பால்வாசம் வெண்ணெய் ரசனை எலும்புருக்கி மூளை நாற்றம் சிறுகைப்பு வசம்பு காரம்.) பித்தம் ருசிகன் பாணக்கவாசம் கைப்பு பீதவர்னன் உப்பு நாற்றம் உப்புரசனை புஷ்பாசன்மல்லிகைப்பூ வாசம்.)(பித்தவாதம் சந்தன வாசம் மிளகு உறைப்பு சம்பிராசன் கோமூத்திர வாசம்.) (பித்த சிலேத்மம் அக்கி சுண்ணும்புவாசம்.) (சிலேத்மம் தவள வர்னன் பாணக வாசம் சர்க்கரையினிப்பு அனந்தன் சரமம் நாற்றம் சினிருசி ரத்த வர்னன் உதிரவாசம்இனிப்பு தோத்திரன் குங்குமப்பூ வாசம் கைப்பு ருத்திராங்கன் தாழம்பூ வாசம் இனிப்பு.) (சிலேத்மவாதம் மதுவேகன் கள்ளு நாற்றம் புளிப்பு.) (சிலேத்ம பித்தம் இந்திர கண்டி செண்பகப்பூவாசம் விஷரசனை நீலகண்டன் எறும்பெரிக்கும் புளிப்பு துர்க்கந்தம் ஆக ௰.

ஆகாரப்பையில் பிரிந்த அன்னரசம் ஈரலிற்சென்று சிறுநீரை குண்டிக்காய்களிழுக்கப்பட்டு நீர் பையில் சேர்ந்து வெளிவருபவை சிறு நீராகும்.

சுபாவநீர்.- மிகுந்த தடிப்பும் அதிகதெளிவு மில்லாதிருக்கும். சீரணப்பக்குவநீர்.- நாரிஞ்சிபழநிறம். சீரணஅபக்குவநீர் - மழையில் வைக்கோலிலிறங்கிய நிறம். உட்டின மிகுதி.- மஞ்சள் நிறத்துடன் சிவப்பு கலந்ததாயும். உட்டினம் தருவது.- காட்டுநார்த்தம்பழ நிறம். அதிக உட்டினம்.- தீயின் நிறம். கொடிய உட்டினம்.- மஞ்சள்குங்குமப்பூ வரிவரியாய்க் காட்டும். உதிரம் பொங்கியது.- சிவப்பும் கருப்பும் கலந்தும் அதிக உதிரம் பொங்கியது. அதிக சிவப்பு நிறமுள்ள பன்னீர்பூ. மிக அதிக உதிரம் பொங்கல்.- கருப்பும் அதில் கொஞ்சம் சிவப்பும் கலந்தும். சீதளம்.- கருப்பு நிறமும் கொஞ்சம் பச்சை நிறமும். மிகு சீதளம்.- ஒருவித நீலச்சாயைக்காட்டி வாதரோகம் தரும். விஷபக்ஷணம்.- விஷ காவி தீண்டியும் ஈடு மருந்துகளால் ஆகாய நிறம்போலிறங்கும். வாதபித்தகபங்களைக்கெடுப்பவை.- நீலநிறம் தடித்திருக்கும். * மும்மலங்களைமிகக்கெடுப்பது.- இலைபச்சை நிறம். காமாலைரோகமும் பித்தமும்குங்குமப்பூ நிறத்துள் கருமைநிறம். உதிரகெடுதி.- குங்குமப்பூ - நிறத்துள் கருமையும் கொஞ்சம் சிவப்பும். உதிரத்தமுக்குநீர்- கருமை நிறத்துள் கொஞ்சம் பச்சை. வாதமும் சிலேத்ம கொதிப்பேறி கெடுதியானது- கருமை வெண்மை. சீதள கொதிப்பு நீர்-வெளுப்புடன் சளியைப்போலும். [illegible]தய நீர்-எலும்பை அதிகமாக உருக்கிப்பால் நிறமாகக்காட்டும். கெர்ப்பம் நாபி அன்குறி இவாரத்தில் விரணமிருந்தாலும் கல்லடைப்பு ரோகம் வருவதாயிருந்தால் இந்திரியம் போலும். கட்த்தையிளக்கு நீர்- சீதளமாய் கனமில்லாமல் தெளிவு. வாதபித்த அய்யகெடுதியால் மூத்திரப்பை விந்துஸ்தான தூர்ப்பல நீர் கனமுள்ளதாய்விக்கம் கட்டி விஷ சுரம் தரும். குண்டிகாய் தூர்ப்பல நீர்- உதிரமும் சிலேத்மமும்நாளாவட்டத்தில் கொதிப்பேறிக்கழுவியமாமிசத்தைக்கழுவியதுபோல். சீதள தேகிக்கு- வெள்ளத்துள்ள வாசனை வெள்ளை நிறம். மூத்திரப்பை நாளபுண் நீர்- கொடிதான துர்க்கந்தம், உட்டின ரோகம்- புளிவாசனை முடிவில் சீதளரோகம். உதிரம்மிகுதியாலுண்டானவை-இனிப்பு வாசனை. பித்த சுபாவ கெடுதி நீர்- கருமை நிற மானின்வாசம். சரீரபசைகள் கெடுதி நீர்- மச்சைமேதைகரைந்து புலால் நாற்றமாயிறங்கும். காமாலை ரோக நீரில் மஞ்சள் சிவப்பு கருப்பு நிறநுரை-வாதபித்த அய்யகெடுதி நீரில் நுரை குறைந்திருக்கும் பாண்டுரோகம் பேதிகளின் காலத்தில் அதிக நீர் உட்கொண்டாலும் நீர் குறைவாக இறங்கும். வாத பிணிநீர்-



வெள்ளை நீர்உதிர நிறத்தையும் காட்டும். பித்த பிணிநீர் - பொம்மனமாசுபழ நிறம் வீர வொளிவு எண்ணெய் வன்ன நிறம். பித்த காமாலை நீர்- மஞ்சளாகவும் உதிரநிறமாகக்காட்டும். கபப்பிணிநீர் வெண்மை நிறத்துடன் நுரையும் குமிழியும் சுத்த சலம்போல் உப்பில்லாமலும் நெய்யைப்போல் பலநிறம் கலந்து காட்டும். தொந்த பிணிநீர்- பலவர்னங்களாகக் காட்டும். மகாரோகம்மேகரோக நீர்-நீரில் உதிரம் காணப்படும்.

நுரையானது உள்பசைகள் இளகப்படுங்காலத்தில் வாயுவானது சிறு நீரில் கலப்பதால் நுரையுண்டாகும். கெடுதியைத்தரும் ஆகாரங்களை இரவு அதிகம்புசியாமல் காலை யிறங்கும் நீரை பளிங்கு பாத்திரத்தி பிடித்து பிடித்த முகூர்த்தத்திற்குள் ஆவி போகாமல் ரவிபட வைத்து எள்ளெண்ணெய் ஒரு துளி நடுவில் விட்டுப் பார்க்கவேண்டும்.

வாயுவினாலிறங்கியது பாம்பைப்போல் நீளும். பித்தத்தினாலிறங்கியது மோதிரம்போல் பரவும். கபத்தினாலிறங்கியது முத்துபோல்நிற்கும். தொந்தமானால் கலந்து காட்டும். சாத்தியம் வட்டமாகவும் மெல்லெனப் பரவுதலும் சங்கு சிங்காதனம் குடை வீணை முல்லையரும்பு தாமரைமலர்போல் காட்டும்.

### அசாத்தியம்.

நீர் வெண்மை அதிக தெளிவு நீர் விட்டவிடத்தில்உப்புஉறையாமலும் மோரைப்போலும் பால் போலும் தடிப்பாகவும்நெய்யைப்போலும் சுரகாலத்தில் நீர் அதிக மிறங்கலும் கருமை நிறமும் மேகவியாதிகளில் அதிக நீரிறங்கலும் மரணத்தைத்தரும். நீரில் எண்ணெய்விட்டவுடன் பொங்கிப்பரவுதலும் சிதறி கடுகுபோல் பரவினும் நீரிலமுந்தினும் கலந்து விடினும் சன்னியாகிய திரிதோடத்தில் எண்ணெயமுந்தினும் விட்ட எண்ணெயி பாணம் வாள் சூலாயுதம் உலக்கை குடம் வெற்றிலை எருது சிங்கம் யாளி யானை புலி ஆடு பன்றி மனிதன் பாம்பு ஆமை பக்ஷி நரி குரங்கு கழுதை தேள்போல் உருவங்கள் காண்கினும் அசாத்தியம். நீர் குணத்தை ஒரு சமயம் பார்ப்பது போல் பல தரமும் பார்த்து நிச்சயிக்கவேண்டும்.

நீர் நிறம் எடை நாற்றம் நுரை குறைதலாகிய வைந்தின்பேதங்களை யறியவேண்டியது. நிறம்-மஞ்சள் ஆறு, சிவப்பு நாலு,

பச்சை ஐந்து, கருப்பு நாலு, வெண்மை இரண்டு, ஆக நீர் உக. எஅ- வது பக்கமும் பார்க்கவும்.

### சிறுநீர்.

இரத்தக்குறி-சீமை அத்திப்பழ நிறம். பித்தக்குறி- கொடிமாதுளம் பழ நிறம். இரசக்குறி-வெளுத்த சிவப்பு நிறம். வண்டலின் குறி-கருத்த இரத்தம் ஆகாய நிறம். இரத்தக் கொதிப்பின் குறி-சிவந்திருக்கும். பித்தமதிகரித்த குறி- மஞ்சள் நிறம். இரசமதிகரித்த குறி-வெளுப்பு நிறம். வண்டலதிகரித்த குறி- கருப்பு நிறம்.

### ஸ்தூல நிருபணம்.

நேத்திரம் நீர்கள் தங்கிய மூன்றுபடலங்களான சவ்வுகளால் உருப்பட்டிருக்கின்றன. முதலாவது வெளி வெண்மையானமினுக்காய் மின்னும் சவ்வில் பளிங்குநீர் இரண்டாவது நுண்ணிய சிறுரத்த குழல்களோடிய சவ்வி நீர் மூன்றாவது உள் விழியின் சவ்வி நீர்மத்தியில் கருப்புள்ளித்தானை பார்வை நரம்பானது அடி மூளையிலிருந்து கிளம்பிக் கண்ணின்பின் பகுதிமட்டும்ஒடிகண்ணுக்குள் தரிசிய மென்னும் சவ்வாக பரந்து விரிந்து இருக்கின்றன. கடைக்கண்பக்கமாக விருக்கும் கண்ணீர்கோளத்தில் கண்ணீர் பொசிந்து சில துவாரங்கள் வழியாய் கண்ணிலே பரந்து எப்பொழுதும் பசுமையாகவும் பளப்பளப்பாகவும் செய்கின்றது. இந்நீர் பரந்து பாயும் வேளையில் இமைப்பதினால் தூசுகள் நீருடன் அள்ளுண்டு மூக்குக்கடுத்த கண் மடலினுட் கோணயிலிருக்கும் இரண்டு சிறு குழல்கள் வழியாய் மூக்கில் செல்கின்றன.

சர்மம் வெளித்தோல் உள்தோல்ஆகஇரண்டு வெளித்தோலானது உள்தோலில் நச்சுக்காற்று படாமல் காக்கும் காவலாளியாயிருக்கின்றது. உள்தோலினுள்ள சிறுரத்த குழல்களால் மேனியெங்கும் காக்கப்பட்டிருக்கும் ஒரு நீர் வெளித்தோலுக்கும் உள் தோலுக்கும் இடையிலே வெளித்தோலுக்கூடாகத் தோற்றும் ஒரு வர்ணம் உண்டு. இந்த வர்னப்படை காப்பிரியில் கருப்பாயும் அமெரிகா தேசத்து வேடர்களிலே செப்புவர்ன மாகவும் ஐரோப்பியர்களிலே வெண் சிவப்பாகவுமிருக்கும் பேதங்களாம். உள்தோலில் நாடிகள் நாளங்கள் உடம்பிலே சிதைந்த அணுக்களை வாங்கி ரதத்தில் செலுத்தும்குழல்களும் வலைபோல்பின்னி கிணக்கோளங்களும் சுவேதகோளங்களும் நரம்புகளு மிருக்கின்றது. வெளித்தோலுக்குள் சிறுகுழல்களிருப்பதால் இவைகள்வழியாய்



சருமம்மீதுபூசிபதைலங்கள்ரத்தத்தில்கலக்கின்றது. வேர்வைதுவாரங்கள்கடுகளவாகஉள்தோலிலிருந்துவெளித்தோல்வரையில் செல்லும். இக்கோளங்களுள்துவாரங்களிலே யளவுக்குமிஞ்சியகொழுப்புசேர்ந்தால்அதுபருவாய்த்தோன்றும். அதைப்பிதுக்க வெளியே மூளைபோல் வரும்கொழுப்பு கோளத்தின் துவாரங்கள் அடைபட்டுப்போனால் அது கழலைக்கட்டியாகும். ஆதலால் குளிக்கும்போது அழுக்குகள் போகும்படி தேய்த்துக்குளிக்கவேண்டும். தோலின் துவாரங்கள் வழியாய் சில கொழுப்பு நீராவி நச்சுக்காற்றுகள் வெளி கழன்றுவிடும். தோலிலிருக்கும் சிறு சிறு கருவிகள் இரத்தத்திலிருந்து வேர்வையாய்ப் பிரிகின்றன. தோலின் துவாரங்கள் வழியாய் நாள் ஒன்றுக்கு சரீரத்திலிருந்து கழியும் கஞ்ஞலமான பதார்த்தங்கள் ஒன்றேமுக்கால்முதல் இரண்டரை ராத்தல் நிறையளவுக்குக் கழிகின்றது. இவ்விதம் கழிவது கழியாவிட்டால்அது கள் ரத்தத்திலேகலந்து உடம்பிலேசேர்ந்துசுவாசப்பைஇரைப்பை முதலிய உறுப்புகளினது தொழில்களைக்குழப்புமென்றபடியால்இருமல் கபாலநோய் அசீரணம் மாந்தம் கழிச்சல் முதலியவை நேரும். சுவாசப்பை வியாதியால் அல்லது பலவீனமானால் அதிக அழற்சி காவி இருமல் கிளப்பும் வாதநோய் அல்லது இரைப்பு உடையவனுக்குடம்பு குளுமை தாவில் மேற்கண்ட வியாதிவரும் தோலினுள்ள சுவேத சிறு கருவிகளில் அனல் உண்டு அது மிருந்தாலும் குறைந்தாலும் வேர்வையுண்டாகாது கோளங்களினால் உதிரத்திலேயிருந்து பிரியும் அந்தந்த நீர் வேறுமையாக இருக்கும் உமிழ் நீர் கோளங்களிலிருந்து உமிழ் நீரும் ஈரலிலிருந்து பித்த நீரையும் குண்டிக்காயிலிருந்து சிறு நீரையும்பிரிக்கின்றது. வெறிகொள்ளும் சாராய வஸ்துக்கள் சரீரத்தில் கழியவேண்டிய வஸ்துக்களைக் கழிக்காமல் குழம்பி அவைகளை உடம்பிலேயடக்கம் பண்ணி மூளையின் பதார்த்தத்தைக் கெடுப்பதினால் குடியர்கெடுவெயதிராமல் சீக்கிரம் மரிப்பர்.

ஆகாரம் சுவீதப்படும் உண்ணல் தின்னல் நக்கல் பருகல் இவையாகிய ஆகாரம் வாயினுள் பற்களினும் உமிழ்நீராலும் மென்று தொண்டைக்குள் இளகலாகச்சென்று இரைக்குழல் சவ்வு பேசிகளால் தள்ளுண்டு பிதுங்கி இரைப்பைக்குள் சேர்ந்து இரைப்பையின் சவ்வுகள் இறுக்கி நசுக்குவதால் பிதுங்கி உருண்டுபுரண்டு வரும்போது இரைப்பையின் உட்பக்கங்களிலிருந்து புளிப்புள்ள

ஒரு விசேஷ நீருண்டாய் அதினுடனே கலந்து அன்ன பாகு
எனும் மிருதுவும் வெண்மைநிறமான பாணியாகின்றது. அவை
துணைருக்கிக்குட் சென்று பித்த நீருடனேயும் ஒருவகை நீராகிய
கணைய நீருடனேயும் கலந்து பேதப்பட்டு பால் நிறமான அன்னர
சமாகவும் மலமாகவும் பிரிகின்றது. அன்னரசமும் மலமும் ஆகா
ரப்பையைச் சேர்ந்த ஒரு அடிநீளமுள்ள முன்கண்டதுணைருக்கியி
னின்று சிறு குடலுக்குட் சென்று அதினுடைய நழுவல் தொழு
வலாக உடு- அடி நீள சிறு குடல் வழியாகப் போகையில் வெண்
ணீராகிய அன்ன ரசத்தை சிறு குடலுக்கூடாகச்செல்லும் இராக
பணிகளாகிய சிறு குழல்கள் உறிஞ்சிக்கொண்டு அடிக்கழுத்தின்
முன்பக்கத்திலுள்ள இடக்கரையென்பின் பின்னாக இருக்கும்
ஒருநாளத்துட்சென்று அதின் வழியாய் ரத்தாசயத்துக் கூடாக
சுவாசப்பைக்குட்சென்று அங்கே சுவாசிக்கும் காற்றுபட்டு ரத்
தமாகின்றது. மலமானது பெருகுடலுக் குட்பட்டு மலமாக இற
ங்கிவிடும். பெருங்குடலானது ரு-அடி நீளமாய் சிறுகுடல் அடி
வாரமிருந்து மேலாக ஒரு சுற்றுகவந்து ஆசனத்தைச் சார்ந்திருக்
கின்றன வயிற்றுக்கு -லுக்குமுன்னே ஒரு முன்தானையைப்போல்
சு-மடிப்பாய் மூடிய கொழுப்புள்ள சவ்வு மூடியிருக்கிறது.

சரீரத்திலுள்ள பதார்த்தங்கள் நீராயிருந்தாலும் சரி ஜவா
மாயிருந்தாலும் சரி அவைகளிலுள்ள அணுக்களின் உயிர் நீங்கின
காலத்தில் அவைகளை உறிஞ்சிக்கொண்டு பழுதுபட்டவைகளை
விசர்க்க வழியாய்த் தள்ளிவிடும். ஆகாரத்திலிருந்து பிரிந்த பாலைப்
போல வெளுத்த அன்னரசத்தை இரசமெனச்சொல்வதுசிலேத்ம
நீர் இது ஈரலிற்சென்று அதிலுள்ள சிறு நீளைக் குண்டிக்காய்கள்
இழுக்கப்பட்ட பின்பு மற்றவை ஈரலிற் சிவந்து கொதித்து மேல்
நுரைத்த கல்மிஷத்தைபித்தமென்றும் அடியிற்படிந்த கன்மிஷத்
தை வண்டலென்றும் நடுவில் தெளிந்த செந்நீரை இரத்தமென்
றும் சொல்லப்படும்.

பிரதானமான இரத்தமே சிவந்து இனிப்பாய் வாயுவின்குண
மாகிய சூடும் கொழுமையுங்கொண்டு ஈரலிற்றங்கியிருந்து தேகத்
திற்சென்று எலும்பு நரம்பு தசை முதலிய தாதுக்களை போஷித்து
உயிருக்குறுதிதந்துவிருத்திசெய்யும் பித்தம் மஞ்சள்நிறமாய்க்கச
ந்து வெடிப்பு மணம் பொருந்தி தேயுவின் குணமாகிய சூடும் வற
ட்சியும் கொண்டு பித்து பையிற்றங்கி நுரையீரலாகிய சுவாசப்பை
போஷித்து உதிரத்தை யிளக்கி நரம்பு தாரைகளிலேற்றி மலத்தை



யுமிளக்கி வெளிப்படுத்தியும் ஆகாரப்பையில் ஆகாரத்
தைப் பசனம்செய்யும் இரசம் வெண்மையாய் சுவையற்று
வெள்ளாவி மணத்துடன் அப்புவின் குணமாகிய குளிர்ச்சியும் ஈரத்
தையும் கொண்டு துணைருக்கியிற் றங்கியிருந்து உதிரத்தையு முண்
டாக்கித் தலைமூளையை வளர்த்துக்குடலிலும் ஆகாரப்பையிலும் ஆம
மாகிய மதசலமாகும் வண்டல் கருத்து புளிப்பையும் துவர்ப்பையும்
பொருந்தி பிருதிவியின் குணமாகிய குளிர்ச்சியும் வறட்சியும் கொ
ண்டு மண்ணீரலிற் றங்கியிருந்து கிளிர்ப்பையுண்டாக்கும்.

ஆன்மா மூன்றென்பது

அறிவின்மயமாயிருப்பவர்களுக்கு விளங்கும்.

சீவான்மா இருதயமாகிய இரத்தாசயத்திலிருந்து தேகவியக்
கம் பசித்தறிவு கோபம் பயம் சந்தோஷம் பூசைதரும் தேக ஆன்
மா ஈரலிடமாக இருந்து தேகத்தை போஷிக்கும் அறிவான்மா
தலைமூளையிலிருந்து சிந்தித்தல் கேட்குதல் உள்ளுணர்வை பார்த்
தல் வெளிகுயுணர்வையும் அசைவையு முண்டாக்கும் ஆன்மாவெ
ன்பது உதிரத்தினின்றெழும் ஆவியாகின்றது. இந்த ஆவியாலே
தேகச்சூடாயிருக்கிறது. இரத்தத்திற்கும் தேகத்திற்கும் சம்பந்
தத்தை யுண்டாக்குவது சிலேத்மநீராகவிருக்கிறது இந்த சிலேத்ம
நீர் அதிகப்படுவதில் உதிரத்தின் கொழுமைசூடுகுறைந்து தேகம்கு
ளிர்ந்துநசிக்கும்.

இரைப்பையில் பக்குவமடைந்த அன்னரசத்தை ஈரல் இழுத்
து உதிரமாக்கித் புழை நரம்புகளின் வழியாய் சரீரம் யாவுமேற்றி
சரீரத்தை போஷிக்கும். இரத்தாசயமாகிய இருதயம் நாடிநரம்புவ
ழியாக ஆன்மசக்தியை யுடலெங்கும் பரவச்செய்து உயிர்ப்பிக்கும்
தலைமூளை வெண்ணரம் புவழியாக வுணர்வை யுடலெங்கும் நிறைத்
து இயக்கும் குண்டிக்காய்கள் ஈரலில் உதிரத்தோடு கலந்து நின்ற
சிறுநீரைப் பிரிப்பதுமன்றி சுக்கிலநரம்புகள் வழியாய் உதிரத்தின்
சத்துக்களையிழுத்துப் பீசத்தில்சேர்த்து விந்துவாக வெளுக்கச்
செய்யும்.

நாசியின் இருபாரிசமும் சுவாசம் மீண்டும் உள்புகுவதற்குக்
காரணம் சவ்வாகிய விதானம் சுருங்கிப் பதிவதினாலும் பழுக்கள்
உயர்வதினாலும் உஸ்வாச நிஸ்வாசமாகிறதாயிருக்கிறது. இவைக்
காதாரம் மூளைநரம்புகள் சுவாசக்குழலானது ஆகாரம் செல்லும்
குழலுக்கு முன்புறமுள்ளது மூக்கிலிருந்து உண்ணாவின் புறமா

இறங்கி சுவாசக்குழல் இருபக்கமுள்ள சுவாசப்பைகளை சுவாசக்குழல் வாய்வு கண்ணரைகள் சிறுபைகளுமா யிவ்விடங்களுட் சென்று மீளும் சுவாசப்பை அடிகழுத்திலிருந்து பழுக்கள் பரியந்தம் விசாலித்து சவ்வினால் மூடப்பட்டு வெண் சிவப்பாய் கரும்புள்ளியோடும் சுவாசக்கண்ணரைகளும் சுவாசக்குழல்களும் அநேக சிறுரத்த குழல்களும் நரம்புகளுமாயிருக்கின்றது. வாயுவு கண்ணரையில் நிறைந்த வாயுவிலே சரீரத்தில் நெருப்பாக்கும்வாயுவாகிய அமிலிதமும் சுவாசத்தில் ௪-ல் மூன்று பங்குள்ளஉருசதக வாயுவும் கூடியிருக்கும் இதில் அமிலிதம் சிவனைக்காக்கும் உருசதகம் அமிலத்துடன் சேர்வதால் தேக சுகஞ்செய்யும் சுவாசம் வெளிவிடுகையில் நச்சுக்காற்றாகிய இருந்தாமிலமும் நீராணுக்களும்வெளியே கழன்றுவிடும்.இரத்தசாயத்திலிருந்துசுவாசப்பைக்குப்போகும் காரி ரத்தஞ் சுவாசப்படாதல்ல கருநிறமாயிச் சிவப்பு ரத்தமாகும். இரத்தத்தில் கரியவாயுவு கலந்திருப்பதால் கருமைநிறமாச்சுது. உடம்பிலே பழுதுபட்ட அணுக்களின் பிரதானகூறாகியகரியும் நெருப்பாக்கும் அமிலித வாய்வும் கூடுவதால் இரத்தக்குழல்களில் இருந்தாமிலமாகிய கரிய நச்சுக்காற்று உண்டாகிறது. காரி ரத்தத்தில் சலிதமெனும் வாயுவு கலந்திருப்பதால் அது நெருப்பாக்கும் அமிலத்துடன் கூடில் தண்ணீராகும் உண்ணும் உணர்வில் சுசியும் சலத்திலுள்ள 2-வாயுவில் ஒருவாயுவாகிய சலிதமும் உதிரத்தில் சேருகின்றது. அவைகள் தேகத்தைவிட்டு வேர்வை பித்தநீர் சிறுநீராகக் கழிகின்றது.

தேகத்தில் அனலுண்டாகும் காரணம் நாம் கொள்ளும் ஆகாரத்தில் கரியாகிய இருந்தையும் சலத்திலுள்ள 2 - பூதியத்தில் ஒரு பூதியமாகிய சலிதமும் அடங்கியிருக்கின்றது. இருந்தாமில நீராவியும் உண்டாவதினால் காங்கை பிறக்கின்றது. இருந்தையும் சலிதமும் உடம்பிலுள்ள அன்னரசத்திலும் சிதைந்துபோன அணுக்களிலும் இவைகள் சேர்ந்திருக்கின்றன. நாம்சுவாசம்வாங்கும்வாயுவிலிருந்து நாலில் ஒருபங்காகியது நெருப்பாகும், வாயுவானது சுவாசப்பையிலிருக்கும் சிறுகுழலுக்குள் அங்குள்ள இரத்தத்தோடு கலந்து அதோடு இரத்தாசயத்துள் நுழைந்து மறுபடி உடம்பின் பல பகுதிகளையும் போஷிக்கும். சிறுரத்த குழலுக்குள்புகுகின்றது. இந்தக் குழல்களிலேபாயும் செவ்விரத்தத்திலுள்ள நெருப்பு வாயுவானது மசாயனி குழல்கள்வழியாய் ரத்தத்தில் வந்த



டைந்த கரியாகிய இருந்தையுடனும் ஒருபூதம் சலத்தினுடனும் கூடுவதினால் நச்சுக்காற்றாகிய இருந்தாமிலமும் நீராவியும் உண்டாகிறது. அவை அணுவணுவாய் ஒன்றுடனொன்று கூடுவதால் காங்கை பிறக்கின்றது. அங்கே உண்டாகும் நச்சுக்காற்றும் நீராவியும் ரத்தத்தின் வழியாய் சுவாசப்பையில்வந்து நாம்விடும் சுவாசத்துடனே கூடி வெளிகழிகின்றது. இம்மாறுதல் சரீரமெங்குமுள்ள சிறுகுழல்களிலே சம்பவிக்கிறபடியால் எப்பகுதியிலும்காங்கையுண்டாகின்றது.

மனிதன் நச்சுக்காற்றைச் சுவாசிப்பானேயானால் தலைமூளை சுபாவம் தப்பும், காரி ரத்தம் சிரசிற்குச்சென்று தலைநோயுண்டாகும்.

பிரிதிவு மண்ணீரல் கருப்பு அப்புகுண்டிக்காய் தேயு ஈரல் வாயுவு நுரையீரல் ஆமாய் தாமரங்கா வென்னும் ரத்தாசயம் ஈரலின் தன்மையைச் சிறுநீராலும் இருதயத்தின் தன்மையை நாடிதுடிப்பினாலும்மூளையின் தன்மையையியக்கத்தாலும்இரைப்பையின் தன்மையை மலத்தினாலும் உள்கருவிகள் சுப அசுப தன்மையை யறியக்கூடும்.

மிடறு என்பது. - அடி நாவிலிருந்து இரை குழல் மட்டுக்குமுள்ள மூன்று அங்குல நீள சவ்வுநூர் குழல்.

இரைகுழல். சுவாசக்குழலுக்குப் பின்னாக ஒரு அடி நீள தடித்த சவ்வுக்குழல.

இரைப்பை, - நெஞ்சுக்குக் கீழ் மேல் வயிற்றில் உடம்புக்கு நடு இடப்பக்கமாக இரு சுவாசப்பைக்கும் அடுத்தாப்போல் மெல்லிய நூ-படலமுள்ளதாக விருக்கும்.

ஆகாரப்பைக்குக்கீழாகக் கணையமிருக்கும்.ஆகாரப்பைக்கும் கணையத்திற்கும் பக்கமாக இடபக்கம் விலா கீழ் முன்பாகமாக வட்டித்தசப்பையாய்க் கருமைநிறமாய்மண்ணீரலிருக்கும். முறைக்காய்ச்சலினால் பருக்கும் காய்ச்சல் கட்டியென்பார். ரத்தாசயத்தில் அதிக வெப்பங்கொண்டால் உதிரம் வேறுஇடம் சேரவிடமிராமையால் மண்ணீரலிற்சேரும் இதில் வண்டலும் வந்து சேரும்.

கணையமென்பது, இரைப்பையின் கீழாக நீண்ட வொடுங்கிய சப்பையான ஓர் உறுப்பு இதிலிருக்கும் கணையநீரானது துணூருக்கிக்குள் செல்லுகின்றது.

இரத்தாசயம் விரியக்குவியத்தக்கது. இதை இருதயமென்றும் இல் என்ற தாமரைக்காயானது நடு நெஞ்சிலே இடப்பக்கமாக சுவாசப்பையிரண்டுக்கும் இடையே இரட்டைஉறுப்பாய் கொட்டைப்பாக்கு வடிவமாய் அவரவரது கைமுஷ்டியளவாய் இதை உரத்த சவ்வுபை மூடியிருக்கும் இரத்தாசயத்தின் வல இடப்பக்கங்களாகிய வொவ்வொன்றிலும் இரண்டு அறைகளுண்டு. அவைகளில் மேலறை சிரவமென்றும் கீழறை சடரமென்றும்பேர்.

இரத்தாசயத்தின் ஓர் அறையாகிய வல சடரத்திலிருந்து ரத்தம் கொண்டுபோவது பப்புச நாடியும் இடச்சடரத்திலிருந்து கொண்டு போவது கண்டறை பெருநாடியுமாம். இது எல்லாநாடிக்கும் ஆதாரமாய் அனேகநாடி கிளைகளாய் செவ்விரத்தத்தை எங்கும் செலுத்துகின்றது. அந்த ரத்தத்தை ரத்தாசயத்தின் மேலறைகளுக்கும் திருப்பிக் கொண்டு வந்து சேர்க்கும். இரத்தாசயத்தில் உண்டாகும் உதிரத்தில் ய-ல் ஒரு பாகம் மூளைக்கு இந்த இரண்டு நாடியில் ஒரு நாடி வலசுவாசப்பைக்கும் ஒன்று இட சுவாசப்பைக்கும் போகும். இந்நாடி காரிரத்தத்தை சுவாசப்பைகளுக்குக் கொண்டுபோய் அங்கே தன்னுடனே சந்திக்கும் நாளங்களுடனே கூடுவதினால் சுவாசப்பையின் ரத்தம் சுற்றோட்டம் நிறைவேறும்.

ரத்தாசயத்தின் அறைபக்கங்களில் ஓர் கருவியாகிய பேசி விரியக்குஒருவியத்தக்கதுசிரவங்கள் விரியும்பொழுது சடரங்கள் உடம் சுருங்கும் அதினால் ரத்தம் சரீரமெல்லாம் ஓடிப் பாவித் திரும்பி ரத்தாசயத்தில் வந்து சேரும்.

ரத்தம் ரத்தாசயத்தின் வல சிரவத்திலிருந்து வல சடரத்து சென்று அதிலிருந்து கருமையான அசுத்த ரத்தம் சுவாசப்பை நாடிக்குள் செல்ல அதின் கிளைகள் ரத்தத்தை இட சுவாசப்பைக்கும் வல சுவாசப்பைக்கும் கொண்டுபோகும்பின்பு, ரத்தமானது சுவாசப்பையிலுள்ள சுறுகுழல்களிலே வெவ்விரத்தமாக்கி அவைகளின் வழியாய் சுவாசப்பை நாளங்களிலே சேர்ந்து ரத்தாசயத்திலுள்ள இடச்சடரத்துக்குள் விழுகின்றது. பின்பு இந்தரத்தம் இடச்சடரத்துட்சென்று அது சுருங்கிப்பிதுங்கி விடுவதினால் கண்டறை நாடிகளுக்குள்ளே தள்ளுண்டு அதின் கிளைகள் வழியாய் சரீரத்தின் உறுப்பு அடங்கலும் செல்லுகின்றது.

இரத்தாசயமானது சுவாசப்பை இரண்டுக்கும் இடையே இரட்டை யுறுப்பு காதைப்போலிருப்பது மேலறை சிரவம் கீழறை



சடரம் மேற்பாதி குவியும்போது கீழ்ப்பாதி விரியும், கீழ்ப்பாதி குவியும்போது மேற்பாதி விரியும். இந்த உறுப்பின் பெருமையையும் இதில் நடக்கும் செய்கையையும் அது காரணமோ அல்லது காரியமோ இந்த நிலையை ஒவ்வொரு புத்திமான்களும் ஏக மனதாய்த்தீர விசாரிப்பதும் அன்றியில் தவத்தையடைந்த மேலோர்களையும் அடுத்து அவர்கள் கிருபையா லுணரவேண்டுவ தவசியம். ஈரல் வலப்பக்கத்தின் விலாவுக்குள் வலசுவாசப்பையின் கீழ் ஒரு அடி நீள குறுக்களவும் ௩-ராத்தல் நிறையுள்ள கருஞ்சிவப்பான ஒருறுப்பு. இதிலிருந்து பித்தநீர் பிறக்கின்றது, இதின் கீழ்ப்பக்கத்தில் மஞ்சள் நிறமான கசப்புள்ள பித்த நீருள்ள சிறுபை யிருக்கின்றது. இந்நீர் ஆகாரப்பைக்கு நரம்புவழியாகச் செல்லுகின்றது.

உதிரத்திலிருந்து கழியும் நீர்கள் தோலின் வழியாக நிதம் வேர்வை கழியாவிட்டால் சுரம் ஜலதோஷம்வரும். ஈரலிலிருந்து பித்தநீர் தடைபட்டால் அஜீரணம் உண்டாகும்.

குண்டிக்காய்.

இடுப்பு முள்ளந்தண்டுக்கு அருகே இருபக்கத்திலும் மூத்திரம்போசியும் உறுப்பான குண்டிக்காயிருப்பது ௪-,௫- அங்குல நீளம், ௨-உறுப்பு இவைகள் ரத்தத்திலிருந்து அமுரியைப் பிரித்து விடுவதினால் ரத்தத்தைச்சுத்தியாக்குகின்றது. ஒவ்வொரு குண்டிக்காயிலுமிருந்து ஒவ்வொரு குழலாய் இரண்டு குழல்கள் கிளம்பி அடி வயிற்றிற்குள்ளே நடுவே கிடக்கும்சலப்பையைநாடியோடி அதனுடனே பொருந்துகின்றது. அக்குழல்களின் வழியாய் அமுரி சொட்டு சொட்டாயிறங்கி சலப்பை நிரப்புகின்றது. இந்த நீர் வெளிவிடாமல் தடைபட்டால் சரீரஉறுப்பில் குழப்பி வியாதிதரும்.

இரத்தம் சூட்டுடன் கொழுமையாகவும் பித்தம் சூட்டுடன் வறட்சியாகவும் சிலேத்மநீர் குளிர்ச்சியுடன் ஈரத்தையும் வண்டல் குளிர்ச்சியுடன் வறட்சியுமாய் சுபாவகுணமாக விருக்கிறது.

இதுவன்றி வாயுவென்னும் மாற்றென்பது மேற்கண்ட நான்கு சத்துக்களினின்றெழுகின்ற குளிர்ந்த ஆவியாகவிருக்கின்றது. இதுவிசேடம் வண்டலினின்றும்ரசத்தினின்றுமேயுண்டாகின்றது. இவைகள் உயர்வு குறைவினால் சகல ரோகங்களும் வரும். அவைகள் ஔஷதத்தினாலன்றித் தீராவாம்.

ஔஷதங்கள் பக்குவாசயத்திற் சேர்ந்து ஆகாரத்தைப்போல சுத்தாசமானபிறகு பின்பு அசுபாவசத்துக்களுடன் சேர்ந்து அவற்றின் வேறுபாடுகளை நீக்கிச் சுகுணம் செய்யும்.

— தேயு கூடு வாயு கொழுமை அப்பு குளிர்ச்சி பிரிதிவு வறட்சி கூட்டின் விகற்பமே வறட்சி குளிர்ச்சி விகற்பமே கொழுமை. தேயு கூட்டுடன் வறட்சியாகவும் வாயு கூட்டுடன் கொழுமையாகவும் அப்பு குளிர்ச்சியுடன் ஈரத்தையும் பிரிதிவு குளிர்ச்சியுடன் வறட்சியும் பெற்றிருக்கின்றது.

உதிரம்.—௫-விதம் கெடும். அதிகரித்தல் தடித்தல். நீற்றல் அழுகல் நீற்றகொழுமை தடித்தகொழுமை.

பித்தம்.—நீற்றகொழுமையோடு கலந்த வண்டல் தடித்தகொழுமையோடு கலந்த வண்டல் இவைகளுடன் கலத்தலாகிய இவ்வைந்தும் பித்தத்தின் வேறுபாடாம்.

இரசம்.—இரத்தத்துடன் கலந்து இனிப்படைதல் வண்டலுடன் கலந்தபித்தத்துடன் கலந்த கரிப்படைதல் கூட்டுடன்கலந்து புளித்தல் வண்டலுடன் கலந்து துவர்த்தல் குளிர்ச்சியுடன் கலந்து சுவை நீங்கலாகிய இந்த ஐந்தும் இரசத்தின் வேறுபாடாம்.

வண்டல்.—அதிகப்படல் ரத்தத்தோடு கலத்தல் பித்தத்தோடு கலத்தல் நீதல் இந்த ஐந்தும் வண்டலின் வேறுபாடு. இவ்வேறுபாட்டால் அநேக வியாதி வருவனவாம்.

செவி.

வெளிகாது நடுகாதுக்கும் இடையே வட்டித்த சிறிய சவ்வு நடுகாதிலிருந்து பின்தொண்டை அருகுக்கு ஒரு குழல் போகின்றது. இதில் காற்று போக்குவருத்துண்டு. இது தடையானால் கேள்விகுறையும். கேள்வி நரம்பு மூளையிலிருந்து கிளம்பி உட்காதக்குள்ளுறையும் சவ்வுக் குள்ளிருக்கும் நீரிலே படர்ந்து நீந்துகின்றது.

மூளை.

சரியான மனிதனுக்கு மூளை மூன்று ராத்தல் இரண்டு பகுதியுடையது. மூளையைச் சுற்றி ௩-சவ்வு மூடப்பட்டது. மேல் சவ்வு மெத்த தடிப்பு பலமுள்ளது. மத்திய சவ்வு மெல்லிய வருவெளி



யுள்ளது. உட்சவ்வு மகா நுண்ணிய கூந்தலான இரத்தக் குழல்களால் பின்னப்பட்டு வலையாகவிருக்கும்.

மூளை அணைமூளை முகுளம் மூன்று வகுத்தாயிருப்பது மூளைக்குப் பின்புறம் அணைமூளை அதின்கீழ் முகுளமாகவிருக்கும். முகுளமானது முள்ளந்தண்டுக்கொடியின் தலையான குமிழாக குமிழ்வடிவ முள்ளிடத்திருந்து முள்ளந்தண்டுக்கொடி வெண்மை அதற்கு நெடுகளவாயாக ஒரு சவ்வு சுற்றியிருக்கின்றது. இக்கொடி கைவிரல் பருமன் மூளையிலிருந்து முள்ளந்தண்டு நெடுகவோடுகின்றது.

மூளையிலும் முள்ளந்தண்டு கொடியிலுமிருந்து சிறியவெள்ளை நரம்பு கொடிகள் சரீர எப்பகுதியிலும் கூந்தல் விட்டுப் போகின்றது. அடி மூளையிலிருந்து சிர நரம்புகள் வலமிடமாய்க் கிளம்பி ௰௨-சோடுகளாய். அதில் ஒன்று தவிர மற்றவைகள் முகத்தின் பல பகுதிகளாய்காது கண் நாக்கு மூக்கு இவைகளுக்குச்செல்கின்றது. அயிக்கிய நரம்பென்பது முள்ளந்தண்டை யணைந்தும் இடைப்பிறம் இணைப்பைக்குப்பின்னுகவும் அடிகழுத்திலுமிருந்துபிரதானவிடம் யாவும் சென்று முள்ளந்தண்டில் பிறந்த நரம்புகளுடன் கலக்கின்றது. சரீர சோதனை இல்லாதவர்கள் ஆசனத்திலும் தொப்புளுள்ளிருந்தும் நரம்புகள் உற்பவமென்று அறியாமையாய்ப் புகல்வர். சாதனைவான்களறிவர்.

மூளையிலுள்ள உணர் நரம்புகள் வழியாய் அறியும். ஆகையால் குமினமானது கருணையுள்ளது. உணர்ச்சி நரம்பு சேதப்படலாகாது. அதிலே போ அதைக்குத்தின உடனே வலிப்பு இசிவு உண்டாகும். சமுண்டு மோசமுண்டானால் மூச்சு தடைபடும்.

மூளைக்கும் இணைப்பைக்கும் அயிக்கிய நரம்பு சம்பந்தமுண்டாவதால் இந்த நரம்புபேதப்படுமாகில் தலைநோய் பைத்தியம் வாந்தி உண்டாக்கும் பேய்பிடித்ததாகச் சொல்வது இந்த நரம்பு கெடுங்காலத்தில் மனமும் மூளையும் அயிக்கிய நரம்பில் சம்பந்தம்.

நாசி. வாசனையறிவது. மூக்கினுள் சளிச்சவ்வினால் மூடப்பட்ட நொய்ய நாற்ற நரம்பு கூந்தலைமுடிச்சேதமடையாமல் காக்கும்நுண்மை முகரக் காற்றுடன்வாசனை அணுக்களை நாசிக்குள்ளிருக்கும் சவ்விலே மூடப்பட்ட நாற்ற நரம்புவழியாய் மூளைக்குச் சென்று மணமறிகின்றது.

மூக்கிற்பொடி போடுவதினால் மூக்கினுள்ளிருக்கும் நரம்பு கூந்தலை மழுக்கிச் சவ்வையும் தடிக்கச்செய்து சுவாசம் சாதாரணமாய் நடவாமல் வாய்வழி சுவாசம் வரும்.

சலதோஷம் உண்டாவதற்குக் காரணம்.— மூக்கின் உள்ளு ளைசளி கோர்த்த சவ்வில் சாப்பு கொண்டு கொதி கொண்டால் நீர் சொரியும் ஒரு சுவாசப்பையில் காள கிளைகளில் சளியானால்சல தோஷமாகும்.

மயக்க புட்டினைய் முகர சுவாசப்பையிலுள்ள சோஷணகுழல்கள் வழியாய் மூளைக்குச்சென்று அறிவை மயக்குகின்றது. ஆசாரப்பையில் ஆகாரமில்லாதபோதும் சாணிக்குழல்கள் உடம்பிலுள்ள கொழுப்பை உறிஞ்சி நாளங்களுட் கக்கி விடுவதால் சீவன் காக்கப் படுகின்றது. இதனால் தேகவாட்டமும் நோயும்வரும். பனிகால இரவில் தோலில் படும் குளிரினாலே வியர்வை உள்ளடங்கியதால் கழிச்சல் வயிற்றுளை உண்டாகும். சுவாசம் ஒன்றுக்குக் கை நாடி மூன்றுதபா துடிக்கும்.

## ஸ்தூல பஞ்சீகரணம்.

பிபி-அஸ்தி பிஅ-மாம்ஸம் பிதே-சருமம் பிவா-நரம்பு பிஆ-ரோமம். அஅ-முத்திர அபி-வாய்நீர் அதே-வியர்வை அவா-உதிரம் அஆ-சுக்கிலம். தேதே-பசி தேபி-தாகம் தேஅ-நித்திரை தேவா-ஆலஸியம் தேஆ-சங்கம். வாவா-ஓடல் வாபி-நடத்தல் வாஅ-இருத்தல் வாதே-தத்தல் வாஆ-கிடத்தல். ஆஆ-மோகம் ஆபி-ஆசை ஆஅ-துவேஷம் ஆதே-பயம் ஆவா-வெட்கம்.

## சூக்ஷ்ம பஞ்சீகரணம்.

ஆஆ,,அறிவுகன் வாபி-பிராணன் இருதயம் தேஆ-காது அஆ சத்தம் பிஆ-வாக்கு. ஆவா-மனம்கண்டம் வாஅ-அபானகுதம் தேவா-சரீரம் அவா-பரிசம் பிவா-பாதம். அதே-புத்தி வாதே-உதானன் கண்டம் தேதே கண் ஆதே-பார்வை பிதே-பாணி. ஆஅ-சித்தம் நாபி வாவா வியானன் சர்வசரீரி தேஅ-சிங்குவை அஅ-ரசம் பிபி-குதம். ஆபி-ஆங்காரம் இருதயம் வாஆ-சமானன்நாபி தேபி-வாசனை மூக்கு அபி-கெந்தம் பிஅ-குய்யம்.

பூதங்கள் ஒன்றோடொன்று சேர்தலினால் மேற்கண்ட பிரிவுகளாயின.

பிரம்மா விஷ்ணு ருத்திரர் நெருப்பு சலம் காற்றாய் ஆக்கல் காக்கலழித்தற்கு வாதபித்த சிலேத்மமாய் இடைகலை பிங்கலை சுழிமுனையாக மாறிமாறித் தேகத்தில் நடந்துபலபிணிகளைஉற்பவம் செய்து அக்கினியைக் குறைத்துச் சலம்திகப்பட்டு வாயுவும் ஆகாயத்திலயமாகின்றமையால் பிரேதமாய் பிரிதிவியில் அடங்குமாவுலால் நோயணுகாமல் காப்பவர்கள்தான் அறிவுடையோர் முப்பு இடைகலை பிங்கலை சுழிமுனையாமென்றும் இதனை வசப்படுத்தி அளவிறந்த வினைகளை தீர்க்கக்கூடுமென்றும் இதற்காதாரம் அநுக்கிரக கிருபை பெறவேண்டுமென்றும் மேலோர்வாக்கியம் இதுபின்சுழியினிடத்து ஆறாதாம் காணல் வாயுவும் பொருந்தியிருப்பதால் இதின்பேதத்தால் முப்பிணியுண்டாவதை நாமனைவருமறிந்தேயிருக்கின்றோம்.

பூதம்-ரு பொறி-ரு புலன்-ரு கன்மேந்திரியம்-ரு தொழில்-ரு-அவத்தை-ருகோசம்-ரு ஆசயம்-ரு ஆதாரம்-சாரகம்-அகாடி-ம வாயு-ம காரணம்-ச மண்டலம்-ந தோஷம்-ந மலம்-ந ஏஷணை-ந குணம்-ந வினை-உ அறிவு-க ஆக தத்துவம்-கூயசு.



நாயகி நாயகனிருவர் இவர்கள் மனம் வாயுவில் கூடி சித்தம் ஆகாயத்தில் சேர்ந்து பொங்கி ஆங்காரம், இ அதிகமாய் இச்சையுண்டாகும் இந்த இந்திற்கும் வலிவு யாதெனில் மனதோடு வியானனும் நாதத்தில் அபானனும் விந்துவில் சமானனும் சித்தத்தில் வியானனுமாகக் கூடி ஆங்காரம் கெர்ச்சிப்போடு கலந்து நிற்கும். உதானன் இந்தப்பத்தும் மனதும் கூடி மேவிக்கலந்து விந்துவந்து விழும்போது மவுன பரவசமாகும். இருவருக்குமிவ்விதமேயாம். ஆணுடையமனம் வேறாகவும் பெண்ணின்மனது வேறாகவுமிருந்து புணர்வதில் கரு தரியாது. முறையான ஆண்பெண்ணும் மௌன முற்றால் மோசமில்லை கருவங்கே தரிக்கும் பாருளென்று மேலோர் ... ... ஸ்திரீகளுக்கு கெர்ப்ப சூலைகளாகிய அறுவித வியாதிகளுண்டு. அதற்குத் தக்க ஔஷதங்களால், நிவிர்த்தி செய்வதில் கருதரிக்கும். விந்தானது நாதத்திலுற்ற சிலநாளைக்குள் அநேக கிருமிகளாய் முடிவில் ஒருகிருமியாய் பிறகு சரீர உறுப்புகள் நாளாவட்டத்தில் ரூபமாய் மாறிட சிசுவாய் உதிக்குமென்று நமது ஆரியன் பண்டிதர்கள் கண்டிருக்கின்றனர். விந்துநாதமும் கூடி சப்த நிறங்களாய் ரூபப்படுமென்றும் இதினால்தான் வழு வாரங்களானதாகவும் சோதிடநூலிற் கண்டிருக்கின்றன.

## பிரசவக் குறிப்பு.

கருப்பையானது தட்டையாய் நீளத்தில்-ஙு அகலத்தில்-உ அங்குலமுள்ளதாகக்கீழ்ப்புறத்தில்ஒருமைரமுண்டு. டையபிளாக் துபார்க்க உள்ளே முக்கோண ரூபமுடைய பள்ளம் இதுதான் கரு காக்கின்றது.

க்குழி என்று பெயர் இதில் ருதகம் காக்கின்றது. சுற்றி நீண்டிருக்

சவ்வு சனைகளால் கருப்பையின் கழுத்தைச் சுற்றி நீண்டிருக்கிற குழலுக்கு சிசுபாதை என்று பெயர், ரு-ஙா அங்குல நீளமுள்ளது வெளியிலகப்படுகிற அதின் வாயானது சுருங்கி சந்திரபிறையைப் போலொத்த ஒரு சவ்வு மூடிக்கொண்டிருக்கும். அதிலெப்போதும் ஒரு துவாரமுண்டு. அந்த துவாரத்தின்வழியாகத்தான் ருதகம் வெளியாகும் முதல் புருடன் சேர்கையில் அந்த சவ்வு மறைந்துவிடும் கருப்பையின்பக்கத்துக்கொன்றாய்இரப்பக்கொட்டையைப்போல் இரண்டு உறுப்புகளுண்டு. இது சினைப்பைகளென்று பெயர். அச்சினைப் பைகளில் முட்டைகளுண்டு, ஒவ்வொன்றும் பெருத்து மாதந்தோறும் கருப்பையில் வந்து விழும், அச்சமயத்தில் கருக்குழியில் ரத்தம் சுரந்து வெளிப்படுகின்றன ரத்தம் சுரோணிதமென்றும் முட்டையை நாதமென்றும் கூறியிருக்கிறது. சிசு ஆரம்பத்தில் முட்டையானது கருக்குழியில் வந்திறங்கி உண்டாய் அல்லது கூர நாளைக்குள் படிப்படியாய் பெருத்து சிசுவெளியாகிடமின் பந்துபோல் சுருங்கிச் சிறிதாகிவிடும்.

இரண்டு சவ்வுகளால் ஏற்பட்ட பனிக்குடமென்னும் ஒரு பையிலிருக்கிற சலத்தில் சிசு மிதந்துக்கொண்டிருக்கும் குழந்தைக்கு அடிமுதலிய அபயாம் வாராமல் காக்க, சலத்தை உண்டுசெய்த கட

வுள் கிருபையைப் பெரியோர்கள் உணர்வர், இந்த செய்கையறி வித்தை சாகாக் கல்வியையுற்ற சித்தர்களாகிய திரிகாலஞானிகளறிவர்.

ரத்த நரம்புகளால் ஏற்பட்ட ஒரு கொடியானது சிசுவின் நாபியிலிருந்துண்டாகி நஞ்சின் மத்தியில் ஒட்டிக்கொண்டிருக்கிறது நஞ்சானது கருப்பையில் ஒட்டியிருக்கிறது. கருப்பையிலிருக்கும் ரத்தம் நஞ்சிலிறங்கி பிறகு தொப்புள் கொடிவழியாய் பிண்டத்துக்குட் சென்று போஷிக்கும், அந்த ரத்தம் கெட்டுப்போனபிறகு மறுபடியும் அந்தக்கொடிவழியாகவே நஞ்சுக்கேறி பிறகு கருப்பைக்குச் சென்று தாயின் ரத்தத்தோடு கலந்து பரிசுத்தமாகும்.

உத்தம பிரசவம் சிசு சிரசு உதயமாகிய ௯ நாழிகைக்குள் தாய்க்கும் பிள்ளைக்கும் யாதொரு வருத்தமில்லாமலிருக்கும் கையாவது காலாவது உதயமானதற்கு அக்கிரம பிரசவமாகும் கருப்பையானது சுருங்கி அதற்குள்ளிருப்பவைகளை வெளிப்படுத்துகிறபோது வேதனையாய் இடுப்புவலிகாணும், கருப்பையின்வாயை ஆப்பு அடிப்பதுபோல் விசாலமாக்கி வைக்கிற சவ்வைக்குப்பனிக்குடமென்று பெயர் பிரசவ நோய் ஆரம்பித்து கருப்பையின் வாய் பூரணமாய் விரிகிறவரையில் முதல்பாதமென்றும் அதுமுதல் பிள்ளை வெளிப்படும்வரையில் இரண்டாம்பாதமென்று நஞ்சானது கருப்பை விட்டுப் பிரிந்து வெளிப்படுகிறவரையில் மூன்றும் பாதமெனவும் இடுப்புவலி விட்டு விட்டுப் பின்பு அதிக நேரமாயிருக்கும் போது சீக்கிரத்தில் பிரசவமாகும் கருப்பை சுருங்க ஆரம்பிப்பதே பிரசவ ஆரம்பமாம். இடுப்புவலியில் மலபந்த முதலியவைகளால் காண்பதுமுண்டு. அதற்கு சிலேத்மநீரும் வெளிப்படாது. கருப்பையில் முகமும் விரியாது. நிசநோவில் முதல் முதுகில் கண்டு இடுப்பைச் சுற்றிக்கொண்டு வயிற்றுக்குவந்து தொடைகளுக்கு இறங்கிவிடும், கிரமமாய் நின்று நின்று காணும் கருப்பையின்வாயை விசாலப்படுத்திப் பனிக்குடம் பிதுங்கச்செய்யும். நோய் கண்டிருக்கும்போது அங்குலி பரிசோதனைசெய்யில் கருப்பையின் வாய் மெல்லிய விரிகிற சாடையும் பனிக்குடம் பிதுங்குகிறதும் புலப்படும். ஸ்திரீ முதல் பாதத்தில் அங்குமிங்கும் திரிவாள் ஏக்கமுற்றுப் பயந்து அழுவாள் பிரசவநோய் இடுப்பைக்கத்தரிப்பதுபோலிருக்கும் அப்போது இரைச்சலோடு கதறுவாள். ௨-பாதம் வேதனையோடு முக்கல்காணும் சமீபத்திலிருக்கிறவைகளையாவது பிடித்து முக்குவாள் நோயும் அடிக்கடிவரும். சிசுஜனித்தபிறகு கொஞ்சநேரம் நோயில்லாமலிருக்கும் மறுபடியும் கருப்பை சுருங்க ஆரம்பிக்கும்போது இடுப்புவலி யுண்டாகும், அதில் நஞ்சு பிரிந்துவிடும், சிலவேளை குழந்தையோடு நஞ்சும் ஏககாலத்தில் பிறப்பதுமுண்டு சுமார் ௨௰-நிமிஷத்தில் நஞ்சு வெளிப்படுவது வழக்கம், முதல், ஸ்திரீயை இடதுபக்கமாய்ப்படுக்கவைத்து முழங்



கால்களை முடக்கி வயிற்றோடு அணைத்துக்கொள்ளச் செய்து நோய் காணுகிறபோது வலதுகை முன்விரலுக்கு எண்ணெய்தடவி சிசு வருகிற வழியாகச் செலுத்தித் தடவிப்பார்க்க கருப்பை முகமகப்படும். பலவந்தமாய்ப்பனிக்குடத்தை யுடைக்கலாகாது. பிரசவத்திற்குமுன் பசியாகவிருந்தால் ஆகாரம் கொடுக்கலாம் மலபந்தமாக இருந்தால் முத்தெண்ணெய் சாப்பிடலாம், சிறுநீர் அடைத்திருந்தால் சிலாகைவிட்டு எடுத்துவிடவும் பனிக்குடமுடைந்து சிரசு இறங்கி ௨-பாதத்தில் ஸ்திரீயை நிருவாணம்செய்து இடது பக்கமாய்ப் படுக்கவைத்து முழங்காலை முடக்கி வயிற்றோடு அணைத்துக்கொள்ளச்செய்து தலையணையைக் கால்களுக்கு மத்தியில் வைத்து ஒரு துணியைக்கட்டித் தொங்கவிட்டு அதை நோய்வரும்போது பிடித்துக்கொள்ளச் சொல்லவும், தாகமிருந்தால் கஞ்சி தண்ணீர் தாராளமாய்க் கொடுக்கலாம், கருப்பையின் முகம்விரிந்து பனிக்குடம் உடையாமல் அதனால் பிரசவம் தாமதப்பட்டால் அதை விரலால் குத்திவிடவும். சிசுவின் தலைபக்கத்தை முட்டித்தள்ளும்போது மருத்துவச்சி தனது இடது உள்ளங்கையை அந்த இடத்தின்மேல்வைத்து மெதுவாய்த் தாங்கிக்கொண்டு இருந்து சிரசு வெளிப்பட்ட உடனே அந்தச்சிரசை வலதுகையால் ஏந்திக்கொண்டு சிசு தானாய் திரும்பும்படி செய்யவேண்டியது. கழுத்தைச்சோதனைசெய்து கொடிசுற்றிக் கொண்டிருந்தால் அதைத்தளர்த்தி தோள்மீது தள்ளிவிடவேண்டியது. சிரசு வெளிகண்ட உடனே வேறொருத்தி வயிற்றின்மேல் கையைவைத்துக் கருப்பையை விடாமல் அழுத்திப் பிடித்துக்கொண்டு கீழ்க்கு மெதுவாய்த் தள்ளிக்கொண்டு போகவேண்டியது. அப்படி செய்தால் நஞ்சு சீக்கிரம் வெளிக்கு வந்துவிடும். சிசு வெளிகண்டபிறகு கொஞ்சநேரம் நோயில்லாம லிருந்து பிறகு ஆரம்பித்து சரீரத்தை வெளிப்படுத்துவது வழக்கம். ஒருவேளை நோயுங்காணாமல் சிசுவும் இறந்துபோகிற ஸ்திதியிலிருந்தால் ஒருத்தியை கெர்ப்பப்பையை அசையாமல் பிடித்துக்கொள்ளச்செய்து மருத்துவச்சி குழந்தையின் தலையைப் பிடித்துக்கொண்டு ஒருவிரலை அக்குளிற் செலுத்தி மெதுவாய்ச்சரீரத்தை இழுத்துவெளிப்படுத்திவிடவும் சீக்கிரமாயிழுத்துவிட்டால் கருப்பை சுருங்காமல் ரத்தம் அதிகமாய்க் காணும். ஒருவேளை நஞ்சு ௧-௨-மணி நேரம்வரையில் விழாதிருந்தால் அதற்கு கொடியைப்பிடித்து இழுக்கலாகாது. இடதுகை விரலுக்குக் கொடியைசுற்றிக்கொண்டு கொஞ்சம் மிருதுவாய் இழுத்துப்பிடித்து வலதுகை விரல்களைக் குவித்துக் கொடிவழியாய்யோனிக்குள்செலுத்தி கருப்பைக்குள் கொண்டுபோய்த் நஞ்சுக் கொடியொட்டிக்கொண்டிருக்கிறவிடத்தைத் தெரிந்துக்கொண்டு விரல்களால்கருப்பைக்குகாயம்படாமல் நஞ்சைப்பறிப்போர்த்துச் சுருட்டி யிடைகுழி மத்தியமாய் வெளிக்கெடுத்துவிட வேண்டியது. உள்ளே துண்டுகளைவைக்கலாகாது. சிசு தொப்புள் கொடி

௨-அங்குலம்விட்டு சன்னகயிற்றால்சுற்றி இறுகமுடிபோடவேண்டியது பிறகு அந்தமுடிக்கு ௨-௩-அங்குலம் தள்ளி வேறொரு கயிற்றால் முடிபோட்டு அவ்விரண்டு கட்டுகளுக்கு மத்தியில் கத்திரிக்கோலால் துண்டித்துவிடவேண்டியது. துடிப்பு இருக்கும்போது அறுக்கலாகாது. நஞ்சு விழுந்தபிறகு துணியைமடித்துஅடிவயிற்றின்மேல் வைத்து கருப்பை சுருங்கும்படி வேறொருதுணியால் இழுத்துக் கட்டிவிட்டு அல்குல்மேல் ஒரு துண்டு துணியைப்போட்டுவைக்கவேண்டியது. பிரசவமான உடனே தாகமிருந்தால்வென்னீர்கொடுக்கவும், ஆயாசமிருந்தால் கொஞ்சம் சாராயம் கொடுக்கலாம். பிரசவமானபிறகு கருப்பையிலிருக்கிற அழுக்குவிழ வேதனைகளுண்டு, அது எடுத்தால் நன்மை, பிரசவமாகி அதன் வேதனை யதிகமிருந்தால் வயிற்றுக்கு வென்னீர் ஒத்தனமும் கொஞ்சம் அபினியுங்கொடுக்கவும், மலபந்தமாயிருந்தால் எண்ணெய் கொடுக்கவும். நஞ்சுக்கொடி வெளிகண்ட உடனே அல்குல்மேல் உத்தல துணியைப் போட்டுவைத்து இடைக்கிடை வேறுமாற்றவும், களைதீர்த்து கொஞ்சநேரம் சென்றபிறகு அல்குலை வென்னீர்விட்டுசுத்தப்படுத்திவிடவும், தினத்திற்கு ௨-தடவை சுத்திக்கவும். பிரசவித்தபிறகு உட்காரவைப்பதில் அடிபிறங்குவதுடன் ரத்தப்பிரவாகமும் உண்டாகும். ஆகாரம் கொடாமல் வைப்பது அறியாமை. ௩-௪-நாள்வரையில் தே, நீர், பால், கஞ்சி, ரொட்டி, பிஸ்கோத், பொரியரிசி, கஞ்சி ஏதாகிலும் ஒன்று கொடுப்பது நலம். வெ[illegible]யும் கொடுக்கலாம். நாள்பட நிறுத்தாமல் சீக்கிரத்தில் ஸ்நானஞ்செய்வித்து ஊட்டமான ஆகாரம் கொடுக்கசௌக்கியமுண்டாகும். கெர்ப்ப ஆரம்பத்தில் வாந்தி கேடுவது ஆகாரம் அதிகமாய்க் கொள்ள உதிரப்பெருக்கு அதிகமாய் சிசுவிற்குச்சென்று போஷிப்படுமென்று கடவுள் வாந்தியை யுண்டுசெய்வித்திருக்கிறார்.

சிசுவின் வாயிலுள்ள கோழையை விரலால் எடுத்தும் மேலிருக்கும் குழகுழப்பு போகும்படி வென்னீர்விட்டுக் கழுவி தொப்புள்கொடியில் ரத்தம் ஒழுகாமல் வயிற்றைத் துண்டுதுணியால் சுற்றிவிடவேண்டியது. கொடிவழிரத்தங்கசிந்திருந்தால்வேறொருமுடியிடவும். அழாமலும் சுவாசம் விடாமலும் கொடியில்துடிப்புஇல்லாமலும் மூர்ச்சை கண்டிருந்தால் வாயையும் மூக்கையும் சுத்திசெய்து சிசுவை வென்னீரிலும் குளிர்ந்தஜலத்திலும் மாறிமாறித்தோய்த்துக் கம்பளிதுணியால் உடம்பையும் கால் கைகளையும் சூடுபிறக்கத்தேய்க்கவும். நெஞ்சுக்கட்டத்தின்மேல் விரல்களால் சுருக்கு தாக்கும்படி அடித்து அழச்செய்யவும். குழந்தை உதித்த ௨-௩-மணிநேரஞ்சென்று தாய்முலைப்பால் கொடுக்காவிட்டால் பால்கட்டிவிடும். பால் சுரக்காவிட்டால் வென்னீர் ஒத்தனம் கொடுத்து ஆமணக்கிலையை வதக்கிக்கட்டப் பால்சுரக்கும். விசேஷவிபரம்வேண்டுபவர்கள் இவைகளைக்குறித்த பெருநூல்களைப் பார்க்கவும்.

முற்றிற்று.